500

# கல்வெட்டு

## மூலமும் விளக்கவுரையும்

(புதிய பாடத்திட்டப்படி, 1958 மார்ச்சு முதல் சென்னைப் பல்கலைக் கழகத்தார் நடத்தும் வித்துவான் முதலிய தேர்வுகளுக்கு உரியன.)

விளக்கவுரை ஆசிரியர் :
வித்துவான் வை. சுந்தரேச வாண்டையார்
ஆராய்ச்சியாளர், அண்ணுமலைப் பல்கலைக் கழகம்

OFFICE OF THE REGISTRAR OF ...
4 - MAR 1958
MADRAS

பழனியப்பா பிரதர்ஸ்
சேப்பாக்கம் : : தெப்பக்குளம்
சென்னை-5. திருச்சி-2.

V21:72
1958

# கல்வெட்டு

## மூலமும் விளக்கவுரையும்

(புதிய பாடத்திட்டப்படி, 1958 மார்ச்சு முதல் சென்னைப் பல்கலைக் கழகத்தார் நடத்தும் வித்துவான் முதலிய தேர்வுகளுக்கு உரியன.)

விளக்கவுரை ஆசிரியர் :
வித்துவான் வை. சுந்தரேச வாண்டையார்
ஆராய்ச்சியாளர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
4 - MAR 1958
MADRAS

பழனியப்பா பிரதர்ஸ்
சேப்பாக்கம் :: தெப்பக்குளம்
சென்னை-5. திருச்சி-2.

முதற் பதிப்பு :
ஜனவரி, 1958

TAMIL NADU ARCHIVES LIBRARY
108348
MADRAS

V211:72
N58

விலை ரூ :
3-25

அச்சிட்டோர் : ஏஷியன் பிரிண்டர்ஸ், சேப்பாக்கம், சென்னை-5.

# உள்ளுறை


| | | |
|---|---|---|
| | மதிப்புரை | iv |
| | முன்னுரை | v |
| 1. | தந்திவர்மன் கல்வெட்டு | 1 |
| 2. | விஜய தந்தி விக்கிரமவர்மன் கல்வெட்டு | 6 |
| 3. | முதல் பராந்தகன் கல்வெட்டு | 10 |
| 4. | பார்த்தி வேந்திராதிபர்மர் கல்வெட்டு | 19 |
| 5. | முதலாம் இராசராசனுடைய கல்வெட்டு | 24 |
| 6. | முதலாம் இராசராசன் கல்வெட்டு | 36 |
| 7. | முதலாம் இராசராச சோழன் | 43 |
| 8. | முதலாம் இராசராசன் கல்வெட்டு | 48 |
| 9. | முதலாம் இராசேந்திர சோழன் கல்வெட்டு | 57 |
| 10. | ,, ,, ,, ,, | 67 |
| 11. | ,, ,, ,, ,, | 69 |
| 12. | ,, ,, ,, ,, | 72 |
| 13. | ,, ,, ,, ,, | 74 |
| 14. | ,, ,, ,, ,, | 79 |
| 15. | முதலாம் இராசாதிராசன் கல்வெட்டு | 84 |
| 16. | இரண்டாம் இராசேந்திர தேவன் கல்வெட்டு | 89 |
| 17. | வீரராசேந்திரன் கல்வெட்டு | 95 |
| 18. | முதலாம் குலோத்துங்க சோழன் கல்வெட்டு | 105 |
| 19. | ,, ,, ,, ,, | 111 |
| 20. | விக்கிரம சோழன் கல்வெட்டு | 116 |
| 21. | ,, ,, ,, ,, | 121 |
| 22. | மூன்றும் இராசராச சோழன் கல்வெட்டு | 128 |
| 23. | மாறஞ் சடையன் கல்வெட்டு | 130 |
| 24. | குலசேகர தேவர் கல்வெட்டு | 132 |
| 25. | சுந்தர பாண்டியன் கல்வெட்டு | 135 |
| 26. | ,, ,, ,, | 141 |
| 27. | அரிகேசரி பராக்கிரம பாண்டியன் கல்வெட்டு | 144 |
| 28. | ,, ,, ,, ,, | 149 |
| 29. | குலசேகர தேவரான பராக்கிரம பாண்டியர் கல்வெட்டு | 159 |
| 30. | வீரபாண்டியன் கல்வெட்டு | 161 |
| | சோழ மன்னர்களின் மெய்க்கீர்த்திகள் | 163 |
| | பாண்டிய மன்னர்களின் மெய்க்கீர்த்திகள் | 178 |
| | வினு - விடை : பொது | 182 |
| | ,, ,, : சிறப்பு | 184 |
| | பிழை திருத்தம் | 204 |

# மதிப்புரை

சென்னைப் பல்கலைக் கழகத்தார் வித்துவான் இறுதி நிலைத் தேர்விற்குத் தேர்ந்து அமைத்துள்ள முப்பது கல் வெட்டுக்களுக்கும் சிறந்த குறிப்புரையும் ஆராய்ச்சி விளக்கவுரையும் வினு - விடைகளும் ஒருங்கே மூலத்தோடு அமைந்த இந்நூலை முற்றும் படித்தேன். தற்கால அகராதி களிலும் இலக்கண நூல்களிலும் பயின்று வாராத சில சொற்களுக்கும் சொற்ருெடர்களுக்கும் உரையாசிரியர் நுணுக்கமான உரைகண்டு, பயிலும் மாணுக்கர்கட்கு எளிதாக்கியுள்ளமை போற்றத் தக்கது. ஒவ்வொரு கல் வெட்டின் கீழும் அமைந்துள்ள அவ்வவ் வரசனைப்பற்றிய பொதுக் குறிப்புக்கள் மாணவரது வரலாற்றுப் பயிற்சிக்குப் பெரிதுந் துணைசெய்வனவாம். பொதுச் செய்திகள் என்ற தலைப்பு மாணுக்கர்கட்கு கல்வெட்டைப்பற்றிய தெளிந்த அறிவைப் பயப்பதாகும். ஆசிரியரது முன்னுரையே கல்வெட்டுப் பயிற்சியில் இறங்கும் மாணுக்கர்கட்கு நல்வழி காட்டியாக அமைந்துள்ளது. இறுதியில் சேர்க்கப்பட் டுள்ள வினு - விடைகள், 1930-ஆம் ஆண்டு தொடங்கிப் பல்கலைக் கழகத்தார் நடத்தி வந்த தேர்வுகளில் கண்ட சிறந்த வினுக்களுக்கு ஏற்ற விடைகளாக அமைந்துள்ளன. இந் நூலை நன்கு ஆராய்ந்து எழுதிய எனது பேரன்பர் அண்ணுமலைப் பல்கலைக் கழகத் தமிழாராய்ச்சித்துறைப் பேராசிரியர் திருவாளர் வித்துவான் வை. சுந்தரேச வாண்டையார் அவர்கள் கல்வெட்டுத் துறையில் நீண்ட காலப் பயிற்சியுடையவர். இவர்களது ஆராய்ச்சியின் பயனுக வெளிவந்த இந் நூலை மாணவர் உலகம் நன்கு பயன்படுத்தும் என்பது எனது துணிபு.

திரு. ஐயன்பெருமாள் கோனர்,
தமிழ்த்துறைப் பேராசிரியர்,
சூசையப்பர் கல்லூரி, திருச்சிராப்பள்ளி.

# முன்னுரை

கல்வெட்டுக்களின் தோற்றம், தொன்மை, வளர்ச்சி, பயன், பாதுகாப்பு, நூல் வெளியீடு, தமிழ் நூற்பயிற்சிக்கு உதவும் விதம்:—

*“ நல்லார் ஒருவர்க்குச் செய்த உபகாரம்*
*கல்மேல் எழுத்துப்போல் காணுமே—அல்லாத*
*ஈரமில்லா நெஞ்சத்தார்க் கீந்த உபகாரம்*
*நீர்மேல் எழுத்திற்கு நேர்”*

என்ற தமிழ் முதுமகளின் அமிழ்துறழ் மொழியை உன்னி நோக்குங்கால், மனிதர்க்குத் தாம், பிறர்க்குச் செய்த உதவியும், அதனால் தோன்றிய புகழும் உலகில் பன்னெடுங் காலம் நின்று நிலவ வேண்டுமென்ற அவா இருத்தல் இயல்பே என்பது புலனாகும். அதனால் தாம் வருந்தித் தேடிய அரும்பெரும் பொருளை ஊருணி நீர்போல் உலகத்தார்க்கு உதவுமாறு அறஞ்செய்யப் புகுந்தோர் பலர், தம் காலத்துக்குப் பின்னர், அவ்வறச் செயல் மறைந்து போகாமைப் பொருட்டும், பிறரும் தம்மைப் போல் அறஞ் செய்து புகழும் புண்ணியமும் ஈட்டற்பொருட்டும், தம் காலத்து அரசரும் பெருமக்களும் அறியப் பொது இடங்களில் பலருங் காணத் தக்கவாறு அவ்வறச் செயல்களைக் கல்லில் பொறித்து வைப்பது வழக்கமாயிருந்தது. அத்தகைய கல்வெட்டுக்கள் பல ஆயிரக் கணக்காக நம் தமிழ் நாட்டில் காணக்கிடக்கின்றன. அவை பெரும்பாலும் பல்லவராட்சி தொடங்கியதன் பின்னரே தோன்றினவையாம்.

இதனால் பல்லவராட்சிக்கு முன் கல்லில் எழுதும் வழக்கம் இல்லையெனக் கருதல் கூடாது. செந்தமிழ் நூல்களில் மிகப் பழையதாகிய ஒல்காப் பெருமைத் தொல்காப்பியத்துக் காணும்,

*“காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல்*
*சீர்த்தகு சிறப்பிற் பெரும்படை வாழ்த்தல்”*[1]

என்னும் அடிகளால் புறங்காட்டாது போர் செய்து பட்ட வீரர்க்குக் கல் நடுதலுண்டென்பது பெறப்படும். அந்நூற்பா விதி கொண்டு கல்நடுதலைப்பற்றிப் பாடிய பாட்டுக்கள் பல புறநானூறு, அகநானூறு, திருக்குறள், புறப்பொருள் வெண்பாமாலை முதலிய பல நூல்களிலும் காணப்படுகின்றன. அந்நடுகல்லில் வீரனது பெயரும், பெருமையும் எழுதுதலும் உண்டென்பது,

*“ அணி மயிற் பீலிசூட்டிப் பெயர் பொறித்து*
*இனி நட்டனரே கல்லும்”*

என்ற புறநானூற்றுச் செய்யுள் அடிகளாலும்,

1. தொல்—புறத்—60.

*" ஆடவர் பீடும்பெயரும் எழுதி அதர்தொறும்
பீலி சூட்டிய பிறங்குநிலை நடுகல்"*

என்ற அகநானூற்றுச் செய்யுள் அடிகளாலும்,

*" அவன் பெயர் கல்மிசைப் பொறித்துக்
கவின்பெறக் கல்நாட் டின்று"*

என்ற புறப்பொருள் வெண்பாமாலைக் கொளுவினாலும் பெறப்படும். ஆனால் அறங்களைப் பற்றிக் கல்லில் எழுதி வைக்கும் வழக்கம் அப்பழங் காலத்தில் இல்லை.

இவ்வாறு அறச்செயல்களைக் குறித்துப் பொறிக்கப்பட்ட கல் வெட்டுக்களின் தொடக்கத்தே அக்காலத்து மன்னனது மெய்க் கீர்த்தியும் பின்னர் இன்னார், இன்ன அறத்தின் பொருட்டு, இத் தனை பொருள் வைத்தார் என்பன முதலிய செய்திகளும் குறிக்கப் பெறும். மெய்க்கீர்த்தி என்பது ஒரு வேந்தனுடைய மெய்ப்புகழை யும், அவன் வரலாற்றையும் எடுத்துக் கூறிப், பின் அவன் தேவி யாருடன் வாழ்க என வாழ்த்தி, அவனது இயற்பெயரோடு சிறப்புப் பெயரையும், ஆட்சியாண்டையும், திறம்பட உரைப்பதாகும். இதன் இலக்கணத்தை,

*"சீர்நான் காகி யிரண்டடித் தொடையாய்
வேந்தன் மெய்ப்புக ழெல்லாஞ் சொல்லியும்
அந்தத் தவன்வர லாறு சொல்லியும்
அவளுடன் வாழ்கெனச் சொல்லியு மற்றவன்
இயற்பெயர்ப் பின்னர்ச் சிறக்க யாண்டெனத்
திறம்பட வுரைப்பது சீர்மெய்க் கீர்த்தி"*

என்னும் பன்னிருபடலச் சூத்திரத்தாலும் (311),

*"தொழிலார்ந்த மெய்க்கீர்த்தி சொற்சீரடியால்
எழிலரசர் செய்தி யிசைப்பர்"*

என்னும் வச்சணந்திமாலை (செய்யுளியல் 34) அடிகளாலும் அறியலாம்.

சோழ மன்னர்கள் தங்களுடைய மெய்ப் புகழ்களை மாத்திரம், தங்கள் மெய்க்கீர்த்திகளில் கூறிக் கொள்வர். பாண்டிய மன்னர் கள் தங்கள் மெய்ப் புகழோடு தங்கள் முன்னோர்கள் செயல்களில் சிலவற்றையும் தங்களுடையதாகக் கூறிக்கொள்வர். இவ்விரு வேந்தர்களின் மெய்க் கீர்த்திகளில் காணப்படும் வேறுபாடுகள் இவையேயாகும். இம் மெய்க்கீர்த்திகள் சோழ மன்னர்களில் முதலாம் இராசராசன் காலம் முதல்தான், விரிவாகக் கூறப்பட்டன எனத் தோன்றுகின்றது. அரசனுடைய ஆட்சியாண்டுகள் மிகுந்து செல்லச் செல்ல, அவனுடைய அவ்வவ்வாண்டுகளில் செய்யப் பெற்ற மெய்ப் புகழ்களும், வீரச் செயல்களும் அவ்வரசனுடைய

மெய்க் கீர்த்திகளில் இடம் பெற்றுவரும். எனவே இம்மெய்க்கீர்த்திகள் உண்மை வரலாற்று ஆராய்ச்சிக்குப் பெரிதும் பயன்படுவனவாகும். ஓர் அரசனுக்கு ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட மெய்க்கீர்த்திகள் இருத்தலும் உண்டு.

இக்கல்வெட்டுக்கள் இன்றேல், தமிழ்நாட்டு வென்றிவேந்தர்களுடைய பெருமைகளும், அக்காலத்து நாகரிக மேம்பாடுகளும், புரவலர், புலவர், அரசியல் தலைவர் முதலியோர் வரலாறுகளும், பல தூய தமிழ்ச் சொற்களும் எத்துணையோ அரிய செய்திகளும், வெளியாகாமல் மறைந்தே போயிருக்கும். தம் காலத்துச் செய்திகளைப் பிற்காலத்தார்க்கு விளக்கும் பேரொளி விளக்கங்களாக இவை இருக்க வேண்டுமென்று கருதியேபோலும், அக்காலத்தார் கல்வெட்டுக்கள் பழுதுறுமல் எண்ணெய் பூசிப் பாதுகாத்து வந்தனர். கல்வெட்டுக்களுக்கு எண்ணெய் பூசியுள்ளனரா என்பதைக் கவனிப்பது பண்டு கோயில் மேற்பார்வையாளரின் கடமையாயிருந்தது. இக்காலத்தில் இவ் வழக்கம் இல்லாது போனதால் எத்தனையோ கல்வெட்டுக்கள் பொறிந்துபோய் பழுதுற்றன. அந்தோ! அவற்றுள் எத்தனை அரிய செய்திகள் மறைபட்டனவோ?

தமிழ் வேந்தர்களது ஆட்சிக் கதிர் மறைந்து தமிழர்கள் உறங்கிக் கிடந்த காலையில் இக் கல்வெட்டுக்களின் அருமை பெருமைகளை மாந்தர் அறியாதிருந்தனர். அந்நிலையில் தமிழ் நாட்டின் நற்காலமாக டாக்டர் உல்ஷ் (Dr. Hultzch) என்ற துரை மகனுர், ஜர்மனி தேசத்திலிருந்து இந்தியாவுக்கு வந்து, ஈண்டுள்ள கோயில்களில் வெட்டப்பட்டுள்ள கல்வெட்டுக்களைக் கண்டு அவைகளின் அருமையை உணர்ந்து, அக்காலம் இந்தியாவில் அரசப் பிரதிநிதியாக இருந்த மேன்மை தங்கிய ரிப்பன் பிரபு அவர்களிடம் (கி. பி. 1884-1888) கூறி, அக்கல்வெட்டுக்களைப் படியெடுத்து ஆராய்ச்சிசெய்வதற்கென ஒரு துறை (A department) ஏற்படுத்தியதோடு, தாமும் உடனிருந்து ஆராய்ந்துள்ளார். திருவாளர்களான T. A. கோபிநாதராயர், V. வெங்கையா என்பவர்களையும் இத்துறையில் பழக்கி வைத்துச் சென்றுர். இப் பெரியோர்களாலும், பின் வந்துள்ளோர்களாலும் கல்வெட்டுக்கள் படியெடுக்கப்பட்டுப் புத்தக வடிவமாய் வெளிவந்துள்ளன. இதுகாறும் தென் இந்தியக் கல்வெட்டுக்களில் பதின்மூன்று தொகுதிகள் வந்துள்ளன. இவைகளுள்ளும் முதல் மூன்று தொகுதிகளே ஆங்கில மொழிபெயர்புக்களைப் பெற்றுள்ளன. பெரும் பொருட் செலவை முன்னிட்டு ஏனையவைகளின் ஆங்கில மொழி பெயர்ப்பை, அரசாங்கத்தார் நிறுத்திவிட்டனர். இவ்வித மொழி பெயர்ப்பு, கல்வெட்டு எழுதப் பெற்றிருக்கும் மொழிகளை அறியாது ஆங்கிலப் பயிற்சி ஒன்றே உடையவர்களுக்குப் பெரு நலம் விளைப்பதாயிருந்தது. மேற்குறித்த பதின்மூன்று தொகுதி

களுள், 9, 10, 11 தொகுதிகளும் அவைகளின் பாகங்களும் (Parts) கன்னடம், தெலுங்கு மொழிகள் அடங்கியனவாகும். 12, 13 தொகுதிகள் வம்ச (Dynasty) வாரியாக வெளியிடப் பெற்றுள்ளன. இம்முறை மிகச் சிறந்ததாகும். இம் முறைப்படி வெளிவந்த பன்னிரண்டாந் தொகுதி பல்லவ வம்சத்து அரசர்களின் கல்வெட்டுக்களையும், பதின்மூன்ருந் தொகுதி சோழ வம்சத்து அரசர்களின் கல்வெட்டுக்களையும் குறிப்பிடுகின்றன.

இக்கல் வெட்டுத் தொகுதிகளன்றி, (South Indian Inscriptions Volumes) அரசாங்கத்தார், ஆண்டுதோறும் அறிக்கை ஒன்றை வெளியிட்டு வருகின்றனர். அதற்குத் தென் இந்தியக் கல்வெட்டின் ஆண்டு அறிக்கை (Annual report on South Indian Epigraphy) என்று பெயர். இத்தகைய அறிக்கை இதுகாறும் 1948-1949 ஆண்டு முடிய வந்துள்ளது. இது இரண்டு பாகங்களைக் கொண்டுள்ளது. இதில் இரண்டாம் பாகம் (Part II) வரலாற்றுத் துறையில் வேலை செய்பவர்களுக்குப் பெரிதும் உதவி செய்யக் கூடியதாகும். இதுவும் சில ஆண்டுகளாக மிக மிகச் சுருங்கி விட்டது. இவைகளையே யன்றி, திருவாங்கூர் இராச்சியக் கல்வெட்டுக்கள், புதுக்கோட்டை இராச்சியக் கல்வெட்டுக்கள், Epigraphia Carnatica, Epigraphia Indica, Epigraphia Birmanica, Chalukyan Architecture, Pallava Architecture, The Moghul Architectures Annual reports of Archaelogical survey of India, Memoirs of the Archaelogical survey of Ceylon முதலான நூல்களையும் அரசாங்கத்தார் பெரும் பொருட் செலவில் வெளியிட்டுள்ளனர். எடுத்த கல்வெட்டுக்களிலும் சற்றேறக் குறைய முப்பதினுயிரம் கல்வெட்டுக்கள் இன்னும் வெளியிடப் பெறவில்லை. இவையனைத்தும் வெளிவருமாயின் பல அரிய செய்திகள் வெளியாகும் என்பது திண்ணம்.

நிற்க, இக்கல் வெட்டுக்கள் தமிழ்நூற் பயிற்சிக்கு எவ்வாறு உதவுகின்றன என்பதை ஆராய்வோம்.

**யாப்பருங்கலக் காரிகை ஆசிரியரின் பெயர்:** செய்யுளிலக்கணம் கற்போர் எல்லாராலும் பயிலப்பட்டுவரும் யாப்பருங்கலக் காரிகை, யாப்பருங்கலம், இவ்விரு நூற்களின் ஆசிரியரின் பெயர் அமுத சாகரர் என்று, காரிகை நூற்பதிப்புக்களில் காணப் பெறுகின்றன. ஆனல் அப்பெயர் அஃதன்று. அமிதசாகரர் என்பதேயாம். அதற்கு யாப்பருங்கலப் பாயிரத்திலுள்ள "அளப்பருங் கடற்பெயர் அருந்தவத் தோனே" என்ற அடியே போதுமான சான்ருகும். அளப்பரும் என்றது அமிதம் என்றும், கடல் என்பது சாகரம் என்றும் பொருள் உணர்த்தும். ஆகையால் அமித சாகரர் என்பதே அவர் பெயராய் இருத்தல் வேண்டுமென்று நலமிகு புலமைமிக்க நாவலர் நாட்டார் அவர்கள் முதற்

கண் எழுதி வெளியிட்டனர். அவர்கள் கொண்ட கொள்கை உண்மை என்பது மாயூரந் தாலூகாவிலுள்ள திருநீடூர்ச் சிவன் கோயிலின் தென் சுவரில் காணப்படும் ஒரு செய்யுளால் உறுதி யாயிற்று. அது வருமாறு :—

வரி

1. எண்டிசை உலகை ஒருகுடை நிழற்கீழிருத்திய குலோத்
2. துங்க சோழற்கி யாண்டொரு முப்பத்தெட்டினிற் சோணுட்டிசை
3. வளர்திரு விந்தளூர் நாட்டுண்...டைநீடிய நீடூர் உமையோ
4. டுநிலாவின பெருமாற்கு வந்து........லைமலையெனச் சிலையாலுத்த
5. மவிமான மிங்கமைத்தான் தண்டமிழ் அமிதஸாகர முனியை ஜெயங்கொ
6. ண்ட சோழ மண்டலத்துத் தண்சிறுகுன்ற நாட்டுத் திருத்து......
7. நூற்காரிகை அவனுற் கண்டவன் மருமான் காரிகை குளத்தூர்
8. காவல் நிலாவினுன் எவர்க்குங் கருணையுந்தி (யாகமுங்) காட்டிய மிழ
9. லைநாட்டு வேள் கண்டன் மாதவனே"[1]

ஜெயங்கொண்ட சோழ மண்டலத்துச் சிறுகுன்ற நாட்டுக் காரிகைக் குளத்தூரில் அமிதசாகரரைக் கொண்டு யாப்பருங்கலக் காரிகையைப் பாடுவித்தவனுடைய வழித் தோன்றலாகிய மிழலை நாட்டு வேள் கண்டன் மாதவன் நீடூர்த் திருக்கோயில் விமானத்தைக் கட்டினுன் என்பது இப்பாடலின் கருத்தாகும். இப்பாடலால், யாப்பருங்கலக் காரிகை ஆசிரியரின் பெயர் அமிதசாகரர் என்பதும், அந்நூல் கி. பி. பத்தாம் நூற்ருண்டின் இறுதியிலோ அல்லது பதினென்ரும் நூற்ருண்டின் தொடக்கத்திலோ இயற்றப்பட்டிருக்க வேண்டு மென்பதும் விளங்கும்.

எனவே, இக்கல்வெட்டுக்களினுல் தமிழ் நூல்களில் விளங்காது கிடக்கும் இதுபோன்ற பல செய்திகள் ஐயமற வெளிப்படும் என்பது திண்ணம்.

(குறிப்பு—திரு. நாவலர். நாட்டார் ஐயா அவர்களால் திருத்தப் பெற்று, திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்

1. Epigraphia Indica. Vol. 18. Part II, Nidur Inscription by Mr. K. V. Subramania Aiyer.

பதிப்புக் கழகத்தாரால் 1944-இல் வெளியிடப் பெற்ற யாப்பருங் கலக் காரிகைப் பதிப்பில் அமிதசாகரர் என்றே குறிக்கப்பெற் றிருப்பது போற்றத் தக்கதாகும். இதற்கு முன்புள்ளோர் பதிப்புக் களிலெல்லாம் அமுதசாகரர் என்ற பெயரே காணப்படுகின்றது.)

ஆகையால் தமிழின் ஆக்கங் கருதும் அன்பர்கள் பலரும் கல்வெட்டாராய்ச்சியில் முனைந்து பயிலுதல் தமிழ் நாட்டிற்கும் தமிழ் மொழிக்கும் பேருதவி செய்ய ஏதுவாகும்.

இதனை நன்குணர்ந்த சென்னைப் பல்கலைக் கழகத்தார் வித்து வான்; B. O. L.; B. A. ஹானர்ஸ், தேர்வுகளுக்கு இருபது கல்வெட்டுக்களைப் பாடமாக வைத்துள்ளனர். அப்பாடப்பகுதி 1957-மார்ச்சு மாதத் தேர்தலோடு முடிவு பெற்றுள்ளது. இப் பால் அப்பல்கலைக்கழகத்தார் 1958-மார்ச்சு மாதம் முதல் மேற் குறித்த தேர்ச்சிகள் எழுதுபவர்களுக்கு முப்பது கல்வெட்டுக்களைப் பாடமாகத் தேர்ந்தெடுத்துள்ளனர்.

இப்பாடப் பகுதிக்கு விளக்கவுரை எழுதுமாறு திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரி பிரின்ஸ்பால், வித்துவான், திரு. K. M. வேங்கட ராமையா M. A., B. O. L., அவர்களும், தருமபுர ஆதீனப் பல்கலைக்கல்லூரி பிரின்ஸ்பால், வித்துவான், சித்தாந்த சிரோமணி, சித்தாந்த ரத்நாகரம், மதுரகவி, முதுபெரும் புலவர் திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் அவர்களும் அடிக்கடி என்னைத் தூண்டிவந்தனர். யானும் ஒழிவுள்ள காலங்களில் இவ் விளக்க வுரையை எழுதி முடித்தேன். முடித்தும் அச்சிட வேண்டுமே என்ற கவலை மிகுதியாயிற்று. சிறந்த தமிழ்க் கல்வியும், ஆராய்ச்சி அறிவும் உடையவர்களாய் E. S. L. C., S. S. L. C., முன்பெலாம் இண்டர் மீடியட் என்னும் பெயருடன் இருந்து 1956-57 முதல் Pre-university Course என்று வழங்கப் பெறும் பல்கலைக் கழகப் புகுமுகத் தேர்வு; B. A., ஆகிய தமிழ்ப் பாடப்பகுதிகளுக்குப் பல்லாண்டுகளாக உரையொழுதிவரும் திறனுல் தமிழகத்து மாணவர்களின் உள்ளங்களில் அகலாது வீற்றிருக்கும் அன்பரும், எனது ஆசிரியப் பெருந்தகையார் திரு. கரந்தைக் கவியரசு அவர் களின் நன்மதிப்புக்குரியவரும், திருச்சிராப்பள்ளி அர்ச். சூசை யப்பர் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியரும் ஆகிய வித்துவான் திரு. T. ஐயன் பெருமாள் கோனுர் அவர்களின் நினைவு எனக்கு வந்தது. திரிசிரபுரம் சென்று அவர்களிடம் என் கருத்தைத் தெரிவித்தேன். "கவலை வேண்டாம். உங்களை நன்கு அறிவேன். இங்குச் சிறந்த அன்பர்களாள திருவாளர்கள் பழனியப்பரும், அவரது இளவலார் செல்லப்பா B. A. Honours., அவர்களும் இருக்கின்றனர். அவர் கள் மூலம் இதை வெளியிடச் செய்வேன்" எனக் கூறியதோடு, விளக்கவுரையைச் செப்பஞ் செய்தும், வெளிவருதற்குரிய நன் முயற்சிகளைச் செய்தும், என் உள்ளத்தை உவப்படையச் செய் தருளினுர்கள். இது, அவர்கள் எனக்குக் காலத்தாற் செய்த நன்றியாகும்.

யான் இவ்வுரையை எழுதுவதற்குக் கல்வெட்டுத் துறையாளர் வெளியிட்டருளிய தென் இந்தியக் கல்வெட்டுக்களின் ஆண்டு அறிக்கைகள் (Annual reports on South Indian Epigrahy), தென் இந்தியக் கல்வெட்டுத் தொகுதிகள், இந்தியா தேசத்துக் கல்வெட்டுக்கள் (Epigraphia Indica), கருநாடக தேசத்துக் கல்வெட்டுக்கள் (Epigraphia Carnatica), திருவாங்கூர் இராச்சியக் கல்வெட்டுத் தொகுதிகள், புதுக்கோட்டை இராச்சியக் கல்வெட்டுக்கள் முதலியவைகளும், வரலாற்றுத் துறையில் நுண்ணறிவு சான்ற திருவாளர்களான P. T. சீநிவாச ஐயங்கார் M. A. அவர்களுடைய பல்லவர் சரித்திரம், K. M. நீலகண்ட சாஸ்திரியார் M. A. அவர்கள் எழுதிய சோழர் (இரண்டாம் பதிப்பு), பாண்டியர் வரலாறு என்னும் அரிய நூல்களும்; செந்தமிழ், தமிழ்ப் பொழில் என்னும் திங்கள் இதழ்களில் அறிஞர்கள் எழுதிய கல்வெட்டாராய்ச்சி உரைகள் சிலவும், தமிழார்வம் நிறைந்த எனது கெழுதகைய நண்பர் திரு. T. K. நாராயணசாமி நாயுடு அவர்களின் கருத்துரைகள் சிலவும் பெரிதும் பயன்பட்டன.

யான் இக்கல்வெட்டுத் துறையில் கடந்த இருபத்தெட்டு ஆண்டுகளாகப் பெற்றுவரும் அநுபவத்தைக்கொண்டு இவ்விளக்கவுரையின் இறுதியில் மெய்க்கீர்த்திகள்; கல்வெட்டுக்களைக் கொண்டு மாணவர்கள் பயிற்சி பெறுவதற்குரிய கேள்விகள் மறுமொழிகள் இவைகளைப் பொது, சிறப்பு என்ற பாகுபாடுகளுடன் சேர்த்துள்ளேன். இவைகள் தேர்வு எழுதுவோர்களுக்குப் பெரிதும் பயன்படுமென்பது எனது நம்பிக்கை. பாடப் பகுதிக்குரிய மெய்க்கீர்த்திகளில் சிற்சில இடங்கள் பிழையாகக் கல்லில் செதுக்கப்பட்ட வண்ணமே கொடுக்கப்பட்டுள்ளன. வேறு வேறு இடங்களிலுள்ள மெய்க்கீர்த்திப் பகுதிகளைக் கொண்டு அவைகளைச் செப்பஞ் செய்துள்ளேன். 24-ஆம் கல்வெட்டில் வந்துள்ள குலசேகர தேவருடைய மெய்க்கீர்த்திப் பகுதி மிகவும் பிழையாக இருப்பதால், அதைத் தென் இந்தியக் கல்வெட்டுத் தொகுதி ஐந்து, எண் 302-இல் உள்ள கல்வெட்டில் கண்ட மெய்க்கீர்த்தியைத் தழுவி திருத்தியுள்ளேன். இதுபோல் ஏனைய மெய்க்கீர்த்திகள் அடைந்த திருத்தங்களும் உண்டு. காலஞ்சென்ற மகாமகோபாத்தியாய, டாக்டர், திரு. ஐயர் அவர்கள் தேர்வாளராக இருந்த காலையில் சில பிழையுள்ள கல்வெட்டுப் பகுதியைப் பாடத்திலிருந்து கொடுத்துத் திருத்துக என்று குறிப்பிட்டிருந்தார்கள். இதுவே நான் திருத்துவதற்குக் காரணமாகும். பதிப்பாசிரியர் அடிக்குறிப்பில் காட்டிய திருத்தங்கள் பெரும்பாலனவற்றை மூலத்தில் சேர்த்தும் இருக்கின்றேன். பனையேடுகளில் உள்ளன போல, கல்வெட்டுக்களிலும். புள்ளிகள், கொம்பு சுழிகள் இருக்கா. இவைகளைப் படிப்போர் பொருள் உணர்ச்சியோடுதான் படிக்க வேண்டும். மேலும் சிலாலேகை என்பது சிலாலெகெ எனச் செதுக்

கப்பட்டிருக்கும். இதில் இரண்டு கொம்பும் சேர்ந்ததே ை ஆகும். மாணவர்களுக்கு மயக்கம் எழாவண்ணம் மூலபாடத்தில் பெரும் பான்மை புள்ளிகளை வேண்டிய இடங்களில் பதிப்பாசிரியர் வைத்துள்ளனர். அது கருதி கல்வெட்டுக்களில் புள்ளிகள் உண்டு என்ற தீர்மானத்துக்கு வருதல் கூடாது.

ஒன்றுக்கும் பற்றாத என்னை இம்முயற்சியில் புகுத்தி இதனை நிறைவேற்றி வைத்தருளிய ஆடகப் பொதுவில் நாடகம் இயற்றும் ஏடவிழ் கூந்தல் இறைவிபாகனைப் பன்முறையும் வணங்குகின்றேன். தமிழகத்து மாணவர்களுக்குச் சிறந்த உரைகளையும் பாடபுத்தகங்களையும் கண்கவரும் வனப்பில் அச்சிட்டு குறைந்த விலைக்கு விற்பனை செய்து வருபவர்களும் தமிழ்ப் புலவர்களை வரிசையறிந்து போற்றிவருபவர்களுமாகிய திருவாளர்கள் பழநியப்பர், அவரது இளவலார் (Palaniappa Brothers) இவர்கள் இவ் விளக்கவுரையை அச்சிட்டமைக்குப் பெரிதும் நன்றியறிதலுடையேன். இதனை எழுதுமாறு என்னைத் தூண்டிய மேற்குறித்த இரு பிரின்ஸ்பால்களுக்கும் அச்சிடுதற்குரிய நன்முயற்சியில் ஈடுபட்டு என் வேண்டுகோளை இனிது முடித்து வைத்த திரு. கோனார் அவர்கட்கும், கல்வெட்டுத் துறையாளர்க்கும், சரித்திரப் பேராசிரியர் திரு. P. T. சீநிவாச ஐயங்கார் முதலானோர்களுக்கும், சென்னைப் பல்கலைக் கழகத்தார்க்கும் என் வணக்கம் உரியதாகுக.

அடியேன் நடராசப் பெருமானை நாளும் வணங்கும் பேற்றை அளித்ததோடு, கல்வெட்டுத் துறையில் முனைந்து வேலை செய்யுமாறு, அடிக்கடி ஊக்கங் கொடுத்தருளும், அருங்கலை விநோதரும் பெருங்கொடை வள்ளலுமாகிய தருமபுரஆதீனம் இருபத்தைந்தாம் பட்டத்து மகா சந்நிதானம் உயர்சைவத்திரு. சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கட்கும், கல்வெட்டு விளக்கவுரை சிறந்த முறையில் அமைய வேண்டுமென்னும் திருவுள்ளத்தோடு, தங்கள் நூல் நிலையத்திலிருந்து சோழர் (இரண்டாம் பதிப்பு) என்னும் நூலை உதவியருளிய, திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர்களாகிய உயர்சைவத்திரு. காசிவாசி. அருள்நந்தித்தம்பிரான் சுவாமிகள் அவர்களுக்கும், கவலையின்றி இவ்விளக்கவுரையை இனிது எழுதிமுடித்தற்குப் பொருளுதவி அருளியவர்களும், பெரும் பொருளை வரையாது வீசி சைவ சித்தாந்தத்தையும் திருமூலர் திருமந்திரத்தையும் பரப்பி வருபவர்களுமாகிய திருவாவடுதுறை ஆதீனத்து 21-ஆம் பட்டத்து மகாசந்நிதானம், உயர்சைவத்திரு. சுப்பிரமணிய தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்களுக்கும், அடியேனுடைய வணக்கத்தையும், நன்றியறிதலையும் பணிவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சிதம்பரம்,
21—1—1958.

இங்ஙனம்,
**வை. சுந்தரேச வாண்டையார்**

# 1. தந்திவர்மன் கல்வெட்டு*

(வரி)

ஸ்வஸ்தி ஸ்ரீ பல்லவகுல திலத பாரத்
துவாஜ கோத் ராலங்கார பதியாகிய ஸ்ரீ
தந்திவர்ம மகா ராஜர்க்கு வர்ஷவர்த் தனம்
யாண்டு பன்னிரண்டாவது திருவல்லிக்
கேணி குலங்கிழார்கள் கருமாரச் சேரிப்புலம்
ஒற்றிட்டு நாற்பதின்காடி நெல் பொலியூட்ட திரு
வடிகட்கு, திருவமிர்து முட்ட புகழ்த்துணைவிசை
யரையன் முப்பதின் காடி நெல்லும் ஐங்கழஞ்சு
பொன்னும் குடுத்து மீட்டுத் தனதாக்கி நாற்பத்
தைங் காடியும் நிசதி ஐந்நாழி நெல்லால் இருநாழி
தூக்குத்தலரிசியால் இராப் போனகஞ் சங்கசர்
மனும் சத்திசர்மனும் இளைய சத்திசர்மனும்கா
ட்டு வாரானார்கள். முட்டில் அவிப்புலத்தும், தத்தன்புலத்
தும், காரை கிழான் புலத்தும், சுவாமி போகத்துத்திருவ
மிர்து காட்டுவோமானோம். இத்தர்மத்துள்ளார்யாவ
ரேனுங் கோச் செய்வது செலுத்தி ஒட்டிக்குடுத்
தோம். ஈழவிளக்கும் வட்டில் லோகப் பானையும் ரக்ஷிப்ப
து. புகழ்த்துணை விசையரையன் தர்மம்இது. இதனை ர
க்ஷித்தார் அடியிரண்டும் என் முடிமேலன.[1]

### விளக்க உரை

**கல்வெட்டு இருக்குமிடம் :—**

திருவல்லிக்கேணி பார்த்தசாரதி சுவாமி கோயிலின் கர்ப்பக் கிருகத்திற்குப் போகும் வாயிலுக்கு அருகில் தரையில் வைத்துக் கட்டப்பெற்றுள்ள ஒரு கல்லில் செதுக்கப்பட்டுள்ளது.

---

* Epigraphia Indica, Vol. VIII, No. 29.

1. இக் கல்வெட்டு ஆங்கிலத்தில் Transliteration method-இல் (அதாவது லிபி மாற்று முறையில்) எழுதப்பெற்றிருப்பதால் தமிழ் மொழி மாத்திரம் அறிந்தவர்க்குப் பயன்படுமாறு தமிழில் இங்கே எழுதப்பெற்றது.

**கல்வெட்டின் எழுத்துக்கள் :**

தமிழும் வடமொழியும் கலப்பு. ஆனால், கிரந்த எழுத்துக்களில் செதுக்கப்பட்டுள்ளன.

கல்வெட்டில் குறிக்கப்பட்ட அரசன் - பல்லவ மன்னன் தந்தி வர்மன்.

**அரசனைப்பற்றிய பொதுக் குறிப்பு :**

இவன் நந்திவர்மப் பல்லவமல்லன் மகன். கி. பி. 777 முதல் கி. பி. 830 வரை ஆண்டவன். இவன் "பாரத்துவாஜ கோத்திரத்தின் வழித்தோன்றிய பல்லவ திலக குலோத்பவன் தந்திவர்மன்" எனவும், "கோவிசைய தந்திவிக்கிரமபர்மன்" எனவும் கல்வெட்டுக்களில் குறிக்கப் பெற்றுள்ளான். இவனுக்கு மாற்பிடுகு என்னும் பட்டப்பெயரும், வைரமேகன் என்னும் வேறுபெயரும் உண்டு. இவன் கதம்ப மன்னர் குலத்தில் பிறந்த அக்கள நிம்மடி என்னும் பெண்ணை மணந்து கொண்டவன். திருச்சிராப்பள்ளி தாலூகாவில் இக்காலம் ஆலம்பாக்கம் என வழங்கும் தந்திவர்ம மங்கலத்திலுள்ள கைலாசநாதர் கோயிலை இவன் கட்டியுள்ளான். இங்கே ஒரு ஏரி ஒன்றை வெட்டி அதற்கு மாற்பிடுகு ஏரி என்று பெயர் வைத்துள்ளான். புதுக்கோட்டை இராச்சியத்தில் குளத்தூர் தாலூகாவில் இக்காலம் மலையடிப்பட்டி என்று வழங்கும் திருவாலத்தூர் மலைக் கோயில் இவன் காலத்தில் விடேல்விடுகு முத்தரையனாகிய குவாவன் சாத்தனால் கட்டப் பெற்றது. திருச்சிராப்பள்ளிக்கு வடக்கே பன்னிரண்டு மைல் தொலைவிலுள்ள திருவெள்ளறை என்னும் ஊரிலுள்ள மாற்பிடுகு பெருங்கிணறும், செங்கற்பட்டு ஜில்லா உத்தரமல்லூரிலுள்ள வைரமேகத் தடாகமும், இவன்காலத்தே வெட்டப் பெற்றன. இவனுக்கு இராஷ்டிர கூட அரசன் கோவிந்தனும், பாண்டிய மன்னன் மாறஞ் சடையன் வரகுணமகா ராசனும் பகைவர்களாயிருந்தனர்.

**கல்வெட்டுத் தோன்றிய காலம் :**

இவன் அரியணை ஏறிய 12-ம் ஆண்டு, அதாவது (777+12) =கி. பி. 789.

**திருவல்லிக்கேணி பார்த்தசாரதி சுவாமி கோயில் வரலாறு :**

இது, தொண்டைமான் பிரார்த்தனைக்கு இரங்கித் திருவேங்கடமுடையான் கண்ணனாகச் சேவை சாதித்த கோயில். பேயாழ்வார், திருமழிசை யாழ்வார், திருமங்கை யாழ்வார் இவர்களால்

மங்களாசாசனம் செய்ப்பெற்ற பெருமை வாய்ந்தது. இக் கோயிலைக் கட்டியவர் பல்லவ அரசர் ஒருவராவர். இச் செய்தி,

> "மன்னு தண்பொழிலும் வாவியும் மதிளும் மாடமாளி
> கையும் மண்டபமும்
> தென்னர் தொண்டையர்கோன் செய்த நன்மயிலைத்
> திருவல்லிக் கேணி நின்றானை"

(பெரிய திருமொழி. செ. 130) என்னும் திருமங்கை ஆழ்வார் வாக்கால் இனிது புலப்படுகின்றது. இக்கோயிலில், பல்லவரில் தந்திவர்ம மகாராஜர் காலத்திலும், பாண்டியரில் மாறவர்மன் குலசேகரன் காலத்திலும், சோழரில் மூன்றாங் குலோத்துங்கன், மூன்றாம் இராசராசன் இவர்கள் காலங்களிலும், விசய நகர வேந்தர் களில், சதாசிவதேவ மகாராயர், வீரவேங்கடபதி தேவ மகாராஜர், ரெங்கராய தேவ மகாராயர் காலங்களிலும், செதுக்கப் பெற்ற கல் வெட்டுக்கள் இருக்கின்றன. இக்கோயிலில் திருமழிசை யாழ்வா ரைச் சகம் 1525-இல் (அதாவது கி. பி. 1603-இல்) எழுந் தருளுவித்தவர் விசய நகர பரம்பரையைச் சேர்ந்த வீரவேங் கடபதி தேவமகாராயர் ஆவர். வீரப்பிரதாப சதாசிவ தேவராயர் காலத்தில் சகம் 1486–அதாவது கி.பி. 1564-இல்—இக் கோயிலின் சிலபகுதிகள் புதிதாகக் கட்டப்பெற்றன. விசய நகர வேந்தர் காலங்களில், புதுப்பாக்கம், வேப்பேரி, செம்பியன், நடும்பாறை முதலான ஊர்கள் இக்கோயிலுக்குக் கொடுக்கப் பெற்றுள்ளன.

இக் கல்வெட்டில் குறிக்கப் பெற்ற செய்தி:—திருவல்லிக் கேணிக்கு உரிமையுடையவர்கள் கோயிலுக்குரிய கருமாரச் சேரிப் புலத்தை ஒற்றிக்கு வைத்துவிட்டனர். அதனால் நாற்பத்தைந்து காடி நெல் வருமானம் குறைந்து போக, சுவாமிக்குத் திருவமுது தடைப்பட்டது. புகழ்த்துணை விசையரையன் முப்பதின் காடி நெல்லும் ஐங் கழஞ்சு பொன்னும் கொடுத்து ஒற்றியை மீட்டுத் தன் னுடையதாக்கி, நாள் ஒன்றுக்கு ஐந்து நாழி நெல்லைக் கொடுத்து, அதை நன்கு குற்றுதலால் உண்டாகும், இரண்டு நாழி தூக்குத்தல் அரிசியைக் கொண்டு, சங்கசர்மனும், சத்திசர்மனும், இளையசத்தி சர்மனும் சுவாமிக்கு இரவுப் போனகம் காட்டக் கடவார்கள் என வும், அப்போனகம் தடைப்படுமாயின், அவிப் புலம், தத்தன் புலம், காரைகிழான் புலம், இவைகளிலிருந்து சுவாமி போகத்துக்குத் திருவமுது காட்டக் கடவதென்றும், அவர்கள் தவறி விடுவார் களானல் அரசன் விதிக்கும் தண்டத்திற்குட்பட்டு அவர்கள் நடத் தக்கடவதென்றும் ஏற்பாடுகளைச் செய்துள்ளான்.

இவனே பொன்விளக்கு, வட்டில், உலோகத்தால் செய்த பாணை இவைகளையும் கொடுத்துள்ளான்.

**இக் கல்வெட்டில் வந்துள்ள காப்புரை :—**

"இதனை ரக்ஷிப்பார் அடியிரண்டும் என் முடிமேலன" என்பதாகும்.

## குறிப்புரை

ஸ்வஸ்தி - மங்களம் உண்டாகுக. (Hail ! Prosperity !)

திலதம் - நெற்றிப் பொட்டு; திலகம் எனினும் ஒக்கும்.

கோத்திரம் - வமிசம்.

பாரத்துவாச கோத்திரம் - பரத்துவாசர் என்ற முனிவரை மூல புருடராகக் கொண்டுவரும் ஒரு வமிசம். (உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியர் பாரத்துவாச கோத்திரத்தினர் என்பதை உணர்க.)

வர்த்தனம் - ஸ்தாபிக்கை; அல்லது வளர்கை.

வர்ஷ வர்த்தனம் - ஆட்சி ஏற்பட்ட ஆண்டு.

திருவல்லிக் கேணி - இது சென்னையில் ஒரு பகுதி. இது ஆங்கிலத்தில் Triplicane என்று வழங்கப் பெறுகின்றது.

குலங் கிழார்கள் - குலம் - கோயில். கிழார் - உரிமையுடையவர். எனவே கோயிலுக்கு உரிமையுடையவர் என்பது திரண்ட பொருள். கல்வெட்டுத் துறையாளர் ஆலய அர்ச்சகர் (The priests) என்பர். கோயில் வேலையை நடத்துவோர் என்பர் திரு P. T. சீநிவாச ஐயங்கார் அவர்கள்.

கருமாரச் சேரி புலம் - வயலின் பெயர். கருமாரச் சேரி என்னும் ஊரிலுள்ள வயல் என்றுங் கொள்ளலாம்.

ஒற்றிட்டு - ஒற்றி வைத்து.

காடி - இது இரண்டு பதக்குக் கொண்ட நெல்.

பொலியூட்டு - இங்கே வருவாய் என்ற பொருளில் உள்ளது.

பொலியூட்ட - என்பது பொலியூட்டு என்றிருக்க வேண்டும். "As people walk in it very frequently the stone has become much worn and the writing has suffered considerable damage, very few aksharas are however really doubtful, though some are broken" என ராவ்பகதூர் V. வெங்கையா M. A. அவர்கள் இக் கல்வெட்டுப் பதிப்பில் குறித்திருப்பது நோக்கத்தக்கது.

திருவடிகட்கு - பார்த்தசாரதி சுவாமிக்கு.
முட்ட - தடைப்பட.
ஐந்நாழி - ஐந்து படி.
தூக்குத்தல் அரிசி - நன்கு குற்றப்பட்ட தூய அரிசி.
போனகம் - உணவு; (அ) அன்னம்.
இராப் போனகம் - இரவில் வைத்து நிவேதிக்கும் அன்னம்.
காட்டுவாராஞர்கள் - காட்டக் கடமையுடையவராஞர்கள்.
அவிப் புலம் - கடவுளுக்குத் திருவமுதுக்காக விடப்பட்ட நிலம்.
சுவாமி போகத்து - சுவாமி திருவமுது செய்கைக்கு.
போகத்து - புசிக்கைக்கு (Eating).
இத்தர்மத்துள்ளார் – சங்கர்சமன், சத்திசர்மன், இளைய சத்தி சர்மன் என்னும் மூவர்.
கோச் செய்வது செய்து - அரசன் விதிக்கும் தண்டத்திற்குட் பட்டு.
ஈழ விளக்கு - பொன்ஞல் செய்த விளக்கு.
உலோகப் பானை - உலோகத்தால் செய்யப்பட்ட பானை.
ரக்ஷிப்பது - பாதுகாப்பது.

## பொதுச் செய்தி

### Liquid and grain measures

| | | |
|---|---|---|
| 2 | செவிடு | = 1 பிடி |
| 5 | செவிடு | = 1 ஆழாக்கு |
| 2 | ஆழாக்கு | = 1 உழக்கு |
| 2 | உழக்கு | = 1 உரி |
| 2 | உரி | = 1 நாழி |
| 8 | நாழி | = 1 குறுணி |
| 2 | குறுணி | = 1 பதக்கு |
| 2 | பதக்கு | = 1 தூணி அல்லது காடி |
| 3 | தூணி | = 1 கலம். |

# 2. விஜய தந்தி விக்கிரம வர்மன் கல்வெட்டு*

1. ஸ்வஸ்திஸ்ரீ கோவிசைய தந்தி விக்கிரம வர்மற்கு யாண்டு அம்பத்தொன்ருவது திருவெ(ங்)—
2. கடக் கொட்டத்துக் குடவூர் நாட்டுத் தி(ரு)ச் சொகினூர்த் திருவெங் கடத்து(எ)ம் பெருமானடிகளுக் -
3. கு எழுந்தருளுவித்த திருவிளங் கொயிற் பெருமானடிகளுக்குச் சோழ நாட்டு(ச்) சொழனூர்-
4. உலக பெருமானூர் வைத்த திருவிளக்கு முதல் முப்பதின் கழஞ்சு இம் முதலுக்காகக் கருக்கி–
5. பட்டி இப்பொன்னுக்குக் கொண்டு கு(டு)த்துத் திருவிளக்கு வைப்பித்தொம்.

## விளக்க உரை

இருக்குமிடம் :—சித்தூர் ஜில்லா சந்திரகிரி தாலூகாவில் இக்காலம் திருச்சானூர் என வழங்கும் திருச்சோகினூர் பத்மாவதி அம்மன் கோயில் வாசலில் தரையில் வைத்துக் கட்டப்பெற்றுள்ள ஒரு துண்டுப் பகுதியில் உள்ளது.

கல்வெட்டின் எழுத்துக்கள் :—தமிழும், கிரந்தமும் கலந்துள்ளன.

கல்வெட்டில் குறிக்கப்பெற்ற அரசன் :—விஜய தந்தி விக்கிரம வர்மன்.

அரசனைப் பற்றிய பொதுக் குறிப்பு :—முதற் கல்வெட்டிற் காண்க.

கல்வெட்டுத்தோன்றிய காலம் :—விஜய தந்தி விக்கிரம வர்மன் அரியணை ஏறிய ஐம்பத்தொன்ரும் ஆண்டு. அதாவது கி. பி. (777+51)=828.

கல்வெட்டில் குறிக்கப் பெற்ற செய்தி :—திருவேங்கடத்துப் பெருமானடிகளுக்கு எழுந்தருளுவித்த, திருவிளங்கோயில் பெருமானடிகளுக்குச் சோழ நாட்டுச் சோழனூர் உலகப் பெருமானூர், திருவிளக்கின் பொருட்டு முப்பது கழஞ்சு பொன்னை மூலதனமாக வைத்துள்ளனர். அம்மூலதனத்துக்குக் கருக்கிப்பட்டியை வாங்கித் திருவிளக்கு வைக்கப்பெற்று வந்தது.

* S.I.I., Vol. XII, No. 43

## குறிப்புரை

திருவேங்கடக் கோட்டம்:—தொண்டை மண்டலம் வெண்குன்றக்கோட்டம், தாமற்கோட்டம், குன்றவர்த்தனக் கோட்டம், ஆமூர்க் கோட்டம், புலியூர்க் கோட்டம், ஊர்க்காட்டுக் கோட்டம், செங்காட்டுக் கோட்டம், காலியூர்க் கோட்டம், திருவேங்கடக் கோட்டம் முதலான இருபத்து நான்கு கோட்டங்களாகப் பிரிக்கப் பட்டிருந்தது. அவைகளுள் திருவேங்கடக் கோட்டம் என்பது ஒன்று. இது திருவேங்கடத்தைத் தலைநகராகக் கொண்டு விளங்கிய ஒரு ஜில்லாவாகும். (கோட்டம் என்பது, இக்காலத்தில் ஒரு ஜில்லாவிற்குச் சமமாகும்.)

குடவூர் நாடு:—இது திருவேங்கடத்துக் கோட்டத்துக்குட்பட்ட குடவூரைத் தலைநகராகக் கொண்டு விளங்கிய நாடாகும். நாடு என்பது இக்காலம் ஒரு தாலுகாவிற்குச் சமம். திருச்சோகினூர், யோகிமல்லாவரம் முதலான ஊர்கள் இந்நாட்டிற்குட்பட்ட சில ஊர்களெனக் கல்வெட்டுக்கள் அறிவிக்கின்றன.

திருவேங்கடத்துப் பெருமானடிகள்:—திருச்சோகினூரில் எழுந்தருளியிருந்த கடவுளின் பெயர்.

இளங்கோயில்:—ஒரு கோயிலின் கர்ப்பக் கிருகத்தை (சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் இடத்தை)ப் பிரித்துப் புதுக்க வேண்டியவர் அதனை இருப்புக் கவசத்தால் மூடி, வேறோர் அணிய இடத்தில் சிவலிங்கம் நிறுவி ஆவாகனம் செய்து, அதற்குப் பூசை முதலியவை செய்வர். திருப்பணி முற்றிக் கும்பாபிடேகம் நிகழும் காலத்து மூடிய பழைய சிவலிங்கத்தில் சத்தியை ஏற்றி மறுபடியும் முன்போல் பூசை நடத்துவர். அதுவாகப் புதுவது நிறுவிய சிவலிங்கத்தை மணலுக்குள்ளோ, கடலிலோ, போட்டு மறைத்துவிடுவர். இன்றேல் அங்கே அதற்கும் கோயில் வகுத்துப் பூசை முறை புரிந்து வருதலுண்டு. அக்கோயிலுக்குப் பால ஆலயம் என்று பெயர். இதுவே இளங்கோயில் என்பது. திருமீய்ச்சூர் இளங்கோயில், கடம்பூர் இளங்கோயில், இவைகள் இதற்குச் சான்றுகளாகும்.

இளங்கோயில் பற்றி,

> "*வெற்பென் றிருஞ்சோலை வேங்கடமென் றிவ்விரண்டும்*
> *நிற்பென்று நீமதிக்கும் நீர்மைபோல்—நிற்பென்*
> *றுளங்கோயி லுள்ளம்வைத் துள்ளினேன் வெள்ளத்*
> *திளங்கோயில் கைவிடே லென்று*"

என்ற பாசுரத்தின் (இயற்பா—இரண்டாந்திருவந்தாதி, செய்யுள் 2235) உரையில், "இளங்கோயில் அதாவது பாலாலயம் என்றபடி.

இக்காலத்தும் திருக்கோயில்களில் எம்பெருமான் திருமேனியை ஜீர்ணோத்தாரணம் செய்யநேரும்போது பாலாலய பிரதிஷ்டை செய்வது வழக்கமாயிருப்பது காண்க. வேறொரு பெருங் கோயிலிற் சென்று சேர்வதற்கு உறுப்பாக (பூருவாங்கமாக) சிறுகக்கொள்ளும் கோயிலை பாலாலய மென்றது'' என காஞ்சி பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரிய சுவாமிகள் எழுதியுள்ளதை நோக்குக.

திருச்சோகினூர்த் திருவேங்கடத்துப் பெருமானடிகளுக்கு எழுந்தருளுவித்த திருவிளங்கோயில் சிவன்கோயிலா? அல்லது திருமால் கோயிலா?:—சிவன் கோயில் என்பது திரு. T. A. கோபிநாதராயர் M. A. அவர்கள் கருத்தாகும். அவர் கூறும் காரணம் :— முதலாம் இராசராசன் காலத்துத் தஞ்சைக் கல்வெட்டுக்கள் ஒன்றில் (S. I. I., Vol. II. No. 66) கடம்பூர் இளங்கோயிலைப் பற்றிப் பல தடவைகளில்கூறப்பெற்றுள்ளது. இங்கே இளங்கோயில் என்பது சிவன் கோயிலா அல்லது திருமால் கோயிலா என்பதற்கு ஆதாரமில்லை. பெரிய புராணத்தில் மீய்ச்சூர் இளங்கோயிலைப் பற்றிக் குறிக்கப் பெற்றுள்ளது. ஆதலின் அது சிவன் கோயிலாதல் வேண்டும். விசயநகர வேந்தனாகிய இரண்டாம் ஹரிஹரனுடைய நாலூர்ச் சாசனத்தில் (Published in Epigraphia Indica, Vol. III, page 126, verse 24) குறிக்கப்பெற்றுள்ள இளங்கோயில் சிவன் கோயிலாக இருக்கின்றது. இளங்கோயில் என்பது இளவரசனுடைய வீடு என்று பொருள்படுகிறது. ஆதலின் சுப்பிரமணியர் கோயில் எனக் குறிப்பதாகக் கொள்ளலாம். இம்முறையில் திருச்சானூரில் இடிந்துபோன இளங்கோயில் சிவன் கோயில் என்று கூறுதற்கு ஆதாரம் உண்டு. பழங் காலம் முதல் இது வரையில் இவ்வூரில் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டுக்களில் (No. 262 of 1904) திருப்பதி திருவேங்கடத்துப் பெருமானடிகளுக்கு இணைப்புக் கோயிலாக (as an accompaniment of the temple) இவ்விளங்கோயில் கட்டப்பட்டதாகத் தோன்றுகிறது. திருப்பதியிலுள்ள தெய்வம் முதலில் சிவனாக இருந்தது என்னும் பிரபலமான நம்பிக்கைக்கு இது ஆதரவாக இருப்பதாகக் கொள்ளக் கூடும் என்பதாகும்.

இக்கருத்தில் அவர் பின் வருமாறு எழுதியுள்ளனர் :—

"In one of the Tanjore Inscriptions of the chola king Rajaraja I (S. I. I., Vol. II, No. 66.) reference is made to several times to Tiruvilangoyil temple at Kadambur. Here there is nothing to prove absolutely whether Tiruvilangoyil was a Siva or Vishnu temple. The Tamil work Periyapuranam which gives an account of sixty three devotees of Siva mentions the Ilangoyil at Miyachchur

which must be Siva. Again the Nallur grant of the Vijayanagara King Hari Hara II published by me (Ep Indica. Vol. III page 126. verse 24) Ilangoyil occurs as the name of a Siva Temple. The word Ilangoyil itself means the house of a young King and may be taken to denote a shrine of Subrahmanya. Thus there is reason to support that the shrine in Tiruchchanur temple which has been pulled down was originally called Ilangoyil and was therefore Siva. From the earliest hitherto discovered Inscriptions of this place (No. 262 of 1904) it appears that the shrine was built as an accompaniment of the temple at Tirupati known at the time as Tiruvengadathu Perumanadigal. Perhaps this can be taken to support the popular belief that the deity at Tirumalai was originally Siva'' (Annual report on South Indian Epigraphy for the year 1904-page 5)

சோழர் உலகப் பெருமானர் :—இவர் சோழ நாட்டில் பல்லவரின் ஆதிக்கத்துக்கு உட்பட்ட சோழர் ஆவர்.

திருவிளக்கு முதல் :—திருவிளக்குக்கு மூலதனமாக.

கழஞ்சு :— 2 குன்றி—1 மஞ்சாடி; 20 மஞ்சாடி—1 கழஞ்சு ஆதலால், 40 குன்றிமணி (குண்டுமணி) எடையுள்ள பொன் ஒரு கழஞ்சாகும்.

முதலுக்கு :—மூலதனத்துக்கு.

கருக்கிபட்டி :—வயலின் பெயர்.

## 3. முதற் பராந்தகன் கல்வெட்டு*

1. ஸ்வஸ்திஸ்ரீ மதிரை கொண்ட கொப்பர கெசரி பன்மற்கு யாண்டு முப்பத்து மூன்ருவது இவ்வாண்டு (தெ)வ (தா)னங் கிழிரணிய முட்(டத்) துப் படும் (பி)-

2. ரம்மதெய(ம்) (ந) ரசிங்க மங்கலத்துச் சவையொ ஞ் சோழப் பெருமானடிகளதிகாரிகள் சோழ நாட்டுப் புறங் கரம்பைனுட்-

3. டு மருதூர் மருதூருடையா னருணிதி கலியனுக்கு ஒட்டிக் குடுத்த பரிசாவது எங்களூர் திருவா(ஊ) மலை நரசிங்கப் பெருமானடிகள் (த)-

4. முடைய நிலத்தால்ச் சவையொமுக்கு [ஆ]ண் டெடுத்து இடக் கடவ ஈழக்காசு பதினெட்டு [இ]க்காசு பதினெட் டிலும் முன்றத் தெ(ா)ன்(று) ஈ-

5. ழக்காசு ஆறு. இவ்வாறு ஈழக்காசுக்கும் பலிசையாகச் சவையார் கைய்வழி குடுத்த ஈழக்காசு பதினைந்து. (ப) தினைஞ்சினுலும் வந்த பலி-

6. சையாவது ஈழக்காசின் வா(ய்)த் திங்கள் காற் புத்த (க்க) மாக ஒரோ திங்களால் வந்த புத்தக்க முன்றெ முக்கால். முன்றெ முக்காலு ஓராண்டு பந்நிரண்டு தி-

7. ங்களால் வந்த புத்தக்கம் நாற்ப(த்) தைஞ்சு. நாற் பத் தஞ்சினு லொரு ஈழக் காசுக்குப் புத்தக்கம் ஏழரை ஆக (ஈ) ழக் காசு (ஆ) று இவ்வாறு (ஈ)ழ-

8. க் காசும் இறை நீக்கித் தெவர் சவையார்க்கு இடக்கடவ காசு ௰உ பன்னிரண்டும் நீக்கி அதிகாரிகள் மருதூருடை யான் அருணிதி கலியன் இறை காவலா (க) காத்த

9. காசி(னு)ல் வந்த நிலன் ஊருடையான் (கு)ளமான கலிய னெ(ரி)யும் இக்குளந்தான் (வே) ண்டுமாறு கல்லிக் கரை நீளம் அட்டப் பெறுவ தாகவும் (இ)

10. க் குளங் கரை உசர அட்டப் பெறுவதாகவும். இக்குளத் தினீர் (தா)ன் வெண்டு அளவுங் கொக்கப் பெறுவதாகவு மிக்குளம் இதின் கிழ் நீர் நிலனிருவே-

---

* S. I. I., Vol. III, Part III. No. 106.

11. வியு மருதூருடையா னருணிதி கலியன் விலைக்குக் கொண்டு இக்குளத்தின் கிழ் நீர் நிலனிரு வெலி யி(னு)ல் வந்த பொகம் அஞ்ஞாழிக் காலால் நெல் (லு) நா கலம்,

12. இவையிற்றின் பாதி ஈரும் நெல்லுங் கொண் (டு இ) வர்க்கு முன்று சந்தியுந் திருவமிர்து செவதாகவும். நின்ற ஈ(ரும்) நெல்லுங் கொண்டு திருவமிர்து உ-

13. த்தம அக்கிரமாகத் தெவர் அமிர்து செய்யும் பொழுது வெதப் பிராமணர் நிசதம் அய்வர் அமிது செய்வதாகவும் வச்ச(ப)டி பத்தெட்டுக் குத்தல் ஒருவனு-

14. க்கு அரிசி (இரு) நாழியுங் கறிமு(ன்று)ம் தயிர் நா (ழி) யும் நெயிரு செவிடும் காய்யிலை இரண்டும் தாலமஞ்சும் வட்டிலைஞ்சும் ஒட்டுட்டி ஒன்று-

15. (ம்) சட்டுவம் ஒன்று அடுவா(ன்) ஞெருவ(னு) (க்) கு நிசதி நெ(ல்)லு அஞ்ஞாழி அறு திங்க(ளொ)ரு புடவை வைச்சு இப்பரிசு இக்கல முட்டுவதாக இவ்-

16. வாட்டை கற்கடக நாயிற்று வெள்ளிக் கிழமை பெற்ற ஆயி லெ(ய)த் திஞுன்று சூ(ற்) றியக் கிரண வெலைக் (குரை) கிராணம் பற்றின அன்று முதலாக இக்கல(ம்)

17. இ (ப்) பரி செய் ஊட்டுவதாக நி(ன்)று சிறிகாரிய மாராய்கின்ற திருவாய்ப்பாடி நாராயணனும் இவ்வூர்ச் சவையாரும்இப்பரிசெய் அக்கிர முட்டாமெய் ச(ந்)திரா-

18. தித்தவலும் ஊட்டுவிப்பொ மாஞெம் திருவானை மலை நரசிங்கப் பெருமானடிகளுக்கு சிரி காரிய மாராய் வானும் சவயோமும் இதிற் றிரம் பி(ழை)மைச் சவைய்-

19. யாரும் (சி)ரி காரிய மாராய் வானுந் திறமினான் நிசதி இறு காசு அன்றுழ் கொவினுக்குத் தண்டம் பட்டு அக் காசு கொண்டு தெவர்க்குத் திருவிளக்கு எரிவதாகவும் சவையார்

20. (த்) திறம்பில் (ஆ) றுகாசு தண்டப்படுவதாகவு(ம்) ஒட்டிக் குடுத்தொம். சவையொமும் சிரிகாரிய மாரா ய்வானும் மருதூருடையா னருணிதி கலியனுக்கு இத் தண்டமிறு-

21. த்து மித்தன் (மம்) முட்டாமெ அய்வரை(யும்) சந்தி ராதிச்சர் உள்ளளவும் ஊட்டுவிப்பொ மாஞெஞ் சவைய் யும் சிரிகாரியம் ஆராயும் வயிஷ்ணவரும். இதன்-(மம்) ரக்ஷித்தான். (The few words that have to follow have been omitted.)

## விளக்க உரை

### இருக்குமிடம்:

மதுரைக்கு வட கிழக்கே ஆறு மைல் தூரத்திலுள்ள ஆனைமலை நரசிங்கப்பெருமாள் கோயில் கருப்ப இல்லின் (Central shrine) வாசலுக்கு இடது பக்கமுள்ள பாறையின்மீது செதுக்கப்பட்டுள்ளது.

### ஆனைமலையைப் பற்றிய குறிப்பு:

இங்கே கி. பி. ஏழாம் நூற்றுண்டில் சமணர்கள் வசித்து வந்தனர். இச் செய்தியை, ''**ஆனைமாமலை ஆதியாய இடங்களில் பல அல்லல்சேர் ஈனர்கட்கு எளியேன் அலேன் திருவாலவாய் அரன் நிற்கவே**'' என்னும் திருஞானசம்பந்தர் (திருவாலவாய்—கொல்லிப் பண். பதிகம்)திருவாக்கால் அறியலாகும். மேலும் ஆனைமலை முதலிய இடங்களில், சந்துசேனன், இந்துசேனன், தருமசேனன். கந்துசேனன், கனகசேனன் என்னும் பெயர்களையுடைய சமணர்களும், கனகநந்தி, புட்பநந்தி, பவணநந்தி, வனகநந்தி என்னும் சினகரும் இருந்தனர் என்பதையும் அப்பதிகத்தால் அறியலாம். இம்மலையிலுள்ள இயற்கைக் குகை ஒன்றின் மீதுள்ள பாறையில் பல தமிழ்க் கல்வெட்டுக்கள் இருக்கின்றன. அவைகளுள் ஒன்று அஜ்ஜநந்தியைப் பற்றிக் குறிப்பிடுகின்றது. ஞானசம்பந்தர் திருவாக்கைக் கல்வெட்டும் உறுதிப்படுத்துகின்றதைக் காணலாம். எனவே கி. பி. ஏழாம் நூற்றுண்டிலும் இம்மலை இப்பெயருடன் வழங்கி வந்தமை அறிதற் குரியது.

### நரசிங்கப்பெருமாள் கோயிலைப் பற்றிய வரலாறு:

பாண்டியன் மாறவர்மனது மந்திரி, மாறன்காரியாகிய மூவேந்த மங்கலப் பேரரையனுல் இக்கோயில் கட்டப்பெற்றது. இம்மந்திரி களக்குடி என்னும் ஊரினன். இதன் வடமொழிப் பெயர் கரவந்தபுரமாகும். இவன் இக்கோயிலைக் கட்டிய பின் விண்ணுலகெய்தினன்.

அதன் பின்னர், இவன் தம்பி மாறன் எயினனுகிய பாண்டிமங்கல விசையரையன் மேற்குறித்த பாண்டியனுக்கு அமைச்சனுனன். இவனே இக்கோயிலில் நரசிங்கப் பெருமாளை எழுந்தருளுவித்தான். இவன் இப்பெருமாளை எழுந்தருளுவித்த காலம் கலியுகாதி 3871-க்குமேல் கார்த்திகை மாதம் ஆதலால் கி. பி. 770 ஆகும்.

**மேற்குறித்த மாறன் சடையனைப் பற்றிய குறிப்பு:**

இவன் கி. பி. 765 முதல் கி. பி. 790 முடிய பாண்டி நாட்டை ஆண்டவன். இவனுக்குப் பராந்தகன் என்னும் வேறு பெயருண்மையை இவன் காலத்து ஆனைமலைக் கல்வெட்டு உணர்த்துகின்றது. வேள்விக்குடி செப்பேடுகளும், சீவரமங்கலச் செப்பேடுகளும் இவனைப் பற்றி உணர்த்துவனவாகும். இவைகளிலும் இவன் பராந்தகன் என்று குறிக்கப் பெற்றுள்ளான். இவன் பரம வைஷ்ணவன். காஞ்சிவாய்ப் பேரூரில் திருமாலுக்குக் குன்ற மன்னதோர் கோயில் கட்டினன். காஞ்சிவாய் என்பது, (கோவை) பேரூர்க்கு அண்மையில் ஓடும் ஆருகும்.

**கல்வெட்டின் மொழியும் எழுத்துக்களும்:** தமிழ். வட்டெழுத்துக்கள்.

**கல்வெட்டில் குறிக்கப்பெற்ற அரசன்:** முதற் பராந்தக சோழன்.

**இவ்வரசனைப் பற்றிய பொதுக் குறிப்பு:**

இவன் முதலாம் ஆதித்த சோழனது மகன். கி. பி. 907-இல் அரியணை ஏறி, நாற்பத்தெட்டு ஆண்டுகள் செங்கோல் செலுத்தினன். இவனுக்கு மதுராந்தகன், சங்கிராமராகவன், வீரசோழன், வீரநாராயணன், இருமடிச் சோழன் என்னும் வேறு பெயர்களும் உண்டு. இவன் பாண்டி நாடு, ஈழ நாடு இவைகளை வென்றான். வாணர்களது நாடாகிய வாணகப் பாடியை வென்று கங்க அரசனாகிய இரண்டாம் பிருதுவிபதிக்குக் கொடுத்தான். நெல்லூர் ஜில்லாவிலுள்ள சேட்புலி நாட்டை வென்றான். ரேநாண்டு நாட்டை ஆண்டுவந்த வைதும்ப மன்னனைத் தோற்கடித்தான். இவனது இராச்சியம் தெற்கே கன்னியாகுமரி முதல் வடக்கே நெல்லூர் வரை பரவியிருந்தது. ஆனால் இவனது கடைசிக் காலத்தில் இவனது மகனாகிய இராசாதித்தனுக்கும், இராட்டிரகூட மன்னனாகிய மூன்றாம் கிருஷ்ணனுக்கும், தக்கோலம் என்ற இடத்தில் நேர்ந்த போரின் விளைவாய் திருமுனைப்பாடி நாடும், தொண்டை நாடும் மூன்றாங் கிருஷ்ணதேவனுக்கு உட்பட்டன.

இவனுக்கு இராசாதித்தன், கண்டராதித்தன், அரிஞ்சயன், உத்தமசீலி என்னும் பிள்ளைகளும், வீரமாதேவி, அநுபாமா என்னும் பெண்களும் இருந்தனர்.

இவன் தில்லைச் சிற்றம்பலத்துக்குப் பொன் வேய்ந்து அதைப் பொலிவுறச் செய்தான். தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள திருப்புள்ள மங்கை பிர்மபுரீஸ்வரர் கோயிலும், திருவிடைமருதூர் மகாலிங்க சுவாமி கோயிலும் திருவாவடுதுறை பிர்மபுரீஸ்வரர் கோயிலும்

இவன் காலத்தில் கட்டப்பெற்றன. திருவாவடுதுறைக் கோயில் குடப்படை பீடத்துக்குமேல் திருப்பணிசெய்ய இவன் ஐந்நூற்றுக் கழஞ்சுபொன் கொடுத்துள்ளான்.

இவன் பயிர்த்தொழிலை விருத்தி செய்தான். தென்னார்க்காடு ஜில்லா சிதம்பரம் தாலூகாவில் இக்காலம் வீராணத்தேரி என்று வழங்கப்பெறும் வீரநாராயணன் ஏரி இவன் காலத்தில் வெட்டப் பெற்றதாகும். வடார்க்காடு ஜில்லாவில், சோளிங்கபுரத்திலுள்ள சோழவாருதி என்னும் குளத்தை விருத்தி செய்தான். இவன் மதுரையும் ஈழமும் கொண்ட கோப்பரகேசரிவர்மன் எனக் கல் வெட்டுக்களில் கூறப்பட்டுள்ளான்.

கல்வெட்டுத் தோன்றிய காலம்: இவன் அரியணை ஏறிய 33-ஆம் ஆண்டு. அதாவது கி. பி. (907+33)=940.

## கல்வெட்டில் குறிக்கப்பெற்ற செய்திகள்:

ஆனைமலை நரசிங்கப் பெருமானடிகள் தம்முடைய நிலங்களுக் காக, நரசிங்க மங்கலத்துச் சபையார்க்கு ஆண்டுதோறும் பதி னெட்டு ஈழக் காசுகளை வரியாக இடவேண்டும். இப்பதினெட்டு ஈழக்காசுகளில் மூன்றில் ஒரு பாகம் ஆறு. இந்த ஆறு ஈழக்காசு களும் ஆண்டுதோறும் சபையார்க்குக் கிடைக்குமாறு, அதிகாரிகள் மருதூருடையான் அருணிதிகலியன், பதினைந்து ஈழக்காசுகளை மூல தனமாகச் சபையாரிடத்தில் கொடுத்துள்ளான். ஒரு ஈழக்காசுக்கு மாதம் ஒன்றுக்கு வட்டி கால் புத்தக்கமாகப் பதினைந்து ஈழக் காசுக ளுக்கு மூன்றே முக்கால் புத்தக்கம் ஆகும். ஓராண்டிற்கு ($3\frac{3}{4} \times 12$) நாற்பத்தைந்து புத்தக்கம். ஒரு ஈழக் காசுக்கு புத்தக்கம் ($45 \div 6$) $7\frac{1}{2}$ ஆகின்றது. புத்தக்கம் நாற்பத்தைந்துக்கு ஆறு ஈழக்காசு. எனவே பதினைந்து ஈழக் காசை மூலதனமாக வைத்து விட்டதனால் மேற்கூறிய வட்டி விகிதப்படி ஆண்டுதோறும் 6 ஈழக் காசுகள் சபையார்க்குச் சேர்ந்து விடுகின்றன. இந்த ஆறு ஈழக்காசு நீங்கலாக நரசிங்கப் பெருமானடிகள் பன்னிரண்டு ஈழக் காசுகளை நரசிங்க மங்கலத்துச் சபையார்க்குக் கொடுக்க வேண்டும். அருணிதிகலியன் இப் பன்னிரண்டு காசுகளையும் தானே சபையார்க்குக் கொடுப்பதாக உடன்பட்டு, கோயிலுக் குச் சொந்தமான ஊருடையான் குளத்தை உரிமையாக்கிக் கொண்டான். பின் இவன், தான் இறை காவலாகக் காத்த காசு களைக் கொண்டு இக்குளத்தின் கீழ், நீர் நிலம் இரு வேலியை வாங் கினான். குளத்தைக் கல்லியும், கரையை உயர்த்தியும் அதில் நீர் கோக்குமாறு செய்தான்.

இந் நிலத்தால் வந்த வருவாய் ஐந்நாழிக் காலால் நெல் முந்நூறு கலத்தில் பாதியாகிய நூற்றைம்பது கல நெல்லுங்கொண்டு நரசிங்கப்

பெருமானடிகளுக்குமூன்று சந்தியும் திருவமுது செய்விப்பதென்றும், எஞ்சிய நூற்றைம்பது கல நெல்லுங்கொண்டு நாடோறும் வேதம் வல்ல பிராமணர் ஐவர்க்குச் சிறப்பான அமுது செய்விப்பதென்றும் ஏற்பாடுகளைச் செய்திருந்தான்.

## வேதம்வல்ல பிராமணர் உண்ணுதற்கு அளித்த நிவந்தவிவரம்:

ஒருவர்க்குப் பத்து அல்லது எட்டு முறை குற்றப்பட்ட இருநாழி அரிசியும், கறி மூன்றும், தயிர் நாழியும், நெய் இரு செவிடும், பாக்கு இரண்டும், வெற்றிலை இரண்டும் ஆக இம் முறைப்படி ஐவர்க்கு, (நரசிங்கப் பெருமானடிகள் திருவமுது செய்யும் பொழுது) அமுது செய்விப்பதென்று ஏற்பாட்டைச் செய்துள்ளான். இவர்களுக்குச் சமைப்பானுக்கு நாடோறும் நெல் ஐந்நாழியும், ஆறு மாதங்களுக்கு ஒருமுறை புடைவையும் (வேட்டியும்) கொடுக்குமாறு திட்டஞ் செய்திருந்தான்.

## குறிப்புரை

### மதுரை கொண்ட வரலாறு:

முதற் பராந்தக சோழன் காலத்தில் மதுரையில் இராசசிம்ம பாண்டியன் ஆட்சி புரிந்து கொண்டிருந்தான். அவன்மீது பராந்தகன் படையெடுத்துச் சென்று அவனை வென்றான். தோற்ற இராசசிம்மன் ஈழநாட்டு வேந்தனாகிய ஐந்தாம் காசிபனை உதவுமாறு வேண்டினான். அவனும் சக்கசேனாபதியின் தலைமையில் பெரும்படை ஒன்றை அனுப்பினான். வெள்ளூர் என்ற இடத்தில் இராசசிம்ம பாண்டியனுக்கும் பராந்தகனுக்கும் பெரும்போர் நிகழ்ந்தது. இப்போரில் பராந்தகன் வென்றான். பாண்டியன் படையும் இலங்கையிலிருந்து வந்த உதவிப் படையும் தோற்றன. ஈழப் படையின் தலைவனாகிய சக்கசேனாபதி மீளவும் சோழனோடு போர் புரிய முயன்றபோது பிளேக்கால் இறந்துபோனான். எஞ்சிய தன் படையை ஈழவேந்தன் திரும்ப அழைத்துக்கொண்டான். இப் போரில் பராந்தகனது படைத் தலைவர்களாய் விளங்கியிருந்தவர் சோழ நாட்டுப் பாம்புணிக் கூற்றத்து அரைசூருடையான் தீரன் சென்னிப்பேரரையனும், திருச்சி ஜில்லா உடையார்பாளையந் தாலூகா பழுவூரிலிருந்த பழுவேட்டரையன் கண்டன் அமுதனும், பரதூருடையான் நக்கன் சாத்தனும் ஆவர்.

### இராசகேசரி, பரகேசரி:

இவைகள் சோழ மன்னர்கள் தரித்துவந்த பட்டப் பெயர்களாகும். இராசகேசரி என்றால், அரசர்களுள் சிங்கம் போன்றவன்

(The lion among kings) என்றும், பரகேசரி என்றால் அயலார்களுக்குச் சிங்கம் போன்றவன் என்றும் பொருள்படும். இப் பட்டப் பெயர்களால் இன்னார்க்குப் பிறகு இன்னார் பட்டம் எய்தினர் என்ற செய்தி புலனாகும். பாண்டிய மன்னர்களும் மாறவர்மன், சடையவர்மன் என்ற பட்டப் பெயர்களைப் புனைந்திருந்தனர். இம்முறையில் முதற் பராந்தகன் பரகேசரி பட்டம் புனைந்தவன் ஆவன்.

குறிப்பு:—பழங்காலச் சோழர்களில் இராசகேசரி என்னும் அரசனும், அவன் மகன் பரகேசரி என்பானும் ஆட்சி செய்தனர் என்றும், அக்காலம் முதல் அரசர்கள் தாங்கள் ஆட்சி யெய்தும் போது, தங்கள் பெயர்களுக்குமுன், இராசகேசரி, பரகேசரி இவைகளில் ஒன்றை முறையாகத் தரித்து வந்தனர் என்றும் திருவாலங்காட்டுச் செப்பேடுகள் உணர்த்துகின்றன. (The Tiruvalangadu Plates. Verses 30, 31, 32. South Indian Inscription Volume III, Part III, Page 416).

## இரணிய முட்டம் :

இது, பாண்டி நாட்டில், மதுரைக்கு வடகிழக்கேயுள்ள ஆனைமலை, நரசிங்க மங்கலம், பெருங்குன்றூர் முதலான பலவூர்களைத் தன்னகத்துக் கொண்ட ஒரு நாடாகும். மலைபடுகடாம் என்னும் பாட்டை இயற்றிய பெருங் கௌசிகனார் இந்த இரணியமுட்டத்தைச் சேர்ந்த பெருங்குன்றூரில் இருந்தவர் ஆவர். முதற் பராந்தகன் கல்வெட்டு இந்த இரணியமுட்டம் கீழிரணியமுட்டம், மேல் இரணியமுட்டம் என்னும் இரு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்ததைப் புலப்படுத்துகின்றது.

பிரமதேயம் : பிராமணர்க்குத் தானங் கொடுக்கப்பட்ட ஊர்.

புறங்கரம்பை நாடு : இது சோழ நாட்டின் உள்நாடுகளில் ஒன்று. அருமொழி தேவ சதுர்வேதி மங்கலம் (அருமொழிதேவன்) களப்பாழ், கருவத்தூர், கோயிலார் புதுக்குடியாகிய கோதண்டராமசதுர்வேதி மங்கலம், பல்லவன்மாதேவி சதுர்வேதி மங்கலம், பனையூர், பெரும் பலமருதூர், செம்பியன்மாதேவி சதுர்வேதி மங்கலம், சிங்களாந்தக சதுர்வேதி மங்கலம், வங்கநகர், வண்கொற்றன்குடி, பாசிபுரம், திருக்களர் என்னும் ஊர்கள் இந்நாட்டில் அடங்கிய சில ஊர்களெனக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. இவ்வூர்களில் சில தஞ்சாவூர் ஜில்லாவில் மன்னார்குடி தாலூகா, திருத்துறைப்பூண்டி தாலூகா இவைகளில் இப் பெயர்களுடன் இன்றும் நிலவுவதால், இத்தாலூகாக்கள் அடங்கிய பகுதி புறங்கரம்பை நாடு என்று கூறலாம்.

சோழப் பெருமானடிகள்: முதற் பராந்தக சோழர்.

ஒட்டிக் கொடுத்த பரிசாவது: ஒத்துக் கொடுத்த பரிசாவது.

ஆண்டெடுத்து: ஆண்டுதோறும்.

ஈழக்காசு: பொற்காசு. இந்த ஈழக்காசு ஒன்று, அரை கழஞ்சு பொன்னுக்குச் சமானம். இச்செய்தி "மதுரை கொண்ட கோப் பரகேரி பன்மற்கு யாண்டு 24-ஆவது சோழப் பெருமானடிகள் ஸ்ரீபரகேசரிவர்மர் மகனுர் பராந்தகன் அரிகுல கேசரியார் இரவும் பகலும் ஒரு நுந்தாவிளக்கு உழக்கு நெய்யால் எரிப்பதற்கு வைத்த ஈழக்காசு நாற்பதினுல் பொன் இருபதின் கழஞ்சு. இவ்வூர் ஸபை யோம். இவரே இவ்விளக்கினுக்கு நெய்குறை தந்த பொன் பதின் கழஞ்சு" ஆக ஈழக்காசு உட்பட பொன் முப்பதின் கழஞ்சு என்னும் திருநெய்த்தானத்துக் கல்வெட்டால் அறியக் கிடக் கின்றது. (South Indian Inscription, Volume V).

பலிசையாக: வட்டியாக.

புத்தக்கம்: ஒரு காசில் 12-ல் ஒரு பாகம் கொண்டது.

இறைகாவலாக: தலையாரிக்கு உரியவரியாக. (An ancient rate paid towards the cost of watch and ward -Tamil Lexicon).

ஊருடையான் குளம்: இது இப்பெயருடன் திரு ஆனைமலை நரசிங்கப் பெருமானடிகளுக்குச் சொந்தமாயுள்ள குளமாகும். நரசிங்கப் பெருமான் அடிகள் நரசிங்க மங்கலத்துச் சபையார்க்கு, ஆண்டுதோறும் கொடுக்க வேண்டிய 12 ஈழக்காசின் பொருட்டு, அதிகாரிகள் மருதூருடையான் அருணிதிகலியன், தான் அக் காசைக் கொடுப்பதாக உடன்பட்டுக் குளத்தைத் தனக்கு உரிமை யுடையதாக்கிக் கொண்டு, அதற்குப் பழைய பெயருடன் தன் பெயரையும் வைத்துள்ளான். அதனுல் அது ஊருடையான் குள மான கலியனேரி எனப் பெயர் பெற்றது.

வந்தபோகம்: வந்த விளைவு. (Crop produce of a season. -Tamil Lxicon).

ஐஞ்ஞாழிக் காலால் - (ஐந்நாழிக் காலால்)-ஐந்துபடி கொண்ட மரக்காலால்.

அக்கிரம் - முதல். 'யார்கொலோ அக்கிரபூசனைக்குரியார்' என்பது பாரதம்.

அக்கிரமாக - முதல் தரமாக.

பத்தெட்டுக் குத்தல் - பத்துமுறை அல்லது எட்டுமுறை குற்றிய.

நாழி - ஒரு படி.

காய் - பாக்கு.

இலை - வெற்றிலை.

தாலம், வட்டில், ஒட்டுட்டி, சட்டுவம் - இவைகள் பாத்திர வகைகள்.

புடைவை - புடை - பக்கத்தில்; வை - வைக்கப்படுவது என்ற காரணம் பற்றியதாகும். ஆடவர், மகளிர் இவர்கள் உடுக்கும் துணிக்குப் புடைவை என்று பொதுவாக வழங்கும் பெயர்.

வைச்சு - இது வைத்து என்பதன் போலி.

இப்பரிசு - இவ்விதம்.

இவ்வாட்டை - இவ்வாண்டு.

கற்கட நாயிறு - ஆடி மாதம்.

ஆயில்யத்தினன்று - ஆயில்ய நட்சத்திரத்தின் பொழுது.

ஸ்ரீகாரியம் - கோயில் காரியம்.

முட்டாமே - தடைப் படாமல்.

சந்திராதித்தவல் - சந்திர சூரியர் உள்ளவரை.

இதிற்றிறம்பினோமை - இதில் மாறுபட்ட எம்மை.

நிசதி - நாடோறும்.

அன்றுழ் கோவினுக்கு - (அன்றுள் கோவினுக்கு) அதுபொழுது ஆளும் அரசனுக்கு.

இத்தன்மம் - இத்தருமம்.

# 4. பார்த்திவேந்திராதிபர்மர் கல்வெட்டு*

1. ஸ்வஸ்திஸ்ரீ கொ(ா) பா(ர்)த்தி வேந்திரா(திப) ந்மர்க்கு (ய) ாண்டு முன்ரு(வ)து நா(ள்) முப்ப(த்) தொன்ப தாவது படுவூ(ர்) கொட்டத்து காவி(ரி) பாக்கமாகிய அமநி நாராய(ணச)துர் வேதி மங்கல(த்)துள் இவ் வாட்டை ஸம்வத்ஸர வாரிய-

2. பெருமக்களும் தொட்ட வாரிய பெருமக்களும் (எ)ரி வாரிய பெருமக்களும், கழநி வாரிய பெருமக்களும் ஸ்ரீ வட விரநாரண பெரு(ம)க்களும் (ப)ஞ்சவார வாரிய பெருமக்களும், கணக்கு வாரிய பெருமக்களும் கலிங்கு வாரிய பெரும-

3. க்களும் தடிவழி வாரிய பெருமக்களும், பட்டர்களும், வி(ஸி)ட்டர்களும் உ(ள்)ளிட்ட ம(ஹாஸபை)யும் ஊராள் கின்ற பல்லவன் பிரம்மா தரயனும் கண் காணி அரும் பா கிழானும் இவ்வூர் (பெ)ரி (யத)ளி அபிஷேக மண்டபத்தே

4. கூடி இருக்க (இத்தான) (ம்) முடைய சிவப்பிராமணன் மாகண்ட நன்பெருமாள் திருக்(கரபுர)த்து பெருமான் அடிக்கு அ(ர்)ச் சனுபோக (மா)ன தொட்டமும் புலமும் ஆறு உ(டந்து) (ம)ணல் இட்டு கிடந்தி (ெ)தன்று விண்ணப்பம் செய

5. ஸபை(யாரும்) இவ்வா(ட்)ை)ட கழ(நி) வாரிய பெருமக் களெ இ(த்) திருகரபுர(த்)து பெருமா(ன்)னடிகள் அர்ச் சனு போகமான பூமி மணல் இட்டு (கெ)ட்டு கிடந்த பூமி (யொ)டு இந் (நில)ம் க(ழ)நி கொலா(ல்) ஆயிரத்து நாநூ(று) குழி.

6. ஊர் ம(ஞ்)சி(க்)க மாந பூமி நோக்கி கல் நட்டு சிலா லெ (கை)ய் செ(ய்துகொள்)க என்று ஸபை திருமுகமருளி (செ) (ய்த) திருமு(கத்) தின்படி கழநி வாரிய பெருமக்க ளொம் திருக் கரபுர(த்)து (பெரு) மான் அடிகளுக்கு அச்சநா-

* S. I. I., Vol. III, Part III, No. 156

7. போகம் செய்வ தாந பூமி இ(வ்)வூர் பிடாகை ஒச் செ(ரி) வடகழனி மஹாத வாய்(க்) கால் தெற்கு ஊர் மஞ்சிக் க(ம்) ஆய் வரி சி(ல)த்து கிடந்த பூமிக்கு கிழ் பாற் கெல்லே மா(ங்)காட்டுச் சொமா (சிபூ) மிக்கு

8. மேற்கும் தென்பார்(க்) கெல்லே ஊர் மஞ்சிக்கமாய் கிடந்(த) மெட்டு(க்)கு வடக்கும் மெல் பார்(க்) கெல்லே திருபன்றிஸ் வர(த்து) திருமுலட் டான(த்)து பெருமான் னடிகள் உதமாதம் பட்டிக்கு கிழக்கும் வடபாற் கெல்லே மா-

9. தவாய்(க்) காலு(க்)கு தெற்கும் இ(ந்) நால் பால் கெல் லேயும் உள்ளகப்பட்ட நிலம் கழனி கோலால் நானூறு குழியும் இ(த)ன் தெற்கில் ஊர்மஞ்சிகமான மெட்டு சிறு கருகெ(சு)வ கழநி திரு நா(ர)ண வாய்க் கால் வ-

10. டசிறகு ஊர்மஞ்சிக்கமாய் வரி சிலத்து கிடந்த பூமி கிழ் பாற் கெல்லே அங்காரை மாதெவ பட்டர் பூமி மெலருகெ போன நடைகாலுக்கு மேற்கு தென்பால் கெல்(லே) திரு நாரண வாய்(க்) காலின் வடக்கும் மேல் பால் கெ(ல்)லே ஐயன் பெருமாங் பூமி(க்)கு கிழக்கு வடபாற் கெ(ல்)லே முடும்பைப் பொற்கூளி பூமிக்கு வட(க்)கும் நால்பால்லெ யுள்ளகப்ப(ட்)ட நிலம் க-

11. ழனி கொலால் நாநூறு குழியும் இ(க்)கால் தென்(சி) றகு (ஊர்) மஞ்சிகமாய் வரிசிலத்து கிடந்த பூமிக்கு கிழ்பாற் கெல்லே வரிசிரையாய் கிடந்த பூமி(க்)கு மேற் கும் தென்பாற் கெல்லே அவட்டை கிழவங் நிலமா (ந) சொமாசி பூமிக்கு இதன் கிழ(க்)கில் குண்டிலு(க்)கும் வ(ட)க்கும் மேல்பாற் கெல்லே எடுக்குப் பட்டிகளும் இகுடிகளாய (சொமாசி) பூமி(க்)கு கிழ(க்)கும் காலு (க்)கு தெற்கும் நால் பால் எல்லே...

12. யும் ஆக மாநிலம் கழநி கொலால் அறு நூறு குழியும் ஆக ஆயிரத்து நாநூறு குழியும் இத் திரு கரபுரத்து பெருமான் அடிகளுக்கு நிசதம் இரு நாழி அரிசியால் ஒரு பொமு(து) திரு அமுதுக்கும் (முந்)று ஸந்தியும் ஒரு விளக்கு கொளித்தி கொண்டு திரு ஆ(ரா)திணே செய் (வ)தற்கு மாக (ச)ந்திராதித்த காலமும் இறையிலி அர்ச்சநா போஹமாக வைச்சு சிலாலெகை செய்து கல் நட்டு குடுத்தோம் ஸபையார்...கு...

13. இவ்வாட்டை கழநி வாரிய பெருமக்களோம் இது குறியுள்ளிருந்து பணிகெட்டு சிலா லெகை எழுதி நென் இவ்வாட்டை கழநி வாரிய கண(க்)கன் மணிமங்கல முடையான் கங்காதரமா-

14. யிலட்டியென். இவை என்னெழுத்து இது குறியுள் ளிருந்து பணி கெட்(டெழுதி) நென்...கண(க்)கந் மத்யஸ் தன் வாமன (எ)ழாயிரவன்நென் இது குறியிலிருந்து (பணிக்க எழு)

15 ....ட்டி குறி...கல்...ஆதித்த ஏழாயிரவனேன் இது குறி யிலிருந்து பணிகெட்டு எழுதி நென்

16. கணவதி யெந் இது குறியுள்ளிருந் திவ்வ(ா)ரிகப் பெரு மக்கள் பணிப்ப எழுதினேன் மத்யஸ்தன் மங்கல ஸெனபதி ஸ்ரீ...வன் ஏழாயிர நிலையலங்கன் கற்ப காதித்த னென். இது குறியுள்ளி ருந்திவ் வாரிகப் பெருமக்கள் பணிப்ப...மத்யஸ்தன்...குறியுள்ளிருந் திவ் வாரிகப் பெருமக்கள் பணிக்க எழுதி நென் மத்யஸ்த னெட்டி...

17. க் குறி ஸ்ரீ காவெ(ரி) மங்கல தெரனென்.

## விளக்க உரை

இருக்குமிடம் - வடார்க்காடு ஜில்லா, வாலாஜாபாத் தாலூகா திருப்பாற்கடல், கரபுரீஸ்வரர் கோயில் கருப்பக் கிருகத்தின் வட புறச்சுவர்.

கல்வெட்டின் எழுத்து - தமிழும் கிரந்தமும்.

கல்வெட்டில் குறிக்கப்பட்ட அரசன்: வீரபாண்டியன் தலை கொண்ட கோபார்த்தி வேந்திராதிபர்மன்.

### அரசனைப்பற்றிய பொதுக் குறிப்பு :

இவ்வேந்தனைப்பற்றிய வரலாற்றில் பல சிக்கல்கள் உள்ளன. இவனுடைய கல்வெட்டுக்கள் காலியூர்க் கோட்டத்து உத்தர மேலூர்ச் சதுர்வேதி மங்கலம், திருமுல்லைவாயில் மாசிலாமணி ஈஸ்வரர் கோயில், சிங்கபுரநாட்டு மீய்வழித் தாயனூர், ஆமூர்க் கோட்டத்துப் படுவூர் நாட்டுத் தேவனதானம் திருவிடவந்தை வராகப் பெருமாள் கோயில், புலியூர்க் கோட்டத்துத் துடமுனி நாட்டுத் திருவலிதாயில் மகாதேவர் கோயில், பையூர்க் கோட் டத்து மழலை மங்கலத்து ஒலோகமாராயத் திருச்சிற்றம்பலத் தாள்வார் கோயில், புலியூர்க் கோட்டத்து வெளிச்சேரி

சப்தமாதாக்கள் கோயில் இவ்விடங்களில் காணப்படுகின்றன. இவைகளில் இம் மன்னனுடைய கடைசி ஆட்சி ஆண்டு பதின் மூன்று எனக் குறிக்கப்பெற்றுள்ளது. மேலும் திருவிட வந்தையில் உள்ள ஒரே கல்வெட்டில் மாத்திரம் இவனுக்குக் கோப்பரகேசரி என்ற பட்டம் காணப்படுகிறது. இவன் வீரபாண்டியன் தலை கொண்ட சோழன் இரண்டாம் ஆதித்த கரிகாலனாக இருக்க முடியாது. இவனுடைய ஆட்சி ஆண்டுகள் ஐந்துக்குமேல் காணப் படவில்லை. ஒருகால் மேற் குறித்த கோபார்த்தி வேந்திராதிபர்மன், வீரபாண்டியனோடு நடந்த போரில் சண்டை இட்ட காரணத்தால் இவனுக்குப் பரகேசரி என்ற பட்டம் கொடுக்கப்பட்டதா? இவன் யார் என்பதைத் துணிந்து கூறுவதற்கு இல்லை.

கல்வெட்டுத் தோன்றிய காலம்: இவனது ஆட்சியாண்டு மூன்ரு வது.

## கல்வெட்டால் அறியப்படும் செய்தி :

படுவூர்க் கோட்டத்துக் காவிரிப்பாக்கமாகிய அமனி நாராயணச் சதுர்வேதி மங்கலத்துச் சபையிலுள்ள சம்வத்ஸர வாரிய பெருமக்கள், தோட்டவாரிய பெருமக்கள், ஏரி வாரிய பெருமக்கள், கழனிவாரிய பெருமக்கள், ஸ்ரீ வடவீர நாராயண பெருமக்கள், பஞ்சவாரிய பெருமக்கள், கணக்கு வாரிய பெரு மக்கள், கலிங்கு வாரிய பெருமக்கள், தடிவழிவாரிய பெரு மக்கள், பட்டர்கள், விஸிஷ்டர்கள், ஊராள்கின்ற பல்லவன் பிர்மாதிராயன் கண்காணி அரும்பாகிழான் ஆகியோர் திருப்பாற் கடலிலுள்ள பெரியதளி அபிடேக மண்டபத்தில் கூடியிருந்த பொழுது கரபுரீஸ்வரர் கோயில் சிவப் பிராமணர் மாகண்டநன் பெருமாள், கரபுரத்துப் பெருமானுக்கு அர்ச்சனுபோகமான தோட்ட மும் புலமும், ஆறு உடைத்து மணல் இட்டுக் கிடந்ததென்று விண் ணப்பம் செய்ய, சபையார் அதை ஏற்று அதற்குப் பதிலாக ஒச்சேரி என்னும் சிற்றூரில், தரிசாய்க்கிடந்த நிலத்தில் 1400 குழியைக் கொடுத்து, திருக்கரபுரத்துப் பெருமான் அடிகளுக்கு நாள் ஒன்றுக்கு இருநாழி அரிசியால் ஒருபொழுது திருவமுதுக்கும், மூன்று சந்தியும் ஒருவிளக்குக் கொளுத்திக் கொண்டு திரு ஆரா தனை செய்வதற்குமாக அர்ச்சனுபோகமாகக் கொடுத்துள்ளனர்.

### குறிப்புரை

காவிரிப்பாக்கம் - இது காவிதிப்பாக்கம் என்று பல கல்வெட்டுக் களில் காணப்படுகிறது.

சதுர்வேதி மங்கலம் - சில சிற்றூர்களைத் தன்னகத்துக் கொண் டது.

சம்வத்ஸர வாரியம்- ஆண்டுதோறும் கண்காணிக்கும் குழுவினர்.
தோட்ட வாரியம் - தோட்டத்தைக் கண்காணிக்கும் குழுவினர்.
ஏரி வாரியம் – ஏரிகளைக் கண்காணிக்கும் குழுவினர்.
கழனி வாரியம் - நஞ்சை நிலத்தைக் கண்காணிக்கும் குழுவினர்.
கலிங்கு வாரியம் - மதகுகளைக் கண்காணிக்கும் குழுவினர்.
தடிவழி வாரியம் - வயல்களைக் கண்காணிக்கும் குழுவினர்.
பட்டர்கள்; விசிஷ்டர்கள் - இவர்கள் படித்த பிராமணர்கள். (?)
அர்ச்சனுபோகம் – அர்ச்சனை.
பிடாகை - சிற்றூர்.
மஞ்சிக்கம் - தரிசு ; (அ) புரம்போக்கு.
திருப்பன்றீஸ்வரம் - பன்றிக்கு அருள் செய்த கோயில்.
சிலாலேகை - கல் எழுத்து.
குறி - சபை.

# 5. முதலாம் இராசராசனுடைய கல்வெட்டு*

## First Section

1. ஸ்வஸ்திஸ்ரீ உடையார்ஸ்ரீ ராஜராஜீஸ்வரம் உ
2. டையார்க்கு ஸ்ரீ காரியஞ் செய்கின்ற பொய்கை-
3. நாடு கிழவன் ஆதித்தன் சூர்யனுன தென்னவ-
4. ன் மூவேந்த வெளான் ஸ்ரீ ராஜராஜீஸ்வரம் உ
5. (டை)டயார் கொயிலில் யாண்டு இருபத் தொன்பதாவது
6. வரை எழுந் தருளுவித்த செப்பு பிரதிமங்கள்
7. உடையார் கொயிலில் முழத்தால் அளந்தும் ரத்நங்கள் சரடுநீ-
8. க்கி தக்ஷிண மேருவிடங்கன் என்னுங் கல்லால் நிறைஎடு-
9. த்தும் பொன் ஆடவல்லான் என்னுங் கல்லால் நிறை எடுத்-
10. துங் கல்லில் வெட்டினபடி. (1) பாதாதி கெஸபரியந் தம் பதினெழுவி-
11. ரலெ இரண்டு தொரை உசரமும் இரண்டு திருக்கையும் உடையராகக் கன-
12. மாக எழுந்தருளுவித்த நம்பி ஆரூரனர் பிரதிமம் ஒன்று (2) இவர் நின்ற இருவி-
13. ரலரை உசரத்து பத்மம் ஒன்று (3) இதனெடுங்கூடச் செய்த எண்விரல் ச-
14. மசதுரத்து மூவிரலெ இரண்டு தொரை உசரத்து இவர் எழுந்தருளி நின்ற
15. பீடம் ஒன்று (4) பதினறு விரல் நிளத்து இரண்டு திருக்கை யுடைய ராகக் கன-
16. மாக எழுந்தருளு(வி)த்த நங்கை பரவையார் பிரதிமம் ஒன்று (5) இவர் எழுந்த-

---

* S. I. I., Vol. II, Part II, No. 38

17. ருளி நின்ற இ(ரு) வி (ரலெ) இரண்டு தொரை உச ரத்து பத்மம் ஒன்று. (6) இதனெ-

18. டுங் கூடச் (செ)ய்த அறுவிரலெ இரண்டு தொரை சம சதுரத்து (மு)விரல் உச-

19. ரத்து பீட(ம்ஒ)ன்று (7) பாதாதி கேஸாந்தம் இருபத்து இருவிரலெ இரண்டு தொ

20. ரை உசரத்து இரண்டு திருக்கைய் யுடைய ராகக் கன மாக எழுந்தருளுவித்த திரு-

21. நாவுக்கரையர் பிரதிமம் ஒன்று (8) இவர் எழுந்தருளி நின்ற இருவிரலெ ஆறு

22. தொரை உசரத்து பத்மம் ஒன்று (9) இதனெடுங் கூடச் செய்த எண்விரலெ

23. ஆறு தொரை (ச்) சம சதுரத்து நால்விரல் உசரத்து பீடம் ஒன்று. (10) பாதாதிகெ

24. ஸாந்தம் இருபத்திரு விரலெ இரண்டு தொரை உச ரத்து இரண்டு திருக்கையுடை-

25. யராகக் கனமாக எழுந்தருளுவித்த திருஞன சம்பந்தடி கள் பிரதிமம் ஒன்று (11)

26. இவர் எழுந்தருளி நின்ற இருவிரலெ இரண்டு தொரை உசரத்து பத்மம் ஒன்று (12)

27. (இதெ) னெடுங் கூடச் செய்த ஒன்ப(தி)ற்று

28. விரலெ இரண்டு தொரைச் சம சமதுரத்

29. து நால் விரல் உசரத்து (பீட)ம் ஒ(ன்)று (13)

30. பாதாதி கெஸாந்தம் ஒரு முழமே நா(ல்) விர-

31. லரை உசரத்து இரண்டு திருக்கை யுடை (ய)ரா-

## Second Section

32. கக் கனமாக எழுந்தருளுவித்த பெரிய பெ(ரு)மாள் பிர திமம் ஒன்று. (14) இவர் எழுந்தரு(ளி) நின்ற ஐய்விரலெ இரண்டு தொரை உசரத்(து) பத்மம் ஒன்-

33. று. (15) இதனெடுங் கூடச் செய்த பதினொரு (வி)ரற் சம சதுரத்(து ஐய்) விரலெ ஆறு தொ(ர உசர) த்து பீடம் ஒன்று (16) இருபத்து இரு் விரலெ இரண்டு தொ(ா)-

34. ரை உசரத்து இரண்டு திருக்கை யுடையராகக் கனமாக எழுந்தருளுவித்த இவர் நம்பிரா(ட்டி)யார் (ஒ)லாக மாதேவியார் பிரதிமம் ஒன்று (17) இவர் எழுந் தரு-

35. ளி நின்ற ஐய்(வி)ரல் உசரத்து பத்மம் ஒன்று. (18) இதனெடுங் கூடச் செய்த ஒன்பதிற்று விரற் ச(ம) சதுரத்து ஐய் விரலெ இரண்டு தொரை உசரத்து பீடம் ஒன்-

36. று. (19) பெரிய பெருமாளுக்கு தேவார தேவராக எழுந் தருளுவித்த தேவர் பாதாதி கெஸாந்தம் ஐவிரலெ இரண்டு தொரை உச(ர)த்து நாலு ஸ்ரீ ஹஸ்தமும் உடையராக(க்)

37. கனமாகப் பித்தளையால் எழுந்தருளுவித்த சந்திர செகர தேவர் திருமேனி ஒன்று. (20) இவரொடுங் கூடச் செய்த ஒரு விரலரை(ர) உசரத்து பத்மமும் இரு விரலெ நாலு

38. தொரைச் சம ச(து)ரத்து(ம்) ஒரு விரல் உசரத்தும் பித்தளையால் செய்த பீடம் ஒன்று. (21) இவரைக் கவித்த இருபத்து ஒரு விரற் சுற்றி(ற்) கனமாகச் செம்பால் செய்த பிரபை

39. ஒன்று. (22) இவனெ(ன) நம்பி ஆரூரனுர்க்குக் குடுத்தன (23) உருத்திராக்ஷத் தாழ்வடம் ஒன்றிற் பொன்னின் சுரி ஐய்ம்பத்தாறும் உருத்திராக்ஷம் ஐய்ம்(ப)த்தாறும் உட்பட நிறை-

40. எண் கழஞ்செய் ஒன்பது மஞ்சாடிக்கு விலைகாசு இருபத்தைஞ்சு (24) இவனெ நங்கை பரவையார்க்குக் குடுத்தன (25) திருக்கைய்க் காறை ஒன்று பொன் (கழ)-

41. ஞ்சரையாக இரண்டிஞற் பொன் முக்கழஞ்சு. (26) திருக்காற்க் கா(றை)ற (ஒ)ன்று பொன் கழஞ்சரையாக இரண்(டி)ஞற் பெ(ா)ன் (மு)க்கழஞ்சு (27) மொதிரம் ஒன்று (பொ)-

## Third Section

42. ன் அரைக் கழஞ்செய் மஞ்சாடி(யு)ங் குன்றி (28) இ(வனெ)ன தி(ரு)நாவுக் கரையர்க்குக் குடுத்தன. (29) உருத்திராக்ஷச் சுரி (பொ)ன்னின் நூலிற் கொத்த உருத்திராக்ஷம் ஒன்றுட்பட நிறை (ஆ)று மஞ்சாடியும் இரண்டு மா(வு)க்கு விலை காசு ஒன்று. (30) உருத்திராக்ஷச்சுரி பொன்னின் நூலிற்-

43. கொத்த உருத்திராக்ஷம் ஒன்றும் உட்பட நிறை ஆறு மஞ்சாடியும் இரண்டு மாவுக்கு விலைகாசு ஒன்று. (31) கண்டிகை உருத்திர(ாக்ஷம் ஒ)ன்(றும் சுரி ஒ)ன்(றும் உட்)பட நிறை ஐய்ங்க...(மஞ்சாடியு)ங் குன்றிக்கு விலை காசு எட்டு. (32) திருப் (வெ)பாற்பூ ஒன்று பொன் முக் காலே நாலு மஞ்-

44. சாடியுங்குன்றி (33) திருக்கைய்க் காறை ஒன்று பொன் இரு கழஞ்சு. (34) திருக்கை(கய்)க் காறை ஒன்று பொன் கழ(ஞ்செ முக்கா)லெ(ல) நா(லு மஞ்)சாடி. (35) இவ வெ(ன தி)ருஞா(ன சம்பந் தடிகளுக்குக் குடுத்)தன:— (36) உருத்திராக்ஷச் சுரி பொன்னின் நூலிற் கொத்த உருத்திராக்ஷம் ஒன்றுட் பட நிறை

45. அரைக் கழஞ்செ இரண்டு மஞ்சாடிக்கு விலை காசு ஒன் றரை:—(37) உருத்திராக்ஷச் சுரி வெ(பா)ன்னின் நூலில் கொத்த உருத்திராக்ஷ(ம்) ஒன்றுட் (பட நிை)ற அ(ரை)க் க(ழ)ஞ்(செ)ச மஞ்சாடியுங் குன்றிக்கு விலைகாசு ஒன்றரை. (38) (தாழ்)வட(ம் ஒன்றி)ற் (பொ)ன்னின் சுரி ஐம்பத் தாறும் உருத்திராக்ஷம் ஐம்பத் தாறும் உட்பட நிறை எண் கழஞ்செ-

46. ய் நாலு மஞ்சாடியுங் குன்றிக்கு விலை காசு இருபத் தைஞ்சு. (39) திருப் பொற்பூ ஒன்று பொன் கழஞ்செய் குன்றி. (40) திருக்கைய்க் காறை ஒன்று பொன் இரு கழஞ்செய் குன்றி (41) திருக்கைய்க் காறை ஒன்று பொன் கழஞ்செ முக்காலே நாலு மஞ்சாடி: (42) திருப் பட்டிகை ஒன்று பொன் இரு கழஞ்சு. (43) இவவெ(ன)

47. பெரிய பெருமாளுக்குக் குடுத்தன (44) திருக்கைய்க் காறை ஒன்று பொன் கழஞ்செய் ஆறு மஞ்சாடியும் மூன்று மாவாக இரண்டினுற் பொன் இரு கழஞ்சரையே இரண்டு மஞ்சாடியும் ஆறு மா (45) திருக்குதம்பை ஒன்று பொன் எட்டு மஞ்சாடியும் எழு மாவாக இரண்(டி) னுற் பொன் முக்காலே இரண்டு மஞ்சா-

48. டியும் நான்கு மா. (46) இவனே இவர் நம் பிராட்டியார் ஒலொகமா தேவி யார்க்குக் குடுத்தன (47) திருக் குதம்பை ஒன்று பொன் எழு மஞ்சாடியுங் குன்றியாக இரண்டினுற் பொன் முக்கால் (48) திருக்கைய்க் காறை ஒன்று பொன் கழஞ்செய் இரண்டு மஞ்சாடியும் மூன்று மா (49) திருக்கைய்க் காறை ஒன்று பொன் கழஞ்-

49. செளட்டுமா (50) இவன் எழுந்தருளுவித்த திருஞான சம்பந்தடிகளுக்கு இராஜெந்திர சிங்க வளநாட்டுத் திருவாலி நாட்டு உடையார்ஸ்ரீ ராஜராஜீஸ்வரம் உ(ட) யார் தெவ தா(ன)ங் குறுவாணியக் குடி(ய)ாகிய பர கெஸரி புரத்து நகரத்தார் யாண்டு இருபத் தொன்ப தாவது வரை குடுத்த ரத்நங்கள் தக்ஷிண மேருவிடங்கர் என்னுங் கல்லால் நிறை எடுத்தும் பொ-

50. ன் ஆடவல்லான் என்னுங் கல்லால் நிறை எடுத்துங் கல்லில் வெட்டின. (51) உருத்திராக்ஷம் பொன்னி(ன் சு)ரி கட்டிற்(று) ஒன்றும் ந(ாண்ப)டு கண்ணுங் கொக்கு வாயும் உட்பட நிறை கழஞ்செய் எழு மஞ்சாடிக்கு விலை காசு முன்றெ கால். (52) இவன் எழுந்த-

51. ருளுவித்ததி(ருநாவுக்க)ை(ாயர்க்குக்குடு)த்த(ன )(53) உருத்திராக்ஷம் பொன்னின் சுரி கட்டிற்று (ஒ)ன் று(ம் ந)ா(ண் படு கண்ணு)ங் கொக்கு வ(ா)யும் உட்ப(ட) நிறை கழஞ்செ எழு மஞ்(ச)ாடிக்(கு)விலை (கா)சு மூன்று. (54) இவன் எழுந் தருளுவித்த நம்பி ஆ(ரூர)ணர்க்குக் குடுத்தன (55)உருத்திராக்ஷம் பொன்னின்சுரி கட்டிற்று ஒன்றும் நா(ண்) படு கண்ணுங் கெ(ா)-

## Fourth Section

52. க்குவாயும் உட்பட நிறை கழஞ்செ எழு மஞ்சாடிக்கு விலை காசு மூன்று (56) (இ)வன் எழுந்தருளுவி(த்)த நங்கை பரவையார்க்குக் குடுத்தன (57) திரு-

53. வொன்றுட் படப் பட்டைக் காறை ஒன்று பொன் முக் காலே குன்றி. (58) இவன் எழுந் தருளுவித்த நம்பி ஆரூரனர்க்கு நித்த விநோத வளநாட்டு

54. வெண்ணிக் கூற்றத்து உடையார் ஸ்ரீ ராஜராஜீஸ்வரம் உடையார் தெவதானம் வெண்ணி நகரத்தார் யாண்டு இருபத் தொன்பதாவது வரை குடுத்த

55. பொன் ஆடவல்லான் என்னுங் கல்லால் நிறை எடுத்துக் கல்லில் வெட்டின. (59) திருக் கம்பி ஒன்று பொன் கழஞ்செ மஞ்சாடியுங் குன்றி. (60) திருக்கம்

56. பி ஒன்று பொன் (கழ)ஞ்செ மஞ்சாடி. (61) திரள் மணி வடம் ஒன்று பொன் இரு கழஞ்செ மஞ்சாடியுங் குன்றி. (62) திருக்கைய்க் காறை ஒன்று பொன் (க)-

57. முஞ்செ (மு)க்காலெ நாலு மஞ்சா(டி). (63) (தி)ருக் கைய்க் காறை ஒன்று பொ(ன்) கழஞ்செ முக்கா(லெ)ல மூன்று மஞ்சாடியுங் குன்றி (64) திருக்காற் காறை

58. ஒன்று பொன் கழஞ்செ முக்காலெ நாலு மஞ்சாடிய(ா)க இரண்டிநாற் பொன் முக்கழஞ்செ முக்காலெ மூன்று (ம)ஞ்சாடி. (65) (இ)வன் எழுந்தருளு-

59. வித்த நங்கை பரவையார்க்குக் குடுத்தன. (66) திருக் கம்(பி) ஒன்று பொன் முக்காலெ இரண்டு மஞ்சாடியுங் குன்றி (67) திருக்கம்பி ஒன்று பொன் முக்-

60. காலே இரண்டு மஞ்சாடி. (68)

விளக்க உரை

இருக்குமிடம் - தஞ்சைப் பெரிய கோயிலின் மேற்கு ஆவரணத்தின் முதல் மாடத்திற்குமேல் செதுக்கப்பட்டுள்ளது.

கல்வெட்டின் எழுத்துக்கள் – தமிழ்.

கல்வெட்டில் குறிக்கப்பெற்ற அரசன் - முதலாம் இராசராச சோழன்.

## அரசனைப்பற்றிய பொதுக் குறிப்பு :

இவன் சுந்தரசோழன் என வழங்கும் இரண்டாம் பராந்தகனது இரண்டாவது மகன் ஆவன். கி.பி. 985 முதல் கி. பி. 1014 வரை சோழமண்டலத்தை ஈடும் எடுப்புமின்றி ஆண்டவன். இவன் ஐப்பசிச் சதயநாளில் பிறந்துள்ளான். இவனது இயற்பெயர் அருண் மொழிவர்மன். இவனுக்கு இராசராசன், இரவிகுலமாணிக்கம், இராசமார்த்தாண்டன், இராசேந்திரசிங்கன், இராசாசரியன், உய்யக் கொண்டான், கேரளாந்தகன், சயங் கொண்டான் சிவபாத சேகரன், சோழேந்திர சிங்கம், க்ஷத்திரிய சிகாமணி, சநநாதன், சோழமார்த்தாண்டன், தெலுங்க குலகாலன், நித்த விநோதன், நிகரிலி சோழன், பாண்டிகுலாசனி என்னும் சிறப்புப் பெயர்களும் உண்டு.

இவனுக்குத் தந்தி சத்தி விடங்கியாரான ஒலோகமாதேவியார், திரிபுவன மாதேவியாகிய வானவன் மாதேவியார், திரைலோக்கிய மாதேவி, பஞ்சவன் மாதேவி, அபிமானவல்லி, சோழமாதேவி முதலான மனைவியர் இருந்தனர். இவனுக்கு இராசேந்திரன் என்னும் பெயருள்ள ஒருமகனும், மாதேவடிகள், அருமொழி சந்திர மல்லியரான கங்கமாதேவியர், இரண்டாம் குந்தவை என்னும் மூன்று பெண்மக்களும் இருந்தனர். இவனுக்கு ஆழ்வார் பராந்தகன்

குந்தவையார் என்னும் ஒரு தமக்கையார் இருந்தனர். இவரே வல்ல வரையர் வந்தியதேவர்க்கு மணஞ் செய்து கொடுக்கப்பட்டவர். இவ்வம்மையாரிடத்தில் இராசராசன் பெரு மதிப்பு வைத்திருந்தான். இவன் தன் தலைநகராகிய தஞ்சையில் கண்டார் வியக்கும் வண்ணம் தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டி அதற்கு இராசராசேச்சரம் என்னும் பெயர்வைத்துள்ளான். அப்பர், சம்பந்தர், சுந்தரர் இவர் களின் தேவாரங்களைத் திருமுறைகளாகத் தொகுப்பித்தான். இவன் சைவ சமயத்தினன் ஆயினும், நாகப்பட்டினத்தில், கடாரத் தரசனாகிய சூளாமணிவர்மனால் கட்டத் தொடங்கி, அவன் மகனாகிய மாறவிசயோத்துங்கன் காலத்தில் முடிவு பெற்ற புத்த விகாரத்திற்கு இராஜராஜப் பெரும்பள்ளி என்று தன் பெயரை இடச் சம்மதித்ததோடு, அதற்கு 8943 கலம் நெல் வருவாயுள்ள 97 வேலி நிலத்தைப் பள்ளிச் சந்தமாக, ஆனைமங்கலம் என்னும் ஊரில் அளித் துள்ளான். இவன் இங்ஙனம் அளித்த நிவந்தம் முதலாம் இராசேந் திரன் காலத்தில் செப்பேடுகளில் எழுதப்பெற்றுள்ளது. இச்செப் பேடுகள் ஹாலண்டு தேசத்திலுள்ள லெய்டன் நகரத்துப் பொருட் காட்சி சாலையில் வைக்கப்பெற்றுள்ளன. (பள்ளிச் சந்தம் என்பது சைன பௌத்த கோயில்களுக்கு அளிக்கப் பெற்ற நிலமாகும்.) தன்னைச் சைவப்பற்று ஊட்டி வளர்த்த பெரிய பாட்டியாராகிய செம்பியன் மாதேவியார் திருப்பெயரால் திருமுக்கூடலில் "செம்பியன் மாதேவிப் பெருமண்டபம்" என்னும் மண்டபத்தையும், தன் பாட்டனாகிய அரிஞ்சயன் பெயரால் மேற்பாடி என்னும் ஊரில் அரிஞ்சய ஈச்சரம் என்னும் கோயிலையும் கட்டியுள்ளமை இவன் தன் முன்னோர்களிடத்தில் வைத்த நன்றியறிதலைப் புலப்படுத்தும். இவன் தன் ஆட்சியின் நடுப்பகுதியில் சோழமண்டலத்தை வளநாடு, நாடு, கூற்றம், சதுர்வேதிமங்கலம் என்னும் கூறுகளாகப் பிரித்தான். நிலங்களை அளந்தான். இவன் கல்வெட்டுக்கள் 'காந்தளூர்ச்சாலை கலமறுத்தருளிய கோஇராஜகேசரிவர்மன் என்றும்", "கோவிராஜராஜ ராஜகேசரி வர்மர்" என்றும் தொடங்கப் பெற்றுள்ளன. "திருமகள் போலப் பெருநிலச் செல்வி யும்" எனத் தொடங்குகின்றது இவன் மெய்க்கீர்த்தி. இவனைப் பற்றி, இராசராச நாடகம், இராசராச விசயம் என்னும் இருநூல் கள் இருந்தன. அவைகள் இந்நாளில் கிடைத்தில. இவன் கோழிப் போரில் ஊத்தை அடையாமலிருக்க நிவந்தம் அளிக்கப் பெற்றுள்ளது. எனவே உறையூரில் இவன் சண்டை செய்தவன் ஆவன். மதிலேறின பெருமாள் என்றும் இவன் கூறப்படுகிருன்.

### கல்வெட்டில் குறிக்கப்பெற்ற செய்தி :

பொய்கைநாடு கிழவன் ஆதித்தன் சூரியனான தென்னவன் மூவேந்தவேளான் தஞ்சை இராசராசேச்சரத்தில் செம்பினால்

செய்யப்பட்ட நம்பி ஆரூரனார், நங்கை பரவையார், திருநாவுக்கரையர், திருஞான சம்பந்த அடிகள், முதலாம் இராசராச சோழன், ஒலோக மாதேவியார் இவர்கள் பிரதிமங்களையும், சந்திரசேகரர் திருமேனியையும் எழுந்தருளுவித்து அணிகலன்களையும் அளித்துள்ளான். இவனேயன்றி, திருஞான சம்பந்த அடிகள், திருநாவுக்கரையர், நம்பி ஆரூரனார், நங்கைபரவையார் இவர்களுக்கு, இராசேந்திர சிங்க வளநாட்டுத் திருவாலி நாட்டு குறுவாணியக்குடியாகிய பரகேசரி புரத்து நகரத்தாரும், நம்பி ஆரூரனார் நங்கை பரவையர் இவர்களுக்கு, நித்தவிநோத வளநாட்டு வெண்ணிக் கூற்றத்து வெண்ணி நகரத்தாரும் அணிகலன்களை அளித்துள்ளனர். இவ்வணிகலன்களை எவரும் மாற்றிவிடா வண்ணம் இவைகளின் நிறைகள் குறிக்கப் பெற்றுள்ளன.

## குறிப்புரை

உடையார் - மரியாதை மொழி. கடவுள், அரசர், குரு, இவர்கள் பெயர்களின் முன் இம்மொழியை அமைத்துக் கூறுவது பண்டைய மரபு.

### இராசராசேச்சரம் உடையார்:—

தஞ்சாவூர்ச் சில்லாவிற்குத் தலைநகராய் விளங்கும் தஞ்சாவூரில், முதலாம் இராசராச சோழனால் கட்டப் பெற்ற இராசராசேச்சரத்தில் எழுந்தருளியிருக்கும் இறைவரது திருப் பெயர். இவர் தஞ்சை இராசராசேச்சரமுடைய பரம சுவாமி என்றும் வழங்கப் பெறுவர். ஈச்சரம்=கோயில். இராசராசேச்சரம்=இராசராசனால் கட்டப்பெற்ற கோயில்.

ஸ்ரீ காரியஞ் செய்கின்ற :—கோயில் நிர்வாகஞ் செய்கின்ற.

பொய்கை நாடு :—சோழமண்டலம் முதலாம் இராசராச சோழன் காலத்தில் அருமொழித் தேவ வளநாடு, க்ஷத்திரிய சிகாமணி வளநாடு, தென்கரை கேரளாந்தக வளநாடு, வடகரை இராசேந்திரசிங்க வளநாடு, இராஜாசரிய வளநாடு, நித்த விநோத வளநாடு, உய்யக் கொண்டான் வளநாடு, பாண்டிகுலாசனி வளநாடு, வட கரை இராஜராஜ வளநாடு என ஒன்பது வளநாடுகளாகப் பிரிக்கப் பட்டிருந்தது. இவ் வளநாட்டின் பெயர்களனைத்தும், முதலாம் இராசராசனுடைய சிறப்புப் பெயர்களாகும். இவற்றுள் இராசேந்திர சிங்க வளநாடு என்பது காவிரிக்கும்,சிதம்பரத்திற்கு வடபால் ஓடுவதும்,பெரிய புராணத்தில் நிவா என்று சொல்லப்படுவதுமாகிய வெள்ளாற்றிற்கும் இடைப்பட்ட பிரதேசமாகும். இந்த இராசேந்திர சிங்க வளநாடு, அண்டாற்றுக் கூற்றம், இன்னம்பர் நாடு, குறுக்கை நாடு, மண்ணி

நாடு, மிழலை நாடு, நல்லாற்றூர் நாடு, திருக்கழுமலநாடு, பிடவூர் நாடு, திருவாலி நாடு, விளத்தூர் நாடு முதலான இருபத்தொரு பிரிவுகளை உடையதாய் இருந்தது. இவைகளுள் பொய்கை நாடு என்பது ஒன்ருகும்.

திருவையாறு, பெரும்புலியூர், திருமழபாடி, இக்காலம் கண்ட ராச்சியம் என வழங்கும் கண்டராதித்த சதுர்வேதிமங்கலம் முதலான ஊர்கள் இப்பொய்கை நாட்டுக்கு உட்பட்ட ஊர்களில் சில வென்று கல்வெட்டுக்கள் அறிவிக்கின்றன. எனவே தஞ்சாவூர்ச் சில்லாவில், தஞ்சாவூர்த் தாலூகாவில் காவிரிக்கு வடக்குப் பகுதியும், திருச்சிராப்பள்ளி சில்லா உடையார்பாளையந் தாலூகாவும் சேர்ந்த பகுதி இப்பொய்கை நாடு என்று ஒருவாறு கூறலாம்.

க்ஷேத்திரக் கோவை திருத்தாண்டகத்தில், அப்பர் சுவாமிகள் பொய்கை என்னும் ஊரை வைத்துப் பாடுவதால் அப்பொய்கை என்னும் வைப்புத்தலம் இதுவாதல் வேண்டும். இப்பொய்கை வட பொய்கை, தென் பொய்கை என இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்ததைத் திருப்பழனத்துக் கல்வெட்டு தெரிவிக்கின்றது.

கிழவன் - உரிமையுடையவன்.

தென்னவன் மூவேந்த வேளான் - அரசனுல் கொடுக்கப்பட்ட பட்டப் பெயர்.

ஆதித்தன் சூரியன் - இயற் பெயர்.

பிரதிமங்கள் - திருக்கோயிலில் எழுந்தருளிவித்த மக்கள் வடிவங்கட்குப் பிரதிமங்கள் என்றும், தெய்வ வடிவங்கட்குத் திருமேனிகள் என்றும் பெயர்.

### தக்ஷிண மேருவிடங்கர் என்னும் கல்:—

தக்ஷிண மேருவிடங்கர் என்பது தஞ்சை இராசராசேச்சரத்தில் முதலாம் இராசராச சோழனுல் எழுந்தருளுவிக்கப் பெற்ற நடராசப் பெருமானின் திருப் பெயர். இச் செய்தியை "ஆடவல்லார் தக்ஷிண மேருவிடங்கர் நம்பிராட்டியார் உமாபரமேஸ்வரியார்க்கும், ஸ்ரீ ராஜ ராஜ தேவர் திருத் தமக்கையார் வல்லவரையர் வந்தியதேவர் மகா தேவியார் கொடுத்த பொன்னின் திருவாபரணங்களும், பொன்னின் சின்னங்களும் உள்ளிட்டன" (S. I. I., Vol. II, Part II) என்னும் கல்வெட்டுப் பகுதியால் அறியலாம்.

இவர் பெயரால் இரத்தினங்களை நிறை எடுப்பதற்கு வழங்கப் பட்டு வந்த கல்லாகும். இது தக்ஷிண மேருவிடங்கர் என்னும் காசுக் கல் என்றும் கூறப்பெறும். இதை "ரத்னங்கள் சரடும் சட்டமும் செப்பாணிகளும் அரக்கும் நீக்கி தக்ஷிண மேருவிடங்கர் என்னும்

காசு கல்லால் நிறை எடுத்தும்'' என்னும் கல்வெட்டுப் பகுதி புலப்படுத்தும்.

## ஆடவல்லான் என்னுங் கல்:—

தஞ்சைப் பெரிய கோயிலில், நடராசப் பெருமான் திருப்பெயரால் பொன்னை நிறை எடுப்பதற்கு வழங்கப்பட்டு வந்த கல்லாகும். இது ஆடவல்லான் என்னும் குடிஞைக் கல் என்றும் கூறப்பெறும். "இராஜ ராஜ தேவர் எழுந்தருளிவித்த திருமேனி தக்ஷிண மேரு விடங்கர்க்கும் கொடுத்த பொன் ஆடவல்லான் என்னும் குடிஞைக் கல்லால் நிறை எடுத்தும்'' என்னும் கல்வெட்டுப் பகுதியால் அறியலாம்.

பாதாதிகேச பரியந்தம் – அடி முதல் உச்சிவரை.

Linear measure used in measuring icons.

8 தோரை = 1 = விரல்.
12 விரல் = 1 = சாண்.
2 சாண் = 1 = முழம்.

பத்மம்—தாமரை.
பீடம்—ஆசனம்.
பிரபை—திருவாசி.
சுரி—அணி உறுப்புவகை.
பெரிய பெருமாள்—முதலாம் இராசராச சோழன்.
இவர் நம்பிராட்டியார்—இவர் தேவியார்.

## ஒலோக மாதேவியார் (உலக மாதேவியார்):—

இவர் முதலாம் இராசராச சோழனது முதற் பெருந்தேவியாராவர். இவர்க்குத் தந்திசத்தி விடங்கியார் என்ற பெயரும் உண்டு. இவர் திருவையாற்றில் ஐயாறப்பர் எழுந்தருளியிருக்கும் திருக்கோயிலுக்கு வடபால் பெரிய புறத்திருச் சுற்றுலேயில் தம் பெயரால் ஒலோகமாதேவீச்சரம் என்னும் கோயிலேயும், கும்பகோணத்திற்கு மேற்கேயுள்ள திருவலஞ்சுழி உடையார், கோயிலில் இரண்டாம் கோபுரத்திற்குத் தென்கிழக்கேயுள்ள க்ஷேத்திர பால தேவர் கோயிலேயும் கட்டியுள்ளனர். இவைகள் இரண்டும் கற் கோயில்கள். இவ்வம்மையார் இரணிய கர்ப்பம் புகுந்தனர் என்று திருவிசலூர்க் கோயில் கல்வெட்டு உணர்த்துகின்றது. இக் கல்வெட்டுக் கருகில், இவ்வம்மையாரும் இவரது கணவரும் திருவிசலூர்ப் பெருமானை வழிபடும் நிலேயில் பிரதிமங்கள் இருக்கின்றன.

இவ்வம்மையாருடைய பிரதிமத்தை, பொய்கைநாடு கிழவன் ஆதித்தன் சூரியனை தென்னவன் மூவேந்த வேளான் தஞ்சைப் பெரிய கோயிலில் எழுந்தருளுவித்துள்ளான். இவ்வம்மையாரும்

தஞ்சைப் பெரிய கோயிலில் பிச்சதேவரை எழுந்தருளிவித்து அவர்க்கு அணிகலன்களோடு திருவமுதுக்கு வேண்டும் நிவந்தங்களையும் ஏற்படுத்தியிருந்தனர். வெண்ணிக் கூற்றத்திலுள்ள கிருப்பூண்டி என்னும் ஊர்க்கு இவ்வம்மையார் பெயர் வைக்கப்பெற்று அது கிருப்பூண்டியாகிய ஓலோகமாதேவி சதுர்வேதி மங்கலம் என்னும் பெயரால் திகழ்ந்தது. செங்காட்டுக் கோட்டத்தில் உள்ள மணிமங்கலத்திற்கு உலோகமாதேவி சதுர்வேதி மங்கலம் என்ற பெயரும் உண்டு. இவ்வம்மையாரது சிவநெறிப்பற்று பெரிதும் போற்றற்குரியது.

தேவார தேவராக – தேவாரத்தைச் சொல்லி வணங்கும் கடவுளாக.

ஹஸ்தம் - கை.

காறை - கையிலும், காலிலும் அணிந்துகொள்ளும் அணிகலன்.

பட்டிகை – மேகலை.

குதம்பை – காதணி.

கண்டி - உருத்திராக்க மாலை.

## திருவாலி நாடு:—

இது இராசேந்திரசிங்க வளநாட்டின் 22 பிரிவுகளில் ஒன்று. திருவாலி என்னும் ஊரைத் தலை நகராகக் கொண்டது. இத் திருவாலி சீகாழிக்கு ஆறு மைல் தூரத்தில் இருக்கின்றது. திருமகள் திருமாலை ஆலிங்கனம் செய்த காரணம்பற்றி ஆலி ஆயிற்று என்பர். இத் திருவாலிக்கு இரண்டு மைல் தூரத்தில் திரு நகரி இருக்கின்றது. இவை இரண்டும் ஆழ்வார்களால் மங்களா சாசனம் செய்யப்பெற்றுள்ளன. இவை தனித்தனி ஊர்களாயினும் திவ்விய தேசக் கணக்கில் ஒன்ருக வைத்துக் கூறப்பெற்றுள்ளன. குறுவாணியக்குடியாகிய பரகேசரிபுரம், மல்லிகுடி, திருத்தேவன் குடி முதலான ஊர்கள் இந் நாட்டில் அடங்கிய ஊர்களில் சிலவெனக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

கொக்குவாய் - ஆபரணத்தில் படுகண்ணிற் செருகும் பூட்டு.

## நித்த விநோத வளநாடு:—

இது சோழ மண்டலத்தின் ஒன்பது வளநாடுகளில் ஒன்று. இது ஆவூர்க்கூற்றம், காந்தாரநாடு, கரம்பை நாடு, கிழார்க்கூற்றம், முடிச் சோழநாடு, நல்லூர் நாடு, பாம்புணிக்கூற்றம், பொய்யிற்கூற்றம், வெண்ணிக் கூற்றம் என்னும் பத்து பிரிவுகளை யுடையது.

வெண்ணிக் கூற்றம் — இது நித்த விநோத வளநாட்டின் பத்து பிரிவுகளில் ஒன்று.

கிருப்பூண்டியாகிய ஒலோகமாதேவி சதுர்வேதி மங்கலம், நகரக் காரக்குறிச்சி, பெருநங்கை மங்கலம் (பெருமங்கலம்), பூவனூராகிய அவனிகேசரி சதுர்வேதி மங்கலம், வெண்ணி (கோயில் வெண்ணி), வெண்ணித் திறப்பான் பள்ளி, பூதமங்கலம், வட தாமரை, ஸ்ரீபூதி இவைகள் இக் கூற்றத்தில் அடங்கிய ஊர்களில் சிலவென்று கல்வெட்டுக்கள் அறிவிக்கின்றன. இங்குக் குறிக்கப் பட்ட ஊர்களிற் சில தஞ்சாவூர் ஜில்லாவில், மன்னார்குடி தாலூகாவில் காணப் பெறுவதால் அத் தாலூகாவின் ஒரு பகுதி வெண்ணிக் கூற்றம் என்று ஒருவாறு கூறலாம். வெண்ணிக் கூற்றத்து வெண்ணி என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் நாட்டுத் தொகையில் கூறியுள்ளது இவ்வெண்ணியே யாகும்.

## கல்வெட்டுத் தோன்றிய காலம் :

இவனது ஆட்சி யாண்டு இருபத்தொன்பது. கி. பி. 985+29 =1014.

# 6. முதலாம் இராசராசன் கல்வெட்டு*

1. ஸ்வஸ்தி ஸ்ரீ திருமகள் பொல் பெருநிலச் செ (ல்வி) யுந் தனக்கெ உரிமை பூண்டமை மனக் கெ(ா)ளக் கா(ந்த) ளூர்ச் சா(லை க) ல(மறு)த்த(ரு)ளி (வெ)வங்(கை) நாடும் கங்க (பா) டி (யும்) நுளம்ப பாடியு(ந்த)டி(கை)கப(ா)-
2. டியும் குட மலை நாடும் கொல்லமும் கலிங்கமும் முரட் டொழில் சிங்களர் ஈழ (ம)ண்டலமும் (இ)ரட்ட (பா)டி எழரை இலக்கமும் முன்(னீ)ர்ப்ப (ழ)ந் (தீவு) பன்(னீ)ரா யிர(மும் திண்டி)றல் வெ(ன்)றித் தண்டாற்-
3. கொண்ட தன்னெழில வளருழியு ளெல்லாய(ா)ண்டுந் தொழுதகை விளங்கும் யாண்டெ செழியரை (த்தெ) தசு கொள் ஸ்ரீ கொ ராஜ கெஸரி வந்மரான ஸ்ரீ ராஜ ராஜ தேவர்க்கு யாண்-
4. டு, உ௰கூ ஆவது ஜயங் கொண்ட சோள மண்டல (த்) துக் காலியூர்க் கொட்டத்துத் தனியூர் உக்கலாகிய ஸ்ரீ விக்கிரமா பரணச் சதுவெதி மங்கலத்தின் மெலை-
5. ப்பெருவழியில் ஸ்ரீ ராஜ ராஜ தேவர் திரு(ந)ாமத்தால்க் கிணறுந் தொட்டியும் சமைப்பித்தான் உடையார் ஸ்ரீராஜ ராஜ தேவர் பணிமகன் சொள(ம)ண்டலத்து தெ(ந)ன் கரை(ர) நா(ட்)டு நித்த-
6. விநோ(த) வளநாட்டு ஆவூர்க் கூற்றத்து (ஆ) வூருடையான் கண்ணனுருரன். இவனெ ஸ்ரீ ராஜ ராஜ கி (ணற்)றில் (த்) தொட்டிக்கு நீரிறை(ப்) பார்க்கு அருமொழி தெவன் மரக்கா (ல)ால் நிசதம் நெ(ல்) ஐ உங (ஆ)
7. கத் திங்கள் கூ க்கு நெல் ஐ ௩௰ (களு)மும் ஸ்ரீ ராஜ ராஜ (ன்) தண்ணீரட்டுவார்க்கு நிசத (ம்) நெல் ஐ (உங) ஆக திங்கள் கூ க்கு நெல்லு ௩௰ (களு) ம் இப் பந்தலுக்கு குசக் கலம் இ (டு)
8. வ(ா)ர்க்கு திங்கள் கக்கு நெல்லு வத ஆக திங்கள் கூ க்கு நெல்லு (சகள)மும் ஸ்ரீ ராஜ ராஜன் கிணற்(று)க்கு(ம்) தெ(த) ாட்டிக் (கு)ம் தெ(ச)தத்துக்கும் ஆட்டாண்டு தொறு (ம்) பு(து)க்குப் புறமாக (வை)வச்ச

* S. I I., Vol. III, Part I, No. 4

9. நெல்லு உ களை வத ஆக ஐ சூம்சூ (களை)வத. இந் நெல்லுக்கு இவன் பக்கல் இவ்வூர் ஸ(ை)ப(யொம் இ)றை(ற திர)விய(மு)ம் (கிரய திர)விய(மு)ம் கொண்டு இறை இழியச்சி—

விளக்க உரை

இருக்குமிடம் :—காஞ்சிபுரத்திலிருந்து வந்த வாசிக்குச் செல்லும் பெரு வழியில், மாமாண்டூருக்குத் தென் கிழக்கே சுமார் ஐந்து மைல் தூரத்திலிருக்கும் உக்கல் என்ற ஊரிலுள்ள திருமால் கோயிலின் மேற்குப் புறச் சுவரில் இருக்கின்றது.

இக்கல்வெட்டில் குறிக்கப்பெற்ற அரசன் :—முதலாம் இராசராச சோழன்.

அரசனைப் பற்றிய பொதுக் குறிப்பு :—5-ஆம் கல்வெட்டில் காண்க.

கல்வெட்டுத் தோன்றிய காலம் :—கி. பி. 985+29=கி. பி. 1014.

கல்வெட்டின் மொழி :—தமிழும் கிரந்தமும்.

மெய்க்கீர்த்தியால் அறியப்படும் வெற்றிச் செய்திகள் :—காந்தளூர்ச் சாலையிலுள்ள கலங்களை அறுத்தருளினான். வேங்கை நாடு, கங்க பாடி, நுளம்பபாடி, தடிகைபாடி, குடமலை நாடு, கொல்லம், கலிங்கம், ஈழ மண்டலம், இரட்டபாடி, பழந்தீவு இவைகளை வென்றான்.

மெய்க்கீர்த்திப் பகுதிக்குக் குறிப்புரை

பெருநிலச் செல்வி—பூமி தேவி.
மனக்கொள—மனங்கொண்டு.

காந்தளூர்ச் சாலை :—இது திருவனந்த புரத்திற்கு அண்மையில் இருக்கின்றது ; "சேரலன் வேலை கெழு காந்தளூர்ச் சாலை கலமறுப்பித்து" என்னும், வேளூர், திருப்பைஞ்ஞீலி இவைகளில் உள்ள முதலாம் இராசாதிராச தேவன் கல்வெட்டுப் பகுதியால் இது கடற் கரைக்கு அருகிலுள்ள பட்டினம் என்பது விளங்கும். திரு. B. Lewis Rice, C. I. E. (Director of Archaelogical researches in Mysore) என்பவரும் இது மலபார் கடற்கரைப் பிரதேசத்தில் கேரளத்தில் உள்ள ஒரு கப்பல் துறைப்பட்டினம் (A sea port in Kerala on the Malabar coast) எனக் கூறியுள்ளனர் (Epigraphia Carnatica Vol. IX). "ஆலத்தூர் தேசத்து சுரப்புக் காட்டில் குளத்தின் கீழ் காந்தளூர்ச் சாலை மகாதேவர்க்கு வாரம்போக" என்னும் கல்வெட்டுப் பகுதியால் காந்தளூர்ச்சாலை என்பது பட்டினத்தின் பெயர் என்று

பெறப்படுகின்றது. என்னை? ஊரின் பெயரையே கடவுளுக்கு வைப்பது பண்டை வழக்கமாதலின். ஒற்றியூருடைய கோவே, திருப்புறம் பியமுடைய மகாதேவர்க்கு என்னும் தேவாரம், கல் வெட்டு, இவைகளை முறையே காண்க.

### காந்தளூர்ச் சாலை கலமறுத்தருளி :

காந்தளூர்ச் சாலையிலுள்ள கப்பல்களை அழித்தருளி என்பது இத்தொடரின் திரண்ட பொருளாகும். சாலை என்பது உணவு அளிக்கும் விடுதி (Feeding house) என்றும், கலம் என்பதை உண்ணும் பாத்திரம் என்றும், அருளி என்பதை அருள் செய்து என்றும் பொருள் கொண்டு காந்தளூரில் இருந்த உணவு அளிக்கும் விடுதியில் இத்தனை பேர்களுக்குத்தான் உணவு அளிக்கலாம் என வரையறை செய்யப்பட்டது என்பர் ஒருசாரார். இவ்வாறு கூறுவதில் பொருட் சிறப்பு இல்லை. சேரமன்னர், முதலாம் இராச ராச சோழனுக்குப் பகை மன்னர் ஆதலால் அச்சேரருடைய கப்பல் படைகளை அழித்துப் பின் வேண்ட அவர்களுக்கு அருள் செய்தான் என்று கொள்ளுதலே பொருத்த முடையதாகும். இவ்வாறு கலமறுத்த செயல், முதலாம் இராசாதிராசன், பராந்தக பாண்டியன் இவர்கள் காலங்களின் கல்வெட்டுக்களிலும் கூறப் பெற்றுள்ளது

வேங்கை நாடு :—இது கோதாவரி கிருஷ்ணை என்ற இரு பேராறுகளுக்கு இடையில் உள்ள நாடு. இது கீழைச் சளுக்கியருக்கு வாழ்விடம்.

கங்கபாடி :—இது மைசூரின் தென்பகுதி. கங்கர் பல்லவரில் ஒரு பிரிவினர் ஆவர். அவர்க்கு வாழ்விட மாதல் பற்றி இப்பெயர் பெற்றது.

நுளம்பபாடி :—இது மைசூர் இராச்சியத்தில், சித்தல் துர்க்கம், பல்லாரி ஜில்லாக்கள் அடங்கிய பிரதேசம்.

தடிகைபாடி :—கங்கபாடிக்கும் நுளம்ப பாடிக்கும் இடையில் உள்ளது.

குடமலை நாடு :—குடகு பிரதேசம்.

கொல்லம் :—இந்தியாவின் மேற்குக் கரையில் quillon என்று வழங்கும் பிரதேசம்.

கலிங்கம் :—கோதாவரிக்கும், மகா நதிக்கும் இடையிலுள்ள நிலப்பரப்பு.

முரட்டொழில் :—இது முரட்டெழில் என்றிருக்க வேண்டும். முரட்டுத் தன்மையும் அழகும் வாய்ந்த என்பது இதன் பொருள். முரட்டொழில் என்று கொண்டால்—வலிமை மிக்க தொழில் என்று பொருள் கொள்க.

இரட்டபாடி ஏழரை இலக்கம் :—இரட்டபாடி :—பம்பாய் மாகாணத்தின் தென்பகுதி. இது மேலைச் சளுக்கியருடைய வாழ்விடம்.

இரட்டபாடி ஏழரை இலக்கம் :—இது பற்றி இருதிறக் கொள்கைகள் :—

இரட்டபாடி, ஏழரை இலக்கம் வருவாயையுடையது என்பது ஒருசாரார் கொள்கை. ஏழரை இலக்கம் பூமியை உடையது என்பர் மற்றொரு சாரார்.

பழந்தீவு :—மாலடிவ்ஸ் (Maladive Islands) என்று அழைக்கப் படும் அரபிக் கடல் தீவுகள்.

தொழுதகை :—வணக்கங்கூடிய நிலையில்.

செழியரை :—பாண்டியரை.

தேசுகொள் :—ஒளியைக் கொண்டுள்ள. (ஒளி—தான் உள காலத்து மிக்குத் தோன்றுதல் உடைமை என்பர் பரிமேலழகர்.)

## உரைநடைப் பகுதியால் அறியப்படும் செய்திகள்

இராச ராச சோழனது பணி மகனும் நித்த விநோத வளநாட்டிலுள்ள, ஆவூர்க் கூற்றத்து ஆவூரைத் தனக்குப் பிறப்பிடமாகக் கொண்டவனுமாகிய கண்ணன் ஆரூரன், தன் அரசன் பெயரால் சயங்கொண்ட சோழ மண்டலத்துக் காலியூர்க் கோட்டத்துத் தனியூர் உக்கலாகிய விக்கிரமாபரணச் சதுர்வேதி மங்கலத்தின் மேலைப் பெருவழியில் ஒரு கிணற்றை அமைப்பித்து அதற்கு நிவந்தம் அளித்துள்ளான்.

### நிவந்தத்தின் வகை :

இராச ராசன் கிணற்றிலிருந்து தொட்டிக்கு நீர் இறைப்பார்க்கு அருமொழி தேவன் மரக்காலால் நாள் ஒன்றுக்கு நெல் இருகுறுணி ஆகத் திங்கள் ஆறுக்கு நெல் முப்பது கலமும், இராச ராசன் பெயரால் தண்ணீர் வார்ப்பார்க்கு நாடோறும் நெல் இருகுறுணியாகத் திங்கள் ஆறுக்கு நெல் முப்பது கலமும், இப்பந்தலுக்கு மட்கலம் இடுவார்க்குத் திங்கள் ஒன்றுக்கு நெல் இருதூணியாக திங்கள் ஆறுக்கு நெல் நான்கு கலமும், இராச ராசன் கிணற்றுக்கும்

தொட்டிக்கும், சேதம் ஏற்பட்டால் அவைகளைப் புதிப்பிக்க ஆண்டு தோறும் இருகலனே இருதூணி நெல்லும் ஆக 6ே கலம் எட்டு மரக்கால் நெல் விளையக்கூடிய நிலத்தின் விலைக்குரிய பணத்தையும், அதற்கு வரிக்கு உரிய பணத்தையும் தனியூர் உக்கலாகிய விக்கிரமாபரணச்சதுர்வேதி மங்கலத்துச் சபையார், கண்ணன் ஆரூரனிடம் பெற்றுக் கொண்டு, வரி இல்லாமல் (நிலத்தை விற்றுக் கொடுத்து அத்தர்மத்தை நடத்துவதாக இசைந்தனர்.)

## உரைநடைப் பகுதிக்குக் குறிப்புரை

சயங்கொண்ட சோழ மண்டலம் :—முதலாம் இராச ராச சோழன் தொண்டை மண்டலத்தை வென்ற பிறகு அதற்கு அவன் வைத்த பெயர். சயங்கொண்ட சோழன் என்பது முதலாம் இராச ராச சோழனின் சிறப்புப் பெயர்களில் ஒன்று.

காலியூர்க் கோட்டம் :—இது தொண்டை மண்டலத்து இருபத்து நான்கு கோட்டங்களுள் ஒன்று. (கோட்டம் - என்பது இக்காலம் ஒரு ஜில்லாவிற்குச் சமம் ஆகும்.) இது, செங்கற்பட்டு ஜில்லாவில் செங்கற்பட்டு, காஞ்சிபுரம் தாலூகாகளில் சில பகுதிகளையும், வடார்க்காடு ஜில்லாவில் செய்யாறு தாலூகாவின் சில பகுதிகளையும் தன்னகத்துக் கொண்டது என்னலாம். இதில் உத்தரமேரு சதுர்வேதி மங்கலம் (உத்தரமல்லூர்), உக்கல், திருவோத்தூர் முதலான ஊர்கள் அடங்கியுள்ளனவெனக் கல்வெட்டுக்கள் அறிவிக்கின்றன.

சதுர்வேதி மங்கலம் :-சில சிற்றூர்களைத் தன்கண் கொண்டதாகும். தனியூர், சதுர்வேதி மங்கலம் என்ற பெயரால் அழைக்கப் பெறுவதும் உண்டு. இக்காலம் இதை வட்டம் என்று கூறலாம். சதுர்வேதி மங்கலம், சதுர்ப்பேதி மங்கலம் என்றும் வழங்கப் பெறும்.

உக்கலின் வேறு பெயர் :-விக்கிரமா பரணச் சதுர்வேதி மங்கலம்.

மேலைப் பெருவழி—மேற்கே போகும் பெருவழி. பெருவழி-Road.

பணி மகன் - வேலைக்காரன்.

தென் கரை - காவிரிக்குத் தென் கரையில் உள்ள.

நித்த விநோத வளநாடு :-இது சோழமண்டலத்தின் பிரிவுகளாகிய ஒன்பது வளநாடுகளுள் ஒன்று. ஆவூர்க் கூற்றம், காந்தார நாடு, கரம்பை நாடு, கிழார்க் கூற்றம், முடிச்சோழ நாடு, நல்லூர் நாடு, பாம்புணிக் கூற்றம், பொய்யூர்க் கூற்றம், வெண்ணிக் கூற்றம், வீரசோழவள நாடு, என்னும் பத்துப் பிரிவுகளாகப் பிரிக்கப் பெற்றிருந்தது. இது தஞ்சாவூர்ச் சில்லாவில் அரிசி

லாற்றுக்குத் தெற்கும் மன்னுர்குடி தாலூகாவின் வடக்குப் பகுதியும், தஞ்சாவூர்த் தாலூகாவின் கீழ்ப் பகுதியும் பாபநாசந் தாலூகாவின் மேற்குப் பகுதியும் அடங்கிய நிலப்பரப்பு என்னலாம்.

ஆவூர்க் கூற்றம் :-இது நித்த விநோதவள நாட்டின் பிரிவுகளில் ஒன்று. இது தஞ்சாவூர்ச் சில்லாவில் பாபநாசந் தாலூகாவில் தேவாரம் பெற்ற தலமாகிய ஆவூரைத் தலைநகராகக் கொண்ட ஒரு சிறு நிலப் பரப்பாகும். அமுத்திரவல்லி சதுர்வேதி மங்கலம், இரும்பு தலையாகிய மனுகுல சூளாமணி சதுர்வேதி மங்கலம், முன்னியூர், விளத்தூர், நரசிங்க சதுர்வேதி மங்கலம், பட்டம், செம்பன்குடி முதலான ஊர்கள் இக்கூற்றத்திலுள்ள ஊர்களிற் சில வென்று கல்வெட்டுக்கள் அறிவிக்கின்றன.

கூற்றம் என்பது இரண்டு நாடுகட்கு உட்பட்ட பிரிவு. உதாரணம்:— இன்னம்பர் நாட்டிற்கும் பொய்கை நாட்டிற்கும் இடைப்பட்ட பகுதி விறைக்கூற்றம்.

அருமொழி தேவன் மரக்கால் :—அருண்மொழி என்பது முதலாம் இராச ராச சோழனின் இயற்பெயர். இப்பெயரால் விக்கிரமாபரணச் சதுர்வேதி மங்கலத்தில் வழங்கி வந்த மரக்காலின் பெயராகும்.

நிசதம் :-நாடோறும்.

ஐ :-இது நெல்லைக் குறிக்கும் அடையாளம்.

கள :-இது கலத்தைக் குறிக்கும் அடையாளம்.

ஸ்ரீராஜராஜன் தண்ணீர் அட்டுவார்க்கு :-இராசராசன் பெயரால் தண்ணீர் வார்ப்பார்க்கு.

ங :-இது குறுணி நெல்லைக் குறிக்கும் அடையாளம்.

இப்பந்தலுக்கு :—இத்தண்ணீர்ப் பந்தலுக்கு.

குசக்கலம் இடுவார்க்கு :-மட் பாத்திரம் இடுவார்க்கு.

வத :-இரண்டு தூணியைக் குறிக்கும் அடையாளம் (1 தூணி—4 மரக்கால்)

புதுக்குப் புறம் :-பழுது பார்ப்பதற்கு வைக்கப்பெற்ற நிவந்தம். புறம் இப்பொருளில் வருவதைத் திருவிளக்குப் புறம், மடப்புறம் இவைகளில் காணலாம்.

உகளவத :—இருகலனே இருதூணிக்கு அடையாளம்.

கூ௰கூகளவத :-அறுபத்தாறு கலனே இரு தூணிக்கு அடையாளம்.

இறை திரவியம் :-வரிப்பணம் (Revenue tax).

கிரைய திரவியம் :-வாங்கும் விலை (Actual cost.)

## அரிய செய்திகள்

இராச ராசக் கிணற்றிலிருந்து தொட்டிக்கு நீரிறைப்பார் முதலான பல பணியாளர்களுக்கு ஒரு ஆண்டில் ஆறு மாதங்களுக் குத்தான் கூலிகள் கொடுக்கப்பட்டு வந்தன. தண்ணீர்ப் பந்தல் இக்காலம்போல் அல்லாமல் பண்டைக் காலத்தில் ஆறு மாத காலம் நடத்தப்பெற்று வந்தது என்பது புலனாகின்றது. இக்கல் வெட்டில் வந்துள்ள பெருவழி (Road), பணி மகன் (Humble Servant), புதுக்கு (Repair) என்பவை தூய தமிழ்ச் சொற்கள்.

# 7. முதலாம் இராசராச சோழன்*

1. ஸ்வஸ்தி ஸ்ரீ திருமகள் போலப் பெருநிலச் செல்வியுந் தனக்கே யுரிமை (பூண்)டமை மனக்கொளக், காந்த(ளூர்) சாலை கலமறுத்தரு(ளி), ெ(வ)ங்கை நாடுங் கங்க பாடியு (நு)ளம்ப பாடியுந் தடிகை பாடியுங் குடமலை நாடுங் கொல் லமுங் கலிங்கமு மெண்டிசை புகழ்தர வீழமண்டலமு, மிரட்ட பாடி யெழரை யிலக்கமுந் திண்டிறல் வென்றித் தண்டாற் கொண்ட தந்னெழில் வளரூழி எல்லா(ய)ா (ண்) டுந் தொழுதகை விளங்கும் யாண்டெய் செழியரைத் தேசு கொள், ஸ்ரீ கொவி ராஜராஜ கெஸரி பந்மராந, ஸ்ரீ ராஜ ராஜ தேவர்க்கு, யாண்டு உ௰௬ ஆவது, ஜயங்கொண்ட சோழ மண்டலத்துப் பெரும்பாணப் பாடித் தூஞாட்டு ெ(ம)ற் பாடியா(கி)ய ராஜாஸரிய புரத்து நகரத் தொம், ஆற்றூர்த் துஞ்சின தேவர்க்குப் பள்ளி படையாக உடை யார் ஸ்ரீ ராஜராஜ தேவர் எங்கள் நகரத்(தி) லெடுப்பித் தரு(ளி)ன (தி)ரு அறிஞ்சிகை ஈஸ்வரத்து மகாதேவர் ஸ்ரீ கோயிலுக்குந் (தி)ருச்சுற்றாலைக்குந், (தி)ரு முற்றத்துக்குந் (தி)ரு நந்தன வனத்துக்கும்,

2. மடவிளாகத்துக்கு மா(க), நாங்களித் தேவற்குக் குடுத்த நிலத்துக் கெல்லை :- நுகாவென்னு (ம)ாற்றுக்கு மேற்கும், இவ்வூர் (மு)ம்மடி சோழப் (ெ)பருந் தெருவில் வியாபாரி ஆச்செருமான் வயிர மேகன் தொட்டப் பா(ழ)ான (நி)லத் தின் வடவருகெய் நுகாவாற்றி நின்று மிருகொ லகலத் தால் மேற்கு நோக்கி(ப்) போன பெருவழி எண்பத்தெழு ெ(கா)லாசறு திக்கு வடக்கு, மிவ்வாசறுதியெய் வடக்கு நொக்கிச் சொளெந்திரஸிம்ஹ ஈஸ்வர முடைய தெவர் தெவ(ர)டியார், மத்த வாணச் செரியெ யெ(ற)ப் பொன செருவுக்குக் கிழக்குஞ், சொ(ளெந்திர) ஸிம்ஹஈஸ்வர முடையார் கொயிலின் தெற்கில், தி(ரு) நந்தவனத்தின் ெ(த)ன்னருகெய், நுகா வென்னு மாற்றுக்கெய் கிழக்கு நொக்கி நாற்கொல கலத்தாற் பொன பெ(ரு) வழிக்குத் தெற்கு, மிந்நாற் பெரெல்லை யுள்ளுமகப்பட்ட நிலம், எங்க ளூரளந்து கூறிட்ட பதினெண் சாண் கொலாற் குழி ஐய்யா யிரத் தெ(ாருநூ)ற்று மு(ப்)பத்தாறரையு, மித் தெவ(ற்)

* S.I.I., Vol. III, Part I, No. 15.

குத் தெவதான இறையிலியாகக் குடுத்தொ(ம்). இ(ங் ஙி(ல)த் த(ாறெய்) நுகாவென்னு (ம)ாற்றினின்றும், இத்தெ—

3. வரிங்நிலத்துக்கு, மிலுப்பைக் கழனிக்கு நீர்பாய்ந்த வாய்க்கால் காற் கொலகலத்தால், இத் தெவரிங் நிலத் துக்கு, மிலுப்பைக் கழனிக்கு, நீர் பாயப் பெறவு மிப் பரி(சு) தெவதான (இ)றையிலியாகச் சிலா லெகை செய்து குடுத்தொம். மெற்பாடியான ராஜாஸரய புரத்து நகரத்தொம். இந்நகரத் தார் சொல்ல எழுதினென் இந் நகரக் கரணத்தான் நாராயணனடைக்கலவனென். இவை யென்னெழுத்து. இது (ப)ன்மா ஹேஸ்வ(ர) ரக்ஷ.

## விளக்க உரை

கல்வெட்டு இருக்குமிடம் – வடார்க்காடு ஜில்லா திருவல்லத்திற்கு வடக்கே ஆறுமைல் தூரத்தில் மேற்பாடி என்னும் ஊரிலுள்ள சோழேச்சரர் கோயிலின் அடிப்பகுதியில் (On the base) இருக்கின்றது.

கல்வெட்டில் குறிப்பிடப்பெற்ற அரசன் - முதலாம் இராசராசன்.

அரசனைப்பற்றிய பொதுக் குறிப்பு - 5–ஆம் கல்வெட்டைப் பார்க்க.

கல்வெட்டுத் தோன்றிய காலம் - கி-பி. 1014.

கல்வெட்டின் மொழி : தமிழும் கிரந்தமும்.

குறிப்பு :—மெய்க்கீர்த்திப் பகுதியில் குறிக்கப்பட்ட செய்திகள், மெய்க்கீர்த்திப் பகுதிக்குக் குறிப்புரை இவைகளை 5–ஆம் கல்வெட்டில் காண்க.

## உரைநடைப் பகுதியால் அறியப்படும் செய்தி

சயங்கொண்ட சோழமண்டலத்துப் பெரும்பாணப்பாடித் தூநாட்டு மேற்பாடியாகிய இராசாசரிய புரத்து நகரத்தார், தங்கள் நகரில், முதலாம் இராசராச சோழன், ஆற்றூர்த்துஞ்சின தேவர்க்குப் பள்ளிப்படையாக எடுப்பித்தருளின அரிஞ்சிகை ஈஸ்வரத்து மகாதேவர்க்கு, ஸ்ரீ கோயிலுக்கும், திருச் சுற்றுலைக்கும், திருமுற்றத்துக்கும், திருநந்தவனத்துக்கும், மடவிளாகத்துக்கும் ஆக, ஒரு குறிப்பிட்ட நான் கெல்லைக்குட்பட்ட 5136½ குழியைத் தேவதான இறையிலியாகக் கொடுத்துள்ளனர்.

## உரைநடைப் பகுதிக்குக் குறிப்புரை

**சயங்கொண்ட சோழமண்டலம்:** 6-ஆம் கல்வெட்டில் காண்க.

பெரும்பாணப்பாடி : சயங்கொண்ட சோழ மண்டலம், பல பிரிவு களாகப் பிரிக்கப் பெற்றிருந்தது. இவற்றுள் பெரும்பாணப்பாடி என்பது ஒன்ருகும். இது, திருவேங்கடக் கோட்டம், ஆற்றூர் நாடு, குடவூர் நாடு, தூநாடு என்னும் நான்கு பிரிவுகளை உடையது.

தூநாடு—மேற்பாடி, கரைவேடு, ஒழுகு, வாங்கூர், பெரும் பானூர், மருதம்பாக்கம் முதலான ஊர்கள் இத்தூநாட்டில் அடங்கிய ஊர்களிற் சிலவாகும். மேற்பாடி—இதன் பழம் பெயர், வீரநாராயண புரம் ஆகும். கோனேரின்மை கொண்டான் என்னும் அரசன் (முதலாம் இராசராசன்) தன் ஆட்சியின் 14-ஆம் ஆண்டு, 258-ஆம் நாளில், இவ்வூரில் சோழேந்திர சிங்கேச்சரம் என்னும் பெயருடன் கோயில் ஒன்றைக் கட்டியும்,அவ் வூர்க்கு இராசாச்சரிய புரம் என்னும் பெயரையும் வைத்துள்ளான். (Vide Annual report on South Indian Epigraphy for the year 1921. Part II, para 31) எனவே மேற்பாடிக்கு இராசாசரியபுரம் என்னும் பெயர் முதலாம் இராசராச சோழனின் 18-ஆம் ஆட்சி யாண்டில் ஏற்பட்டதாகும்.

**ஆற்றூர்த் துஞ்சினதேவர் :**

இவர் முதற்பராந்தக சோழனது மூன்ருவது மகனுகிய அரிஞ் சயன் ஆவர். இவர்க்கு அரிகுல கேசரி, அரிந்தமன் என்னும் வேறு பெயர்களும் உண்டு. இவர் பரகேசரி என்ற பட்டம் பூண்டு, சிறிது காலம் ஆட்சிபுரிந்தார். இவர்க்கு வீமன் குந்தவையார், கோதைப் பிராட்டியார், கல்யாணி பூதி ஆதிச்ச பிடாரியார் என் னும் மனைவியர் இருந்தனர். இவர் ஆற்றூர் என்னும் இடத்தில் இறந்த காரணம்பற்றி ஆற்றூர்த் துஞ்சிய தேவர் என்று அழைக்கப் பட்டு வருகின்றனர். இவரது பெயரனுகிய முதலாம் இராசராச சோழன் வடார்க்காடு சில்லாவில் திருவல்லத்திற்கு வடக்கே ஆறு மைல் தொலைவிலுள்ள மேற்பாடி என்னும் ஊரில், இவர்க்குப் பள்ளிப்படையாக அரிஞ்சய ஈச்சரம் என்னும் கோயிலைக் கட்டியிருப் பதால் இம்மேற்பாடி என்னும் ஊருக்கு அணித்தாகவே இவ்வாற் றூர் இருத்தல் வேண்டும்.

துஞ்சினர் - செத்தார் என்று பொருள்படும் மங்கல வழக்குச் சொல். (செத்தாரைத் துஞ்சினர் என்றலும் என்பது தொல்காப் பியம், சொல்லதிகாரம், சேனுவரையம், சூத்திரம். 17)

"தொண்டை மானூற்றூர்த்துஞ்சின உடையார்;" "ஆற்றூர்த் துஞ்சினதேவர்;" "பொன்மாளிகைத் துஞ்சினதேவர்;" என்னும் கல்வெட்டுத் தொடர்கள் முறையே தொண்டைமான் ஆற்றூரில் இறந்த முதலாம் ஆதித்த சோழன், ஆற்றூரில் இறந்த அரிஞ்சயன், பொன்மாளிகையில் இறந்த சுந்தர சோழன் என வழங்கும் இரண்டாம் பாரந்தகன் இவர்களைக் குறிப்பதாகும். இங்ஙனமே சேரமான் சிக்கற்பள்ளித்துஞ்சிய செல்வக் கடுங்கோ வாழியாதன், சோழன் குராப்பள்ளித் துஞ்சிய கிள்ளிவளவன், பாண்டியன் வெள்ளியம் பலத்துத் துஞ்சிய பெருவழுதி என்னும் பெயர்களுள் வந்துள்ள துஞ்சிய என்னும் சொல், சிக்கற்பள்ளியில் இறந்த, குராப்பள்ளியில் இறந்த, வெள்ளியம்பலத்தில் இறந்த, என்னும் பொருளில் புறநானூற்றில் வருவதைக் காணலாம்.

பள்ளி படை - இச்சொல் பள்ளிப்படை எனவும் வழங்கப்பெறும். இறந்த மன்னரின் நினைவிற்கு அறிகுறியாக அவர்கள் புதைக்கப்பட்ட இடத்தின்மீது கட்டப்பட்ட கோயில் என்பது இதன் பொருள். முதலாம் பராந்தக சோழன், தன் தந்தை முதலாம் ஆதித்தன் புதைக்கப்பட்ட இடத்தில் கட்டுவித்த கோயில், பள்ளிப் படையாகிய ஆதித்தேச்சரம் என்னும் பெயரையும், முதலாம் இராசராச சோழனது மனைவியாகிய பஞ்சவன் மாதேவியார் பழையாறையாகிய முடிகொண்ட சோழபுரத்தில் புதைக்கப்பட்டு கட்டப்பட்ட கோயில் பள்ளிப்படையாகிய பஞ்சவன் மாதேவீச்சரம் என்னும் பெயரையும், விக்கிரமசோழ தேவரின் தமக்கையார் பெரும் பற்றப் புலியூர்க்கு (சிதம்பரத்திற்கு) அருகில் புதைக்கப்பட்ட இடம் அக்கன்பள்ளிப்படையாகிய விக்கிரமசோழ நல்லூர் என்னும் பெயரையும் பெற்றிருந்தன. இவைகளைக் கொண்டு மேற் குறித்த பொருள் வலியுறுதல் காண்க.

திருச்சுற்றுலை – பிராகாரம்.

மடவிளாகம் – கோயிலைச் சூழ்ந்துள்ள வீதி.

நுகா - இது பாலாற்றின் உபநதி (அ) பாலாற்றில் வந்து கலக்கும் ஆறு.

தோட்டப்பாழான - தரிசாகக் கிடந்த.

ஆசறுதி - கடைசி.

சோழேந்திர சிம்ஹேஸ்வர முடைய மகாதேவர்—இவர் முதலாம் இராசராச சோழனால், சித்தூர் ஜில்லா, சித்தூர்த் தாலூகாவிலுள்ள மேற்பாடி என்னும் ஊரில் கட்டப்பட்ட சோழேந்திர சிம்ஹேஸ்வரத்தில் எழுந்தருளியிருக்கும் கடவுளாவர். இக்கோயில் இக்காலம் சோமநாதேஸ்வரர் என்னும் பெயருடன் திகழ்கின்றது.

தேவதான இறையிலி - சிவன்கோயிலுக்கு வரி இல்லாமல் கொடுக்கப்பட்ட நிலம்.

மத்தவாணச் சேரி - தேவரடியார் சேர்ந்து வாழ்ந்துவந்த இடத்தின் பெயர். சேரி—சேர்ந்திருப்பது.

அந்தணர் சேரி - அந்தணர்கள் சேர்ந்து வசிக்கும் இடம். (திருவையாறு ஒலோகமாதேவீச்சரக் கல்வெட்டு.)

தேவரடியார் வசித்துவந்த இடம் தளிச்சேரிப் பெண்டுகள் என்று தஞ்சை இராசராசேச்சரக் கல்வெட்டில் வருதலைக் காண்க.

# 8. முதலாம் இராசராசன் கல்வெட்டு *

1. ஸ்வஸ்திஸ்ரீ திருமகள் பொலப் பெருநிலச் செல்வி(யு)ந் தனக்கெயு(ரி)மை பூ(ண்)டமை மனக் கொ(ள)க் காந்த(ளூ)ர்ச் சாலை கலமறுத் தரு(ளி ெ)வங்கை (நா)டு(ங்) கங்க பாடியுந் த(டி)கை ப(ா)டியு(ம் நுள)ம்(ப) பாடியு(ங் கு)ட மலை நாடுங் கொல்லமுங் க(லி)ங்(க)மும் முரட் டெழில் சிங்களர் ஈழ ம(ண்)டலமு(ம்) இரட்ட பாடி எழரை இலக்கமும் முன்னீர்ப் பழந்தீவு (ப)ன்னீ ராயிரமுந் தி(ண்)டிற(ல்) வென்றி(த்) த-

2. ண்டாற் கொண்ட (த)ன்னெழில் வள(ரு)ழியு ளெல்லா யா(ண்)டுந் தொழு தக விளங்கும் யாண்டெ செழியரைத் தெசு ெ(காள்) கொ ராஜகெஸரி (வன்ம)ரான ஸ்ரீ ராஜ ராஜ ெ(த)வர்க்கு யாண்டு இருபத் தொன்பதாவது வரை, உடை(ய)ார் ஸ்ரீ ராஜ ராஜீஸ்வரம் உடையார்க்(குத்), திருப் பதியம் விண்ண(ப்)பஞ் செய்ய, உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் குடுத்த, பிட(ா)ரர்கள் நாற்பத் தெண்மரும், இவர் க(ளி)லெ (நி)லையாய் உடுக்கை வாசிப்பா-

3. ன் (ஒரு)வனும், இவர்களிலே நிலையாய்க் கொட்டி மத்த(ள)ம் வாசிப்பான் ஒருவனும், ஆக ஐம்பதின்மர்க்குப் பெரால், நிசதம் நெல்லு முக்குறு(ணி நிவ)ந்தமாய், ராஜ கெஸரியொ டொக்கும் ஆடவ(ல்லானென்)னும் மரக்கால(ா)ல், உ(ை)டயார் உள்ளூர்ப் ப(ண்)டா(ரத்) தெய், பெறவும். இவர்களில் செ(த்)தார்க்கும், அனுதெசம் பொனர்க்கு(ந்), தலைமாறு அவ்வவர்க்கு அடுத்த முறை கடவார், அந்நெல்லுப் பெற்று(த்) திருப்பதிய(ம் வி)ண்-

4. (ண)ப்பஞ் ெ(ச)ய்(யவும். அவ்)வவர்க்கு அடுத்த முறை கடவார் தாந்தாம் யோக்யர் அ(ல்)லாது விடில், யொக்யரா (யி)ருப்(பா)ரை, ஆளிட்டுத் திருப்ப(தி)யம் விண்ணப்பஞ் செய்வித்து, அந்நெல்லுப் பெறவும். அவ்வவர்க்(கு அடு)த்த முறை கடவாரின்றி யொ(ழி)யில், அந்த(நியா)யத்தாரெ, யோக்யரா (யி)ருப்பாரை(த் தி)ரு(ப்) பதியம் வி(ண்)ணப்பஞ் செய்ய இட்டு, இட்ட அவனே, அவ்வவர் பெறும்படி, நெல்லுப் ெ(ப)றவும். ஆக இப்படி (உ)டையார் ஸ்ரீ ரா-

---

* S. I. I., Vol. II, Part III, No. 65.

5. ஐ(ரா)ஜ (தெ)வர் (திருவாய்) மொழிந் தருளினபடி கல்லில் வெட்டியது. (க) பாலன் திருவாஞ்சி(ய)த் தடிகள(ான) ராஜராஜப் பிச்சனுன ஸதாசிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி. (உ) திருவெண்ணுவல் செம்பொற் றெ(சாதியா)ன தக்ஷிணமேரு விடங்க(ப்) பிச்சனுன ஞாநஸிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி. (ங) பட்டாலகன் (அம்)பலத்தாடியான மநோத்தம ஸிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி. (ச) பட்டாலகன் சீருடைக் கழலான

6. (பூர்)வ ஸிவனுக்கு (நி)சதம் நெல்லு முக்குறுணி. (ரு) பொற் சுவரன் தி(ரு)நாவுக் கரையனுன பூர்வ ஸிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி. (சா) மாதெ(த)வன் திருநான சம்பந்தனுன ஞாந ஸிவனு(க்கு நிச)தம் ெ(நல்லு முக்குறுணி). (எ) கயிலாயன் ஆருரான தர்ம ஸிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி. (அ) ெ(சட்)டி எடுத்த ப(ாத மா)ன கவஸ ஸிவனுக்கு நிசதம் நெல்லு மு(க்குறு)ணி. (கூ) இராமன் சம்பந்தனுன ஸத்ய ஸிவனுக்கு நிசதம் நெல்-

7. லு முக்குறுணி. (ய) அம்ப(ல)வன் (ப)த்(த)ர்கள்...(ட)னுன வாம ஸிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி. (யக)கம்(ப)ன் திருநாவுக் கரையனுன சதா ஸிவனுக்கு நிசத(ம் நெல்லு முக்குறு)ணி. (யஉ) நக்கன் சீராளனுன வாம ஸிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி. (யங) (அ)ப்பி (தி)ருநாவுக் கரையனுன நெத்திர ஸிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி. (யச) சிவக்கொ(ழு)ந்து சீராளனுன தர்ம ஸிவனுக்-

8. கு நிசதம் ெ(ந)ல்லு முக்குறுணி. (யரு) ஐஞ்நூ(ற்று)வன் வெண்காடனுன ஸதாஸிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி. (யசா) அரையன் அ(ணு)க்கனுன திருமறைக் (க)ா...(னுன தர்ம ஸி)வனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி- (யஎ) அரையன் அம்பலக் கூத்தனுன ஓங்(கா)ர ஸிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி. (யஅ) ஆரூரன் திருநாவுக் கரை(ய)னுன ஞாந ஸிவனுக்கு நிசதம் நெ-

9. ல்லு முக்கு(றுணி). (யகூ) கூத்தன் மழலைச் சிலம்பான பூர்வ ஸிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி. (உய) ஐஞ்நூற்றுவன் சீய(ா)ரூரான தத்புருஷ (ஸி)வனுக்கு நிசதம் நெல்லு மு(க்கு)று(ணி). (உக) சம்பந்தன் ஆரூரனுன வாம ஸிவனுக்கு நிசத(ம்) நெல்லு மு(க்)குறு(ணி). (உஉ) அரையன் பிச்(சனு)ன தர்ம ஸிவனுக்கு நிசதம்

நெல்லு முக்குறுணி. (உரு) கா(ஸியப)ன் எடுத்த பாதப் பிச்சனான உருத்திர ஸிவனுக்கு (நி)சதம்

10. நெல்லு முக்குறுணி. (உ௬) ஸுப்ரமணிய (ஆ)ச்சனான தர்ம (ஸி)வனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி. (உ௭) கூத்தன் அமர புஜங்கனான ஸதா (ஸி)வனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி. (உ௮)........வெண்(க)ா(ட)னான அ௳(கா)ர ஸி(வ)னுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி. (உ௭) மாதெவன் திருநாவுக் கரை(ரயனு)ன விஞ்ஞான ஸிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி. (உஅ) கூத்தன் வெண்காட(னு)ன உருத்(திர) ஸிவனுக்(கு) நிசதம்

11. ெ(ந)ல்லு முக்குறுணி. (உ௯) ஐஞ்நூற்றுவன் திரு(வா)ய்(மூ)ரான அகோ(ர ஸி)வனுக்கு நிசத(ம் நெ)ல்லு முக்குறுணி. (௩௰) திருமலை கூத்தனான வாம ஸிவனுக்கு (நிச)தம் நெல்லு (முக்)குறுணி. (௩௧) ஐஞ்ஞூற்றுவன் எடுத்த பாதமான தர்ம ஸிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி. (௩௨) அரையன் தில்லைக் கரசான பூர்வ ஸி(வ)னுக்கு நிசதம் நெல்லு முக்குறு(ணி). (௩௩) கா(ளி) சம்ப(ந்)தனான தர்ம ஸிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி. (௩௪) கா(ப)ா-

12. லிக வாலியான (ஞா)ந ஸிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி. (௩௫) ெ(வ)ண் காடன் நமஸிவா(யமா)ன உருத்திர (ஸி)வனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி. (௩௬) சிவனனந்தனு(ன) யோஹ ஸிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறு(ணி). (௩௭) சிவ(க்ெ)காமு(ந்து) சம்பந்தனான அகோர ஸிவனு(க்)கு நிசதம் நெல்லு முக்குறு(ணி). (௩அ) (இராமன் கணவ)தியான ஞாந ஸிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறு(ணி). (௩௯) (பி)ச்சன் வெ(ண்)காடனான அ௳(ஹ)ர(ஸி)-

13. வனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி. (௪௰) மறைக் காடன் நம்பி ஆரூரனான ஞாந (ஸிவ)னு(க்)கு (நி)சதம் நெல்லு முக்குறுணி. (௪௧) சோமன் சம்பந்தனான ஞா(ந) ஸிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி. (௪உ) சத்தி திருந(ா)வுக் கரையனான (ஈ)ஸாந (ஸி)வனுக்கு நி(ச)தம் நெ(ல்)லு முக்குறுணி. (௪௩) பெ(ா)ற் சுவர(ன்) நம்(பி) யா(ரூரனு)ன தர்ம ஸிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறு(ணி). (௪௪) ஆச்சன் திருநாவு(க்) கரையனான நெத்திர ஸி(வ)னுக்கு நிச(த)ம்

14. நெல்லு முக்குறுணி. (சுடு) ஐயாறன் பெண்ணொர் பாக ஞன ஹிருத(ய ஸி)வனு(க்கு நி)சதம் நெல்லு முக்குறுணி. (சுசூ) ராஜாதி(த்த)ன் அம்பலத் தாடியான ஸிஹா (ஸிவ) னுக்கு (நி)சதம் நெல்லு முக்குறுணி. (சுஎ) செ(ச)ல்வன் க(ண)வதி தெ(ம்)பனு(ன தர்ம ஸி)வனுக்கு நிசதம் நெல்(லு மு)க்குறுணி. (சுஅ) கூத்(த)ன் தில்லைக் கூத்தனுன ஞாந சிவனு(க்கு) நிசதம் நெல்லு முக்குறுணி. (சுகூ) உடுக்கை வாசிக்கு(ம்) து(வே)தை கோம புறத்து (த)த்தய கிரமவி

15. த்தன் மகன் ஸூர்ய தேவக் கிரமவித்த(னு)ன ஆ--ல விடங்க உடுக்கை விஜ்ஜாதிரனுன சோம ஸிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி. (ரும) கொட்டி மத்த(ள)ம் வாசிக்குங் குணப்பு(க)ழ் மருதனுன ஸிகா ஸிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி. (ருக).

## விளக்கவுரை

கல்வெட்டு இருக்குமிடம்: தஞ்சை இராசராசேச்சரக் கோயிலின் வடபுறச் சுவர்.

கல்வெட்டின் எழுத்துக்கள் :—தமிழும் கிரந்தமும்.

அரசனைப் பற்றிய பொதுக் குறிப்பு: ஐந்தாம் கல்வெட்டில் காண்க

கல்வெட்டுத் தோன்றிய காலம்: கி. பி. 1014.

மெய்க்கீர்த்திப் பகுதியால் அறியப்படும் வெற்றிச் செய்திகள்: ஆறும் கல்வெட்டில் காண்க.

### உரைநடைப் பகுதியால் அறியப்படும் செய்தி :

முதலாம் இராசராச சோழன் தஞ்சை இராசராசேச்சரமுடையார்க்குத் திருப்பதியம் விண்ணப்பம் செய்வதற்குப் பிடாரர்கள் நாற்பத்தெண்மர், கொட்டிமத்தளம்வாசிப்பார் ஒருவர், உடுக்கை வாசிப்பார் ஒருவர் ஆக ஐம்பதின்மரை நியமித்து அவர்களுக்கு நாடோறும் ஆள் ஒன்றுக்கு இராசகேசரியோடொக்கும் ஆடவல்லான் என்னும் மரக்காலால் முக்குறுணி நெல் உள்ளூர்ப் பண்டாரத்தில் கொடுக்குமாறு ஏற்பாடு செய்திருந்தான்.

### திருப்பதியம் விண்ணப்பம் செய்வார்க்கு ஏற்படுத்தப்பட்ட விதிகள் :

இவர்களில் இறந்தவர்க்கும், வேற்றுத் தேசங்களுக்குப் போனவர்க்கும் பதிலாக, அவ்வவர்க்கு நெருங்கிய உறவினராய் இருப்பார் அந் நெல்லுப் பெற்றுத் திருப்பதியம் விண்ணப்பஞ் செய்வதென்றும்,

அவ்வாறு நெருங்கிய உறவினர் திருப்பதிகம் விண்ணப்பஞ் செய்யத் தகுதியுடையராய் இல்லாவிடில், அவர்களே யோக்கியராய் இருப் பாரை அமர்த்தி, திருப்பதியம் விண்ணப்பஞ் செய்வித்து அந் நெல்லைப் பெறுவதென்றும், அவ்வவர்க்கு நெருங்கிய உறவினர் இல்லையானல் அந்தத் தொழில் செய்பவர்களே தகுதியுடையராய் இருப்பாரைத் திருப்பதியம் விண்ணப்பஞ் செய்யத் தேர்ந்தெடுப்ப தோடு, அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டவரே நெல்லுப் பெறுவ தென்றும் விதிகள் ஏற்படுத்தப்பட் டிருந்தன.

## திருப்பதியம் விண்ணப்பம் செய்வதற்கு நியமிக்கப்பட்டிருந்த நாற்பத்தெண்மர்களின் பெயர்கள் :—

1. பாலன் திருவாஞ்சியத் தடிகளான ராஜராஜப் பிச்சனுன சதாசிவன்.
2. திருவெண்ணுவல் செம்பொற் சோதியான தக்ஷிணமேரு விடங்கப் பிச்சனுன ஞானசிவன்.
3. பட்டாலகன் அம்பலத்தாடியான மனோத்தம சிவன்.
4. பட்டாலகன் சீருடைக் கழலான பூர்வ சிவன்.
5. பொற்சுவரன் திருநாவுக் கரையனுன பூர்வ சிவன்.
6. மாதேவன் திருஞான சம்பந்தனுன ஞான சிவன்.
7. கயிலாயன் ஆரூரான தர்ம சிவன்.
8. செட்டி எடுத்த பாதமான கவச சிவன்.
9. இராமன் சம்பந்தனுன சத்திய சிவன்.
10. அம்பலவன் பத்தர்கள்.........வாம சிவன்.
11. கம்பன் திருநாவுக் கரையனுன சதாசிவன்
12. நக்கன் சீராளனுன வாம சிவன்.
13. அப்பி திருநாவுக் கரையனுன நேத்திர சிவன்.
14. சிவக்கொழுந்து சீராளனுன தர்ம சிவன்.
15. ஐந்நூற்றுவன் வெண்காடனுன சதாசிவன்.
16. அரையன் அணுக்கனுன திருமறைக் காடனுன தர்ம சிவன்.
17. அரையன் அம்பலக் கூத்தனுன ஓங்கார சிவன்.
18. ஆரூரன் திருநாவுக் கரையனுன ஞானசிவன்.
19. கூத்தன் மழலைச் சிலம்பான பூர்வ சிவன்.
20. ஐந்நூற்றுவன் சீ ஆரூரான தத்புருஷ சிவன்.
21. சம்பந்தன் ஆரூரனுன வாம சிவன்.
22. அரையன் பிச்சனுன தர்ம சிவன்.
23. காஸ்யபன் எடுத்த பாதப் பிச்சனுன உருத்திர சிவன்.

24. சுப்பிரமணிய ஆச்சனுன தர்ம சிவன்.
25. கூத்தன் அமர புஜங்கனுன சதாசிவன்.
26. வெண் காடனுன அகோர சிவன்.
27. மாதேவன் திருநாவுக் கரையனுன விஞ்ஞான சிவன்.
28. கூத்தன் வெண் காடனுன உருத்திர சிவன்.
29. ஐந்நூற்றுவன் திருவாய் மூரான அகோர சிவன்.
30. திருமலைக் கூத்தனுன வாம சிவன்.
31. ஐந்நூற்றுவன் எடுத்த பாதமான தர்ம சிவன்.
32. அரையன் தில்லைக் கரசான பூர்வ சிவன்.
33. காளி சம்பந்தனுன தர்ம சிவன்.
34. காபாலிக வாலியான ஞான சிவன்.
35. வெண் காடன் நமசிவாயமான உருத்திர சிவன்.
36. சிவன் அனந்தனுன யோக சிவன்.
37. சிவக் கொழுந்து சம்பந்தனுன அகோர சிவன்.
38. இராமன் கணவதியான ஞான சிவன்.
39. பிச்சன் வெண் காடனுன அகோர சிவன்.
40. மறைக் காடன் நம்பி ஆரூரனுன ஞான சிவன்.
41. சோமன் சம்பந்தனுன ஞான சிவன்.
42. சத்தி திருநாவுக் கரையனுன ஈசான சிவன்.
43. பொற் சுவரன் நம்பி ஆரூரனுன தர்ம சிவன்.
44. ஆச்சன் திருநாவுக் கரையனுன நேத்திர சிவன்.
45. ஐயாறன் பெண் ஓர் பாகனுன ஹிருதய சிவன்.
46. ராஜாதித்தன் அம்பலத் தாடியான சிகா சிவன்.
47. செல்வன் கணபதி தெம்பனுன தர்ம சிவன்.
48. கூத்தன் தில்லைக் கூத்தனுன ஞான சிவன்.

**உடுக்கை வாசித்தவனின் பெயர் :**

துவைத கோம புரத்து தத்ய கிரமவித்தன் மகன் சூரிய தேவக் கிரமவித்தன் ஆன ஆலாலவிடங்க உடுக்கை விஜ்ஜாத்திரனுன சோம சிவன்.

**கொட்டி மத்தளம் வாசித்தவன் :**

குணப் புகழ் மருதனுன சிகா சிவன்.

குறிப்பு: இக் கல்வெட்டில் குறிக்கப் பெற்ற பெயர்களுள் முதலில் இருப்பன இயற் பெயர்கள். பின் சிலர்களுக்கு இருப்பன பட்டப் பெயர்கள். இறுதியில் இருப்பன தீட்சை செய்த பின் வைக்கப் பெற்ற பெயர்கள் (தீட்சா நாமங்கள்).

இக் கல்வெட்டில் வந்துள்ள தீட்சா நாமங்கள் :

1. சதாசிவன்
ஞானசிவன்
பூர்வ சிவன்
தர்ம சிவன்
5. கவச சிவன்
சத்திய சிவன்
வாம சிவன்
நேத்திர சிவன்
ஓங்கார சிவன்
10. தத்புருஷ சிவன்
உருத்திர சிவன்
அகோர சிவன்
விஞ்ஞான சிவன்
யோக சிவன்
15. ஈசான சிவன்
இருதய சிவன்
சிகா சிவன்
மனோத்தம சிவன்
19. சோம சிவன்

இத் தீட்சா நாமங்களை ஆழ்ந்து நோக்குங்கால், தீட்சை செய்யப்பட்டவர்களே திருப்பதியம், விண்ணப்பஞ் செய்தல், உடுக்கை வாசித்தல், கொட்டி மத்தளம் வாசித்தல் என்னும் தொழில்களுக்குத் தகுதியுடையவர்கள் என்பது புலனாகும். மேலும் இங்குக் கொடுக்கப்பட்டுள்ள இராசராசப் பிச்சன், தக்ஷிணமேரு விடங்கப் பிச்சன், உடுக்கை விச்சாத்திரன் என்னும் பட்டப் பெயர் களால், அரசன், புலமை அறிந்து பாராட்டுதலும் உண்டு எனத் தோன்றுகின்றது.

### உரைநடைப் பகுதிக்குக் குறிப்புரை :

ராஜராஜீஸ்வரம் - இதை ராஜராஜேஸ்வரம் என்று திருத்திக் கொள்க.

இராசராசேச்சரம் - இராசராசனால் கட்டப்பட்ட கோயில். இராச ராச+ஈச்சரம். இராசராசேச்சரம்; தீர்க்க சந்தி. ஈச் சரம்=கோயில். திருப்பதியம் விண்ணப்பம் செய்ய - இது பண்டைய வழக்கு. இக்காலம் திருப்பதிகம் ஓத என்று வழங்கப் பெறுகின்றது.

பதியம் - பத்துப் பாட்டு. பதிகம் என்பதே இலக்கணமுடையது. பதியம் - இலக்கணப் போலி. (இயல்பு வழக்கு-நன்னூல்.)

பிடாரர்கள் – தேவாரம் பாடுகிறவர்கள்.

கொட்டிமத்தளம் - மத்தளத்தின் பெயர். பெரிய மத்தளம் (The big drum) என்பர் கல்வெட்டுத் துறையாளர்.

நிசதம் - நாடோறும் (அ) நாள்வாய். (daily)

நிவந்தம் - கூலி.

இராசகேசரி - இது தஞ்சாவூர் அரண்மனையில் முதலாம் இராச ராசனின் பட்டப் பெயரால் வழங்கி வந்த மரக்காலின் பெயர்.

ஆடவல்லான் - இது தஞ்சாவூர்ப் பெரிய கோயிலில் (இராச ராசேச்சரத்தில்) நடராசப் பெருமான் திருப்பெயரால் வழங்கிவந்த மரக்காலின் பெயர்.

உள்ளூர்ப் பண்டாரம் - உள்ளூரில் இருக்கும் கருவூலம்.

அனுதேசம் போனுர்க்கும் - வேறு தேசம் போனுர்க்கும்.

தலைமாறு - பதிலாக

அடுத்தமுறை - அடுத்த நெருங்கிய உறவு உடையார்.

யோக்கியராயிருப்பாரை - தகுதியுடையராயிருப்பாரை.

பிச்சன் — அன்புடையவன்.

சதாசிவன் - இது இவனுக்குச் சிவதீட்சை செய்விக்கப் பெற்ற காலை வைக்கப் பெற்ற பெயர்.

திருவெண்ணுவல் செம்பொற்சோதி - இது இயற் பெயர்.

திருவெண்ணுவல் செம்பொற்சோதி - என்பது திருச்சிராப் பள்ளிக்கு ,அண்மையில் உள்ள திருவானைக்கா என்னும் தேவாரம் பெற்ற தலத்தில், தலமரமாகிய திருவெண்ணுவ லின் கீழ் இனிது அமர்ந்தருளிய சிவ பெருமானின் திருப் பெயர். இத்திருப் பெயரை இவனுக்கு இவன் பெற்றோரால் இடப்பட்டவன். இறைவர்க்குச் செம்பொற்சோதி என்னும் பெயர் உண்மையை திருவையாற்றுப் பதிகத்தில் “திருவை யாறகலாத செம்பொற்சோதி” எனக் குறிக்கப் பெற்றிருத் தலிலும் காண்க.

தக்ஷிணமேரு விடங்கப் பிச்சன் - பட்டப் பெயர். தக்ஷிணமேரு விடங்கர் என்பது தஞ்சை இராச ராசேச்சரத்தில் முதலாம் இராசராசனுல் எழுந்தருளுவிக்கப் பெற்ற விடங்கரின் பெயர். இவ்விடங்கரிடத்தில் அன்புடையவன் என்பது இத்தொடரின் திரண்ட பொருள்.

ஞானசிவன் - தீட்சை செய்தகாலை வைக்கப் பெற்ற பெயர்.

பட்டாலகன் - கடவுள் ; மகாதேவன். திருப்புறம்பியத்துக் கல்வெட்டில் சிவபெருமான், திருப்புறம்பியமுடைய பட்டாலகர் என்னும் திருப் பெயரால் குறிக்கப்படுதலை அக்கோயிலிலுள்ள மதுரையும் ஈழமும் கொண்ட கோப்பரகேசரி வர்மரின் 16-ஆம் ஆண்டுக் கல்வெட்டில் காண்க. (Annual report on South Indian Epigraphy for the year 1927, Number 331)

அம்பலத்தாடி - சபையில் திரு நிருத்தம் செய்யும் நடராசப் பெருமானின் திருப் பெயர். "ஆடகப் பொதுவில் நாடகம் இயற்றும் ஏடவிழ் கூந்தல் இறைவிபாகன்" என்ற இடத்தும் இப் பொருளில் வந்துள்ளமை அறியத் தக்கது.

பட்டாலகன் அம்பலத்தாடி - நடராசப் பெருமான் பெயரால் வைக்கப் பெற்ற இயற் பெயர்.

சீருடைக் கழல் - இத்தொடர் "செம்பொருட்டுணிவே சீருடைக் கழலே செல்வமே சிவபெருமானே" எனத் திருவாசகத்தின் (பிடித்தபத்து) அடியை நினைத்து வைத்த பெயராகும்.

எடுத்த பாதம் - நடராசப் பெருமானுடைய தூக்கிய திருவடி. "எடுத்த பொற்பாதமும் காணப் பெற்ருல் மனித்தப் பிறவியும் வேண்டுவதே இம்மாநிலத்தே" என்னும் தேவார அடியை எண்ணி வைக்கப் பெற்ற பெயராதல் வேண்டும்.

துவைத கோமபுரத்து தத்திய கிரமவித்தன் மகன் சூரியதேவ கிரமவித்தனுன ஆலால விடங்க உடுக்கை விச்சாதிரனுன சோமசிவன்—இதில் சூரியதேவ கிரமவித்தனுன ஆலால விடங்கன்-என்பது இயற் பெயர். உடுக்கை விச்சாதிரன்—என்பது பட்டப் பெயர். சோமசிவன்-தீட்சா நாமம்.

கிரமவித்தன் - வேதத்தை ஓதும் முறை சம்ஹிதா, பதம், கிரமம், கனம், ஜடா என்று ஐந்து வகைப்படும். இவைகளில் கிரமம் என்ற முறைப்படி வேதத்தை ஓதியவன்.

குறிப்பு : உடுக்கை வாசித்தவன் பிராமணன் ஆவன்.

# 9. முதலாம் இராசேந்திர சோழன் கல்வெட்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ கோப்பர கேஸரி வம்மரான, உடையார் ஸ்ரீ ராஜேந்திர சோழ தேவர்க்கு, யாண்டு மூன்ருவது வரை உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் திருத்தமக்கையார், வல்லவரையர் வந்திய தேவர் மஹாதேவியார், ஆழ்வார் பராந்தகன் குந்தவையார், தாம் எழுந்தருளு வித்த திருமேனிகளுக்குக் குடுத்த பொன், ஆடவல்லான் என்னுங் குடிஞைக் கல்லால், நிறை எடுத்தும், ரத்நங்கள் சரடுஞ், சட்டமும், செப்பாணிகளும், அரக்கும், பிஞ்சும், நீக்கி நிறையுள்ளன நிறை எடுத்தும், அரக்கும். பிஞ்சுங் கூட, ரத்நங் கட்டி, வெறு நிறைய் அறிய உண்ணுதன, அரக்கும் பிஞ்சும் உட்பட, தக்ஷிணமேரு விடங்கன் என்னுங்காசு கல்லால் நிறை எடுத்துங் கல்லில் வெட்டின. (க) தக்ஷிணமேருவிடங்கர் நம்பிராட்டியார் உமாபரமேஸ்வரி யார்க்குக் குடுத்தன (உ) திருமகுடம் ஒன்று பொன் முன்னூற்று நாற்பத்து எண் கழஞ்சரையே மூன்று மாவும் கட்டின வயிரம் மட்டதாரை அறு நூற்றுமுப்பத்தாறும், மட்டதாரைச் சவக்கம் நூற்று அறுபத்தொன்பதும், மட்டதாரைச் சப்படி முப்பத்திர–.........

2. ஆகவயிரம் பொறிவும், முறிவும், ரத்தபிந்துவும், காகபிந்துவும், வெந்தனவும், உடையன உட்பட எண்ணூற்றைம்பத்தொன்பதிஞல் நிறை எழு கழஞ்செய் முக்காலே நாலு மஞ்சாடியும் நாலுமாவும், மாணிக்கம் ஹலஹலம் குணவியன் நூற்றிருபத்தைஞ்சும் ஹலஹலம் நூற்றிருபத் திரண்டும், கொமளம் நாற்பத்தொன்றும், நீலகந்தி பதி நொன்றும், தளம் பத்தும், ஆக மாணிக்கம் குழிவும், பிரஹரமும், வெஜ்ஜமும், லசுனியும், திராசமும் கற்பற்றும், உடையன உட்படப் பரியனவும், நெரியன(வு)ம் ஆக முன்னூற்றென்பதிஞல் நிறை பதிநாற் கழஞ்சே முக்காலே இரண்டு மாஞ்சாடியும் எட்டுமாவும், கட்டினவும் கொத தனவும் ஆக முத்து வட்டமும், அனுவட்டமும், ஒப்பு முத்துங், குறுமுத்தும், நிம்பொளமும், பயிட்டமும், பழமுத்தும், இப்பி பற்று

*S. I. I., Vol. II, Part I, No. 7

அராவினவும், சிவந்த நீரும், குளிர்ந்த நீரும், வரையுங், கரையும், குருவும்சுப்பிரமும், உடையன உட்படப் பரியனவும், நெரியனவும், ஆக முத்து அறுநூற்று அறுபத்தொன்பதினல் நிறை முப்பத்தறு கழஞ்செ மஞ்சாடியுங் குன்றியும் ஆக நிறை நானூற்றெழு கழஞ்செ ஒன்பது மஞ்சாடிக்கு விலை காசு ஐயாயிரம். (ந) வாளி ஒன்று, பொன் கழஞ்செ எட்டு மஞ்சாடியும் எட்டு மாவும் தைத்த முத்து, வட்டமும், ஒப்புமுத்தும், நிம்பொளமும், குளிர்ந்த வரையுங்க,...

3. லும், உடையன உட்பட, முத்து ஒன்பதினல் நிறை கழஞ்செய் ஒன்பது மாவும், ஆகநிறை இருகழஞ்செய் ஒன்பது மஞ்சாடியும் எழு மாவுக்கு, விலை காசுபதினைஞ்சு. (சு)வாளி ஒன்று, பொன் கழஞ்செய் எட்டு மஞ்சாடியும் எட்டுமாவும் தைத்தமுத்து, வட்டமும், ஒப்புமுத்தும், நிம்பொளமும், குளிர்ந்த நீரும், வரையும், கறையும், குருவும், சுப்பிரமும், திரங்கலும், உடையன உட்படமுத்து ஒன்பதினல், நிறை கழஞ்செ ஒன்பது மாவும், ஆகநிறை இருகழஞ்செய் ஒன்பது மஞ்சாடியும் எழுமாவுக்கு, விலை காசு பதினைஞ்சு: (ரு) உழுத்து ஒன்று பொன் இருகழஞ்செய் குன்றியும், பளிக்கு வயிரம் ஆறினல், நிறை ஒன்பது மாவும், மாணிக்கம், கொமளம், இரண்டினல் நிறை ஆறுமாவும், தைய்த்த முத்து அம்புமுதும், வரை(யு)ம், அம்புமுது பாடனும், ஆக இரண்டினல் நிறை ஒன்பது மஞ்சாடியும் எழுமாவும், ஆக நிறை இருகழஞ் சரையே மஞ்சாடியும் எழுமாவுக்கு விலை காசுபதினைஞ்சு. (சா) உழுத்து ஒன்று பொன் இருகழஞ்செய் குன்றியும் கட்டின பளிக்கு வயிரம் ஆறினல் நிறை ஒன்பதுமாவும், மாணிக்கம், கொமளம், இரண்டினல் நிறை குன்றியும், தைய்த்த முத்து அம்புமுது, பாடனும், குருவும், உடையன இரண்டினல் நிறை ஒன்பது மஞ்சாடியும் ஒன்பதுமாவும், ஆக நிறை இரு கழஞ்சரையெ மஞ்சாடியும் எட்டு மாவுக்கு (வி)-(எ).

4. திருமாலை ஒன்று, பொன் எண்பத்தறு கழஞ்சரையெ நாலு மஞ்சாடியும் அரைமாவும், கட்டினவயிரந் தூயன எண்பதும், மட்டதாரை இரு நூற்றுத் தொண்ணூறும், மட்டதாரைச் சப்படி ஐம்பத்து மூன்றும், பந்தஸாரம் நாலும், சப்படி ஐஞ்சும், சவக்கம் பதினைஞ்சும், உருளை ஐம்பத்தெட்டும், ஆக வயிரம் பொறிவும், முறிவும், ரத்த பிந்துவும், காக பிந்துவும், வெந்தனவும், உடை

யன உட்பட ஐந்நூற்றைஞ்சி நால், நிறை இருகழஞ்செ மூன்று மஞ்சாடியும் ஒன்பது மாவரையும், மாணிக்கம் ஹலஹலம் குணவியன், இருபதும், ஹலஹலம் முப்பதும், நீலகந்தி ஆறும், கொமளம் முப்பத்து மூன்றும், தளம் இருபதும், சட்டம் ஒன்றும், ஆகமாணிக்கம் குழிவும் பிரஹரமும், வெஜ்ஜமும், லசுனியும், உட்படப் பரியனவும், நெரியனவும், ஆக நூற்றெருபதினல், நிறை ஐங்கழஞ்சரையெய் அரைக்காலும், கொத்த முத்து, ஒப்பு முத்துங், குறுமுத்தும், நிம்பொளமும், பயிட்டமும், அம்பு முதும், குளிர்ந்த நீரும், சிவந்த நீரும் இப்பி பற்று அராவினவும், வரையும், கறையும். குருவும், சுப்பிரமும் உட்பட, முத்துத் தொண்ணூற்று நாலினல் நிறை ஒன்பதின் கழஞ்செய் குன்றியும் ஆக, நிறை நூற்று முக்கழஞ் சரையே மஞ்சாடிக்கு விலை காசு ஆயிரம். (அ) ஸ்ரீ வாகுவலயம் ஒன்று பொன் எ(ண்) பத் (தொன்பதின்)

5. கழஞ்செய் மஞ்சாடியும் மாகாணியும் கட்டின வயிரந் தூயன இருபதும், மட்டதாரை நானூற்று ஆறும், மட்டதாரைச் சப்படி ஐஞ்சும், மட்டதாரைச் சவக்கம் பத்தும், ஆக வயிரம் பொறிவும், முறிவும், ரத்த பிந்துவும், காக பிந்துவும், வெந்தனவும், உடையன உட்பட நானூற்று நாற்பத் தொன்றினல் நிறை முக்கழஞ்செய் இரண்டு மஞ்சாடியும் முக்காணியும், மாணிக்கம் ஹலஹலம் குணவியன், எட்டும், ஹலஹலம் பதினெழும், கொமளம் பத்தொன்பதும், நீலகந்தி இரண்டும், தளம் எட்டும், ஆக மாணிக்கம் குழிவும் பிரஹரமும், வெஜ்ஜமும், லசுநியும், திராஸமும், கற்பற்றும், உடையன உட்படப் பரியனவும், நெரியனவும், ஆக ஐய்ம்பத்து நாலினல், நிறை அறுகழஞ்ச ரையே இரண்டு மஞ்சாடியும் மூன்று மாவும், கொத்த முத்து, வட்டமும், அனு வட்டமும், ஒப்பு முத்துங், குறுமுத்தும், பயிட்டமும், குளிர்ந்த நீரும், சிவந்த நீரும், இப்பி பற்றும் அராவினவும், வரையுங், கறையும், குருவும், சுப்பிரமும், உட்படமுத்து அறுபத்தெட்டினல், நிறை ஐங்கழஞ்செ முக்காலே மூன்று மஞ்சாடியும் குன்றியும், ஆக நிறை நூற்று நாற்கழஞ் சரையே நாலு மஞ்சாடிக்கு விலை காசு ஆயிரத் திரு நூற்றைம்பது. (கூ) ஸ்ரீ வாகுவலயம் ஒன்று பொன் எண்பத் தொன்பதின் கழஞ்செய் எட்டு மஞ்சாடியும் நான் மாவ (ை) (ரயும்)

6. கட்டின வயிரந் தூயன இருபதும், மட்டதாரை நானூற்று ஒருபத்து மூன்றும், மட்டதாரைச் சப்படி ஐஞ்சும், மட்டதாரைச் சவக்கம் பத்தும், ஆக வயிரம் பொறிவும், முறிவும், ரத்த பிந்துவும், காக பிந்துவும், வெந்தனவும், உட்பட நானூற்று நாற்பத்தெட்டினால், நிறை முக்கழஞ்செயிரண்டு மஞ்சாடியும் மும்மாவரையும், மாணிக்கம் ஹலஹலம் குணவியன் எட்டும், ஹலஹலம் பதினைஞ்சும், கொமளம் இருபதும், நீலகந்தி இரண்டும், தளம் எட்டும் ஆக மாணிக்கம் குழிவும், பிரஹாரமும், வெஜ்ஜமும், லசுநியும், திராஸமும், கற்பற்றும், உடை யனவும் உட்படப் பரியனவும் நெரியனவும் ஆக ஐம்பத்துமூன்றினால் நிறை அறு கழஞ் சரையே இரண்டு மஞ்சாடியும் (ந)ான்கு மாவும், கொத்த முத்து, வட்டமும், அனுவட்டமும் ஒப்புமுத்துங், குறுமுத்தும், பயிட்டமும் குளிர்ந்த நீரும்சிவந்த நீரும் இப்பிபற்று அராவினவும் வரையும் கறையும் குருவும் சுப்பிரமும் உட்பட அறுபத்திரண்டினால் நிறை ஐங்கழஞ்சரையெ குன்றியும் ஆக நிறை நூற்று நாற்கழஞ் சரையே மூன் றுமஞ்சாடியும் எழுமாவுக்கு விலை காசு ஆயிரத்து இருநூற்றைம்பது—(ம) ஸ்ரீ அஸ்தம் ஒன்று பொன் அறுபத்தொன்பதின் கழஞ்செ முக்காலே இரண்டு மஞ்சாடியும் ஐஞ்சுமாக் காணியும், கட்டின வயிரம் மட்டதாரை முன்னூற்றைம்பதும் மட்டதாரைச் ச(வ) (க்கம்)

7. நாற்பதும் ஆகவயிரம் பொறிவும் முறிவும் ரத்த பிந்துவும், காக பிந்துவும். வெந்தனவும் உடையன உட்பட முன்னூற்றுத் தொண்ணூறினால் நிறை கழஞ்சரையே நாலு மஞ்சாடியும் ஆறுமாவும் மாணிக்கம் ஹலஹலம் குணவியன் ஐஞ்சும், ஹலஹலம் இருபதும், கொமளம் முப்பதும் (நீ)லகந்தி நாலும் சட்டம் இரண்டும், தளம் பத்தொன்பதும் ஆக மாணிக்கம் குழிவும் பிரஹாரமும், வெஜ்ஜமும், லசுநியும், திராஸமும், கற்பற்றும், உடையனவும், பரியனவும் நெரியனவும், ஆக எண்பதினால் நிறை அறு கழஞ்செ எழுமஞ்சாடியும் எட்டுமா முக்காணியும் கொத்தனவும் தைய்த்தனவும் ஆக முத்து வட்டமும் அனுவட்டமும் ஒப்புமுத்துங் குறுமுத்தும் பயிட்டமும் நிம்பொளமும் குளிர்ந்த நீரும் சிவந்த நீரும், இப்பி பற்று அராவினவும், வரையும், கறையும், குருவும், சுப்பிரமும், உட்பட முத்து ஆயிரத்து நானூற்று அறுபத்திரண்டினால் நிறைதொண்ணூற்று(அ)று கழஞ்செய்காலும் ஆக நிறை

நூற்று எழுபத்து நாற்கழஞ்செய் காலுக்கு விலை காசு ஆயிரத்தைஞ்ஞூறு-(௰க) திருக்கைப் பொட்டு ஒன்று பொன்பதிநெ(ண்க)ழஞ்செய் முக்காலே மூன்று மஞ்சாடியும் எட்டு மாவும் மாணிக்கம் கோமளம் ஒன்று நிறை மஞ்சாடியுங் குன்றியும் கொத்த முத்து வட்டமும் அனு வட்டமும் ஒப்புமுத்துங் குறுமுத்தும் நிம்பொளமும் பயிட்டமும் குளிர்ந்த (நீரும்)

8. சிவந்த நீரும் வரையும் கறையும் குருவும் சுப்பிரமும் உட்பட முத்து நூற்றுமுப்பத்தெழினால் நிறை எழு கழஞ்செய் முக்காலே நாலு மஞ்சாடியும் குன்றியும் ஆக நிறை இருபத்தறு கழஞ்செய் முக்காலே நாலுமஞ்சாடியும் எட்டுமாவுக்கு விலை காசு என்பது (௰உ) திருக்கைப் பொட்டு ஒன்று பொன் பதிநெண்கழஞ்செய் ஆறு மஞ்சாடியும் மாணிக்கம் கோமளம் ஒன்று நிறை மஞ்சாடியும் மூன்று மாவும் கொத்த முத்து வட்டமும் அனுவட்டமும் ஒப்புமுத்துங் குறுமுத்தும் நிம்பொளமும் பயிட்டமும் குளிர்ந்த (நீரு)ம் சிவந்த நீரும், வரையும், கறையும், குருவும், சுப்பிரமும் உட்பட முத்து நூற்று நாற்பத்து மூன்றினால் நிறை எண் கழஞ்செய ஆறு மஞ்சாடியும் ஆக நிறை இருபத்தறு (கழஞ்) சரையெ மூன்று மஞ்சாடியும் மூன்று மாவுக்கு விலை காசு எண்பது.(௰ரு) சூடகம் ஒன்று பொன் எண்பதின் கழஞ்செய் நாலு மஞ்சாடியும் அறு மாவரையும் கட்டின வயிரந் (தூய)ன முப்பதும் மட்ட தாரை நானூற்று மூன்றும் மட்டதாரைச் சவக்கம் எழுபதும் மட்டதாரைச் சப்படி முப்பத்தைஞ்சும் உருளை எண்பத்திரண்டும் ஆக வயிரம் பொறிவும் முறிவும் ரத்த பிந்துவும் காகபிந்துவும் வெந்தனவும் உட்பட அறு நூற்று இருபதினால் நிறை நாற்கழஞ்செய் எழுமாவும் மாணிக்கம் ஹலஹலம் குணவியன் பத்தும், ஹலஹலம் இருபத்து நாலும் கொமளம் பதினெழும் (நீலகந்தி).

9. நாலும் ஆக மாணிக்கம் குழிவும் பிரஹரமும், வெஜ்ஜமும், லசுனியும், திராஸமும், கற்பற்றும் உடையனவும் உட்பட பரியனவும் நெரியனவும் ஆக ஐம்பத்தைஞ்சினால் நிறை கழஞ்சரையெ ம(ஞ்ச)ாடியும் ஒரு மாவரையும் ஆக நிறை எண்பத்தைங் கழஞ்செய் முக்காலே மஞ்சாடியும் குன்றிக்கு விலை காசு எண்ணூறு. (௰ச). சூடகம் ஒன்று பொன் எண்பத்து நாற்கழஞ்செய் முக்காலே மூன்று மஞ்சாடியும் கட்டின வயிரந் தூயன முப்பதும் மட்டதாரை நானூற்றைம்பத்தாறும் மட்ட

தாரைச் சவக்கம் எழுபதும் மட்டதாரைச் சப்படி முப்பத்தாறும் உருளை எண்பத்து மூன்றும் ஆக வயிரம் பொறிவும் முறிவும் ரத்தபிந்துவும் காகபிந்துவும் வெந்தனவும் உட்பட அறுநூற்று எழுபத்தைஞ் (சினால்நி)றை நாற்கழஞ்செய் (நாலு மஞ்சாடியுங் குன்றியும் மாணிக்கம் ஹலஹலம் குணவியன் பத்தும் ஹலஹலம் முப்பத்தொன்றும் கொமளம் பதினா(று)ம் (நீ)லகந்தி மூன்றும் ஆக மாணிக்கம் குழிவும் பிரஹாரமும் வெஜ்ஜமும் லசுநியும் திராஸமும் கற்பற்றும் உடையனவும் உட்படப் ப(ரி)யன(வு)ம் நெறியனவும் ஆக அறுபதினால் நிறை கழஞ்சரையெ மூன்று மஞ்சாடியுங் குன்றியும் ஆக நிறை தொண்ணூற்றுக் கழஞ்செய் (முக்காலே) மஞ்சாடிக்கு விலை க(ா)சு எண்ணூறு. (டு௫).

விளக்க உரை

இருக்குமிடம் :- தஞ்சை இராசராசேச்சரத்தின் தென்புறச் சுவரிலுள்ள இரண்டாம் படையில்.

கல்வெட்டின் எழுத்துக்கள் :- தமிழும் கிரந்தமும்.

கல்வெட்டில் குறிக்கப் பெற்ற அரசன் :- முதலாம் இராசேந்திர சோழன்.

## அரசனைப் பற்றிய பொதுக் குறிப்பு

சோழ நாட்டு வரலாற்றில் முதலாம் இராசேந்திரன் என்று கூறப்படுபவன் இவனேயாவன். இவன் முதலாம் இராச ராச சோழனது மகன். இவன் தாய் வானவன் மாதேவி. இவன் பிறந்தது மார்கழித் திருவாதிரை. இவனுக்குப் பண்டித சோழன், முடிகொண்ட சோழன், விக்கிரம சோழன், கங்கை கொண்ட சோழன், உத்தம சோழன் II என்ற சிறப்புப் பெயர்களும் உண்டு. எறிவலி கங்கைகொண்ட சோழன் இவனது தம்பி ஆவன். இவன் தஞ்சாவூரை விடுத்து, கங்கைகொண்ட சோழ புரத்தைத் தலைநகராகக் கொண்டான். இவன் சேரன் செங்குட்டுவனைப்போல வட நாடு சென்று வென்றவன். இவன் கங்கை கொண்ட சோழ புரத்தில் பெரியதொரு ஏரியை வெட்டுவித்து அதற்குச் சோழ கங்கம் என்று பெயர் வைத்துள்ளான். தன் தலைநகராகிய கங்கை கொண்ட சோழபுரத்தில் கங்கை கொண்ட சோழேச்சரம் என்னும் பெரியதொரு கோயிலைக் கட்டினான். தஞ்சாவூர்ச் சில்லாவில் ஓடும் முடிகொண்ட சோழப் பேராற்றை வெட்டுவித்தான். பிராமணர்களில் ஒரு வகுப்பாராகிய எண்ணாயிரவரைச் சோழ நாட்டில் குடியேற்றினான். இவனுக்கு வானவன் மாதேவியார் முக்கோக்கிழானடிகள், பஞ்சவன் மாதேவியார், வீரமாதேவியார், என்னும்

மனைவியரும், (முதலாம்) இராசாதி ராசன், (இரண்டாம்) இராசேந்திரன், வீர ராசேந்திரன் எனனும் புதல்வர்களும், அருமொழி நங்கையார் அல்லது பிராஞர், அம்மங்கை தேவியார் என்னும் பெண்களும் இருந்தனர். இவனுக்குக் கி. பி. 1012-இல் இளவரசுப் பட்டம் கட்டப்பெற்ற தாகையால் அதிலிருந்து இவனது ஆட்சி யாண்டைக் கணக்கிடுதல் வேண்டும். அம் முறைக்கேற்ப இவன் கி. பி. 1012 முதல் கி. பி. 1044 வரை ஆட்சி செய்துள்ளான். இவன் கல்வெட்டுக்களுள் சில இவனைப் பூர்வதேசமும் கங்கையும் கடாரமுங்கொண்ட கோப்பரகேசரிவர்மன் என்று குறிப்பிடுகின் றன. இவனது மெய்க்கீர்த்தி " திருமன்னிவளர இருநிலமடந்தையும் " எனத் தொடங்குகின்றது.

கல்வெட்டுத் தோன்றிய காலம் :-கி. பி. 1015-க்கு முன்னர்.

ஆழ்வார் பராந்தகன் குந்தவையார் :-இவர் முதலாம் இராச ராச சோழனது திருத் தமக்கையார் ஆவர். பராந்தகன் குந்தவையார் என்பது, சுந்தர சோழன் என வழங்கும் இரண்டாம் பராந்தக சோழனது மகள் குந்தவையார் என்னும் பொருள்படும். ஆழ்வார் என்பது அரசர் குலத்துப் பெண் மக்களுக்குக் கொடுக்கப்பட்ட பட்டப்பெயர். இவர் முதலாம் இராச ராச சோழனைச் சைவப்பற்றுஊட்டி வளர்த்தவர். இவர் வல்லவரையர் வந்தியதேவர்க்கு மணஞ் செய்து கொடுக்கப்பட்டனர். இவரிடத்தில் முதலாம் இராச ராச சோழன் பெருமதிப்பு வைத்திருந்தான். அது கருதியே முதலாம் இராச ராச சோழன் தன் மகளுக்குக் குந்தவையார் என்று பெயர் வைத்துள்ளான். வரலாற்றில் பராந்தகன் குந்தவையார் பெரிய குந்தவையார் என்றும், முதலாம் இராச ராச சோழனது மகளார் சிறிய குந்தவையார் என்றும் கூறப்படுகின்றனர். இவர், தஞ்சை இராசராசேச்சரத்தில், தக்ஷிணமேருவிடங்கரின் பிராட்டியார் உமாபரமேஸ்வரியார், தஞ்சைவிடங்கரின் பிராட்டியார் உமா பரமேஸ்வரியார், இவர்களின் திருமேனிகளையும், தம் தந்தையாராகிய இரண்டாம் பராந்தகன் *பொன் மாளிகைத் துஞ்சிய தேவர்), தாயாராகிய வானவன் மாதேவி, இவர்களின் பிரதிமங்களையும் எழுந்தருளுவித்து அவர்களுக்கு மிகுதியான திருவாபரணங்களையும் கொடுத்துள்ளனர். அவைகளோடு அவர்களுக்குத் திருவமுது, திருப்பள்ளித் தாமம், திருவிளக்கெண்ணெய் இவைக

* பொன்மாளிகை—இது சோழமன்னர்களுக்குக் காஞ்சிபுரத்தில் இருந்த அரண்மனையின் பெயர். இச்செய்தி "கச்சிப்பேட்டு நம் வீட்டினுள்ளால் பொன் மாளிகை ஆதிபூமியில் நாமிருக்கச் சோழ மூவேந்தவேளான் " என்னும் கல்வெட்டுப் பகுதியால் அறியலாம். (S. I. I. Vol., III, Part. III., Ins. No. 142); இங்கு இறந்தமையால் பொன்மாளிகைத் துஞ்சிய தேவர் எனக் கூறப் பெற்றனர்.

ளுக்கும் ஏற்பாடுகள் செய்துள்ளனர். தென்னார்க்காடு ஜில்லா எண்ணாயிரம் என்னும் ஊரிலுள்ள திருமால் திருக்கோயிலுக்குக் குந்தவை விண்ணகரம் என்னும் திருப்பெயரும், நித்த விநோத நாட்டுக் கரம்பை நாட்டிலுள்ள ஒரு ஊர்க்குக் குந்தவை நல்லூர் என்னும் பெயரும் வைக்கப் பெற்றிருந்தன.

## கல்வெட்டால் அறியப்படும் செய்தி

முதலாம் குந்தவையார், தாம் எழுந்தருளுவித்த தட்சிண மேரு விடங்கர் பிராட்டியார் உமாபரமேஸ்வரிக்குக் கொடுத்த அணிகலன்கள் :—

திருமகுடம் ஒன்று :- நானூற்று ஏழுகழஞ்சு எட்டு மஞ்சாடி நிறையும், ஐயாயிரம் காசு விலையும் உடையது.

வாளி இரண்டு :—ஒவ்வொன்றும் இரு கழஞ்சு ஒன்பது மஞ்சாடியே ஏழு மா நிறையும் பதினைந்து காசு விலையும் உடையது. (வாளி-காதணி)

உழுத்து இரண்டு :-ஒவ்வொன்றும் இருகழஞ் சரை மஞ்சாடியே ஏழுமா நிறையும், பதினைந்து காசு விலையும் உடையது.

திருமாலை ஒன்று :-நூற்று முக்கழஞ்சரையே மஞ்சாடி நிறையும் விலை ஆயிரம் காசும் உடையது.

ஸ்ரீவாகு வலயம் இரண்டு :- ஒன்று நிறை நூற்று நாற்கழஞ்சரையே நாலுமஞ்சாடியும், விலை காசு ஆயிரத்திருநூற்றைம்பதும் உடையது. மற்றொன்று நிறை நூற்று நாற்கழஞ்சரையே மூன்று மஞ்சாடியும் ஏழுமாவும் உடையது. விலை காசு ஆயிரத்து இருநூற்றைம்பது.

ஸ்ரீசந்தம் ஒன்று :-நிறை நூற்று எழுபத்து நாற்கழஞ்சே கால். விலை காசு ஆயிரத்தைந்நூறு.

திருக்கைப் பொட்டுகள் இரண்டு :-ஒன்று நிறை இருபத்தாறு கழஞ்சே முக்காலே நாலு மஞ்சாடியும் எட்டுமாவும். விலை காசு எண்பது.

மற்றொன்று :-நிறை இருபத்தாறு கழஞ்சரையே மூன்று மஞ்சாடியும் மூன்று மாவும். விலை காசு எண்பது.

சூடகம் இரண்டு :-ஒன்று, எண்பத்தைங் கழஞ்சரையே முக்காலே மஞ்சாடியும் குன்றியும் நிறையுடையது. விலை

காசு எண்ணூறு. மற்றென்று நிறை தொண்ணூற்றுக் கழஞ்சே முக்காலே மஞ்சாடிக்கு விலை காசு எண்ணூறு. (சூடகம்-முன் கை வளையல்.)

## குறிப்புரை

நிறை அறிய உண்ணுதன :-இதை நிறை அறிய ஒண்ணுதன என்று திருத்திக் கொள்க.

பிஞ்சு :-அணியின் அரும்புக் கட்டிடம்.

மட்ட தாரை :-மழுங்கிய விளிம்புடையது.

மட்ட தாரைச் சவக்கம் :-மழுங்கிய விளிம்புடையதும் சதுரவடி வுள்ளதுமான வயிரம்.

பொறிவு :-பொறிந்துள்ளது.

முறிவு :-வெடிப்புள்ளது.

ரத்தபிந்து :-(வயிரக் குற்றவகை) செம்புள்ளி.

காகபிந்து :-கரும்புள்ளி.

ஹலஹலம் :-இது ஹளஹளம் என்றும் கூறப்படும். இது ஒரு வகை மாணிக்க வகை.

குணவியன் :-மேன்மையான மாணிக்கம்.

குழிவு :-துவாரம். (cavity)

பிரஹரம் :-மாணிக்கக் குற்றத்துள் ஒன்று.

வெஜ்ஜம் :-cuts(கீற்று) மாணிக்கக் குற்றவகை.

லசுனி :-இது இலசுனி என்றும் கூறப்பெறும். மாணிக்கக் குணத்துவகையில் ஒன்று.

திராசம் :-மாணிக்கக் குற்றவகைகளில் ஒன்று. வெடிப்பு என்னலாம் (flaw).

கற்பற்று :-கற்பற்றுகையாகிய குற்றமுள்ள மாணிக்கம்.

சப்படி :-சப்பட்டை.

நீலகந்தி :-மணிகள் ஒன்பதில் இது (நீலம்) ஒன்று. சௌகந்தி என்பதும் இதுவே.

அம்புமுது :-முத்துவகை.

அனுவட்டம் :-ஒருவகை உருண்டை.

பயிட்டம் :-முத்து வகை.

கறை :-குற்றம்.

குரு :-பருமன்.

சுப்பிரம் :-(மிக்க வொளி) முத்துக் குற்றத்துள் ஒன்று.

## பொதுச் செய்தி

### மணிகள் ஒன்பதிலும் வயிரத்திற்குக் குற்றமும் குணமும்

குற்றம் பன்னிரண்டு ஆவன :-சரைமலம், கீற்று, சப்படி, பிளத்தல், துளை, கரி, விந்து, காகபாதம், இருத்து, கோடியில்லன, கோடிமுரிந்தன, தாரைமழுங்கல் என இவை.

மரகதசாதி :

இதற்குக் குற்றம் எட்டு:-கருகல், வெள்ளை, கல், மணல், கீற்று, பொரிவு, தராசம், இறுகுதல்.

இதற்குக் குணங்கள் எட்டு :-நெய்த்தல், கிளமயிற் கழுத்தொத்தல், பைம்பயிரிற் பசுத்தல், பொன்மை, தன்னுடன் பசுத்தல், பத்தி பாய்தல், பொன்வண்டின் வயிரொத்துத் தெளிதலொடெட்டுங் குணமே.

குறிப்பு:-இவைகளை எல்லாம் சிலப்பதிகாரம் ஊர்காண் காதையில் அடியார்க்கு நல்லார் எழுதியனகொண்டு தெளியலாம்.

# 10. முதலாம் இராசேந்திர சோழன் கல்வெட்டு*

1. ஸ்வஸ்திஸ்ரீ உடையார்ஸ்ரீ ராஜராஜீஸ்வரம்
2. உடையார்க்கு ஸ்ரீ காரியஞ் செ(ய்கி)ன்ற பெ(ா)
3. ய்கை நாடு கிழவன் ஆதித்தன் சூர்ய(னு)
4. ன தென்னவன் மூவேந்த வெளா (ன்)
5. தான் எழுந்தருளுவித்த நம்பியாரூர
6. நார்க்கும் திருஞான சம்பந்தடிகளுக்கும் திரு
7. நாவுக்கரைய தேவர்க்கும் உடையா(ர்) ஸ்ரீ(ரா)
8. ஜேந்திர சோழ தேவர்க்கு (யா)ண்டு மூன்ரு(வ)து வ(ரை)
9. குடுத்த தரா நிலைவிளக்கு ஒன்று இரு(ப்பு) நாராசம் உட்பட நி-
10. றை நாற்பத்தொரு பலவரை (க) இவெ(னதா)ன் எழுந் தருளுவி-
11. த்த பெரிய பெருமாளுக்குக் குடுத்த தரா (நிலை)விளக்கு ஒன்று.
12. இருப்பு நாராசம் உட்பட நிறை நூற்றிரு(பதின்)ப(லம்). (உ)வெண்க-
13. லமடல் ஒன்று நிறை நாற்பலம். (ரு)

## விளக்கவுரை

இருக்குமிடம் :-தஞ்சை இராசராசேச்சரத்தின் மேற்கு ஆவரணத்து ஒரு மூலையில்.

கல்வெட்டின் எழுத்துக்கள் :—தமிழும் கிரந்தமும்.

கல்வெட்டில் குறிக்கப்பெற்ற அரசன் :-முதலாம் இராசேந்திர சோழன்.

அரசனைப் பற்றிய பொதுக் குறிப்பு :-9 ஆம் கல்வெட்டில் காண்க.

கல்வெட்டுத் தோன்றிய காலம் :-கி. பி. 1015.

* S. I. I., Vol. II, Part II, No. 41

## கல்வெட்டில் குறிக்கப் பெற்ற செய்தி:

பொய்கை நாடு கிழவன் ஆதித்தன் சூரியனுன தென்னவன் மூவேந்த வேளான், தஞ்சை இராச ராசேச் சரத்தில் எழுந்தருளு வித்த நம்பி ஆரூரனுர்க்கும் திருஞான சம்பந்த அடிகளுக்கும், திரு நாவுக்கரைய தேவர்க்கும் முதலாம் இராசேந்திர சோழ தேவரின் மூன்ரும் ஆட்சி யாண்டில் நாற்பத்தொன்றரை பலம் எடையுள்ள தராநிலை விளக்கு ஒன்றையும், முதலாம் இரார ராச சோழ தேவரின் பிரதிமத்திற்கு நூற்றிருபது பலம் எடையுள்ள தராநிலை விளக்கு ஒன்றையும், நாற்பது பலம் நிறையுள்ள வெண்கல மடல் ஒன்றையும் கொடுத்துள்ளான்.

## குறிப்புரை

பெரிய பெருமாள் :-முதலாம் இராச ராச சோழன்.

நாராசம் :-இரும்பினுல் செய்யப்பட்ட ஊசி.

## அரிய செய்தி

நாற்பத்தொன்றரை பலம், நூற்றிருபதின் பலம் என இக்கல் வெட்டில் வந்துள்ள நிறுத்தலளவைப் பகுதியால் பழங்காலத்தில் பலமே உயர்ந்த எடையாகக் கருதப்பட்டு வந்தமை புலப்படும்.

# 11. முதலாம் இராசேந்திர சோழன் கல்வெட்டு*

1. .........ன்(மூ) வெந்த வெளான் யாண்(டுமூ)ன்ருவது வரை எழுந்தருளு(வி)த்த செப்புத் (திரு)மேனிகளும் (பிரதி)மங்(களு)ம் (உ)டையார் (கோயிலில்)

2. முழத்தால் அளங்(து)ம் பொன் (ஆடவ)ல்ல(ா)ன் என்னுங் கல்லால் நி(றை) (எடு)த்தும் ரத்நங்(கள் சரடு நீக்கி தக்ஷிணமேருவிடங்) கன் (என்)னுங் கல்லால் நிறை எடுத்துங் கல்லில் வெட்டின. (க) பாதாதி கேஸாந்தம் முக்காலே அரைக்கால் முழ உசரத்து எட்டு ஸ்ரீஹஸ்தம் உடையராகக் கனமாக எழுந்தருளிவித்த க்ஷேத்ரபால தேவர் ஒருவர்- (உ) இ-

3. வர் எழுந்தருளி நின்ற ஒன்ப(தி)ற்று விரல் உசர(த்து) ஒன்பதிற்று (வி)ரல் ச(ை)ம சதுரத்து (பத்மத்(தொ)டுங் கூடச் செய்த பீடம் ஒன்று. (ங) இவர்(க்கெ)க இவன் குடுத்த திரள் மணிவடம் ஒன்று பொன்கால். (ச) சுருக்கின வீரபட்டம் (ஒ)ன்று பொன்எழு மஞ்சாடி. (ரு) திருக்கு(த)ம் பைத் தகடு இரண்டு, பொன் மூன்று மஞ்சாடி- (சூ) ப(ா)தாதி கேஸாந்தம் பதினெ-

4. ண்விரல் உசரத்து இரண்டு ஸ்ரீஹஸ்தம் உடையராய் ஆடுகிருராகக் கனமாக எழுந்தருளுவித்த ஸ்ரீபைரவ மூர்த்திகள் ஒருவர் (எ) இவர் எழு(ந்தரு)ளி (நி)ன்ற ஒன்(பதி)ற்று (வி)ரல் உசரத்து எண் (வி)ரல் அகலத்து பத்மத்தொடுங் (கூ)டச் செ(ய்)த பீடம் ஒன்று (அ) (இ)வர்க்கெ இவன் குடுத்த திரள் மணிவடம் ஒன்று பொன் நாலு மஞ்சா(டி). (கூ) வடம் ஒன்றிற்கொத்த முத்துக் கறடும் இரட்டையுஞ் சப்பத்தியும் ஆக முப்-

5. (ப)த்து மூன்றினல் நிறை அரைக் கழஞ்செ நாலு மஞ்சாடியுங் குன்றிக்குக் காசு கால். (ம) வடம் ஒன்றிற் கொத்த முத்துக் கறடும் இரட்(டை)யுஞ் சப்பத்தியும் ஆக முத்து முப்பத்தெழினல் நிறை எட்டு மஞ்சாடிக்கு

---

* S. I. I., Vol. II, Part II, No. 43.

காசு கால். (மக) பாதாதி கேஸாந்தம் பதி(னழு) விரல் உரசத்து இரண்டு கை உடையரா(க)க் கனமாக செய்த சிறுத்தொண்ட நம்பி ஒருவர் (மஉ) இவர்க்கெ இவன் குடுத்தன. (மங) திரள்மணிவ–

6. டம் ஒன்று பொன் (மூ)ன்று மஞ்சாடியுங் குன்றி (மச) ருத்திராக்ஷக் காறை ருத்திராக்ஷம் நீக்கி பொன் அரைக் கழஞ்செ மஞ்சாடி (மரு) பாதாதி கேஸாந்தம் பதிஞ விரல் உசரத்துக் கனமாகச் செய்த திருவெண் காட்டு நங்கை ஒருவர். (மகூ) இவர்க்கே இவன் கொடுத் தந. (மஎ) பட்டக் காறையிற் கொத்த தாலி உட்பட பொன் ஒன்பது மஞ்சாடியுங் குன்றி. (மஅ) பாதாதி கேஸாந்தம் பன்னிரு விரல் உசரத்து இரண்டு கை உடை–

7. யராகக் கனமாகச் செய்த சீராள தேவர் ஒ(ரு)வர். (மகூ) இவர்க்கெ இவன் குடுத்தன. (உம) சுருக்கின் வீரபட்டம் ஒன்று. பொன் நாலு மஞ்சாடி. (உக)திருக்கு தம்பைத் தகடு இரண்டு பொன் மஞ்சாடியுங் குன்றி. (உஉ) (ப)ட்டைக் கா(றை)றயும் சூலமும் பொன் அரைக் கழஞ்செ நாலு மஞ்சாடியுங் குன்றி (உங) பிரதிமங்கள் மூவரும் நின்ற இருபத்து மூவிரல் நீளத்து எழுவிரல் அகலத்து பத்மத் தொடுங் கூட எண் விரல்-

8. உசரத்து பத்மத் தொடுங் கூடச் செய்த பீடம் ஒன்று (உச)

### விளக்கவுரை

இருக்குமிடம் :-தஞ்சாவூர் இராசராசேச்சரத்துக் கர்ப்பக் கிருகத்தின் வட புறத்தைச் சூழ்ந்துள்ள சுவரின் அடிப்பாகம்.

கல்வெட்டின் எழுத்து :-தமிழும் கிரந்தமும்.

கல்வெட்டில் குறிக்கப்பெற்ற அரசன் :-முதலாம் இராசேந்திர சோழ தேவன்.

அரசனைப்பற்றிய பொதுக் குறிப்பு :-9 ஆம் கல்வெட்டில் காண்க.

கல்வெட்டுத் தோன்றிய காலம் :-கி. பி. 1015.

### கல்வெட்டில் குறிக்கப் பெற்ற செய்தி :

பொய்கை நாடு கிழவன் ஆதித்தன் சூரியனை தென்னவன் மூவேந்த வேளான் முதலாம் இராசேந்திர சோழ தேவரின்

மூன்ருவது ஆண்டிற்குமுன், தஞ்சை இராச இராசேச்சரத்தில், க்ஷேத்திர பாலதேவர், ஆடுகின்ற ஸ்ரீ பைரவமூர்த்தி இவர்கள் திருமேனிகளையும், சிறுத்தொண்ட தேவர் திருவெண்காட்டு நங்கை, சீராள தேவர் இவர்களின் பிரதிமங்களையும், பத்மங்களோடு கூடின பீடங்களுடன் எழுந்தருளுவித்து அவரவர்களுக்கு அணிகலன்களையும் கொடுத்துள்ளான்.

## கொடுத்த அணிகலன்களின் வகைகள்

க்ஷேத்திரபால தேவர்க்குத் திரள் மணி வடம், சுருக்கின வீர பட்டம், திருக்குதம்பைத் தகடுகள்; பைரவர்க்குத் திரள் மணி முத்து வடங்கள் இரண்டு; சிறுத்தொண்ட நம்பிக்குத் திரள் மணி வடம், உருத்திராட்சக் காறை; திருவெண் காட்டு நங்கைக்குப் பட்டக்காறையில் கோத்த தாலி; சீராள தேவர்க்கு சுருக்கின வீரபட்டம், திருக்குதம்பைத் தகடுகள், பட்டைக்காறை, சூலம் இவைகளைக் கொடுத்துள்ளான்.

## குறிப்புரை

ஹஸ்தம் :-கை-

சமைசதுரத்து :-இதைச் சமசதுரத்து எனத் திருத்திக் கொள்க.

வீரபட்டம் :-தெய்வ மூர்த்தங்கட்குச் சூட்டப்படும் நெற்றியணி வகை.

குதம்பை :–காதணிவகை.

கறடு :–Crude.

பாதாதி கேஸாந்தம் :–அடிமுதல் உச்சிவரை.

# 12. முதலாம் இராசேந்திர சோழன் கல்வெட்டு *

(A. On the east face of the first pillar.)

1. ஸ்வஸ்தி ஸ்ரீ கொப் பரகேஸரி வன்ம ரான ஸ்ரீ ராஜேந்திர சோழ தேவர்க்கு

5. யாண்டு முன்ருவது உடையார் ஸ்ரீ ராஜராஜீஸ்வரம் உடையார்க்கு ஸ்ரீ காரியஞ் செய்கின்ற பொய்

10. கைநாடு கிழவன் ஆதித்தன் சூர்ய(ன்)ுன தென்னவந் முவெந்த வெளான் யாண் டுமுன்ருவது வரை

15. செய்வித்த செப்பு பிரதி மங்கள் உடையார் கொயிலில் முழத்தால் அளந்தும் ரத்நங்கள் தக்ஷி

20. ண மேரு விடங்க நென்னுங் கல்லால்நி றை எடுத்துங் கல்லில் வெட்டின (க)பா தாதி கேஸாந் தம் இ

25. ருபதிற்று விரல் உசர த்து இரண்டு கைய்யு டையராகக் கனமா கச் செய்த தத்தாந மரெகாண் என்றமி

30. லாடுடையார் ஒருவர் (உ) இவர் நின்ற பதிற்று

(B. On the east face of the second Pillar.)

35. விரல் நீளத்து எண் விரல் அகலத்து எண்விரலுசரத்து பத்மத் தொடுங் கூடச் செய்த பீ டம் ஒன்று (ங) இவனெ இவர்க்குக் கு டுத்தன. (ச) ருத்திரா

40. க்ஷம் ஒன்றிற் கட் டின பொன் எழும ஞ்சாடி உட்பட ருத்ராக்ஷம் ஒன்று நிறை அ ரைக் கழஞ்செ நா

45. லு மஞ்சாடியுங் கு ன்றிக்கு விலை காசு

47. ஒன் று. (ரு).

விளக்கவுரை

கல்வெட்டு இருக்குமிடம் - தஞ்சை இராசராசேச்சரத்துக் கர்ப்பக் கிருகத்தைச் சூழ்ந்துள்ள மேற்குப் புறத்திலுள்ள இருதூண்கள்.

கல்வெட்டின் எழுத்துக்கள் - தமிழும் கிரந்தமும்.

கல்வெட்டில் குறிக்கப்பெற்ற அரசன் - முதலாம் இராசேந்திரன்.

அரசனைப்பற்றிய பொதுக் குறிப்பு - 9-ஆம் கல்வெட்டில் காண்க.

கல்வெட்டுத் தோன்றிய காலம் - கி. பி. 1015.

---

* S. I. I., Vol. II, Part II, No. 40.

குறிக்கப் பெற்ற செய்தி - பொய்கை நாடு கிழவன் ஆதித்தன் சூரியனுன தென்னவன் மூவேந்த வேளான், முதலாம் இராசேந்திர சோழனின் மூன்ரும் இராச்சிய ஆண்டில் தஞ்சை இராசராசேச்சரத்தில் 'தத்தா நமரே காண்' என்ற மலாடுடையார் பிரதிமத்தைப் பீடம், பிரபைகளுடன் எழுந்தருளுவித்து, அவர்க்கு உருத்திராட்ச வடம் ஒன்றை அளித்துள்ளான். (பிரபை-திருவாசி)

## குறிப்புரை

மிலாடுடையார்-இத்தொடர் மலாடுடையார்* என்றிருக்க வேண்டும். மலையமாஞட்டாருக்கு அரசராதல் பற்றி மலாடுடையார் எனக் கூறப் பெற்றுள்ளனர். இவர் சிவனடியார்களுடைய திரு வேடத்தையே மெய்ப் பொருளெனச் சிந்தை செய்து வந்த காரணம் பற்றி மெய்ப் பொருள் நாயனுர் எனக் கூறப் பெறுவர். இவர் அறநெறி பிறழாது ஆட்சி நடத்தினர். சிவனடியார்கள் வந்த பொழுது அவர்களுக்குச் செல்வங்களைக் கொடுத்து வந்தனர். இங்ஙனம் நடக்குங் காலத்தில் முத்திநாதன் என்னும் பகை மன்னன், இவரை வெல்லவிரும்பிப் படையெடுத்து வந்து சண்டை செய்து பலமுறை தோற்றுப் போனுன். பின் இவரைக் கபடத்திஞல் வெல்ல நினைந்து சிவனடியார் வேடம் பூண்டு, இவர் அரண்மனை வாயில்களைக் கடந்து சென்று, இறுதி வாயிலை அடைந்த போது, வாயிற்காவலனுகிய தத்தன் தடுத்தான். அவன் சொல் கேளாது உள்ளே புகுந்து அரசனுக்குச் சைவாகமத்தைப் படித்துக் காட்டுவான் போல் நடித்து, மறைத்து வைத்திருந்த உடைவாளை எடுத்து அரசனைக் குத்த அரசன் சிவவேடமே மெய்ப்பொருள் என்று அவனை வணங்கினுன். காவலனுகிய தத்தன், முத்தி நாதனை வெட்டப் போனுன். அரசன் காவலனைத் தடுத்து 'தத்தா நமரேகாண்' எனக்கூறி அவனுக்கு இடையூறு இல்லாமல் விடு மாறு சொல்லி, மந்திரி முதலானவர்களை நோக்கி, சைவாகம விதிப்படி திருநீற்றின் மேல் வைத்த அன்பைப் பாதுகாக்கும்படி கூறிவிட்டு ஆனந்தத் தாண்டவம் செய்தருளுகின்ற கூத்தப் பெருமானைத் தியானம் பண்ண அவரும் தோன்றி அவரைத் தம்முடைய திருவடியிலே சேர்த்தருளினுர்.

## பொதுச் செய்தி

மெய்ப்பொருள் நாயனுர் புராணத்தில் சேக்கிழார்,

"*நிறைத்தசெங் குருதி சோர வீழ்கின்றுர் நீண்ட கையால்*
*தறைப்படும் அளவில் தத்தா நமர்எனத் தடுத்து வீழ்ந்தார்*"

எனக் குறிப்பிட்டதற்கு "தத்தா நமரே காண் என்ற மிலாடுடையார் ஒருவர்" என்னும் இப்பன்னிரண்டாம் கல்வெட்டில் வந்த தொடரே ஆதாரமாகும்.

* மலாடு—இதற்கு ஜனநாதவளநாடு என்ற வேறு பெயரும் உண்டு.

# 13. முதலாம் இராசேந்திர சோழன் கல்வெட்டு*

1. ஸ்வஸ்திஸ்ரீ திருமன்னி வளர விருநிலமடந்தையும் பொர்ச் சயப் பாவையுஞ் சீர்த் தனிச் செல்வியுந் தன் பெருந் தெவிய ராகி இன்புற நெடுதியல் ஊழி யுள் இடை து-

2. றை நாடுந் துடர் வனவெலிப் படர்வன வாசியுஞ் சுள்ளிச் சூழ்மதிட் கொள்ளிப் பாக்கையுநண்ணற்கருமுரண் மண்ணைக் கடக்கமும் பொருகடல் ஈழத் தரசர்த முடியும் ஆங்க-

3. வர் தெவிய ரொங்கெழின் முடியு முன்னவர் ப(க்)கல்த் தெனலவர் வைத்த சுந்தர முடியும் இந்திர நாரமுந் தெண் டிரை ஈழமண்டல முழுவதும் எறிபடைக் கெரளர்

4. முறைமையிற் சூடுங் குலதனமாகிய பலர் புகழ் முடியுஞ் செங்கதிர் மாலயுஞ் சங்கதிர் வெலத் தொல் பெருங் காவற் பல்பழந்திவுஞ் செருவிற் சின

5. வி இருபத் தொருகா லரைசு களைகட்ட பரசுராமன் மெவருஞ் சாந்திமத் திவவரண் கருதி இருத்திய செம் பொற் றிருத்தகு முடியும் பயங் கொடு பழிமிக முசங்கி யில் மு-

6 துகிட் டொளித்த சயசிங்கன் அளப் பெரும் புகழொடும் பீடியல் இரட்டபாடி ஏழரை இலக்கமு நவநெதிக் குலப் பெருமலைகளும் விக்கிரம வீரர் சக்கர கொட்டமு-

7. முதிர் படவல்லை மதுர மண்டலமும் காமிடை வளைய நாம ணைக் கொணமும் வெஞ்சிலை வீரர் பஞ்சப் பள்ளியும் பாசு டைப் பழநன் மாசுணி தெசமும் அயர்வி-

8. ல் வண்கிர்த்தி யாதி நகரவையிற் சந்திரன் றொல் குலத் திரதரனை விளையமர்க் களத்துக் கிளையொடும் பி(டித்)துப் பலதனத் தொடு நிறைகுலதன(க்)குவை-

9. யுஞ் கிட்டருஞ் செ(றி)மிளை யொட்ட விஷையமும் பூசுரர் செர் நல் கொசலை நாடுந் தன பாலனை வெம் முனையழித்து வண்டுறை சொலைத் தண்டபுத்தியு மிரண-

---

* S. I. I., Vol.I, No. 67.

10. சூரனை முரணுறத் தாக்கித் திக்கணை கிர்த்தித் தக்கண லாடமுங் கொவிந்த சந்தன் மாவிழிந் தொடத் தங்காத சாரல் வங்காள தெசமுந் தொடுகடற் சங்கு கொட்டன மஹிபாலனை

11. வெஞ்சமர் வளாகத் தஞ்சுவித்தருளி ஒண்டிறல் யானையும் பெண்டிர் பண்டாரமு நித்தில நெடுங் கடலுத்தி (ர)லாடமும் எறி (ம)ணற்றிர்த்தத் தெறிபுனற் கங்கையுமா(ப்)-

12. பொரு தண்டாற் கொண்ட கொப்பர கெசரிபன் மரான உடையார் ஸ்ரீராஜேந்திர சொழ தேவற்கு யாண்டு ௰௨ ஆவது (ஜ)யங் கொண்ட சோழ மண்டலத்து பங்கள நாட்டு நடுவில்

13. வடை(க) முகை நாட்டுப் பள்ளிச் சந்தம் வைகவூர்த் திருமலை ஸ்ரீ குந்தவை ஜினா லயத்து தேவற்குப் பெரும் பாணப் பாடிக்கரை வழி மல்லியூர் இருக்கும் வியா

14. பாரி நங்நப்பயன் மணவாட்டி சாமுண்டப்பை வைத்த திருநந் தா விளக்கு ஒன்றி நுக்குக் காசு இருபதும் (திரு)வமுதுக்கு வைத்த காசு பத்தும்.

விளக்கவுரை

இருக்குமிடம் - போளூர்க்கு அருகில் திருமலைக் குன்றின் மீதுள்ள ஒரு துண்டு பாறையில்.

கல்வெட்டின் எழுத்து - தமிழும் கிரந்தமும்.

கல்வெட்டில் குறிப்பிடப்பெற்ற அரசன் - முதலாம் இராசேந்திர சோழன்.

அரசனைப்பற்றிய பொதுக் குறிப்பு - 9-ஆம் கல்வெட்டில் காண்க.

கல்வெட்டுத் தோன்றிய காலம் - கி. பி. 1024.

## மெய்க்கீர்த்திப் பகுதிக்குக் குறிப்புரை

திருமன்னி வளர - திருமகள் நிலைபெற்று வாழ.

இருநில மடந்தை - பெரிய பூமிதேவி.

போர்ச் சயப் பாவை - வீர இலக்குமி.

சீர்த்தனிச் செல்வி - கீர்த்திக்கு உரியவள்.

இடை துறை நாடு – கிருஷ்ண நதிக்கும் துங்கபத்திரை நதிக்கும் இடையிலுள்ள நாடு. இதை இக்காலம் பம்பாய் மாகாணத்திலுள்ள ரெய்ச்சூர் ஜில்லா என்னலாம்.

வனவாசி - மைசூர் இராச்சியத்தில் நுளம்பபாடிக்கு மேற்கிலுள்ள நிலப்பகுதி.

கொள்ளிப்பாக்கை - ஹைதராபாத்துக்கு வட கிழக்கே 45-மைல் தூரத்திலுள்ள ஊர். இதுபொழுது Kulpack என்று வழங்கப் பெறுகின்றது.

மண்ணைக் கடக்கம் - இராட்டிரகூடர்களுக்குத் தலைநகராய் இருந்த மான்ய கேடம். இக்காலம் மால்கெட் என்று வழங்கப் பெறுகின்றது.

பொருகடல் ஈழம் - அலையால் மோதப்படும் இலங்கை.

பழந்தீவு - மாலடிவ்ஸ் (Maladives) என்று அழைக்கப் பெறும் அராபிக் கடல் தீவுகள்.

சாந்திமத்தீவு - மலையாளத்தின் அண்மையில் இருந்த ஒரு தீவு.

அரசுகளைகட்ட - அரசராகிய களைகளைக் களைந்த.

முயங்கி – இவ்வூர் பல்லாரி சில்லாவிலுள்ள உச்சங்கி துர்க்கமாக இருக்கலாமென்பது டாக்டர் உல்ஷ் துரையின் கொள்கை. ஹைதராபாத் சமஸ்தானத்திலுள்ள மாஸ்கி என்னும் இடம் என்பர் டாக்டர் கிருஷ்ணசாமி ஐயங்கார்.

சயசிங்கன் - இவன் மேலைச் சளுக்கிய வம்சத்து ஆகவமல்லனுடைய தகப்பன். கி. பி. 1015 முதல் கி. பி. 1042 முடிய ஆண்டவன்.

நவநெதிக் குலப்பெருமலைகளும் - ஒன்பது வகையான நவரத்தினங்களையுடைய சிறந்த மலைகளும்.

சக்கரக் கோட்டம் - மத்திய மாகாணத்திலுள்ள வத்சராச்சியத்தில் (Baster state) இருந்த ஒரு நகரம். சித்திரகூடம் (அ) சித்திர கோட்டம் என்று இக்காலம் வழங்கப் பெறுகின்றது.

செறிமிளை ஒட்ட விஷயமும் - நெருக்கமான காட்டரணை உடைய ஒரிசா தேசமும். (செறி - அடர்ந்த ; மிளை-காவற்காடு.)

கோசலம் - ஒரிசாவுக்கு அண்மையில் உள்ள மகாகோசலம் என்னும் ஊர். (Southern Kosala.)

பூசுரர் - பிராமணர்.

தண்டபுத்தி - ஒரிஸாவிற்கும் வங்காளத்திற்கும் இடைப்பட்ட நாடு.

இரணசூரன் - போர்க்களத்தில் சூரன்; இரணம் - போர்க்களம்.

தன்மபாலன் - இவன் பாலா வம்சத்தைச் சேர்ந்த அரசன்.

திக்கணை கீர்த்தி - திக்குவரை சென்ற புகழ். “ இசையாற்றிசை போயதுண்டே ” என்பது சீவகசிந்தாமணி.

தக்கணலாடம் – வங்காளத்தில் ஹுக்ளி, ஹௌரா ஜில்லாக்கள் அடங்கிய பிரதேசம்.

உத்தரலாடம் – வங்காளத்தில் மூர்ஷிதாபாத், பீர்பூம் ஜில்லாக்கள் அடங்கிய நாடு.

கோவிந்தசந்தன் – வங்காள தேசத்து அரசனாகிய மஹிபாலனது போர்ப்படைத் தலைவன்.

ஒட்டல் - காதணி.

வெறி மணல் தீர்த்தத்து என்பதை வெறிமலர்த் தீர்த்தத்து என்று திருத்திக் கொள்க.

வெறி - வாசனை.

வெறிமலர்த் தீர்த்தத் தெறிபுனல் கங்கை – கங்கை புண்ணிய நதி என்பதற்குக் கல்வெட்டு ஆதாரமாக இருக்கின்றது இத் தொடர்.

## உரைநடைப் பகுதியால் அறியப்படும் அறச்செயல்

சயங்கொண்ட சோழமண்டலத்துப் பங்களநாட்டு நடுவில் வகை முகை நாட்டு வைகவூர்த் திருமலை ஸ்ரீ குந்தவை ஜிநாலயத்துத் தேவர்க்குப் பெரும் பாணப் பாடிக் கரை வழிமல்லியூர் இருக்கும் வியாபாரி நன்னப்பயன் மனைவியார் சாமுண்டப்பை திருநுந்தா விளக்கு ஒன்றினுக்குக் காசு இருபதையும், திருவமுதுக்குக் காசு பத்தையும் கொடுத்துள்ளனர்.

## உரைநடைப் பகுதிக்குக் குறிப்புரை

சயங்கொண்ட சோழமண்டலம் - தொண்டை மண்டலத்தை முதலாம் இராசராச சோழன் வென்றபோது வைத்த பெயர்.

பங்களநாடு – சயங் கொண்ட சோழ மண்டலம் பல கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அவைகளுள் படுவூர்க் கோட்டம் என்பது ஒன்று. அது, பங்களநாடு, பெருந்திமிரி நாடு, மீயாறு நாடு என்னும் பிரிவுகளை உடையது. (வடாற்காடு ஜில்லா) வேலூர்க்கு அருகிலுள்ள சோழபுரம், உய்யக் கொண்டான், முதலான ஊர்கள் இப்பங்கள நாட்டில் அடங்கிய ஊர்களிற் சிலவென்று கல்வெட்டுக்கள் அறிவிக்கின்றன.

முகைநாடு – இது பங்களநாட்டின் நடுவில்வகையைச் சேர்ந்த நாடுகளில் ஒன்று.

பள்ளிச்சந்தம் - சைன கோவில்களுக்குக் கொடுக்கப்பட்ட நிவந்தம்.

ஜிநாலயம் - சைனர்களின் கோயில்.

குந்தவை ஜிநாலயம் - இது முதலாம் இராசராச சோழனது தமக்கையாராகிய பெரிய குந்தவையின் பேரால், வைக்கப்பெற்ற கோயில்.

பெரும்பாணப்பாடி - தொண்டை மண்டலத்தின் பிரிவுகளில் ஒன்று.

கரைவழி மல்லியூர் - பெரும்பாணப் பாடிக்கு அருகிலிருந்த ஊரின் பெயர்.

# 14. முதலாம் இராசேந்திர சோழன் கல்வெட்டு*

## First Tier

1. ஸ்வஸ்திஸ்ரீ திருமன்னிவளர இருநில மடந்தை (யு)ம் பொற்சயப் பாவையும் சிர்த்தனி(ச்செ)சல்வியும் (த(ன் பெருந்தெவியராகி இன்புற நெடுதியல் ஊழியுள் இடை துறை நாடும் துடர்வன வெலிப்படர்வன வாசியும் சுள்ளிச் சூழ்மதிள்-

2. கொள்ளிப் பாக்கையும் நண்ணற்கரு (மு)ரண் மண்ணைக் கடக்கமும் பொருகடலீழத் தரைசர்த முடியும் ஆ(ங்) கவர்தெவியர் ஓங்கெழில் முடியும் முன்னவர் பக்கல் தென்னவர் வைத்த சுந்தரமுடியும் இந்திர(ஞ)ரமும் தெண்டிரை ஈழமண்ட-

3. லமுழுவதும் எறிபடைக் கெரளன் முறைை(ம)யிற் சூடுங்குலதனமாகிய பலர் புகழ் முடியும்(செ)சங்கதிர் மாலையும் சங்கதிர் வெலைத்தொல் பெருங்காவற் பல பழந்திவும் செருவிற்சினவி இருபத்தொரு காலரசுகளை கட்ட பரசுராமன்-

4. மெவருஞ் சாந்திமத் தீவர(ண்) கருதி இருத் (தியசெ)ம் பொற்றிருத்தகு முடியும் ப(ய)ங்கொடுபழி மிக மு (யங்கி)யில் முதுகிட் டொளித்த சயசிங்கன் அளப்பரும் புகழொடும் பி(டி)யல் இரட்டபாடி எழரை இலக்கமும் நவநெதிக்குலப் பெருமலைக-

5. ளும்விக்கிரமவீரர் சக்கரகொட்ட முதிர்படவல்லை மதுர மண்டலமும் காமிடை வளநாமணை (க்)கொணையும் வெஞ் சின வீரர் பஞ்சப் பள்ளியும் பாசடைப் பழ(ன)மாசுணி தேசமும் அயர்வில் வண்கீர்த்தி ஆதிநகரவையில்-

6. சந்திரன் றெல்குலத் திந்திரதனை விளை அமர்களத்துக் கிளையொடும் பிடித்துப் பல (தன)த்தொடு நிறைகு(ல) தனக் குவையும் கிட்டருஞ் செறிமி (ள)ஒட்ட விஷயமும் பூசுரர் செர்நற் கோசலைநாடும் தந்மபால (னை)வெம்மு (னை)யழித்து வண்டுறை சொலைத்த (ண்)ட-

---

* S. I. I. Vol. II, PART I, No. 20.

7- புத்தியும் இரணசூரனை முரணுகத் தாக்கி (த்)திக்கணை கீர்த்தி தக்கண (லாடமும் கோவிந்த சத்தன் மாவிழிந் தோட (த்)தங்காத சாரல் வங்காள தேசமும் தொடு கழற் சங்கு வொட்ட (ல்)மயிபாலனை வெஞ்சமர் விளாகத் தஞ்சுவித்தரு (ளி)யொண்டிறல் யானையும் (பெ)ண்டி

## Second Tier

8. ர் பண்டாரமும் (நி)த்தில நெடுங்கட லுத்திர லாடமும் வெறிமலர்த்(தீ)ர்த்தத்தெ (றிபு)னல் கங்கையும் அலைகடல் நடுவுட் பலகலஞ் செலுத்திச் சங்கிராம விசையொத்துங்க வர்மனாகிய கடாரத்தரசனை வாகயம் பொரு-

9. கடல்கும்பக் கரி யொடு மகப்படுத் துரிமையில் பிறக்கிய பெருநெதிப் பைருக்கமும் ஆர்த்தவனகனகர் (பெ)பார்த்தொழில் வாசலில் விச்சாதித் தொரணமும் மொய்த்தொளிர் புனைமணிப்புதவமும் கனமணிக் கதவமும் நிறைசீர் விசையமும் துறை-

10. நீர்ப்பண்ணையும் வன்மலையூரெயிற் றொன்மலையூரும் ஆழ் கடலகழ்சூழ் மாயிருடிங்கமும் கலங்கா வல்(வி)னை இலங்கா சொகமும் காப்புறு நிறைபுனல் மாப்பப் பாளமும் காவலம் புரிசை மெவிலிம்பங்கமும் விளைப் பந்தூறுடை வளைப்ப-

11. ந்தூ(றும் கலைத்தக் கொர்புகழ் தலைத்தக்கொலமும் திதமாவல்வினை மாதமாலிங்கமும் கலாமுதிராக் கடுந்திறல் இலாமுரி தேசமும் தெனக்க வார்பொழில் மானக்க வாரமும்தொடுகடல்காவல் கடுமுரட் கடாரமும்(ம)ா-

12. (ப்பொ)ரு தண்டாற்கொண்ட கொப்பர கெஸரிவந்மரான உடையார்ஸ்ரீ ராஜேந்திர சொழதெவர்க்கு யாண்டு ௰௩ ஆவது நாள் இருநூற்று நாற்பத்திரண்டினால் உடையார் ஸ்ரீராஜேந்திரசொழ தேவர்கங்கைகொண்ட சோழபுர-

13- (த்துக்) கோயிலினுள்ளால் முடிகொண்ட சோழன் திருமாளிகையில் வடபக்கத்து தேவாரத்துச் சுற்றுக் கல்லூரியில் தாநஞ்செய் தருளா இருந்து உடையார் ஸ்ரீராஜராஜ ஈஸ்வரமுடையார் கோயிலில் ஆசார்ய போகம் நம் உடையார்.

14. சர்வ சிவபண்டித (சைய்) வ்வாசார்யர்க்கும் இவ்வுடையார் சிஷ்யரும் பிறசிஷ்யரும் ஆய் ஆர்யதேசத்தும் மத்ய தேசத்துத்தான் ஹௌட தேசத்துத்தான் உள்ளாராய் யோக்யராயிருப்பார்க்கெ ஆட் டாண்டுதொறும் இத் தேவர் கோயிலில் ஆடவல்லா(னெ)-

15. (ன்னு)ம் மரக்காலால் உள்ளூர்ப் பண்டாரத்தே நிறைச் சளவாக இரண்டாயிரக் கலநெல்லு ஆட்டாண்டு தொறும் சந்திராதித்தவல் பெறத் திருவாய் மொழிந் தருளத் திருமந்திர ஓலைசெம்பியன் விழுப்பரையன் எழுத்தினு-

16. (ல்)......த் திருவாய்க் கேழ்விப்படி கல்லில் வெட்டித்து. இது இவ் வம்சத்துள்ள சைய்வ்வ ஆசாரியர்களே இத் தன்மம் (ர)க்ஷிக்க.

## விளக்கவுரை

இருக்குமிடம்: தஞ்சை இராசராசேச்சரத்துக் கர்ப்பக் கிருகத்தின் தென்புறத்திலுள்ள முதற் படை, இரண்டாம் படைகளில்.

கல்வெட்டின் எழுத்து: தமிழும் கிரந்தமும்.

கல்வெட்டில் குறிக்கப்பட்ட அரசன்: முதலாம் இராசேந்திர சோழன்.

அரசனைப் பற்றிய பொதுக் குறிப்பு: 9-ஆம் கல்வெட்டில் காண்க.

கல்வெட்டுத் தோன்றிய காலம்: இவ்வரசன் அரியணை ஏறிய 19-ஆம் ஆண்டு 242-ஆம் நாள்; அதாவது கி. பி. 1031.

## மெய்க்கீர்த்திப் பகுதியால் அறியப்படும் செய்திகள்

குறிப்பு: இம் மெய்க்கீர்த்தியில் ''திருமன்னி வளர'' எனத் தொடங்குவது முதல், ''வெறி மலர்த் தீர்த்தத்து எறிபுனல் கங்கையும்'' என்பது முடிய உள்ள பகுதிகளில், அறியப்படும் செய்திகள், குறிப்புரைகள் இவைகளை 13-ஆம் கல்வெட்டு கொண்டு தெளிக.

மலேயா தீபகற்பம், சுமித்திரா தீவு, நிக்கோபார் தீவு, இவைகளில் பல இடங்களை வென்றான்.

## மெய்க்கீர்த்திப் பகுதிக்குக் குறிப்புரை

அலைகடல் நடுவுள் பல கலஞ் செலுத்தி - சோழர்கள் கப்பல் படைகளை வைத்திருந்தனர் என்பதை உணர்த்துகின்றது இத் தொடர்.

சங்கிராமம் – போர்.

விசயோத்துங்கன் – (விசய+உத்துங்கன்)=வெற்றியில் மிக மேம்பட்டவன்.

கடாரம் – இது மலேயா தீபகற்பத்தின் மேல் கரையில் உள்ளது. இது பொழுது கெடா என்று வழங்கப்பெறுகின்றது. பட்டினப்பாலையில் காழகம் என்றும் பெரிய லெய்டன் செப்பேடுகளில் கடாகம் என்றும் இது குறிக்கப் பெற்றுள்ளது.

விசையம் – சுமத்திரா தீவில் பாலம்பாங் என்று வழங்கப்பெறும் இராச்சியம்.

பண்ணை – சுமத்திரா தீவின் கீழ்க்கரையில் உள்ள ஊர்.

மலையூர் – இதை இன்ன இடம் என்று துணிந்து கூறுதற்கில்லை. சுமத்ரரவில் இருந்தது என்பது மாத்திரம் உறுதி. டச்சு ஆராய்ச்சியாளர்கள் இது ஜம்பி என்னும் நாடு என்று முடிவு செய்துள்ளனர்,

மாயிருடிங்கம் : இது மலேயா தீபகற்பத்தின் நடுவில் உள்ளது. சீன தேசத்து நூல்களில் ஜிலோடிங் என்று குறிப்பிடப் பெற்றது இதுவே என்பர்.

இலங்காசோகம் – மலேயா தீபகற்பத்திலுள்ள கெடாவிற்குத் தெற்கில் உள்ளது.

பப்பாளம் – இது கிராபூசந்திக்குத் தெற்கே மலேயா தீபகற்பத்தின் மேல்புறத்தில் உள்ளது.

இலிம்பிங்கம், வளைப்பந்தூறு – இவ்விரு இடங்களைப் பற்றி இது பொழுது துணிந்து கூறுதற்கில்லை.

தக்கோலம் – இது கிராபூசந்திக்குத் தெற்கே, மலேயா தீபகல்பத்தின் மேல்புறத்தில் உள்ளது. கிரேக்க ஆசிரியர் தாலமி, இதைத் தகோலா எனக் குறித்துள்ளனர்.

மதமாலிங்கம்–மலேயா தீபகற்பத்தின் கீழ் கரையில் குவான்டன் நதியின் முகத்துவாரத்திலுள்ள தெமிலிங் என்னும் இடமாகும். சீன நூல்களில் இது தன்மாலிங் என்று வழங்கப் பெற்றுள்ளது.

இலாமுரிதேசம் : சுமத்திரா தீவின் வட பகுதியில் உள்ளது. மார்க்கோபோலோ இதை லன்ப்ரி (Lanbri) எனவும், சீனர்கள் லான் வூலி எனவும் (Lan-wow-li) எனவும் குறித்துள்ளனர்.

நக்கவாரம் - நிக்கோபார் தீவுகள் (Nicobar Islands).
முரண் – வலிமை.
தண்டு – சேனை.

## உரைநடைப் பகுதியால் அறியப்படும் செய்தி

இராசேந்திர சோழன் தஞ்சை இராசராசேச்சரத்தில் இருந்த தன் குருவாகிய சர்வசிவ பண்டிதர்க்கும், அவரது சிஷ்யர்களாய் ஆர்யதேசம், மத்யதேசம், கௌடதேசம் ஆகிய இவ்விடங்களில் இருந்தவர்களுக்கும் சந்திர சூரியர் உள்ளவரை ஆண்டுதோறும் நிறைந்த அளவாக ஆடவல்லான் என்னும் மரக்காலால் இரண்டாயிரக் கல நெல்லை ஆசாரிய போகமாகக் கொடுக்க ஏற்பாடு செய்திருந்தான்.

## உரைநடைப் பகுதிக்குக் குறிப்புரை

முடிகொண்ட சோழன் திருமாளிகை - அரண்மனையின் ஒரு பகுதிக்குள்ள பெயர்.

தேவாரத்துச் சுற்றுக் கல்லூரி - தேவாரத்தை ஓதி வணங்கும் இடம்.

ஆசார்ய போகம் - ஆசாரியர் அநுபவிக்க வேண்டிய நிவந்தம்.

## இக்கல்வெட்டில் வந்துள்ள காப்புரை

"இது இவ்வம்சத்துள்ள சைவ ஆசாரியர்களே இத்தன்மம் ரக்ஷிக்க" என்பதாகும்.

# 15. முதலாம் இராசாதிராசன் கல்வெட்டு*

1. ஸ்வஸ்திஸ்ரீ தி(ங்)களெர்தரு த(ன்)ருங்கல் வெண் குடைக்கீழ் நிலமகணிலவமலர் (ம)(க)ட் புணர்ந்து செங் கொலொச்சி(க்)கரு(ங்க)லிகடிந்து தன் சிறிய(த)ாதையு (ந்தி)ருத் தமையனையும் குறிகொள் தன்நிளங் கொக் களையும் நெறியுணர் தன்றிருப்(பு)தல்வர் தம்மை (யுந்து)ன்றெழில் வானவன்வ(ல்)லவன் மீன(வ)ன் கங்கன் இலங்கையர்க் கிறைவன் பொலங்கழற் ப(ல்) லவன் க(ன்)னகுச்சியர் கா(வ)லனெனப் பொன்ன (ணி)ச் சுடர்மணி மகுட(ஞ்) சூட்டிப்பட(ர்) புகழ(ா)ங் கவர்க்கவர் நாடருளி பாங்குறு தென்னவர் மூவருள் மானபரணன் பொன்முடி ஆநாப் பருமணி-
2. ப்பசுந்தலை ெ(ப)ாருகளத்தரிந்து வாரளவிய கழல்வீர கொளனை முனைவயிற் பிடித்து தனதிவா(ர)ணக் கதக் களிற்று(னு) தைப்பித்(த)ருளி அந்தமில் பெரும்புகழ்ச் சுந்தர பாண்டியன் கொற்றவெ(வ)ண் குடையு(யுங்) கற் (றை)ற வெண்கவரியும் சிங்காதனமும் வெங்களத் திழந்து தன்முடிவிழ(த்) தலைவிரித்தடி தளர்ந்தொடத் தொல்லைய் முல்லை (யூ)ர்த்துர(த்)தி ஒல்கலில் வெண்ணுட்டரைசை செணுட்டொதுக்கி மெவுபுகழி ராமகுடமூவர் கெட முனிந்து மிடல்ெ(க)ழு வில்லவ(ன்) குட(ர்)மடிக்கொண்டு தன்ன-
3. டுவிட்டொடிக்(கா)டு பு(க்)கொளிப்ப வஞ்சியம் புதுமலர் மலைந்தாங் கெஞ்சலில் வேலைகெழு காந்தளூர்சாலை கலமறுத் தாஹ(வ) மல்லனு மஞ்ச கெவுதன்ருங்க(ரு)ம் படையாலா(ங்) கவன செனையுட் கண்டப்பயனுங் கங்காதரனும் வண்டமர் களிற்ருெடு மடியத்(தி)ண் டிறல் விருதர் விக்கியும் விசையாதித்தனுங் கரு(மு)ரட் சாங்கமயனுமு (த)லி(ன)ர் சமரபீரு வொத்துடைய(வி)ரி சுடர்ப் பொன்னெடையங் கரிப்புரவிெ(ய)ாடும் பிடித்து த(ன்)னுடையிற் ஜயங்கொ-
4. ண்டொன்(று)ர் கொள்ளி(ப்)பாக்கை உள்ளெரி மடுப்பித் தொருதனி தண்டாற்பொருகடலிலங்கையர்கொ(ம)ான் விக்கிரமபாஹுவி(ன்) மகுடமு முன்றனக்கு(டை)டந்த

---

* S. I I., Vol. III, Part I, No. 28

தென்றமிழ் மண்டல முழுவதுமிழந்தெழ்கடலீழம்புக்க விலங்கெசு(ர)நாகிய விக்கிரம பாண்டிய(ன்)பரும(ணி) மகுடமும் காண்டகு தன்னதாகிய கன்னகுச்சியினு மார்கலியிழ(ஞ்) சீரிதென் றெண்ணி உளங்கொள் தன்ருடு தன்னுறவொடு(ம்)புகு(ந்து) விளங்குமுடி கவித்த வீர சலாமெகன்பொ-

5. ருகளத்தஞ்சி தன்கார்க் களிறிழந்து கவ்வையுற்ருெடிக் காதலியொடுந் தன்றவ்வையைப் பிடித்து தாயை முக் கரிய ஆங்கவமானம் நீங்குதற்காக மிண்டும்(வ)ந்து வாட்டொழில் புரி(ந்து) வெங்களத்துலந்தவச் சிங்களத் தரைசன் பொன்னணி முடியுங் கன்னரன் வழிவந்துறை கொளீழத் தரைசநாகிய சிர்வல்லவன் மதனராஜன் எல்லொளித் தடமணி முடியுங்கொண்டு வடபுல(த்) திருகாலாவதும் பொருபடை நடாத்தி கண்டர் தின கரன் நாரணன் கணவ(தி)-

6. வண்டலர் தெரியல் மதிசூதனனென்னைப் பலவ(ை)ர ய்ரைமு(னை) வயிற்றுரத்தி வம்பலர் தருபொழில் கம்பிலி(ந)கருள் சளுக்கியர் மாளிகை தகர்ப்பித் திளக்கமில் வில்லவர் மினவர் வெழகுலர் சளுக்கியர் வல்லவர் கௌசலர் வங்கணர் கொங்கணர் சிந்துரர் ஐயணர் சிங்களர் பங்களர் அந்திரர் முதலிய வரைச ரிடு திரைகளுமாறி லொன்றவ(னியு)ள் கூறுகொள் பொருள்களு முகந்துநா(ன்) மறையவர் முகந்து கொ(ள)க் குடு(த்)து விஸ்வலொகத்துவிள-

7. (ங்)க மனுநெறி நின்றஸ்வ மெதஞ்செய் தரைசு வீற்றி ருந்த ஜயங்(கெ)ாண்ட சோழனுயர்ந்த பெரும்புகழ் கொவிராஜகெஸரி பங்மரா(ன) உடையார்ஸ்ரீ ராஜாதி ராஜ தேவற்குயாண்டு உ௰கூ ஆவது ஜயங்கொண்ட சொழம (ண்)டலத்து செங்காட்டுக் கொட்டத்து மாக ணூர் நாட்டு மணிமங்கலமாந ராஜசூளாமணிச்சதுவேதி மங்கலத்து மஹ(ா)ஸபையோம். எம்மூர் ப்ரஹமஸ் தானத்தே தநுநாயற்று பூர்வபக்ஷத்து திவதியையும் புதன்கிழமையும் பெற்ற திரு-

8. வொணத்தி நாள்க் கூட்டக் குறைவறக் கூடியிருந்து பணிப் பணியால் பணித்த இவ்வூர் ஸ்ரீதுவராபதியான ஸ்ரீ காமக்கொடி விண்ணகர் ஆழ்வார்க்கு திருவமுதுக் கும் அர்ச்சநா பொஹத்துக்கும் இத்தேவர் பண்டா ரத்தெ நூறுகாசு பொலிசைக்கு கொண்டு இக்(கா)சு

நூற்ருலும் வந்த பொலிசைக்கு இறைகரத் தூட்டாக இறையிழிச்சிக் குடுத்தநிலமாவது பெருநல்வதிக்கு வடக்கு பாதிரிக் கழனிமெ-

9. லைக்காலுக்கு(கு) கிழ(க்)கு விளைநிலங்குழி முன்னூறும் பாதிரிக்கழனிந(டு) விற்காலுக்கு மேற்(க்)கு விளை நிலங்குழி இருனூ(று)ம் பெருநல்வதிக்கு தெற்கு ஆலை மெட்டில் மனையறுதி வாய்க்காலுக்கு கிழக்கு விளைநிலங் குழி நூற்றெண்பதும் ஆலை-

10. மெட்டில் நந்தவானத் தொட்டக் காலுக்கு மேற்கு விளை நிலங்குழி நானூறும் இக்காலுக்கு கிழக்கு விளைநிலங் குழி இரு(னூ)றும் தெந்திரி(ய)ம (ர)த்தின் மேலைக் காலுக்குமே(ற்குவி)ளை நிலங்குழி முன்னூறும் சுண்டி லெரிவதிக்கு கிழக்கு விளைநில-

11. ங்குழி நானூறும் பாவைதுறை வாய்க்காலுக்கு வடக்கு (தி)ருவையொத்தி தேவர் நிலங்குழி இரு(நூ)ற்றைம் பதுக்கு கிழ(க்குதடி)யிரண்(டி) நால்குழி இருனூறும் ஆகத் தேவர் நிலங்குழி இரண்டாயிரத் திருநூறும் இறைகரத் தூட்டாக ஸந்தி-

12. ராதி(த்)தவற் நிற்பதாக திருவமுதுக்கும் அர்ச்சநா பொஹத்துக்கும் இறையிழிச்சி சிலாலேகை செய்து குடுத்தோம்.

## விளக்கவுரை

இருக்குமிடம்: செங்கற்பட்டு ஜில்லா, காஞ்சிபுரந் தாலூகா மணிமங்கலம் என்ற ஊரிலுள்ள இராசகோபாலசாமி கோயிலின் வடக்கு மேற்குச் சுவர்கள்.

கல்வெட்டின் எழுத்துக்கள்: தமிழும் கிரந்தமும்.

குறிக்கப்பெற்ற அரசன்: முதலாம் இராசாதிராசன்.

## அரசனைப் பற்றிய பொதுக் குறிப்பு

இவன், கங்கை கொண்ட சோழன் என வழங்கும் முதலாம் இராசேந்திர சோழனின் முதல் மகன். இவன் பிறந்தது பூசநட்சத் திரம். இவனுக்கு விசயராசேந்திரன், ஆகவமல்லகுலகாலன், கல்யாணபுரங்கொண்ட சோழன், வீரராசேந்திரவர்மன், சயங் கொண்ட சோழன், என்னும் சிறப்புப் பெயர்களும் உண்டு. இவ னுக்குக் கி. பி. 1018-இல் இளவரசுப் பட்டம் கட்டப்பட்டது. இவன் கி. பி. 1044 முதல் கி. பி. 1054 முடிய ஆட்சி புரிந்தான்.

இவனுடைய செயல்களை இவனுக்கு இளவரசுப் பட்டம் கட்டியதிலிருந்து எண்ணவேண்டும். இவன் மனைவியார் திரைலோக்கியமுடையார். இவன் இராசகேசரி என்னும் பட்டம் உடையவன். இவனுக்கு மூன்று மெய்க்கீர்த்திகள் உண்டு. அவைகள் "திங்களேர் பெறவளர்", "திங்களேர் தரு", "திருக்கொடியொடு தியாகக் கொடி" எனத் தொடங்குகின்றன. இவன் கொப்பத்துப் போரில் உயிர் துறந்தான். இவன் "கல்யாணபுரமும் கொல்லாபுரமும் எறிந்து யானைமேற் றுஞ்சின உடையார் விசயராசேந்திரதேவன்" எனக் கல்வெட்டுக்களில் குறிக்கப் பெற்றுள்ளான். யானைமேலிருந்து போர் செய்கையில் பகைவனுடைய அம்புக்கு இலக்காகி உயிர் நீத்த காரணம் பற்றி "யானை மேற்றுஞ்சின தேவன்" என இம் மன்னன் அழைக்கப் பெற்றான்.

கல்வெட்டுத் தோன்றிய காலம்: 1018+29=கி. பி. 1047.

## மெய்க்கீர்த்திப் பகுதியால் அறியப்படும் செய்திகள்

உறவினர்களுக்கு மகுடஞ் சூட்டி நாடு கொடுத்தது: பாண்டியர், திருவாங்கூர் அரசர், மேலைச் சளுக்கியர், இலங்கை அரசராகிய விக்கிரமபாஹு இவர்களோடு போர் நிகழ்த்தியது.

இவனது ஆட்சிச் சிறப்பு: வில்லவர், மீனவர், வேள்குலர், சளுக்கியர், வல்லவர், கௌசலர், வங்கணர், கொங்கணர், சிந்துரர், ஐய்யணர், சிங்களர், பங்களர், ஆந்திரர் முதலான அரசர்கள் இட்ட திறை (கப்பம்)களுடன் தன் குடிகளிடமிருந்து ஆறில் ஒருபாகம் வரி வாங்கியும், நான்மறையவர்களுக்கு விரும்பிய வண்ணம் கொடுத்தும், மனுநெறி நின்று அசுவமேதஞ் செய்து ஆண்டான்.

## மெய்க்கீர்த்திப் பகுதிக்குக் குறிப்புரை

தன் சிறிய தாதை – தன் சிற்றப்பனாகிய எறிவலி கங்கை கொண்ட சோழன்.

குறிக்கொள் – தன் மதிப்புக்கு உரியவர்களாய் இருந்த.

ஆனா – நீங்காத.

தந்தி வாரணம் - யானையின் பெயர்.

வேணாட்டரசு - திருவாங்கூர் அரசனை.

இராமகுடம் – எலிமலைக்குப் பக்கத்திலிருந்த ஒரு சிறுராச்சியம்.

வஞ்சியம் புதுமலர் மலைந்து - வஞ்சிமாலைசூடி (புறப்பொருட்டுறை).

வேலைகெழு - கடற்கரைக்கு அருகிலுள்ள.

விருதறை - தங்கள் விருதுகளைக் கூறின. நெடுமொழி வஞ்சி.

கவ்வை யுற்றோட - துன்புற்றோட.

தவ்வை - தமக்கை.

கம்பிலி - இது பல்லாரி ஜில்லாவிவ் ஹாஸ்பேட்டைத் தாலுகாவில் உள்ள ஒரு நகரம்.

முகந்து - பெற்று.
விஸ்வலோகத்து - எல்லா உலகத்தும்.
செயங்கொண்ட சோழன் - முதலாம் இராசாதிராசனின் சிறப்புப் பெயர்களில் ஒன்று.

## உரைநடைப் பகுதியால் அறியப்படும் அறச்செயல்

செங்காட்டுக் கோட்டத்து மாகணூர் நாட்டு, மணிமங்கலமான இராச சூளாமணிச் சதுர்வேதி மங்கலத்துச் சபையார், அவ்வூர்க் காம கோடி விண்ணகர ஆழ்வார் பண்டாரத்திலிருந்து நூறு காசை வட்டிக்குக் கொண்டு அக்காசு நூற்றுலும் வந்த வட்டிக்கு இறை கரத் தூட்டாக இரண்டாயிரத்து இருநூறு குழி நிலத்தைக் கொடுத் துள்ளனர்.

## உரைநடைப் பகுதிக்குக் குறிப்புரை

ப்ரஹ்மஸ்தானம் - பஞ்சாயத்துக் கூடும் இடம்.
தனுநாயிறு - மார்கழி மாதம். (ஞாயிறு - மாதம் என்ற பொருளில் இருக்கிறது.)
த்வீதீயை – இரண்டாம் திதி.
ஸ்ரீகாமகோடி விண்ணகர ஆழ்வார் - மணிமங்கலமான இராச சூளாமணி சதுர்வேதி மங்கலத்தில் எழுந் தருளியிருக்கும் திருமாலின் பெயர். இக்காலம் இத் தேவரின் பெயர் இராச கோபாலப் பெருமாள் என்று வழங்கப் பெறுகின்றது.
இறை கரத்தூட்டாக - வரியைக் கையில் கொடுத்து விடுவதாக.
தடி - வயல். (இக்காலம் தஙீ என்று வழங்கப் பெறுகின்றது.)

## அரிய குறிப்பு

சோழ மன்னர் ஆறிலொரு கடமை வாங்கி வந்தனர் என்பதற்குக் கல்வெட்டு ஆதாரம்: "ஆறிலொன்று அவனியுள் கூறுகொள் பொருள்களு முகந்து"—என்னும் முதலாம் இராசாதிராசனின் மெய்க்கீர்த்திப் பகுதியே ஆதாரமாகும்.

# 16. இரண்டாம் இராஜேந்திர தேவன் கல்வெட்டு*

1. ஸ்வஸ்திஸ்ரீ திருமாது புவியெனு(ம்) பெரு(ம)ாத(ர்இவ)ர் (தங்மா)ெ(த) வியர்களாக மீெ(த)ாளிெ(வ)ண்குடை (யுயர்த்)து (தி)ண்கலி பெயர்த்து(த)ன் சிறிய(த)ாதை யாகிய எறிவலி கங்கைகொண்ட சோழ(ஊெ)பாங் (கி)கல் இருமடி சொழநென்(றும் பொருமுரட்டன்றிரு-

2. த்(த)ம்பியர் த(ம்மு)ள் ெ(வ)ன்றி கொ(ள) முமமடி (ெ)சாழஊத் தெ(ம்)முஊ (ய)டு (தி)ற(ற்) சொழ பாண்டி(ய) ெ(ந)ன்றுங் கொழிமன்ருெடுக(ழ)ல் (வீ)ர சோழஊப் படி பு(க)ழக் கரிகால சொழநென்றும் பொரு தொழில் வாள்வலித் தடக்கை மதுராந்தகஊ-

3. சொழ கங்கநென்றுந் தொள்வலி மேவிகல பரா(ந்த)க தேவஊ சொள(வ) யெ(ா)த்திய ராஜ ெ(நன்று(ம்) துயரத் தன்பொடு கருது காதல(ரு)ள் இத்(த)ல(ம்)பு (க)ழ ராஜெந்திர சோ(ழ)ஊ உ(த்த)ம சோழநென்று (ந்தெ)ா (த்)தணிமு(டை)க (யவிழ)லங்கல் முடி கொ-

4. (ண்)டசொழஊ இ(க)ல்விசையாலெ(ய)நென்றும்புகர்முகத் தெழுயர்களிற்று செ(ா)ழ ெ(க)ர(ள)ஊ வார்சிலெ சொழ (ெ)கரள (ெ)நன்று(ம்) திண்டிறற் கடார(ங்) கொண்ட சொழஊ தினகர(ன்) கு(ல)த் (துசி)றப்பமர் சோள ஜனகராஜ நென்றுங் கஊகடல்படி-

5. கொண்ட பலபு(க)ழ் முடிகொண்ட சோழஊ சுந்தர சொழநென்று(ஞ்) செந்தமிழ்(ப்) பிடிக(லி)ரட்டபாடி கொண்ட சொழ(ஊ) தொல்புவியாளு(டை)டச் சொழ கன்னகுச்சிய ராஜநெ(ன்)று பின்னுந்தன் காதலர் காதலர் தம்முள்மெத(கு) கதிராங்க(ஊ) கழ-

6. ல் மதுராந்தகஊ வெல்படைச்சொழ வல்லப நெ(ன்)று மானசிலெ (க்கை)யெ(ா) ராஊச்செவகஊ நிருபெந்திர சொ(ழ) நென்(று)ம பரும(ணி)ச் சுடர்மணிம(கு)டஞ் (சூ)ட்டிப் படிமிசை நிகழு நாளினு(ளி)க(ல்) வெட்டைழு (ந்து)செ(ன்)ருெ (ண்)டிற (லி)ட்டமண்-

---

* S.I.I., Vol. III, Part I, No. 29.

7. டலமெய்தி நதிகளுநாடும் பதிகளுமநேக மழி(த்)த (ன)ன் வளவநெ(ன்)னு மொழிப் பொருள்கெட்டு வெக வெஞ்(ச)ளுக்கி ஆகவம(ல்)லன் பரிபவமெனக்கி தென் றெரி(விழி)த் தெழுந்து செப்பருந்திர்த்த கொப்பத் தகவையில் சென்றெதி-

8. ரென்றமர் துடங்கிய பொழுதவ(ன்) செஞ்சர மாரிதன் குஞ்சரமுகத்தி(னு)ந்த(ன்) றிருத்துடையிலுங்குன்றுறழ் புயத்(திலு)ந்தைய்க் (க)வுந்த(ன்னு)ட(ன்) களிறெறிய தொடுகழல் வீரர்கள் மடியவும் வகையாதொருத(னிய) நெகம் பொருபடை-

9. வழங்கியும் மொய்ம்பமர்(ச)ளுக்கி தம்பி ஜயசிங்கனும் பொர்ப்புலி கெசியுந்தார்த்(த) சபன்மனுமான மன்னவ ரில் மண்டலி அசொகையநும் ஆநவண் புகழாளுமாரை யனுந் தனிவர்மட்ட விழலங்கல்மொட்(டை)ட யனுந்தி (ண்)டிறல் நன்னி நுளம் பனுமெனு-

10. மிவ(ர்) முதலியர் எண்ணிலியரைச(ை)ரவி (ண்ண)கத் தெற்றிவன்(னி)ய ரெவ்னும்வ(ய)ப் படைத்துத்த(னு)ங் கொ(ன்ன)வில் படைக்குண்டமய (னு)ம் என்றி (ன்)ன வெஞ்சினவரைச ரொடஞ்சிய சளு(க்)கி குல குலைந்து தலைமயிர் விரி(த்)து (வெனு)ற (ொ)நளித்(து)ப் பின்னுற-

11. நொக்(கி) கால்பறிந்தொடி மெல்கடல் பாயத் துரத்திய பொழுதச் செருக்களத்தவன் விடுசத்துரு பயங்கரன் கரபத்திர மூலபத்திரஜாதி பகட்ட(டை) ரசநெக(மு) மெட்டு நடை பரிகளுமொட்டக நிரைக(ளு)ம் (வ)ராக வெல்கொடி முதல் ராஜபரிச் சந்நமும்-

12. ஒப்(பி)ல் சத்தியவ்வை சாங்கப்பை யென்றிவர் முதல் தேவியர் குழாமும் பாவ(வ) யரிட்டமு மெனையன பிறவு முனைவயிற்கொண்டு விஜைய அபிஷேகம் செய்து தெந்திசைவயிற் பொர்ப்படை நடாத்தி(க்) கார்க் கட லிலங்கையில் விற(ற்)படைக் கலிங்கர்(ம)-

13. ன் வீரசலாமேகனைக் கடற் களிற்றொடு மகப்படக் கதிர் முடி (க)டிவித் திலங்கையற் கிறைவன் மாநாபரணன் காதலரிருவரை களத்திடைப் பிடித்து மாப்பெரும் புகழ் (மி)க வளர்த்த கொப்பர கெஸரி (பந்மர)ாந(உ)டை (ய)ார் ஸ்ரீ ராஜெந்திர தெவற்(கு)யாண்டு நாலாவ-

14. து(நா)ள் அம்(உ) ஜயங்கொ(ண்)ட சோழ மண்டலத்து செங்காட்டுக் கொட்டத்து மாகணூர் நா(ட்)டு ராஜ

சூளா மணிச் ச(து)ருப் பெதிம(ங்) கலத்து மகாஸபை யோம். இவ்வாட்டை ஸிம்ஹநாயற்று அபரபக்ஷத்து அஷ்டமியும் வியாழக்கிழமையும்-

15. பெற்ற ரொஹிணிநாள் எம்மூர் ப்ரஹமஸ்தாந மண் டப(த்)தெ கூட்டக் குறைவறக் கூடியிருந்து எங்களூர் ஸ்ரீமத் துவராபதியான ஸ்ரீ காமக்கெ(ா)டி விண்ணக ராழ்வார்க்கு குடுத்தநிலம(ாவ)து எங்களூர் தென் பிடாகை அமண் பாக்கத்து நில-

16. ங் கிழ்பாற்கெல்லெ மண்ணிக்காலுக்கு மெற்கும் தென் பாற்கெல்லெ மண்ணிக்காலுக்கு வடக்கும் மெல்பாற் கெல்லெ.

17. அரைசங் குட்டத்துக்கும் நங்காசி யென்னும் புலத்துக் குங் கிழக்கும் வடபாற்கெல்லெ பழுவூர் நக்கப்புத்தெரி கரைக்குதே-

18. (ற்)கும் இத்தெவர்க்கு முன்பு குலாலெகை பண்ணின நிலத்துக்கு தெற்கும் ஆக இன் நாற்பாற் கெல்லெக்கும் நடுவுபட்ட நி-

19. (லமு)ம் ஒடையு முடைப்பும் மெநொக்கி(ன)மரமும்(கி) ணொக்கிய (கி)ண று(ம்) இந்நாற்பாற் கெல்லெக்கும் நடுவுபட்ட-

20. (தெ)ல்லாம் ஸெ(ஞ) பதிகள் ஜயங்கொண்ட சொழ பிர்மாதி ரா(ஜ)ர் தாயார் காமக் கவ்வையள் பக்கல் ஸ்வம் கொண்டு சந்திரா-

21. தித்தவற் இன்நிலத்துக்கு இறையி(று)த் (து)க்குடுப் பொமாநொம், மஹாஸபையொம். (ஸ)பை(யு)-

22. ளிருந்து கரையிட்டுக் கரைப் பொங்து ப(ணி)த்த காராம்பி செட்டு நாராயணக் கிரம வித்தனும் இராயூர் ச-

23. ந்திரதெவ அத்தாழிக் கிரம வித்த(னும்) ஸஹணை மாத வக்கிரம வித்தனும் பணிப் பணியால்-

24. பணிகெட்டு (எ)ழுதி நென். இவ்வூர் ஊர்க் கரணத்தான் அலங்காரன் சீராமநென் இவை என் எழுத்து.

விளக்கவுரை

இருக்குமிடம்: செங்கற்பட்டு ஜில்லா காஞ்சிபுரம் தாலுகா மணிமங்கலம் இராசகோபாலப் பெருமாள் கோயில் உள் பிராகாரத்துக் கீழைச் சுவரின் வெளிப் பக்கத்தில்.

கல்வெட்டின் எழுத்து: தமிழும் கிரந்தமும்.

கல்வெட்டில் குறிக்கப் பெற்ற அரசன்: இரண்டாம் இராசேந்திர சோழன்.

## அரசனைப் பற்றிய பொதுக் குறிப்பு

இவன் கங்கை கொண்ட சோழன் என வழங்கும் முதலாம் இராசேந்திர சோழனின் இரண்டாம் மகன். இவன் 1068 முடிய ஆண்டான். எனினும் இவனுக்கு 1051-இல் முடிசூட்டப்பெற்றது ஆதலின் இவனுடைய செயல்களைக் கி. பி. 1051-லிருந்து கணக்கிட வேண்டும். இவன் பரகேசரி என்ற பட்டமுடையவன். இவனுக்கு மூன்று மெய்க்கீர்த்திகள் உள்ளன. அவை "இரட்டபாடி ஏழரை இலக்கமுங்கொண்டு" "திருமாது புவியெனும் பெருமாதர்" "திருமகள் மருவிய செங்கோல் வேந்தன்றன் முன்னோன் சேனை" எனத் தொடங்குகின்றன. இவன் தன் தமையன் முதலாம் இராசாதிராசனுக்குப் பல வகையிலும் உதவி புரிந்தவன். இவனுக்கு, கிழானடிகள் என்னும் மனைவியாரும், ஆறு புதல்வர்களும், மதுராந்தகி என்னும் மகளும் இருந்தனர். இம்மதுராந்தகியே கீழைச் சளுக்கிய அரசனாகிய இரண்டாம் இராசேந்திரனுக்கு (முதற் குலோத்துங்கனுக்கு) மணஞ் செய்து கொடுக்கப் பெற்றவர்.

## மெய்க்கீர்த்தியால் அறியப்படும் செயல்கள்

இராசேந்திர சோழன் தன், சிற்றப்பன் எறிவலி கங்கைகொண்ட சோழனுக்குப் பொங்கிகல் இருமுடிச் சோழன் என்றும், தம்பியர்களுள் 1. மும்முடிச் சோழனுக்குத் தெம்முனை அடுதிறல் சோழ பாண்டியன்; 2. வீரசோழனுக்குப் படிபுகழ்க் கரிகால சோழன்; 3. மதுராந்தகனுக்குச் சோழ கங்கன்; 4. பராந்தகதேவனுக்குச் சோள அயோத்திய ராஜன் எனவும்; புதல்வர்களுள் 1. இராசேந்திர சோழனுக்கு உத்தம சோழன்; 2. முடிகொண்ட சோழனுக்கு இகல்விசையாலயன்; 3. சோழ கேரளனுக்கு வார்சிலை சோழ கேரளன்; 4. கடாரங் கொண்ட சோழனுக்குச் சோள ஜனக ராஜன்; 5. முடிகொண்ட சோழனுக்குச் சுந்தர சோழன்; 6. இரட்டபாடி கொண்ட சோழனுக்குச் சோழ கன்ன குச்சிய ராஜன் எனவும்; பேரர்களுள் 1. மதுராந்தகனுக்கு வெல்படைச் சோழ வல்லபன்; 2. ஆனைச் சேவகனுக்கு நிருபேந்திர சோழன் எனவும்; பட்டங்களைக் கொடுத்து மகுடங்களைச் சூட்டினான். கொப்பத்திலும் இலங்கையிலும் போர் செய்தான்.

## மெய்க்கீர்த்திப் பகுதிக்குக் குறிப்புரை

திண் கலி - வறுமை

எறிவலி கங்கை கொண்ட சோழன் - இவன் முதலாம் இராசராசனுடைய இரண்டாவது மகன்.

மும்முடிச் சோழன் - சேர, சோழ, பாண்டிய நாடுகள் ஆகிய மூன்றுக்கும் அரசனென்று முடிசூட்டப் பெற்றவன்.

தெம்முனை அடுதிறல் - தெற்கே யுள்ளவர்களைப் போரில் வென்ற வல்லமையுடைய.

கோழிமன் - உறையூர்க்கு அரசனு யிருந்த

இகல் - வலிமை.

புகர்முகத்து - முகத்தில் புள்ளிகளோடு கூடிய.

ஏழுயர்களிறு - ஏழு முழம் உயர்ந்திருக்கும் யானை. இதுவே பட்டத்துக்கு உரியதாகும்.

செந்தமிழ்ப் பிடிகளிற்று : செந்தமிழ் நாட்டிலுள்ள பெண், ஆண் யானைகள் அடங்கிய சேனையையுடைய.

கன்னக்குச்சியம் - கன்னேசிராச்சியம்.

காதலர் காதலர் - பேரர்.

ட்ட மண்டலம் - இரட்டபாடி.

பதிகள் - நகரங்கள்.

பரிபவம் - அவமானம்.

செப்பருந்தீர்த்தக் கொப்பத்து - சொல்லுதற்கருமை வாய்ந்த தீர்த்தத்தை உடைய கொப்பம். எனவே கொப்பம் புண்ணியதல மென்று பெறப்படுகின்றது.

அகவையில் - இடத்தில்,

அவன் செஞ்சரமாரி - ஆகவமல்லன் வர்ஷித்த அம்பு மழைகள்.

சளுக்கி தம்பி - ஆகவமல்லனுடைய தம்பி.

வன்னியர் ஏவனும் - வன்னியர்களுள் ஏவன் என்னும் பெயரையுடையவனும்.

வன்னியர் - படைத் தலைவர். "நாற்படை வன்னியராக்கிய பெருமாள்" என்பது கல்லாடம்.

கொன்னவில் படை - பெருமையாகப் புகழப்படுகின்ற படையையுடைய.

வெந்நுற - முதுகு காட்டி.

பகட்டரைசு - அரச யானைகள்.

பத்திரசாதி யானை - இதன் உயரம் ஏழு முழம். நீளம் எட்டு முழம். வயிற்றின் சுற்றளவு பத்து முழம். (சுக்கிரநீதி— 4–ஆம் அத்தியாயம் பக்கம் 307-இல் காண்க.)

எட்டு நடை பரிகளும் - மிக வேகமுடைய குதிரைகளும்.

கடிவித்து – பிடுங்கிக் கொண்டு.

## உரைநடைப் பகுதியால் அறியப்படும் அறச்செயல்

மாகணூர் இராச சூளாமணிச் சதுர்ப்பேதி மங்கலத்து மகா சபையார் சேனுபதிகள் சயங்கொண்ட சோழ பிர்மாதிராயரின் தாயார் காமக்கவ்வையள் பக்கம், பொருள் பெற்றுத் தங்கள் ஊரின் தென்பாலுள்ள சிற்றூராகிய அமண்பாக்கத்தில் குறிப்பிட்ட நான்கு எல்லைக்கு உட்பட்ட நிலத்தை வாங்கிக் காமகோடி விண்ணகர ஆழ்வார்க்குக் கொடுத்துள்ளனர்.

## உரைநடைப் பகுதிக்குக் குறிப்புரை

ஸிம்ஹ நாயற்று - (சூரியன் சிம்ஹலக்கனத்தில் பிரவேசித்தல்) ஆவணி மாதம்.

ரோகணி நாள் - உரோகணி நட்சத்திரம்.

த்வாராபதி - கண்ணபிரான்.

பிடாகை - சிற்றூர்.

நங்காசி - வயலின் பெயர்.

சிலாலேகை - கல்லெழுத்து.

ஸ்வம் - பொருள். (Funds என்று டாக்டர் உல்ஷ்துரை எழுதியுள்ளார்.)

கரைஇட்டு - எல்லை இட்டு.

கரைப் பொந்து பணித்த - மேற்பார்வை செய்த.

கராம்பி செட்டு - இது பிராமணருடைய குடிப் பெயர்.

பணிப்பணியால் - பணித்த உத்தரவால்.

# 17. வீரராசேந்திரன் கல்வெட்டு*

1. ஸ்வஸ்திஸ்ரீ திருவளர திரள் புயத் திருநிலவலேயந்தன் ம(ணி)ப்பூணெனத் தாங்கிப்பன்—

2. மணிக் கொற்ற வெண்குடை (நி)ழல் குவலேயத்துயிர் களேப் பெற்ற தாயினும் பெணி மற்றுளவறை—

3. கழலரயர் தநடிநிழலொதுங்கவுறைபில(த்)துடை கலி(ஒ) துங்(க) முறை செய்து விரைமலர்த்தெரியல் விக்க லன்றன்—

4. நொடுவரி(சி)லே(த்)தட(க்கை) ம(ா)சாமந்தரை(க்க)ங்க பாடிக்களத்(தி)டை நி(ன்)று(ந்து)ங்கபத்(தி)ரி (பு)கத் துரத்தியாங்கவர் வெங்கைநஞட்(டி)டை (மீட்டு)—

5. மவர் விட்ட தாங்கரும் பெருவ(லித்த)ண்டு கெடத் தா(க்கி) மாதண்ட (ந)ாயக(ன்) சாமு(ண்)ட (ரா)யனேச் செற்றவன் சிரத்திணேயறுத்(து ம)ற்றவ நொரு(ம)க ளாகிய

6. இருகயன்றெவி நாகவையென்னுந் (தெ)ாகயஞ் (சாய)லே முகத்தொடு (மூக்கு )வருக்கி ப)கை(த்தெதி)ர் மூ(ன்ரும்) விசையினுமெ(ன்)றெதிர் பொருது பரிபவ—

7. ந்திர்வது எனக்கருதிப் பொருபுன(ல்) கூடல(ர்) சங்(க)த் தாகவமல்லன் ம(க்க)ளாகிய (வி)க்கல(ன்) சிங்கண நென்றிவர் தம்மொடுமெணில் சாமந்த(ரை) வென் (றடு)தா—

8. சிமுனே விட்டுத் தன்றுணே மன்னரு (ந்த)ானும் (பி)ந் ந(டு)த் திருந்து (வ)டகடலென வகு(த்)த வத்தானே (யை)க்கடக்க(ளி)றுென்ருற் கலக்கி அடற்பரி கொசலே சிங்கனே கொ—

9. டிப் படைமுன்னல் (தூ)சி வெங்களிற்றுெடுந்துணித்து கெசு(வ) தண்டநாயகன் தார்க்கெ(த்தர)யன் திண்டி ற(ல்) மாரயன் சினப்பொத்தரய (னி)ரெச்சயனிகல் செய் பொற்—

10. கொதை (மூ)வத்தியென்ருர்த்தடுது(ப்) பிலநெக சாமந் தரை சிங்க (பி)ன்னஞ் (செ)சய்து (பின்னே) முத(லிய)ான மதுவண நொட (விரி)த்தலேயொ (டுவிக்கல)—

* S. I. I., Vol. III, Part I, No. 30.

11. நொட செ(ச)ருத் தொ(ழி)லழிந்து (சிங்கண)னுடை அண்ண(ல்) முதலி(ய ரனை(வ)ருமமர் பொர்ப்பண்ணி(ய) பகடிழிந்தொட தண்ணியவாகவ ம(ல்)லனு மவ(ர்)க்குமு (ெ)நா—

12. ட வெக (ெ)வ(ங்) களிற்றினை (வி)லக்கி வாகை கொண் டங்கவர் தாரமுமவர் குலதன(மு)ஞ்ச(ங்)குந் தொங்க லுந்தாரையும் பெரி(யு)ம் வெண்சாமரையு மெகடம்பமும் சூகரக் கெ(ாடி)யு(ம்)

13. மகர ெ(த)ாரணமும் புட்பகப்பிடியும் பொருகளிற் றீட்ட மும் (பா)ய் பரித்(தெ)ாகையொடு(ம்) பறித்து செ(ெ)யாளி வீர சி(ங்)காசநம் ப(ா)ர் (தெ)ாழ வெறி எழில்தர உல(க) முழு துடை(ய)ா (ளெ)ா—

14. டும் விசை(ய) மணிமகுட (மெ)ய்ந்து எழில் கொள் த(த்)துமா புர(வி)ப் பொத்தப்(பி) வெந்தனை(வா)ர(னை) வ(ன்) கழற் கெரளன்றன்னை ஜனநாதன் றம்பியை(ய)ப் பொ—

15. ர்க்களத் (த)லங்கல்சூழ் பசுந்தலையரிந்து பொ(ல)ங்கழல் ெ(த)ன்னனை ஸ்ரீ வல்ல(வ)ன் மகன் சிறு(வ)ன் மின்ன வில் ம(ணி)முடி வீரகெசரியை(ய) மதவரையொன்ரு—

16. (லுதைப்பித்து)லகையிற் கெரளர் த(ங்)குல செங்கீரை யொடும் வெரறப்பறிந்தொ(டி) மெல்கடல் வீழவாரண ம(ருகு)ளி செலுத்தி வாரியி லெண்ணருங் களிற்றின்

17. இரட்டரைக்கவர்ந்த கன்னியர் களிற்றெருடுங் கட்(டி) பண்ணுப் (பிடி)ெ(யா)டு (மா)ங்கவர் (வி)டு திறை (ெ)காண்டு (மீ)ண்டு சூழ்பு(னற்ெ)காண்(டா)ற்றுறவிற் குறித்தவெம்—

18. பொரில் தண்ட நாயகர் தம்மில் திண்டிறல் மல்லிய ணனையு மஞ்சிப்பயனையும் பில்குமதக்களிற்று(ப்) பிரம தெவனை(யு)ந்தண்(ட)ாரசொகயன்றனையுமொண்டி—

19. றற் சத்தியணனையுஞ் சந்துவிக்கர (ஹ)ப்பத்தியண(ன்( றன்னையுமத(தகர்) தெமரு தெரியல் வீமயன்றனையு மாமதி வங்காரனையும் நாமவெற்கங்கனை நுள—

20. ம்ப(னை)க் காடவர் கொனை மங்குமத ய(ா)னை வைதும் பராயனை யி(ரு)ந்தலை (ய)ரிந்து பெ(ரும்)புனற்றனு(து) கங்கை (ம)ாநகர் தைத்த மின் திங்களில் வழி வரு சளுக்கி

21. பழியொடு வாழ்வதிற் சாவது சாலநன்றென்றெவ முற்றி நித்(ய)சிந்தயநாகி முன்னம் புதல்வருந் தாநு மு(து)கிட்டுடை(ந்த) கூடலெய்க (ள)மெ(ன)க்குறித்த கூட(லி)—

22. ல் வாராதஞ்சினர் மன்னவரல்லர் பொர்ப்பெ(ரு)ம் பழிப் பிரட்டராக வெ(ன்)றியாவருமறிய வெழுதிய (ப)திக மெவருமொலை விடையெ(ர)டுங் குடுத்த விரட்ட—

23. பாடிப்பிரட்டர்கள் கங்கா ெ(க)த்தணையெவ (அங்) கவ(ன்) வந்தடியிணை வணங்கிய் வ(ரச)க முண(ர்)த் தலும் சிந்தையுமுகமு(ந்தி)ருப்பு(ய) மிரண்டுமெங்தெழி லுக(ை)வ ெ(யா)டிரு—

24. (மடங்)கு பொலியப் பொந்தப் போர்க்க(ள)ம் புகுந்து காந்தையில் வ(ல்ல)வர் கொணை வ(ர)வு காணுது சொல் லிய நாளின் மெலுமொர் திங்கள் (பார்த்திருந்த பி)—

25. ன்(ை)ப் பொத்(த)வன் கால்கெடவொடி மெல்கட லொளித்தலுந் தெவநாதனுஞ் (சி)த்தியுங் கெசியு மூவருந்தனித்தனி முதுகிடப் பரவரு(மி)ரட்டபாடி யெழரையிலக்க—

26. முரட்டொழிலடக்கி முழங்கெரி மூட்டி வெங்கதிர் புலி யெறுவியந்து விளையாட(த்) து(ங்)க பத்திரிக்கரை ஐயப(த்)திரத்தூண் நாநிலம் பரச நாட்டி மெநாள்வ—

27. ந்த பிரட்டனை வல்லவ நாக்கிச்சுந்தரக்க(ண்)டிகை கட்டி புரசையானை புழைக்கையிற்பிழைத் திவ்வு(ல)க மறிய வொடிய பரிசொருபலகையிற் பழு(த)ற வெய்திய பின்னை சார்த்தி—

28. னவு(ை)றயுஞ் சளுக்கி பதம் பெற்ற பூத்தினமார் வொடும் பூட்டிப் பெர்த்(து)ந்தான் கைகொண்ட வெங்(ை)க நன்(ந)ாடு மீட்டுக் கொ(ண்)டலால் மீள் சில(ங்)கெட்டிநீ வல்(லஞ)கில் வ(ந்து)—

29. காக்கெ(ன்)று சொல்லி யெடுத்தவத்தானை வி(ை)சய வாடையொ(ட)டுத்(த) பெர(ா)ற்றில் (த)டுத்த ஜன நாத(ன)யுந்தண்ட நாயக(ஞ)மி(ன)மார் கடக்களிற்றி ராஜமயனையு முப்பரசனையு முதலாகவுடை(ய) வப்பெருஞ் சேனையை அடவியிற்பாய்ச்சி (ெ)காதாவிரியில் தன் பொதகநீருண்ணக்க லிங்கமுங் கட(ந்த)ப்(பா)ல் (ச)க் கர கொட்டத்(த)ப்(பு)—

30. றத்தளவு மெவரு(ந்த)ாணைத் தாவடி செலுத்தி வெங்கை நஞ(டு மீ)ட்டுக் கொண்டு தன் பூங்கழற் கடைக்க(ல)ம் புகுந்த (மை)டக்கலத்தடக்கை விஜெ—

31. யாதித்தற் கருளி விசை கொடு மீண்டு விட்ட(ரு)ளி இகலி(டை)டப்(பூ)ண்ட ஜயத் திருவொடுங் கங்காபுரி புகுந்தருளி அங்கே ராஜாதி ராஜராஜங்—

32. நெ(னத்) தரா(தி) பராக(த்)தம் நியமத்தியற்றிப் படியில் மன்னவரடி தொழுதெத்தவின்மணிப் பீடத்திருந்து வெங்(டை)கநஞட்டிநிற்கொண்ட வி—

33. ருநெ(தி)ப்பிறக்கம்(வ)ரிசையிற்க(ா)ட்டி ஆழியு நிகள மு(ங்)கழற்றி யாங்கவர் வா(ழி)ய விரதமாற்றி (சூ)ழி மஞ்செ(து) வரம்பாட் செங்(ெ)கால் செலு—

34. த்தி மெதினி விளக்கி மீதுயர் வீரத்தநிக்கொடி (தியா) கக்கொடியொடு மெற்பவ(ர்) வருகென்று நிற்ப பொர்த் தொ(ழி)லு(ரிமை) ம(யி)லெ—

35. ய்(தி) அரசு வீற்றிருந்து மெவருமநு(ெ)நறி(வி)ளக்கிய கொராஜகெ சரிவன்ம ரான உ(டை)டயார் ஸ்ரீ வீர ராஜெந்திர—

36. தெவர்க்கு யா(ண்)டு அஞ்சாவது ஜயங்கொண்ட சோழ மண்டல(த்து) செங்காட்டுக் கொட்டத்து மாகணூர் நாட்டு ம(ணி) மங்கலமான ராஜ சூளாமணிச்சதுவெதி ம(ங்)கல—

37. த்து மகாஸபையோம். இவ்வாட்டைக்கன்னி நாயற்று அபரபட்சத்து சதுர்த்தஸியுந்திங் கட்கிழமையும் பெற்ற உத்திரத்(து) நாள் எம்மூர் பிரஹமஸ்தானம்—

38. பெரிய மண்படத்தெ தம்மி செய்து கூட்டக் குறைவறக் கூடியிருந்து இவ்வூர் ஜீவிதமு(டை)ய(ெ)ஸ நாபதிகள் ஜய(ங்)கொண்ட சோழ பிர்மாதிராஜர் தமப்பந(ா)—

39. ர் மஞ்சிப்பயநாரான ஜயசிங்க குலாந்தக பிர்மராயர் பக்கல் நாங்கள் ஸ்வங்கொண்டு முன்பிவர்க்கு இ(டை)ற யிலியாக(க்) குடுத்து இவருதாயிவ(ர்) அ—

40. நுபவித்து வருகிற நிலமாவது இவ்வூர் பெருந்தூம்பு நின்றும் பொன பெருங்காலுக்கு கிழக்கு பார(த) வாய்(க்)காலுக்கு வடக்கு இவர் விலை கொண்டுடை—

41. ய கமுகந்தொட்டங்குழி இருநூற்றைம்பதும் பெரியெரி கரைக்கு கிழ(க்கு ப)னை ய(ந்த)ஞ்செரித் தூம்புக்

காலு(க்கு) (த்தெற்கும்) வடக்கு கொர(ஞ்சிஉருத் திரகிர மவித்தந்

42. தொட்டத்(து)க்கு தெற்கு பெருவதிக்கு மெற்கு(ங் கிழக்கு) மற்று தேவ(த)ானம்(நீ)க்கி குழி நாலாயிரத்து இருநூறும் ஆக இவ்வூர்க்கொலா—

43. ல் குழி நாலாயிரத்து நா(நூ)ற்றைம்பதும் இவ்வூர் ஸ்ரீமத் துவரா பதி ஸ்ரீ காமக்கொடிவிண்ணகர் ஆழ் வார்க்கு அர்ச்சனுபோகமாக இந்த

44. (ம)ஞ்சிப்பயநார் ம(க)நார் ஸெநாபதிகள் ஜயங் கொ(ண்)ட சொழ பிர்மாதிராஜர் குடுத்தார் இ(ன்)நிலம் நாலாயிரத்து நாநூற்றைம்ப—

45. து குழியும் சந்திராதித்தவத் இந்த (ஆ)ழ்(வ)ார்க்கு ஸபை யொமெ இறையிறுத்துக் குடுப்பொமாநொ(ம்) மகாஸபை யொம் சபையு—

46. ளிருந்து கரையிட்டு கரைப்பொந்து பணித்தார் பிருந் தூர் பகவநந்திசஹஸ்ரநும் அரணைப்புறத்து தி(ண்)ட கூளமாதவக் கிரமவித்தநும் ஈவு—

47. ணி மாதவ கிரமவித்தநும் பணிப்பணியால் பணிகெட்டு எழு(தி)ெ)நன் ஊர்க்கரணத்தான் வடுகன் ப(ா)க்கர நென் இவை என் எழுத்து.

## விளக்கவுரை

இருக்குமிடம் - செங்கற்பட்டுஜில்லா காஞ்சிபுரம் தாலூகா மணி மங்கலம் இராச கோபாலப் பெருமாள் கோயில் மண்டபத் தின் வடபுறச் சுவர்.

கல்வெட்டின் எழுத்து - தமிழும் கிரந்தமும்.

கல்வெட்டில் குறிக்கப்பெற்ற அரசன் - முதலாம் வீரராசேந்திர சோழன்.

அரசனைப்பற்றிய பொதுக் குறிப்பு - இவன் கங்கை கொண்ட சோழன் என வழங்கும் முதலாம் இராசேந்திர சோழனின் மகன். இவன் இராசகேசரி என்னும் பட்டம் உடையவன். கி. பி. 1063 முதல் கி. பி. 1070 வரை ஆட்சிபுரிந்தான். இவன் பிறந்தது ஆவணி மாதத்து ஆயில்ய நாள் ஆகும். இவனுக்குச் சகலபுவனசிரயன், மேதினி வல்லபன், மகாராசாதிராசன், ஆகவமல்லகுலகாலன், பாண்டிய குலாந்தகன், இராசாசிரயன், இராசராசேந்திரன், வல்லபவல்லபன், வீர சோழன், கரிகாலன், என்னும் சிறப்புப்பெயர்

களும் உண்டு. இவன் தில்லைச் சிற்றம்பலத்துப் பெருமானுக்கு கெம்புகள் பதிப்பிக்கப் பெற்றதும், திரைலோக்கிய சாரம் என்னும் பெயருடையது மாகிய முடியணி ஒன்றை அளித்துள்ளான். இவன் சோழநாடு,துண்டிரநாடு, பாண்டிநாடு, கங்கவாடிநாடு இவைகளில் வேதங்களில் வல்ல நாற்பதினுயிரம் பிராமணர்களுக்கு நிலங்கள் வழங்கியுள்ளான். பாண்டி மண்டலத்தில் மிழலைக் கூற்றத்திலுள்ள பொன்பற்றி என்னும் ஊரின் தலைவனுய் விளங்கியிருந்த புத்தமித்திரன் என்பான், இவ்வரசனின் வேண்டுகோளின்படி வீரசோழியம் என்னும் இலக்கண நூலை எழுதியுள்ளான். இவன் மனைவி அருமொழி நங்கை என்பவர். இவ்வம்மையார் முதலாம் குலோத்துங்க சோழனின் 15-ஆம் ஆண்டு முடிய இருந்த செய்தி தஞ்சை இராசராசேச்சரக் கல்வெட்டால் அறியக்கிடக்கின்றது. இவன் கி. பி. 1070-இல் விண்ணுல கெய்தினுன்.

கல்வெட்டுத் தோன்றிய காலம் – 1063+5=கி. பி. 1068.

## மெய்க்கீர்த்திப் பகுதியால் அறியப்படும் செய்திகள்

மேலைச்சளுக்கியரோடு போர் – ஆகவமல்லனுக்கும் வீர ராசேந்திரனுக்கும் ஒரு ஆற்றின் கரையில் நடந்த போராகும். இதில் மேலைச் சளுக்கிய படைத்தலைவர்களில் மல்லியண்ணன், மஞ்சிப்பையன், பிரமதேவன், அசோகையன், சத்தியண்ணன், வீமய்யன், வங்காரன் என்பவர்களும், கங்கன், நுளம்பன், காடவர் கோன், வைதும்பராயன் என்னும் அரசர்களும் இறந்தனர்.

ஆகவமல்லன் பழியொடு வாழ்வதில் சாவது சாலவும் நன்றென்று கருதி, தானும் தன் புதல்வரும் முதுகிட்டுடைந்த கூடலே போர்க்களமாகக் கொண்டு, தன்னேடு போர்க்கு வருமாறும், அங்ஙனம் வராது அஞ்சினவர் மன்னர் அல்லர் என்றும், போர்ப் பெரும்பழி புரட்டர் ஆவர் என்றும், ஓலை ஒன்றை எழுதி கங்கா கேத்தன் என்பவனிடம் கொடுத்து வீரராசேந்திரனிடம் அனுப்பினுன். அதனைப் பெற்ற வீரராசேந்திரன் சிந்தையும் முகமும் திருப்புயம் இரண்டும் ஏந்து எழில் உவகையோடு இருமடங்கு பொலியப் போர் புரிவதற்கு அவன் விரும்பிய வண்ணம் சென்று, கூடல் சங்கமத்திற்கு அருகிலுள்ள காந்தை என்னும் இடத்தில் அவன் குறித்த நாளிலும் அதற்கு மேல் ஒருமாதமும் காத்திருந்தான். ஆகவமல்லனே குறித்தவாறு வந்துற்றிலன். அவன் அச்சமுற்று மேல் கடல் பக்கம் ஒளிந்து கொண்டான். அதன் பின்னர் வீரராசேந்திரன் அப்பக்கங்களிலிருந்த தேவநாதன், சித்தி, கேசி என்னும் சளுக்கியத் தலைவரோடு தனித்தனிப் போர் செய்து அவர்கள் தோற்ருேடும்படிச் செய்தான். பல இடங்களில் எரியூட்டினுன். துங்கபத்திரைக் கரையில் வெற்றித்தூண் ஒன்றை நிறுவினுன்.

**வேங்கிப் போர் :** வேங்கி நாட்டிற்குச் சென்ற வீரரரசேந்திரனை சேனைத்தலைவர்களாகிய சனநாதன், இராசமய்யன், திப்பரசன் என்பவர்கள் கிருஷ்ணு நதியின் கரையில் தடுத்தனர். இருதிறத்தார்க்கும் விசயவாடாவில் (பெசவாடா) போர் நிகழ்ந்தது. மேலைச் சளுக்கியருடைய சேனைத்தலைவர்கள் தோற்றேடிப் போய் கானகத்தில் புகுந்து கொண்டனர். பின் வீரராசேந்திரன் கோதாவரியில் தன் யானைகளை நீருண்ணச் செய்து, கலிங்கத்தைக் கடந்து சக்கரக் கோட்டத்திற்கு அப்பால் சென்று வேங்கை நாட்டைத் திரும்பக் கைப்பற்றினன்.

**கீழைச் சளுக்கிய மன்னன் அடைக்கலம் புக்கது :** கீழைச் சளுக்கிய மன்னனுகிய விசையாதித்தன் வீரராசேந்திரனுடைய பூங்கழற்கு அடைக்கலம் புக அவன் அருள் செய்தான்.

## மெய்க்கீர்த்திப் பகுதிக்குக் குறிப்புரை

அறைகழல் அரசர்தன் அடிநிழல் ஒதுங்க - அடி நிழல் ஒதுங்குவோர்க்கு வீரகண்டையா என்ற இகழ்ச்சிக் குறிப்பு.

உறைபிலத்துடை – உறைதற் குரிய பாதாளத்தில்.

விரைமலர்த் தெரியல் – வாசனையுடைய பூக்களால் தொடுக்கப்பட்ட மாலை.

விக்கலன் – இவன் மேலைச் சளுக்கிய அரசனுகிய ஆகவமல்லனுடைய இரண்டாவது மகன். சளுக்கியர் வரலாற்றில் ஆறும் விக்கிரமாதித்தன் என்று பேசப்படுபவன் இவனேயாவன். இவனை விக்கி என்றும் அழைப்பர்.

மா - பெருமை பொருந்திய.

சாமந்தர் - அரசனுல் சிறப்பெய்திய சேனுபதிகள் முதலியோர்.

தண்டு - சேனை.

தண்ட நாயகன் - சேனுபதி ; சேனைத் தலைவன்.

கூடல் சங்கமம் - துங்கபத்திரையும் கிருஷ்ணையும் கூடும் இடம்.

மேகடம்பம் - மேற்கட்டி (அ) விதானம்.

சூகரக்கொடி - பன்றிக் கொடி.

மகர தோரணம் - மீன்வடிவம் எழுதப்பெற்ற தோரணம்.

புட்பகப்பிடி - அரசர் தம் பட்டத்து யானைகளுக்கும், குதிரைகளுக்கும் ஓர் பெயர் சூடிக்கொள்வர். இதனை 'காலவேகம் களிமயக்குற் றென' என மணிமேகலை உரையானும் அறிக.

உலக முழுதுடையாள் - முதலாம் வீரராசேந்திர சோழன் தேவி.

பொத்தப்பி வேந்தன் – பொத்தப்பி நாட்டின் அரசன். இக்காலம் கடப்பை ஜில்லா இந்நாடு என்று கொள்ளலாம். அறுபான் மும்மை நாயன்மார்களில் ஒருவராகிய கண்ணப்பர் திருவவதாரஞ் செய்தது இந்நாடேயாகும்.

ADU ARCHIVES
V211:72
108348

செங்கீரை - உவமையாகு பெயராய் இளங் குழந்தைகளைக் குறித்தது.

தேமரு தெரியல் - வாசம் பொருந்திய மாலை.

நாமவேல் - அச்சத்தைத் தரக்கூடிய வேல்.

இருந்தலை - பெரிய தலை.

திங்களின் வழிவரு சளுக்கி பழியொடு வாழ்வதிற் சால நன்றென்றேவமுற் றுன்னிய சிந்தையனாகி——செய பத்திரத்தூண் நானிலம் பரசநாட்டி :—இவ்வடிகளுக்குப் பொழிப்புரை :—

தோற்றுப்போன சாளுக்கியன் தோற்ற பழியோடு வாழ்வதினும் சாவதே மேல் என்று துன்பமுற்று மறுமுறை அவனோடு (வீரராசேந்திரனோடு) போர் புரிந்து வென்றால் புகழும், தோற்று இறந்தால் பழியின்மையும் எய்தலாம் என்று தீர்மானித்து, தானும் தன் புதல்வரும் முன் முதுகிட்டுத் தோற்ற கூடல் சங்கமமே யுத்தகளமென்றும், இக்களத்தில் குறித்த நாளில் உண்மை வீரரும் அரசரும் ஆயின் என்னோடு வந்து போர் புரிக; என்னோடு போருக்கு அஞ்சி வாராதிருப்பாரே யானால் அவர்கள் வீரமுடைய மன்னர் ஆகார். போலி வீரரே யாவர் என்று யாவரும் அறியும்படி சபதங்கூறி, அச்சபத ஓலையை இரட்டபாடி பிரட்டரில் சிறந்தவனாகிய கங்காகேத்தனை உத்தரவு கொடுத்து வீரராஜேந்திரனிடத்தில் அனுப்ப, அவ்வாறே அவனும் வந்து அரசனை வணங்கி சாளுக்கிய அரசன் சொன்ன வாசகத்தை யுரைத்தான்.

அவன் உரைகேட்ட அளவில் வீரராசேந்திரனுக்கு மனமும் முகமும் புயமிரண்டும் முன்னையின் இருமடங்கு பொலிவு எய்தின. ("போரெனிற் புகலும் பொருகழல் மறவர்" என்ற புறநானூறு இங்கு நோக்கத்தக்கது.) நம் வலிகண்டும் நம்மோடு இவ்வாறு சபதங் கூறுகிறானா? என்று சாளுக்கியன் குறித்த யுத்தகளத்துக்குச் சென்றான். அங்கு யுத்த சந்நத்தனாகி நின்றான். குறித்த நாளில் அச்சாளுக்கியன் (வல்லவர்கோன்) வந்திலன். மேலும் ஒருமாத கால அளவும் காத்திருந்தான். அப்பொழுதும் அவன் வந்தானில்லை. என்ன ஆனான்? மறுபடியும் அவன் முன்போலவே கால் நோகும்படி யோட்ட மெடுத்து மேல் கடலிற் போய் ஒளித்தான். அவனுக்குப் பதிலாக அவனது சேனாதிபதிகளாகிய தேவநாத், சித்தி, கேசி என்போர் தனித்தனி வந்து தன்னோடு (வீரராசேந்திரன்) போரிட்டு முதுகிட்டு ஓடினர். உடனே இரட்டபாடி ஏழரை இலக்கத்தைத் தீக்கிரையாக்கி துங்கபத்திரா நதிக்கரையில் புலிக்கொடி விளையாடச் செயத்தம்பம் நாட்டினான். தன்னிடம் யுத்தவோலை கொணர்ந்தவனாகிய கங்காகேத்தன் என்பவனை வல்லவ நாட்டுக்கு அரசனாக நியமித்து, இராசர் அணிதற்குரிய

மதாணிப்பதக்கம் சூட்டிப் பின் குந்தள அரசனும் மக்களும் தன் பட்டத்து யானையின் துதிக்கைக்குத் தப்பி மூன்று முறை தோற்ருேடிய விதத்தையும், அச்சளுக்கியன் “வீரராசேந்திரன் எங்கள் சேனையின் குதிரை, அம்பருத் தூணி முதலியவற்றுடன் கைக் கொண்ட வேங்கி நாட்டையும் மீட்டுக் கொண்டல்லால் திரும்பே” னென்று அவன் சொல்லியனுப்பிய சபதத்தையும் ஒரு பலகையில் எழுதி அப்பலகையை அச் செயத்தம்பத்துத் தொங்க விட்டு.

ஏவமுற்று - துன்பமுற்று. ஏவம்—துன்பம்.

உன்னிய - நினைத்த.

சிந்தை - சிந்தாகுலம். இதனைப் புந்திக்கிலேசம் என்பர் அருணகிரியார். “புந்திக் கிலேசமும் காயக்கிலேசமும் போக்குதற்கே”—கந்தரலங்காரம்.

பிரட்டர் - இச்சொல்லைப் புரட்டர் எனக் கொள்வாரும் உண்டு.

புரட்டர் - என்பது பிரஷ்டர் என்ற வடசொல்லின் திரிபு எனினும் ஆம். பிரஷ்டர்—ஒதுக்கப்பட்டவர், வஞ்சகர், நெறியினின்று வழுவினவர்.

காந்தை - ஓர் ஊர். அல்லது போர்க்களத்தைக் குறிப்பதாகும்.

வல்லவர் கோன் - மேலைச் சளுக்கிய அரசனுகிய ஆகவமல்லன்.

முரட்டொழில் - (முரண் தொழில்) வலிமை மிக்க செயல்.

பத்திரத் தூண் - பத்திரம் எழுதிய தூண், பத்திரம்—சாசனம்.

செயபத்திரத் தூண் - இந்த இடத்தில் இன்னுர் முறியடிக்கப்பட்டார் என்றெழுதி நட்ட சயத்தம்பம்.

வெங்கதிர்ப்புலி யேறு வியந்துவிளையாட - சூரியமண்டலம் வரை உயர்த்திய கொடியில் புலியுருவம் விளையாட; சூரியகுலத்தினர் கொடியாதலின் அது சூரிய மண்டலம் வரை உயர்ந்து உலாவி விளையாடிற்று.

புட்டில் - அம்பருத்தூணி.

புழைக்கை – துவாரமுடைய கை.

பேர்த்து – அவனிட மிருந்து பிடுங்கி.

புழைக்கையிற் பிழைத்து – துவாரமுடைய கையினின்றும் தப்பிப் பிழைத்து.

தாவடி – போர்.

விசையவாடை - இக்காலம் பெசவாடா என்று வழங்கும் நகரம்.

பேராறு - கிருஷ்ண நதி.

போதகம் - யானை.

கங்காபுரி - கங்கை கொண்ட சோழபுரம்.

ஆழி - ஆஞ்ஞாசக்கரம்.

பூழி - பூழி நாடு. பாண்டி நாட்டின் தென்பகுதி பூழிநாடு எனப் படும். அதுபற்றிப் பாண்டி நாட்டையே பூழி நாடு எனல் மரபு.

## உரைநடைப் பகுதியால் அறியப்படும் அறச் செயல்

ஜயங்கொண்ட சோழமண்டலத்துச் செங்காட்டுக் கோட்டத்து, மாகணூர் நாட்டு, ராஜசூளாமணிச் சதுர்வேதி மங்கலத்து மகா சபையார், இவ்வூரில் வசித்துவந்த சேனுபதி ஜயங் கொண்ட சோழ பிர்மாதி ராஜர் தகப்பனுர் மஞ்சிப்பயனுரான ஜயசிங்க குலாந்தக பிர்மராயரிடம் பொருள் கொண்டு 4450 குழி நிலத்தை விற்றுக் கொடுக்க, அதை மஞ்சிப்பயனுரும் அனுபவித்துவந்தனர். அந்நிலத்தை முதலாம் வீரராசேந்திர சோழதேவரின் ஐந்தாம் ஆட்சியாண்டில் அந்த மஞ்சிப்பயனுர் மகனுர் ஜயங்கொண்ட சோழப் பிர்மாதி ராஜர், ஸ்ரீமத்துவாரபதியான காமக் கோடி விண்ணகர ஆழ்வார்க்கு அர்ச்சனு போகமாகச் சபையாரிடம் கொடுத்துள்ளார். அச்சபையாரும் அந்நிலத்தை அந்தக் காமக் கோடி விண்ணகர ஆழ்வார்க்கு வரி நீக்கிக் கொடுத்துள்ளனர்.

## உரைநடைப் பகுதிக்குக் குறிப்புரை

செங்காட்டுக் கோட்டம் - இது தொண்டை மண்டலத்தின் இருபத்து நான்கு கோட்டங்களுள் ஒன்று. செங்கற்பட்டு ஜில்லா வில், காஞ்சிபுரம் தாலூகாவை உள்ளிட்ட பிரதேசம் இக் கோட்டம் என்று ஒருவாறு கூறலாம்.

இவ்வாட்டை - இவ்வாண்டு.

கன்னி நாயற்று - புரட்டாசி மாதத்து.

தன்மி செய்து - கொம்பு முதலியவைகளை ஊதி, பஞ்சாயத்தார் களை அழைத்து. உடையார்பாளையந்தாலூகா காமரசவல்லி கல்வெட்டால் காண்க.

பெருந்தூம்பு - பெரிய மதகு.

பெருங்கால் - பெரிய வாய்க்கால்.

தூம்புக் கால் - மதகிலிருந்து ஓடும் சிறு வாய்க்கால்.

வதி - வழி.

துவராபதி - கண்ணபிரான்.

கரையிட்டு - எல்லையிட்டு.

கரைப்பொந்து பணித்தார் - மேற்பார்வை செய்தார்.

கல்வெட்டில் வந்துள்ள கரையிட்டு கரைப் பொந்து பணித்தார் பெயர்கள்:

பிருந்தூர் பகவநந்தி சகஸ்ரனும், அரணைப் புறத்து திண்ட கூள மாதவக் கிரமவித்தனும், ஈவுணி மாதவக் கிரமவித்தனும் ஆ வர்.

# 18. முதல் குலோத்துங்க சோழன் கல்வெட்டு*

First Section

1. ஸ்வஸ்திஸ்ரீ புகழ் சூழ்(ந்த) புணரியகழ் சூழ்ந்த புவியில்ப் பொன்னெமிய(ள)வுன்தன்(ன)மி னடப்ப விளங்கு சயமகளை(யி)ள—
2. (ங்) கொப்ப(ரு)வத்து சக்க(ரகொ)ட்டத்து விக்கிர(ம)த் (தொழிலால் புதுமணம் புணர்ந்து மதவரையீட்டம் வயிராகரத்து வாரி அயின்(முனை)—
3. க்கொந்தளவரைசர் தந்தளமி(ரி)ய வாளுரை க(ழி)த் துத்தொள்வலி காட்டிப்பொர்ப்பரி நடாத்திக்(கீ)—
4. (ர்த்தி)யை நிறுத்தி (வ)ட(தி)சை வாகை சூ(டி)த்தென் தி(சை)ச தெம(ரு)க(ம)லப்பூமக—

Second Section

5. (ள்) பொதுமையும் பொ—
6. ன்(னிய)ாடை நன்னி(லப்)—
7. (பா) வை தனி (மையுந்த)—
8. விரப்புனிதத்திரும(ணி) மகுடம்
9. முறை(றை)ம(யி)ற்சூடித்தன்னடி(யிர)—
10. (ண்டுந்)த(டமு)டியாகத்தொன்னில—
11. (வ)ந்தர் (சூ)ட(முன்னை) மனுவா(று) பெரு(க)
12. (க)லியாறு (வறுப்)பச்செங்கொல் (தி)(சை)ச
13. தொ(றுஞ்)செல்ல வெண்குடை(டயிரு)நி(ல)—
14. (வ)ளாகவெ(ங்)க(ணு)ந்(தனுது திரு) நிழல் —
15. வண்ணி(ல)ாத்திகழ ஒருத(நி) மெரு(விற்பு)லி
16. வி(ஜை)ய(ர)ட வார்கடற்றீவாந்தரத்து பூ(பாலர்)
17. திறை விடுதந்த கலஞ்சொரி களிறுமுறை
18. மு(றை)ற நிற்ப விலங்கிய தென்னவன் க—
19. ருந்தலை ப(ரு)ந்தலைத்திடத்தன் பொ—
20. ன்னகர் புறத்தி(டை)டக்கிடப்ப இன்நாள் பி—
21. ற்குலப்பிறைபெ(ா)ல் நிற் பிழைபெ(ய)ன் நு—
22. ஞ்செ(சா)ல்செ(ல)திர் கொடிற்றல்லது தன்
23. கை(வி)ல்லெதிர் கொடா விக்க(ல)ங் கல்லதர் ந—
24. (ங்)கிலி துடங்கி மண(லூ)ர்(நா)டு (செ)வன்த து—

* S. I. I., Vol. II, Part II, No. 58.

Third Section

25. ங்கபத்திரையளவும்
26. எங்கணும் பட்ட வெ—
27. ங்களிறும் விட்ட தங் ம(ா)—
28. னமுங் கூறிந வீரமு(ங்)கி(டப்ப)
29. எறிந மலைகளுமுதுகு நெளிப்(ப)
30. இ(ழிந்த)ந திகளுஞ் (சுழ) ன்றுமை(ட)—
31. (ந்) தொ(ட) விழுந்த கடல்க(ளு)ந்தலைவி—
32. (ரித்) தலமரக்குடதிசை தன்நாளுகந்து
33. (தா)னு(ந்) தாதையும் பன்னு(ளி)ட்(ட)ம் பல
34. ப(ல) முதுகும் பயந்தெ(தி)ர் (ம)ா(றி)ய ஜய(ப்)—
35. (ெப)ருந்திருவும் புகழிந் செல்வியு(ம்) வா(ள)ாரொ(ண்)—
36. கண் மடந்தை(ய)ரீட்டமும் மீளாது கு(டு)த்த ெ(வ)—
37. ங்(க)ரி நிரையுங் கங்கமண்டலமுஞ்சி(ங்கண) ெ(ம)—
38. (ன்)நும் பாணி இரண்டும் ஒருவிசைக்கொண்டு
39. (ஈ)ண்டிய புகழொடு பாண்டி மண்டலங்—
40. (ெ)காள்ளத்(தி)ருவுளத்தரு(ளி) வெள்ளவரு(ப)ரித்தரங்கமும்
41. பொருகரித்தரங்கமுந்தந்தி (ரவ)ாரியுமுடைத்த(ா)—
42. ய் வடகடல் தென்கடல் பட(ர்)வது பொலத்த—
43. ன் பெருஞ்செனை(எவி)ப் பஞ்வ(ர்) ஐ(ய்வரும்) ெ(பா)—
44. ருத பொர்க்க(ள)த்து (அ)ஞ்சி வெ(ருவி மு)துகு ெ(ந)—
45. (ளி)த்தொ(டி) அரணைநப்புக்க க(ாடு) துடைத்து.

Fourth Section

46. (ஞட்டடி)ப்(படு)த்து மற்றவ(ர்) தம்(ை)—
47. ம(வ)னச(ர)ர் தி(ரியு)ம் பொற்(றை)
48. (வெஞ்சு)ர மெற்றிக்கொற்ற(வி)—
49. ஜ(ய)ஸ்தம்பமெத்(தி)சை தொ(றும் நிறு)—
50. த்தி முத்(தி)ந் ச(லா)—
51. ப(மும் மு)த்த(மி)ழ்ப்பொதி(யி)லு(ம்) மத்(து)—
52. (வெங்) கரி படுமை(ய்)யச்சய் யமுங்கன்நி—
53. யுங்கைக்கொண்டருளி தென் நாட்டெல்லை காட்டி—
54. (ய்) குடமலைநாடுள்ள ச(ா)வெறெல்லாம் இரு—
55. வி(சு)ம்பெற ம(ா)ெ(வ)றி(ய) த(ந்)வருத(நி)த்த(லை) வமை(ர)
56. க்குறுகலர் குலையக்கெ(ா)ட்ட(ாறுட்ப்)படநெறிக—

57. (ளி)ல் ஙிலைக(ளிட்டருளி பொ(ங்)ெ(க)ா(ளிய)ார(மும்)

58. திருப்புயத்தலங்கலும் பொல்(வீரமு)ந்தி—

59. யாக(மு)ம் விளங்க வீற்றிருந்தருளி(ந) கொவிராஜெ—

60. கசரி வந்மராந சக்கர(வ)த்திகள் ஸ்ரீ கொலொத்து—

61. ங்கசோழதேவற்கு யாண்டு பதினஞ்சா—

62. வது உடையார் ஸ்ரீ (வீ)ரராஜேந்திர தே(வ)ர் ந(ம்பி) ராட்—

63. (டியா)ரான அ(ருமொ)ழிநங்(கைய)ாராந. ஸிம்ஹன் மஹா—

64. தே(வி)யார்..................

## விளக்கவுரை

இருக்குமிடம் : தஞ்சாவூர் இராசராசேச்சரத்துக் கருப்பக் கிருகத்தின் வடபுறத்தைச் சூழ்ந்துள்ள சுவரின் வடபுறம்.

கல்வெட்டின் எழுத்து : தமிழும் கிரந்தமும்.

கல்வெட்டில் குறிக்கப் பெற்ற அரசன் : முதற் குலோத்துங்கன்.

## அரசனைப்பற்றிய பொதுக் குறிப்பு

இவன் அதிராசேந்திரனுக்குப் பிறகு சோழ மண்டலத்தின் ஆட்சியைப் பெற்றவன். இவன் கி. பி. 1070 முதல் கி. பி. 1120 முடிய ஆண்டான். இவன் பிறந்தது பூச நட்சத்திரம். இவன் இராச கேசரி என்ற பட்டத்துடன் ஆண்டான். திரிபுவனச் சக்கர வர்த்தி என்ற பட்டம் பூண்ட சோழ மன்னர்களுள் இவனே முதல்வன் ஆவன். இவனுடைய மெய்க்கீர்த்திகள்,

'' புகழ்மாது விளங்கச் செயமாது விரும்ப '',
'' புகழ் சூழ்ந்த புணரி யகழ் சூழ்ந்த புவியில் ''
'' திருமன்னி விளங்கு இருகுவடனைய தன் ''

எனத் தொடங்குகின்றன. இவனுக்கு சர்வலோகாசரியன், விஷ்ணு வர்த்தனன், பராந்தகன், விக்கிரம சோழன், குலசேகர பாண்டிய குலாந்தகன், விருதராஜ பயங்கரன், அகளங்கன், அபயன், ஜெய தரன், திருநீற்றுச் சோழன், சுங்கம் தவிர்த்த சோழன் என்னும் சிறப்புப் பெயர்களும் உண்டு. இவன் இரண்டாம் இராசேந்திர சோழனது மகளாகிய மதுராந்தகியை மணந்து கொண்டான், இவ் வம்மையாரன்றி, தியாகவல்லி, ஏழிசை வல்லபி, திரைலோக்ய மாதேவி என்னும் மனைவியரும் இருந்தனர். இவனுக்கு மதுராந்தகி யிடம் ஏழு ஆண் பிள்ளைகளும், சுத்தமல்லி என்னும் பெண்ணும் பிறந்துள்ளனர். இவர்களுள் நான்காவது புதல்வனே இவனுக்குப் பின் பட்டம் எய்திய விக்கிரம சோழன் ஆவன். இவனது அவைக் களப் புலவராய் விளங்கியிருந்தவர் சயங்கொண்டார் ஆவர். இவர்

குலோத்துங்க சோழனது கலிங்க வெற்றியைச் சிறப்பித்துப் பரணி ஒன்று பாடியுள்ளனர்.

கல்வெட்டுத் தோன்றிய காலம்: (கி. பி. 1070+15)=கி. பி. 1085.

---

## மெய்க்கீர்த்தியால் அறியப்படும் செய்திகள்

இளங்கோப் பருவத்தில் திக்கு விசையம் செய்தது. சோழ மண்டலத்தின் ஆட்சியைப் பெற்றது. மேலைச் சளுக்கியர், பாண்டியர் முதலானவர்களோடு போர் செய்தது.

இவன் ஆட்சியின் சிறப்பு: மனுநெறி தழைக்கவும், வறுமை நீங்கவும், செங்கோல் திசைதோறும் செல்லவும், பூமி எங்கணும் தனது வெண்கொற்றக் குடையின் ஒளி வீசவும், மேருமலையில் புலிக் கொடி பறக்கவும், பல தீவுகளிலுள்ள அரசர்கள் கப்பல்களி லிருந்து கொண்டு வரப்பட்ட களிறுகள் அணி அணியாக நிற்கவும் ஆட்சி புரிந்தான்.

## மெய்க்கீர்த்திப் பகுதிக்குக் குறிப்புரை

புணரி - கடல்.

பொன்நேமி - மகா மேருமலை.

தன்நேமி - இதில் நேமி என்பது ஆஞ்ஞா சக்கரம். அரசன் ஆணையைச் சக்கரம் என்றல் மரபு. (உ - ம். சக்கரவர்த்தி) கடலை அகழியாகவும், மேருமலையை மதிலாகவும் உருவகித்த ஏகதேச உருவகம்.

சக்கர கோட்டம் - மத்திய மாகாணத்தில் இந்திராவதியாற்றின் தென்கரையில் உள்ளதொரு நகரம். இக்காலத்தில் சித்திர கோட்டம் என்று வழங்கப் பெறுகின்றது.

புதுமணம் புணர்ந்து - அவனது முதல் வெற்றி அதுவாதலின் சயமகளைப் புதுமணம் புணர்ந்து என்றார்.

மதவரை - யானை, இலக்கண நூலார் இதனை வெளிப்படை என்பர்.

வயிராகரம் - இது மத்திய மாகாணத்தில் உள்ளதொரு ஊர்.

அயிர் - மணல்.

அயிர்முனை - ஆற்று மணலிற் போர்க்களம்.

கொந்தள அரசர் - மேலைச் சளுக்கிய அரசர்.

உரிமை - பரம்பரைப் பாத்தியதை.

உரிமையிற் சூடி - என்பதனால் இவன் வரும் முன்னம் இந் நிலப்பரப்பு அரசுநிலை கோடியிருந்தது என்பது பெற்றாம்.

மனுவாறு - மனுநெறி.

பெருக - தழைக்க.

கலியாறு - வறுமை.

வெண்ணிலாத் திகழ - வெண்மையான ஒளிவீச, சந்திரவட்டக் குடையாதலின் அதன் ஒளியை வெண்ணிலா என்றார்.

புலி விளையாட - புலிக்கொடி பறக்க.

விலங்கிய - மாறுபட்ட.

விலங்கிய தென்னவன் கருந்தலை தன் பொன்னகர்ப்புறத்திடைக் கிடப்ப-அவன் நகரின் புறத்தேயே அவ்வரசன் தலை கிடந்தது என்று வென்ற எளிமை கூறினர்.

பிற்குலப் பிறைபோல - தேய்பிறைச் சந்திரனைப் போல. (பூரணிமைக்குப் பிற்பட்ட சந்திரன் வளைந்து கோணற்படுதல்—கோடினமைக்கு உவமை.)

நிற்பிழை யென்னுஞ் சொல் - " நினக்குத் தவறு செய்தோம். அப்பிழையைப் பொறுத்தருள் செய் " என்ற மன்னிப்புச் சொல்.

அது கோடுதலாவது - பணி செய்பவர்போலச் சொல்லி மாறுபடுதல்.

நங்கிலி - கோலார் ஜில்லாவில் உள்ளதொரு ஊர்.

அலமர - சுழல.

குடதிசை தன் நாள் உகந்து - சேர நாட்டில் தான் பிறந்த நட்சத்திரமாகிய பூச நாள் விழாவை நடத்தி.

பயந்து எதிர்மாறிய ஜயப்பெருந்திருவும் - பகைவர்களிடத்தில் இருத்தற்குப் பயந்து வெற்றி லட்சுமி இவன் பக்கம் மாறினள். (புகழை இவனுக்குக் கொடுத்துப் பழியைத் தாம் உகந்தனர்.)

பாணி - தேசம்.

பரித்தரங்கமும் பொருகரித்தரங்கமும் தந்திர வாரியும் உடைத்தாய் - குதிரைகளாகிய அலைகளையும், யானைகளாகிய கப்பல்களையும் உடையதாய் வந்த சேனாசமுத்திரம்.

அறத்துடைத்து - முற்றிலும் அழித்து.

வனசரர் - வேடர்.

பொற்றை - சிறுமலை.

கன்னி - கன்னியாகுமரிப் பகுதி.

சாவேறு - மலைநாட்டிலுள்ள ஒரு குடியின் பெயர். நாயர், மேனவர், எம்பிரான் திரு, என்பன போலச் சாவேறு என்ற

குடியும் உண்டு. பகைவரைச் சாகடிக்கும் ஏறு போன்ற வீரன் என்பது அதன் பொருள். இப்போது வழக்கில் (சாவேறு) சாஹூர் என வழங்குகிறது.

கோட்டாறு - குமரி முனைக்கு வடக்கே பத்து மைல் தூரத்தில் உள்ள பட்டணம். மிகப் பழங்காலத்தே வியாபாரத் துறையில் தலைமை பெற்றிருந்தது. தாலமி (கி. பி. 150) இதைக் கோட்டியரா என்றும் குறித்துள்ளனர். முதலாம் இராசராசன் சோழன் இதை வென்றபொழுது, மும்முடிச் சோழ நல்லூர் என்று பெயர் வைத்துள்ளான். "குருமா நெடு மதிற் கோட்டாற்றரண் கொண்ட தென்னவன் கன்னி பெருமான் வரோதயன் கொல்லியஞ்சாரலப் பெண் கொடிக்கே" என்று அகப் பொருளில் குறித்திருப்பதால் இது அரணுடையதாய் இருந்த செய்தி புலப்படுகிறது. முதலாம் குலோத்துங்கன் இதை வென்ற செய்தியை "வெள்ளாறுங் கோட்டாறும்" எனத் தொடங்கும் கலிங்கத் துப்பரணி அடி அறிவிக்கின்றது.

நிலைகள் - நிலைப் படைகள் (A Permanent Garrison)

## உரைநடைப் பகுதியால் அறியப்படும் செய்திகள்

முதற் குலோத்துங்க சோழ தேவரின் பதினைந்தாம் இராச்சிய ஆண்டில், முதலாம் வீரராசேந்திர சோழ தேவரது மனைவியார் அருமொழி நங்கையரான (ஸிம்ஹன்) மாதேவியார், தஞ்சை இராசராசேச்சரமுடையார்க்கு நிவந்தம் அளித்துள்ளனர். (நிவந்தவகை இன்னதென்று புலப்படாதபடி எழுத்துக்கள் சிதைந்துவிட்டன).

# 19. முதல் குலோத்துங்க சோழன் கல்வெட்டு *

1. ஸ்வஸ்திஸ்ரீ பு(க)ழ் சூழ்ந்த பு(ணரி)யகம் சூழ்ந்த புவியில் பொங்(ந)மியளவுந்த(ந்)நெ(மி) நடப்ப விளங்கு சய(ம க)ளையிளங் கொப்பருவத்து சக்(க)ரகொட்டத்து விக்கிர மத்தொழிலால் புது மணம் புணர்ந்து மதவரையீட்ட(ம்) வயிராகரத்து வாரி(அ)யிர்-

2. (முனை)க்கொ(ந்)தளவரசர் தந் தளமிரிய வாளுறை கழித்து தொள்வ(லி) காட்டிப் பொர்(ப்ப)ரி (ந)டாத்திக் கீர்த்தியை (நி)றுத்தி வடதிசைவாகை சூடித் தெந் திசைத்தெமருகமலப் பூமக(ள்) பொதுமையும் பொங்நி யாடை நன்நில(ப்) பாவையின் தனிமை(யுந்த)விரப்—

3. புனித(த்) திருமணிமகுடம் உரிமையிற் (சூ)டித் தந்(ந)டி யிர(ண்)டுந் தடமுடியாகத் தொங்நில வெ(ந்)தர் சூட முந்(னை) ம(னு)வாறு பெருக கலியாறு வறுப்ப செ(ங்) கொல திசைதொறுஞ் செல்ல வெ(ண்)குடை யிருநில (வ)ளாகம் எ(ங்க)ணு(ந்) த(ன)து திருநிழல் வி(ண்)ணி (லா)த் திகழ

4. ஒரு த(நி)ெ)மருவில் புலிவிளையாட வார்கடற்றீவாந்தரத் துப் பூபாலர் திறைவிடுதந்த கல(ஞ்)செ(ா)(ரி)களிறு முறை நிற்ப விலங்கி(ய ெ)தந்(ன)வந் (க)ருந்தலை பருந் தலைத் திடத்தந் ெ(ப)ாந்(ன)கர்(ப் பு)றத்(தி)டைக் கிடப் பவி (ந)ாள் பிற்(கு)லப் (பி)றைபொல் நிற்பிழை (எ)ந் னுஞ் ெ(சா)ல்லெதி(ர் கெ)ாடிற்ற(ல்)-

5. லது (த)ந் கைவில்லது கொடா வெ(ழ்)குலத்தர(ச)ர் (அ)ளத்(தி)யி லிட்ட களிற்றின தீட்டமு(ம்) பட்டவெம் பரியும் வி(ட்)ட (த)ந்மாநமும் கூறிந (வீ)ரமும் (கி)டப்ப எறின ம(லை)க(ளு)மு(து)கு நெளிப்ப யிழந்த நதிகளு(ஞ்) சுழன்றுடைந் தொட விழுந்த (க)டல்(களு)ந்(த)லை (வி)ரித்தலமரக்குட (தி)சைத் தந்(ந)ா(ளு)கந்து தா(னு)ம் தானை-

6. ந(யு)ம் பந்நாளிட்ட பலபலமுதுகும் பயந்தெதிர் (ம)ாறின ஜயப்பெரு(ந்) திருவும் பழி(யு)கந்து குடுத்த

* S. I. I., Vol. III, Part II, No. 76

புகழி(ங்) செல்வியும் வாளா(ெ)ராண்கண் மட(ங்)(தை) யரீட்டமும் மீளாது குடுத்த வெங்கரி நிரையும் கங்க மண்டல(மும்) சிங்கணமெந்நும் பா(ணி)யிர(ண்)டும் ஒ(ரு)விசை(க்க)கக் கொ(ண்)-

7. டண்(டி)ய புகழொடு பாண்டிமண்டலங் கொள்ளத் திரு வுளத்தடைத்து வெள்ளவருபரித்தரங்கமும் பொருபரிக் கலங்களும் பொலத்த(ந்தி)ரவா(ரியு) முடைத்தா(ய்) வந்து (வ)டகடல் தெ(ங்)கடல் படர்(வ)து பொலத்த(ந்) ெ(பரு)ஞ்செ(ஊ)யை யெவிப்பஞ்சவர் ஐவ(ரும்) பொருத (ெ)பார்க்களத்-

8. (த)ஞ்(சி ெ)வரு நெளித்தொடி அரணைனப்புக்க காட ற(த்) துடை(த்)து நாட்டடிப்படு(த்)து மற்ற(வ)ர் (த)ம்மை வன(சர)ர் திரியும் பொச்சை வெஞ்(சு)ர மெற்றி கொற்ற விஜ(ய) ஸ்தம்பந்திை(ச)ெ(த)ாறு நிறுத்தி முத்திங் சல(ா)பமு(ம்) முத்தமிட் பொ(தி)யிலு ம(த்த ெ)வங்(க)ரி(ப)டு(ம)ய்-

9. யச்ச(ய்)யமுங் கங்நியுங்கைக் கொ(ண்)டு பு(நி)தத்தெந் நாட்டெல்லை காட்டி(க்குட) மலை (ந)ாட்(டு)ள்ள சாெ(வ) றெ(ல்)ல(ாங்)தநி விசும்பெற (மா)வெறிய தங் வரூதி(நி)த் தலை(வரைக்) குறுகலர் (கு)லையக் கொட்டாறுட்(ப)ட நெறி(ெ)தாறும் நி(லை)களிட்டருளித்(தி)(ற)ல் (கொள் வீ)—

10. ரஸிம்ஹாஸனந் (தி)ரிய விட்டரு(ளி)ப் பொங்கொ(ளி) யாரமுந் திரு(ப்)புயத்(த)லங்கலும் பொல் வி(ர)முந்தி யாகமும் விளங்(க)ப்பார்மிசைச்சிவநிடத்துமையெநத் தியாகவல்(லி) உலகுடையாளிருப்ப அவளுடங் (க)ங்கை விற்றிருந்தெ(ந ம)ங்(ை)க—

11. (ய)ர் திலத(ம்) எழிசைவல்லபி எழு(லக) முடை(ய)ாள் வாழிமல(ர்)ந்தி(நி)திரு(ப்ப) ஊழியுந் திருமாலா(க)த் துப் (பிரி)யாதெந்று திருமகளிருந்தென விர ஸிம்ஹாஸ (ன)த்து உலகுமுடை(ய)ாளொடும் விற்றிருந்தரு(ளிய) கொவிர(ா)ஜெ(க) ஸரிவன்மராந திரிபுவநச் (சக்கர)

12. வத்தி(கள்) ஸ்ரீ குலொத்துங்(க) சொழ தேவர்க்(கு) யா(ண்)டு சுயஎ ஆவது பாண்டிகுலாசநிவளந(ா)ட்டு மிகொழை தேவதாந பிர்மதெயம் திருவா(ஊ)க்(க)ா வில் திருவெண்(ணு)வல் கிழிநிதம(ர்)ந்தருளிய திரிபு வன (ப)திக்கு மூலப்பிரத்திய நாகிய-

13. சண்டேஸ்வரந் ஆதேசம் ஜயசிங்ககுல(க)ாலவள நாட்டு மிசெங்(கிளி) நாட்டு வளம்பகுடி அரயமகந் மு(ஊே)யந் அருமொழிதெவநா(ன) வில்லவராய(னு)க்கு நாம் விற்றுக் குடுத்த நிலமாவது உடையார் திருவாஊேக் காவுடைய (எம்)பெரு(மா)ந் தெ-

14. வதாநம் தெங்கரை (ஊர்)களில் ப(ா)ண்டிகுலாசநி(வ)ள நாட்டு மீகொழை ஆளிகுடியில் இவ(னு)க்கு விற்று(க்) குடுத்த நி(லத்)துக்கிசைந்த கிழ்பார்க் கெல்லே பிள்ளே கொள்ளி வாய்க்காலுக்கு மெற்கும் தெந்(ப)ார்(க்) கெல்லே களத்தில் (வ)டக்கிலகைய்வா-

15. ய்க்காலுக்கு வடக்கும் மீபார்(க்)கெல்லே உத்தம சிலிச்ச (ரு)ப்பெதி மங்கலத்து தெந்(பி)டாகை புதுக்கு(டி) எல் லேக்கு கிழக்கும் வடபார்க்கெல்லே தெந்நாற்றங்கரைப் பெருவழிக்கு தெற்கு ஆக இவ்(வி)சைந்த பெருநா(ந்) கெல்லே (யுள்)பட்ட நிலம்

16. சு தெ($4\frac{3}{4}$) இந்நிலம் நாெ(ல)முக்காலும் இத்தெவர்க்கு யா(ண்)டு நாற்பத்(தெ)ழாவது வரை (ப)யிரிலி புஞ்செய் யாய்க் குட்டமு (ம)ண் ணுமிட்டுக்கிட(ந்த)மையி லந்நிலம் மு(ஊே) யந் (அ)ருமொழி தெவநா(ன) வில்ல(வ) ரா(ய னு)க்கு விற்று(க்குடு)த்(து)-

17. க் கொள்வதாக எம்மிலிசை(ந்தவி)லேப்பொருள் அந்ருடு நற்காசு சுபஉ (இ)க்காசு நாலெ மாகாணியுங் ை(க)க் கொண(டு) திருவா(ஊே)க்காவுடைய எம்பெருமா(ந்) ஸ்ரீ பண்டாரத்து ஒடுக்கி முனய(ந்) அருெ(மா)ழிதெவ ஞந (வி)ல்லவராயனுக்கு விற்றுக்கு(டுத்)-

18. து இவந் உடையார் திருவாஊேக்காவுடைய எம்ெ(ப)ரு மாந் ெ(க)ாயிலி(ல்) இடங்(கை) நாயகரென்று எழுந் தருளுவித்த இஷபவாகன தே(வ)ர்க்கும் நம்பிராட்டி யார்க்கு திருமஞ்(சந்)ங்களு(க்)கு திருவமிர் துப(டிக்)கு இரண்டு திருநாளி(லு)ம் இ(ர)ண்(டு) நாள் திருவிழா எழுந்தருளுகைக்கு உள்(ளி)(ட்டு).

19. ெ(வ)ண்டும் நிமந்தங்களுக்கு இந்நில சுதெ கல்லித் திருத்தி ஸ்ரீ பண்டாரத்து புஞ்செய் வரிசை(யா)ல் வெலி ஒந்றுக்கு நெல் ஐங்கலமாக ராஜகேஸரி மர(க்)காலால் இந்நிலம் நாலெ முக்காலு(க்)கும் அளப்பத(ாந)ஜ உடுங களவத ஙஇந்நெல் இருபத்து முக்கலநெ இருதூ(ணி) (க்குறு)

20. ணியும் அளக்குமிடத்தில் கார் ப(ாதி) (பசாநம்) பாதி அளப்பதாகவும் (இ)தி(ல்) மிகுதி கொ(ண்)டு இவன்

இடங்கை நாயக (ரெந்)று எழு(ந்த)ருளுவித்த இஷபவாஹந தேவர்க்கும் நம்பிராட்டி(யா)ர்க்கும் திருமஞ்சனபடிக(ளு)க்(கு)ம் திருவ(மு)துபடிக்கும் இர(ண்)டு திருநாளிலும் (இ)ர(ண்டு) நாெ(ள)மு(ள)ந்தரு(ளுவ)(கக்கு)

21\. உள்ளிட்டு வெ(ண்டு) நிமந்தங்களுக்கு நிமந்தஞ் செய்து (குடு)த்தொம் மு(னை)யந் (அரு)ெ(மாழி) ெ(தவ) நா(ன) வில்லவராய(னு)க்கு திருவானைக்காவு(டை)டய எம்ெ(ப)ருமானுக்கு மூல பிரத்ய நாகிய சண்டேஸ்வரந் (உ)ள்(ளிட்)டக(ந்மி)களொம் இது பந்மாஹேஸ்வரரக்ஷை.

## விளக்கவுரை

இருக்குமிடம்: திருச்சிராப்பள்ளிக்கு அருகிலுள்ள திருவானைக்கா கோயிலின் இரண்டாம் பிராகாரத்தின் கீழ்ச் சுவர்.

கல்வெட்டின் எழுத்து: தமிழும் கிரந்தமும்.

கல்வெட்டில் குறிக்கப் பெற்ற அரசன்: முதற் குலோத்துங்கன்.

அரசனைப் பற்றிய பொதுக் குறிப்பு: 18-ஆம் கல்வெட்டில் காண்க.

கல்வெட்டுத் தோன்றிய காலம்: 1070+47=கி. பி. 1117.

குறிப்பு: 18-ஆம் கல்வெட்டின் மெய்க்கீர்த்தியும், இக்கல்வெட்டின் மெய்க்கீர்த்தியும் பெரும்பான்மையும் ஒத்துள்ளன. ஆதலின் இப்பத்தொன்பதாம் கல்வெட்டில் காணப்பெறும் மெய்க்கீர்த்திப் பகுதிக்குரியவைகளைப் பதினெட்டாம் கல்வெட்டின் மெய்க்கீர்த்திப் பகுதிக்கு எழுதியவைகளைக் கொண்டு தெளிக.

குலோத்துங்க சோழனது தேவியரும் அவர்கள் பாராட்டப்படும் விதமும்: தியாகவல்லி உலகுடையாள், ஏழிசை வல்லபி, ஏழுலகம் உடையாள், உலகமுடையாள் என்பவர்கள் இவனுடைய தேவியர் ஆவர்.

இவர்களுள் தியாகவல்லி உலகுடையாள், சிவனிடத்து உமையெனவும், ஏழிசைவல்லபி ஏழுலகமுடையாள், உமையுடன் கங்கை வீற்றிருப்பதெனவும், உலகமுடையாள் திருமாலகத்துப் பிரியாதென்றும் திருமகள் இருப்பது எனவும், போற்றப்படுகின்றனர்.

## உரைநடையால் அறியப்படும் செய்தி

திருவானைக்காவில் திருவெண்ணுவல் கீழ் இனிது எழுந்தருளிய திரிபுவனபதிக்குப் பழைய அடியாராகிய சண்டேஸ்வரர் கட்டளைப் படி, வளம்பகுடி அரையன் மகன் முனையன் அருமொழி தேவனுன

வில்லவராயனுக்கு மீக்கோழை ஆளிகுடியில் நாலேமுக்கால் வேலி நிலத்தை விற்றுக் கொடுத்த செய்தியை உணர்த்துகிறது.

## உரைநடைப் பகுதிக்குக் குறிப்புரை

பாண்டிகுலாசனி வளநாடு - இது சோழ மண்டலத்தின் ஒன்பது வளநாடுகளுள் ஒன்று. இது பிற்காலத்தில் பாண்டிகுலபதி வளநாடு என்னும் பெயரைப் பெற்றுள்ளது. இது தஞ்சாவூர்க் கூற்றம், விளநாடு முதலான 13 பிரிவுகளாகப் பிரிக்கப் பெற்றிருந்தது. தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி ஜில்லாக்களின் சில பகுதிகள் இவ்வளநாடு என்று ஒருவாறு கூறலாம்.

மீக்கோழை - இது பாண்டிகுலாசனி வளநாட்டின் உட்பிரிவுகளில் ஒன்று. இது திருச்சிராப்பள்ளி ஜில்லாவில் உள்ளது.

திருவெண்ணாவல் - இது திருவானைக்கா கோயிலுக்குரிய தலமரம் (தலவிருக்ஷம்).

திரிபுவனபதி - திருவானைக்காவில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானின் திருப்பெயர்.

மூலப்பிரத்தியன் - பழைய அடியான்.

ஆதேசம் - கட்டளை.

ஜயசிங்ககுலகால வளநாடு - புதுக்கோட்டை இராச்சியத்தில் ஆலங்குடி தாலூகா, குளத்தூர் தாலூகா இவைகளின் சில பகுதிகள் இவ்வளநாடென்று ஒருவாறு கூறலாம்.

மீசெங்கிளி நாடு - புதுக்கோட்டை இராச்சியத்தில் குளத்தூர் தாலூகா மலையடிப்பட்டியைச் சார்ந்த பிரதேசம்.

வளம்பகுடி - ஊரின் பெயர்.

மீக்கோழை ஆளிகுடி – மீக்கோழைக்கு அருகிலுள்ள ஆளிகுடி என்னும் ஊர்.

நிலம் - 1 வேலி.

அன்றுடு நற்காசு-அப்பொழுது வழங்கப் பெற்று வந்த நாணயம்.

கார் - கார் என்னும் நெல்.

பசானம் - சம்பா நெல்.

கன்மிகள் - கோயில் காரியம் பார்ப்பவர்கள்.

## பண்டைய வழக்கம்

கோயில் நிலம் சண்டேஸ்வரர் திருப்பெயரால் விற்கப் பெறுவது வழக்கம்.

# 20. விக்கிரம சோழன் கல்வெட்டு*

1. ஸ்வஸ்திஸ்ரீ பூமாலை மிடைந்(து) பொன்மாலை (நி)கழ்தர (ப்)பாமாலை மலி(ந்)த பருமணி(த்) திரள்புயத் திருநில மடந்தை யொடு ஜயம(க)ளிருப்பத் தன்றுணை மார்(ர்)பந் தனதெனப் (பெ)பற்றுத் திருமகள்ளொருதனியிருப்பக் கலைமகள் சொற்றிறம் புணர்ந்த கற்பின(ள)ாகி விருப் பொடு(நா)வகத்திருப்பத்(தி)சை தொறு(ம் தி)கிரி யொடுஞ் செங்கொல் நடப்ப அகிலபுவனமுங் க(வி)ப்ப தொரு புதுமதி பொல் வெண்குடை(மீ)மிசை நிற்பக் கருங்கலி ஒ(ளி)த்(து) வன்(பி)ல(த்)திடைக் கிடப்பக் குளத்தெலிங்கவிமன் விலங்கல் மிசையெற(வு)ங்கலிங்(க) பூமிலை(ய)க் (கனை)யெரி (பருகவு)ம் ஐம்ப(லை)டப் (பருவத்து) வெம்(படை தாங்கி) வெங்லை(க) ம(ண்)ட (ல)த்து (தா)ங்கிநிதி(ரு)ந்து வடதிசை வாகை சூடித் தென்-

2. றிசைத்தெ(ம)ரு க(ம)ல(ப்)பூமகள் பொதுலை(ம)யும் பொ(ன்) னியாடை நன்நி(ல)ப் பாவையின் தநிமையுந் (த)விர்த்து (பு)நிதத்திரு ம(ணி) ம(கு)டமு(றை)மயிற் சூ(டி)த்(தன்)நளி பரப்பித்தநித்த(நி) பரந்(து)மண் முழுதுங்(க)ளிப்ப மணிஞ (வெ)ாடுங்க விசையமு(ம்) புகழுமெல்(மெ) (வெ)லாங்கச் செழியர் வெ(ஞ்) சுரம் புக செ(ர)லர் கடல்புக (அ)ழிதரு சிங்க(ள)ரஞ்சி நெஞ்சல மரக் கங்கர் திறையி(ட)க்(கன்) னடர் வெந்நிடக் (கொ)ங்க ரொதுங்கக் கொங்கணர் சாய (ம)ற்றெத் (தி)சை (மன்)னருந் (தந்த)மக்கரணைநத் திருமலற் செவடி உரிமையில் இறைஞ்சத் தொல்லையெழுலகுந் தொழுதெழத் தொன்(றி)ய முல்லைவாணலை(க)ய் முக் கொக்கி(ழ)ாநடி உமையொடு(ஞ்) ச(ங்க)கரன் இலை(ம) யத்(தி)ருந்தாநெ(ன)ப் பெ(ா)ருந்தி இனி திருப்(ப) ஆங்கவ(ன்ம) கிழுங் கங்கையொாப்பாகிய தெரிவையர் தில(த)ம் தியாகபதா-

3. (கை பு)ரிகுழல் (ம)டப்(பி)டி (பு)னித குண(வ)னிலை(த தி)ரி(பு)வந (முழு)துலை(டயா)ளிவன் (தி)ரு(வு)ளத் தரு(ள்) முழு(துடை)யாளென (அ)லை(ம)ந்(தி)னி திருப் பச் செ(ம்)பொன் (வீ)ர ஸிம்ஹாஸன(த்து வீ)ற்றிரு(ந்

* S. I. I., Vol. II, Part III, No. 68.

தருளிய) செ(க)ாப்பரகேசரி (ப)ற்(ம)ர(ான) திரிபுவநச் ச(க்கரவ)ற்(திக)ள் (ஸ்ரீவி)க்ரம சோழதெ(வ)ற்(கி) ய(ாண்)டு ஞலாவ(து) (உ)டை(டயா)ர் ஸ்ரீராஜராஜீஸ்வர முடை(ய)ார் கொ(யிலில் கார)ளக்(கும் ரா)ஜராஜ(ப் ப)ல்லவரய(நுக்)கு த(ன் ப)ா(ட்டன் நிலைய)ாய் (வ)ரு கிற க(ாணிகார)ள(வுக்)கு (காணிய)ா(க) கு(டு)த்தெ(்)தா ெ)ம(ன்)(று திருவ)ாய் ெ(ம)ாழிந் தரு(ளி உடை)டயார் (ஸ்ரீ) ராஜராஜீஸ்வரம் உடை(ட)ய(ார் ெ)காயில் சீகா(ரி) யஞ் செய்வானுக்(கு)ம் பரி(ய)ார (மூ)ல(ப்)பட்டு(டை)ட(ப்) ப(ஞ்ச)ா சா(ரிய)த் தெவர்(கன்)மிகளு(க்)கும் பிரஸா தம் செய்துவந்த திரு(மு)கப்ப(டி) கல்(லி)ல் ெ(வட்டி) ய(து) (முன்)புகார(ளந்)து வ(ருகி)ற புதுவுடை(டயா)ன் அ(ர)-

4. (யன்) உ(டை)டயான் மரித்தலை(மயில் இவ)ந் (ம)க(ஞு)ந உடை(டய)ாந் (க)ல்(லாலை)க்(கு) த(ஞ்ச)ா(வூ)ர்த் ெ(த)வர்க்கு (அடை)த்(த) நாட்டுப் (பண்)டாரங்(களு)ம் (அள)ந்து இத்த(ா)ல் வ(ந்த) கார(ள)வு (ம)ா(டம்) உ(ள்ளி)து ஒ(டுக்(கி வ)ருகிற ப(ரி)சு ெ(த)வர் (பண்) டாரத்தெ ஒடுக்(க கடவந)ா(கவு)ம் (த)னக்கும் (தங்வ)ர்க் (க)த்தா(ர்)க்கும் சந்திராதித்தவத் செல்ல வைத்த பங்கு ஒன்று.

## விளக்கவுரை

இருக்குமிடம்: தஞ்சை இராசராசேச்சரத்தின் கர்ப்பக் கிருகத்தைச் சூழ்ந்துள்ள சுவரின் வடபுறம்.

கல்வெட்டின் எழுத்து: தமிழும் கிரந்தமும்.

கல்வெட்டில் குறிக்கப் பெற்ற அரசன்: விக்கிரம சோழன்.

அரசனைப் பற்றிய பொதுக் குறிப்பு: இவன் முதற் குலோத்துங்க சோழனது மகன். இவன் பிறந்த நட்சத்திரம் ஆனி மாதத்து உத்திரட்டாதி. இவனுக்கு இரண்டு மெய்க் கீர்த்திகள் உண்டு. அவை,

"பூமாது புணரப் புவிமாது வளர"

"பூமாலை மிடைந்து பொன்மாலை திகழ"

எனத் தொடங்குகின்றன. இவன் பரகேசரி பட்டமுடையவன். இவன் கி. பி. 1120 முதல் 1236 முடிய ஆண்டான். இவனுக்குத் தியாக சமுத்திரம், அகளங்கன் என்னும் சிறப்புப் பெயர்களும் உண்டு. இவனுக்கு முக்கோக்கிழான் அடிகள், தியாக பதாகை,

என்னும் மனைவியர் இருந்தனர். இவன் இளங்கோவாய் இருந்த காலை வேங்கி நாட்டிற்கு அரசப் பிரதிநிதியாய் இருந்து அதனை ஆண்டு வந்தான். அக்காலை தென் கலிங்க நாட்டின்மீது படையெடுத்துச் சென்று அந்நாட்டு அரசனாகிய தெலுங்க வீமனை வென்றான். இவ்வெற்றியைப் பாராட்டி ஒட்டக்கூத்தரால் இவன் மீது பரணி ஒன்று பாடப் பெற்றுள்ளது. அது இதுபொழுது கிடைத்திலது. தில்லைச் சிற்றம்பலப் பெருமானுக்கு இவன் அளப்பரிய தொண்டுகள் புரிந்துள்ளான். ஒட்டக்கூத்தர் இவன்மீது உலா ஒன்று பாடியுள்ளனர். விக்கிரம சோழ தேவருலா என்பது அதன் பெயராகும்.

## மெய்க்கீர்த்தியால் அறியப்படும் போர்ச் செயல்

கலிங்கப் போர்: வேங்கை மண்டலத்தில் அரசப் பிரதிநிதியாய் இருந்தபோது கலிங்க தேசத்தை நெருப்பிட்டுக் கொளுத்தினான். குளம் என்னும் ஊரிலிருந்த தெலுங்க வீமன் மலையின்மீது ஓடி ஒளிந்து கொண்டான்.

பட்டம் பெற்றபின் நடத்திய போர்கள்: பாண்டியர் வெஞ்சுரம் புகவும், சேரலர் கடல் புகவும், சிங்களர் அஞ்சி நெஞ்சு அலமரவும். கங்கர் திறையிடவும், கன்னடர் வெந்நிடவும், கொங்கர் ஒதுங்கவும், கொங்கணர் சாயவும் செய்தான்.

ஆட்சியின் சிறப்பு: தண்ணளி பரப்பித் தனித்தனிப் புரந்து, மண் முழுதுங்களிப்பவும், மணிநாவொடுங்கவும், விசையமும் புகழும் மேலோங்கவும் ஆண்டான்.

இக்கல்வெட்டில் இவன் மனைவியர் பாராட்டப்படும் விதம்: முல்லை வாள் நகை முக்கோக்கிழானடி உமையொடும் சங்கரன் இமையத்து இருந்தானெனப் பொருந்தி இனிது இருப்பவும், கங்கை ஒப்பாகிய தெரிவையர் திலகம் தியாக பதாகை புரி குழல்மடப்பிடி புனித குண வனிதை திரிபுவனமுடையாள் திருவுளத்து அருள் முழுதுடையாளென அமைந்து இனிதிருப்பவும் இருந்தனர் எனப் பாராட்டப்படுகின்றனர்.

## மெய்க்கீர்த்திப் பகுதிக்குக் குறிப்புரை

தன் துணை - தன் என்றது திருமகளை.

துணை - துணைவன், கணவன்.

தன் துணைமார்வந் தனதெனப் பெற்று - "திருவுடை மன்னரைக் காணில் திருமாலைக் கண்டேனே" என்றபடி விக்கிரம சோழ தேவர் திருமாலானதால் தன் துணைவன் மார்பம் தனதெனப் பெற்றாள்.

மீமிசை – மேல். ஒரு பொருட் பன்மொழி.

பிலம் - பாதாளம்.

குளத்தெலுங்க வீமன் – குளத்திடைத் தெலுங்க வீமன் என்றிருக்க வேண்டும். (21-ஆம் கல்வெட்டில் காண்க.)

தேமரு - தேன் பொருந்திய.

பூமகள் பொதுமை – எல்லார்க்கும் பொது என்னும் தன்மை.

அதைத் தவிர்த்தது - அவள் தனக்கே உரியவளாகக் கொண்டது.

பொன்னி ஆடை நன்னிலப் பாவை - சோழ நாடு.

தனிமை - அவள் அரசனின்றித் தனித்திருந்தமை.

அதைத் தவிர்த்தது - வடநாட்டிலிருந்து வந்து தான் முடி சூடிக் கொண்டு ஆண்டது.

நெஞ்சு அலமர - மனங் கவல.

அங்கு - அம்மலையில்

அவன் - அச்சங்கரன்.

இதன் விளக்கம்: முக்கோக்கிழானடி உமாதேவியார்க்கும் தியாகபதாகை கங்காதேவிக்கும் உவமை பாராட்டற்குரியது.

## உரை நடைப் பகுதியால் அறியப்படும் செய்தி

தஞ்சாவூர் இராசராசேச்சரமுடையார்க்குக் கார் நெல்லை அளந்து வந்த புதுவுடையான் அரையன் இறந்தமையால், அவன் மகனுன உடையான் கல்லாலைக்கு அப்பதவியைக் கொடுத்ததோடு- அப்பதவியை அவனுடைய வர்க்கத்தாரும் சந்திர சூரியர் உள்ள வரை அநுபவிப்பதென்றும், அக்கல்லாலை என்பான் தஞ்சாவூர்த் தேவர்க்கு அடைத்த நாட்டுப் பண்டாரங்களில் நெல்லை அளந்து அக்கணக்கை அந்தந்த நாட்டுப் பண்டாரங்களிலும், தஞ்சையில் இராசராசேச்சரமுடையார் பண்டாரத்திலும் சேர்க்கக் கடவன் எனவும் விக்கிரம சோழன் திருவாய் மலர்ந்தருளிய செய்தியைக் கல்லில் வெட்டப்பட்டதை உணர்த்துகின்றது.

## உரை நடைப் பகுதிக்குக் குறிப்புரை

கார் அளக்கும் - கார் நெல்லை அளக்கும்.

இராசராசப் பல்லவரையன் - இது, உடையான் கல்லாலை தரித்து வந்த பட்டப் பெயர்.

பாட்டன் நிலையாய் வருகிற - பாட்டன் காலம் முதல் தொடர்ந்து வருகிற.

காணி காரளவுக்கு - வயலில் விளையும் கார் நெல்லை அளப்பதற்கு.

காணி - வயல். கண்ணால் கணிக்கப்படுதல் காரணம் பற்றி காணி என்னும் பெயர் பெற்றது.

'செல்லான் கிழவ னிருப்பி னிலம்புலந்
தில்லாளி னூடி விடும்'

என்னும் திருக்குறளையும் அதற்குப் பரிமேலழகர் உரைத்த "அந்நிலத்திற்குரியவன் அதன்கண் நாடோறுஞ் சென்று பார்த்து அடுத்தன செய்யாது மடிந்திருக்குமாயின் அஃது அவன் இல்லாள் போலத் தன்னுள்ளே வெறுத்தும் பின்னவனோடு ஊடிவிடும்" என்னும் உரையையும் நோக்குக.

காணியாகக் கொடுத்தோம் - உரிமையாகக் கொடுத்தோம்.

பஞ்சாசரியர் - கோயில் அருச்சகர்.

தேவகன்மி - கோயிலில் சுவாமி காரியம் பார்ப்பவர்.

பதிபாத மூலப்பட்டுடைப் பஞ்சாச்சாரியர் - என்பதற்கு Pancha-charya who wears a silk garment (in honour of) the feet of the Lord of the temple என்பர் கல்வெட்டுத் துறையினர்.

பிரசாதஞ் செய்து வந்த - கொடுத்து வந்த.

திருமுகப்படி - ஓலைப்படி.

தஞ்சாவூர்த் தேவர்க்கு - தஞ்சை இராசராசேச்சரமுடையார்க்கு.

அடைத்த - ஒப்படைக்கப்பட்ட.

நாட்டுப் பண்டாரம் - நாடுகளில் இருந்த கருவூலம் (அ) பொக்கிஷசாலை.

குறிப்பு - தலைநகரில் இருந்த பண்டாரத்துக்கு உள்ளூர்ப் பண்டாரம் என்றும், நாடுகளில் இருந்த பண்டாரங்களுக்கு நாட்டுப் பண்டாரங்கள் என்றும் பெயர். இக்காலம் Hazur Treasury, Taluk Troasury என வழங்குவன போல.

நாட்டுப் பண்டாரங்களும் அளந்து - நாட்டுப் பண்டாரங்களில் அளந்து.

இத்தால் வந்த காரளவு - இதனால் வந்த கார் நெல் அளவு விபரங்களை.

(ம)ா(டம்) உ(ள்ளி)து ஒ(டு)க்(கி) - இத்தொடரில் உள்ள எழுத்துக்கள் சில சிதைந்து விட்டன. அவைகளுக்குப் பதில் சில எழுத்துக்களைக் கல்வெட்டுத் துறையாளர் நிரப்பியுள்ளனர். எனினும் அங்கு இருக்க வேண்டிய பொருள் அவ்வளவைகளை நாட்டுப் பண்டாரங்களிலும் சேர்த்து என்றிருக்க வேண்டும்.

வருகிற பரிசு - வருகிற அத்தன்மையை.

தேவர் பண்டாரத்தே - தஞ்சை இராசராசேச்சரமுடையார் பண்டாரத்தே.

வர்க்கம் - கூட்டம், இங்கே வம்சத்தில் தோன்றியவர்.

# 21. விக்கிரம சோழன் கல்வெட்டு *

1. ஸ்வஸ்திஸ்ரீ (பூ)மாலை (மிடை)ந்து பொன் மா—
2. லை திகழப்ப(ா) (மா)லை மலிந்த பருமணித்திரள் புயத் திரு—
3. நிலமடந்தையொடு ஜெயமகளிருப்பக்கனவரை
4. மார்வந்(த)நதைநப் (பெ)பற்றுத் திருமகளொரு தநி யிருப்ப(க்)
5. கலைமக(ள்) சொற்றிறம் புணர்ந்த கற்பி(னள)ாகி விருப் பொடு ந(ா)—
6. வகத்(தி)ருப்(ப தி)செ(த)ாறுந் தி(கி)ரியொடு செங் கொல் நடப்ப அகிலபுவநமுங்க(வி)(ப்)—
7. பதொ(ர்) புதுமதி(பெ)பால் வெண்குடைமிமிசை நிழற்ற கருங்கலியொளித்து வங்பிலத்திடை(க்)—
8. (கி)டப்பக் கு(ள)த்திடைத்தெலுங்கவீமங் விலங்கல் மிசை யெறவுங்கலிங்க பூமியெக்க(நெ)ல—
9. ரி பருக(வு)ம்(ஐ)ம்படை(ப்) பருவத்து வெம்படை (த)ாங்(கி)யு(ம்) வெங்கை மண்டலத்தா(ங்கிநி தி)ரு(ந்) து(வ)ட—
10. திசை(வடி)ப்படுத்தருளி தெந்திசைத் தருமமு(ந்)தவ (மு)ந் தானமுந் தழைப்ப வெத(மு)ம் மெ(ய்)—
11. மெயு(மா)தியுகம் பொலத் தலைசிறப்ப(வ)ந்(த)ரு(ளி) வெலற்க(ரு)ம் பொற்புலியாணை பார்த்திவ(ர்)சூட நிபெ(பெ)—
12. றமணி ம(கு)டம் முறைமெயிற் சூடி மன்னுயிர்க்கெல் லாமின்னுயிர்த்தாய்பொலத் தண்ணளி பரப்பித் (த)னித்(த)னிப(ா)—
13. ர்த்து ம(ண்)முழுதுங் களிப்ப மநுநெறி வளர்த்து தங் கெ(ா)யிற் கொற்ற வாசல் புறத்து மணிநாவொடுங்க முர(சு)—
14. (கள்)மு(ழங்)க விசெயமும் புகழும் மென்மெலொங்(க) வாழி வாழி இம்(ம)ா நிலங்காக்கத் திருமணிப்பொற் (றெ)—

* S. I. I., Vol, III, Part II, No, 79.

15. (ட்)ெ(டழு)து பத்தாண்டு(வ)ருமுறெ முந்நெ மந்நவர் சுமந்து (தி)றெ(நி)ரெத்துச் சொரிந்த செ—

16. ம்பொற் குவெயால் (தங்குல)நாயகந் தாண்டவம் பயிலுஞ் செம்பொந்நம்பலஞ் சூழ் திருமா—

17. ளிகெயும் கொபுரவாசல் கூடசாலெகளும் உலகு வலங் கொண்டொளி விளங்கு நெமிக்கு—

18. லவ(ெ)ரெ உதெய குன்றமொடு நின்றெனப் பசும்பொந் மெ(ய்)ந்து (ப)லிவளர்(பீ)டமும் விசும்பொ(ளி)

19. தெ(ழ)ப்ப விளங்கு பொன் மெ(ய்)ந்து இருநிலந் தெழப்ப இெ(ெ)ம(ய)வர் க(ளி)ப்ப பெரியதிருநாள் பெரும்

20. பி(ய)ர் (வி)ழாவெநு(ம்) உயர்(பு)ரட்டாதி உத்திரட்டாதியில் அம்பல நிறெ(ந்)த அற்(பு)தக்கூத்தர் இந்—

21. (பர்) வாழ எழுந்தருளுவ(த)ற்குத் திருத்தெர்க்கொயில் செம்பொந் மெ(ய்)ந் து(ப)ருந்(தி)ர(ள்) முத்(தி)ந்

22. பயில் வடம் பரப்பி நிறெமணி மாளிகெ நெடுந் திருவீதிதந திருவளர்பியரால்ச்செ—

23. ய்(து ச)ெ(ெ)மத் தருளி (வை)பம் பொற் குழித்த பரிகல முதலால் செம் பொற் கற்பகத்தொடு பரிச்சி(ந்)—

24. (ந)மு(ம்) அளவிலாதநெ(வ)ளி பெற வமெத்துப் பத்தாமாண்டில் (சித்)திரெத் திங்க(ள்) அத்த—

25. ம் பெற்ற ஆதித்தவாரத்து(த்) திருவளர் மதியிந் திரயோதசிப்பக்கத்(து) இந்பலவு(ம் இ)நிது

26. (ச)மெத்தருளி ஒரு குடெ(நி)ழற்கீழ் (த)லமுழுதுங் கவிப்பச் செழிய(ர்) வெஞ்சுரம் புக (ெ)சரலர்(க)—

27. டல்(புக அழிதரு சிங்க)ண(ர்) அ(ஞ்)சி நெ(ஞ்)சலம(ர க)ங்கர் தி(ெ)ற(யி)ட(க் கந்)நடர் வெந்நிட கொங்—

28. கரொதுங்க கொங்கணர் சாய (மற்ெ)றத்திசெ மந்ந—

29. ருந் தந்த(ம)க் கரணென திருமலர்ச் செ(வடி) உரிமெ-

30. யிலி(வை)றஞ்ச ஆங்கவந் (ம)கிழு(ங்)க(ங்)கெயொப் பாகிய

31. தெரிவெயர் திலதந் தியாக பதாகெ புரிகுழல் மடப் (பி)—

32. டி புநித குணவநிதெ திரிபு(வ)ன(மு)ழு(து)ெ(ட)யாள் அவ ந்தி—

33. ருவுளத் தரு(ள்) முழுதுமுடையாளென(வு)டனிருப்ப ஊழியுங்நெடுமாலாக(த்)துப்—

34. பிரியாெ(த)ன்றுங் திருமகளிருந்ததென மாதர் மட (ம)யில் பூதலத் தருந்ததி அரணிய

35. கற்பிற் தரணிமுழு துடையாளி(வ)ங் திரு(ம)ார்வத் தரு ளொடு(மி)ருப்பச் செம்பொங்(வீ)ர(ஸி)—

36. ம்ஹாஸநத்து திரிபுவ(ன)முழுதுெ(ெ)டயாெ(ள)ாடும் வீற்றிருங் த(ரு)ளிய கொப்பர கெசரிவன்ம ரா(ன)

37. திரிபுவநச் சக்கரவர்த்திகள் (ஸ்ரீ வி)க்(கி)ரமசெ(ா) ழதெ(வ)ற்கு யாண்டு ௰௫ ஆவது

38. திரிபுவந முழுதுடைவளநாட்டுப் பொய்கெ நாட்டு உடையா(ர்). திருமழு—

39. வாடி உடையார் கொயிலில் ஆதிசண்டேஸ்வரவ தேவர் ஆதேசம் அரு(ள)ால் இ—

40. (க்)கொயிலில் ஸ்ரீ மாஹேஸ்வரரொமும் ஸ்ரீ காரியஞ் செய்வாரும் இக் கொயில் (க)ணக்கு

41. நெல் குப்பெயுடையாநும் உள்ளிட்டதாநத்தொம் எழுத்து இக்ெ(க)ாயிலில்

42. (ஸ்ரீ)நந்திகேஸ்வரதேவரெ எழுந்தருளுவித்த அள்ளி யூருடையாங் எச்சில் மண்......

## விளக்கவுரை

இருக்குமிடம் : திருச்சிராப்பள்ளி ஜில்லா உடையார் பாளையந் தாலூகா திருமழபாடி வைத்திய நாத சுவாமி கோயில் இரண்டாம் பிராகாரத்துத் தென்புறச் சுவர்.

கல்வெட்டின் எழுத்து - தமிழும் கிரந்தமும்.
கல்வெட்டில் குறிக்கப்பெற்ற அரசன் - விக்கிரமசோழன்.
அரசனைப்பற்றிய பொதுக் குறிப்பு - 20-ஆம் கல்வெட்டில் காண்க.
கல்வெட்டுத் தோன்றிய காலம் - (1120+15) கி. பி. 1135.

தில்லையில் செய்த தொண்டு - நடராசப் பெருமான் எழுந்தருளி யிருக்கும் செம்பொன் அம்பலத்தைச் சூழ்ந்த திருமாளிகை, கோபுர வாசல், கூடசாலை, பலிபீடம் இவைகளுக்குப் பொன் வேய்ந்தான். அம்பலம் நிறைந்த அற்புதக் கூத்தர் இம்பர்வாழ எழுந்தருளும் திருத்தேர்க்குப் பொன் வேய்ந்து முத்துவடங்களைப் பரப்பினான். தன்பெயரால் வீதி ஒன்றை அமைத்தான். பொன்னால் செய்த பரிகலபரிச்சின்னங்களைக் கொடுத்தான். இவைகளைச்செய்து

முடித்த காலம் அவன் ஆட்சியின் பத்தாம் ஆண்டு சித்திரைத் திங்கள் அத்தம் பெற்ற ஆதிவாரத்தில் ஆகும்.

## மெய்க்கீர்த்திப் பகுதிக்குப் பொழிப்புரை, குறிப்புரை முதலியன

முதல் ஐந்து வரி : பூவாலாகிய மாலையோடு நெருங்கி பொன் (மாலை) ஆபரணங்கள் விளங்கவும், இவ்விரண்டினும் அதிகமாகப் பாமாலை சூடிய பருத்த அழகிய திரண்ட புயங்களில் பெரிய பூமி தேவியும், வெற்றி லட்சுமியும் தங்கியிருக்கவும், திருமகளானவள் பெருமை பொருந்திய மலைபோன்ற மார்பு தனக்கே யுரியதாகப் பெற்று தான் ஒருத்தியும் இருக்கவும் ;

6-முதல் 10-வரி : கலைமகளானவள் புகழோடு கூடிய கல்விமய மாகிய விருப்பத்துடன் நாவினிடத்து இருக்கவும், எல்லாத் திக்கு களிலும் தனது ஆணை (அரசாட்சி) யோடு நீதிமுறை நடக்கவும் ; எல்லா உலகங்களையும் மூடவல்லதாகிய ஒரு புதிய சந்திரனைப் போல வெண்கொற்றக் குடை நிழலைச் செய்யவும் ;

11-முதல் 16-வரி : கொடிய வறுமை பஞ்சம் முதலிய தீமை களெல்லாம் இவனுடைய ஆணைக்கு அஞ்சி யொளித்து வலிய பாதாளத்திலே கிடக்கவும், குளத்தில் ஒளித்த தெலுங்க வீமன் மலைமேல் ஏறவும் கலிங்க நாட்டைச் சுடும்நெருப்புப் பருகவும், ஐம்படைத் தாலியை யணியும் குழந்தைப் பருவத்திலே கொடிய ஆயுதங்களைத் தாங்கியும் வேங்கி நாட்டிலே இனிமையோடு தங்கி வடதிசை முழுவதையும் தன் ஆட்சிக்கு அடங்கியதாகச் செய்து,

## மெய்க்கீர்த்திப் பகுதிக்கு அரும்பதவுரை

மிடைந்து - நெருங்கி.

திகழ - பொலிய.

மலிந்த - மிகுந்த.

மணி - இரத்தினுபரணங்கள் ; கருவியாகு பெயர்.

இருநில மடந்தையொடு ஜயமகளிருப்ப - புயத்து நிலமகளைத் தாங்குகின்ருன் என்ற குறிப்பு.

கனவரை மார்வம் – கனத்தமலை போன்ற மார்பு. அம் சாரியை பெற்று மார்பம் என்ருகி, அது மார்வம் என்று மருவிற்று.

சொல் - புகழ்.

திறம் - வகை.

கற்பு - கல்வியும், பதிவிரதத் தன்மையும் என இருபொருட்டு.

திகிரி - சக்கரம், இங்கே ஆஞ்ஞாசக்கரம்.

செங்கோல் - நீதிமுறை (அ) நன்முறையால் ஆளும் நீதி ஆட்சி.

அகிலபுவனமும் கவிப்ப - உலகம் உயிராக, அரசன் உடல் போறலின் அவன்மேல் கவித்தகுடை அகிலபுவனமும் கவிப்பதாயிற்று.

நிழற்ற - நிழலைச் செய்ய.

கருங்கலி - கொடிய தீமைகள். கருமை—கொடுமையைக் குறித்தது.

விலங்கல் - மலை.

குளத்திடைத் தெலுங்கவீமன் விலங்கல் மிசை ஏறவும் - குளம் என்னும் ஊரிலிருந்த தெலுங்க வீமன் அரணம் நாடி மலைமிசையேறவும்.

கனலெரி - தகிக்கும் (அ) பற்றியெரிக்கும் நெருப்பு.

ஐம்படை - குழந்தைகளுக்கு அணியும் ஓர் அணி. காத்தற் கடவுளின் ஆயுதங்களாகிய வில், வாள், தண்டு, திகிரி, சங்கு என்னும் இவ்வைந்தைப் போலத் தங்கத்தாற் செய்து அணிவது. ஐம்படைத் தாலி எனவும் வழங்கும்.

அடிப்படுத்து – தன் ஆட்சிக்கீழ் அடக்கி.

தவமும் - தவம் பண்ணும் துறவிகளும் நிர்ப்பயமாய்ப் புரிய நின்றது அரசனுட்சி.

ஆதியுகம் - கிரேதாயுகம். ஆதியுகத்தில் தருமதேவதை நான்கு காலால் நடந்ததாகவும், படிப்படியாய்க் கலியுகத்தில் ஒரு காலில் தான் தருமதேவதை இயங்குவதாகவும் கூறுவர் ஆதலால், இவன் காலத்தில் தருமம் முழுப்பாகமும் நடந்தது என்பது கருத்து.

தலைத்தலை – இடங்கள் தோறும்.

புலி ஆணை - புலிக் கொடி.

புலி ஆணைபார்த்திபர் சூட – அரசன் ஆணைக்குக் கீழ்ப்படிந்தோம் என்பதற்கு அறிகுறியாக அவனது புலிக் கொடியைத் தங்கள் தேர், கோபுரம் முதலியவற்றில் சூட்ட.

உயிர்த்தாய் – உயிரை யளித்தாய்.

தண்அளி - பெருங்கருணை.

தனித்தனி பார்த்து - ஒவ்வொரு பொருளையும் தானே நேரிற் கவனித்து.

கோயில் - அரசர் மாளிகை (அ) அரண்மனை. இன்றும் மலை நாட்டில் இவ்வழக்கு வழங்கி வருகிறது.

கொற்றம் - வெற்றி.

வாசல் - வாயில் என்பதன் மரூஉ.

மணிநா ஒடுங்க - ஆராய்ச்சிமணி அடிப்பவர் இன்மையின் ஒலிப்பதில்லை யாயிற்று.

விசயம் - வெற்றி.

விசையம் -- எழுத்துப் போலி.

திருமணிப் பொன்தோட்டு எழுதுபத்தாண்டு - பொன்னேலையில் எழுதத்தக்க பத்தாம் ஆண்டு. அவ்வாண்டின் நிகழ்ச்சி மிகச் சிறந்த தாகலின் அது பொன்னேலையில் எழுதத் தக்கது என்ற வாரும்.

குவை - குவியல்.

பொன்குவை - நிதியின் குவியல்.

(அடி 35—38) நேமிக் குலவரை - சக்கரவாளக்கிரி. இவ்வுலகைச் சுற்றி மதில் போல அம்மலை யுள்ளது என்பார் கோபுரவாசல் சுற்றுக்கு சக்கரவாளகிரியும் ஏனையகூட சாலைகளுக்கு உதையமலை யும் உவமை.

விசும்பொளி தழைப்ப - ஆகாயம் வரையும் ஒளிவீசும்படி.

முத்தின் பயில்வடம் - முத்துக்களாலாகிய மாலையில் பொருந்திய.

பரிகலம் - உண்ணும் பாத்திரம்; கடவுளுக்கு நிவேத்தியம் கொண்டு போகும் பாத்திரம். பலவிதப் பொங்கல் முதலிய நிவேத் தியங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு குழியாகச் செய்துள்ளதை விளக்க பைம்பொற் குழித்த என்று சொல்லப்படுகிறது.

பரிச்சின்னம் - அலங்காரப் பொருள்கள். உற்சவத்தின் போது எடுபிடிப் பொருள்கள்.

சுரம் - காடு.

அழிதரு - தோற்ற.

அல்மர - சுழற்சியடைய.

வெங்நிட - புறங்காட்ட.

அங்கு - அந்த மலையில்.

அவன் - அச்சங்கரன்.

புரிகுழல் - சடை பின்னிய கூந்தல்.

மடப்பிடி - இளம் பெண்யானை போன்றவள்.

அரணியல் கற்பு - தனக்கும் தன் கணவனுக்கும் குலத்துக்கும் பெருமை, மகளிர் கற்பினுல் வருவதால் அது பற்றிக் கற்பை அரணியல் கற்பு என்ருர்.

அரண் - பாதுகாவல்.

இயல் - பொருந்திய.

முக்கோக்கிழானடி – உமாதேவியார்க்கும், தியாக பதாகை கங்காதேவிக்கும் உவமை பாராட்டற் குரியது.

## உரைநடைப் பகுதியால் அறியப்படும் செய்தி

திருமழபாடி உடையார் கோயிலில் ஸ்ரீ நந்தி தேவரை எழுந்தருளுவித்தவர் அள்ளியூருடையார் ஆவர். அவர் பெயரில் எச்சில் மண் என்ற அளவில் இருக்கிறது. ஏனைய எழுத்துக்கள் கல்வெட்டில் உதிர்ந்து போய் விட்டன.

## உரைநடைப் பகுதிக்குக் குறிப்புரை

திரிபுவனமுழுதுடைய வளநாடு: இராசேந்திரசிங்கவளநாடு, முதற் குலோத்துங்க சோழன் காலத்தில் தியாகவல்லி வளநாடு என்னும் பெயர்பெறற்து. பின், 'பூமன்னியாணர்' என்னும் தொடக்கமுள்ள மெய்க்கீர்த்தியை உடைய இராசகேசரி திரிபுவனச் சக்கரவர்த்தி குலோத்துங்க சோழன் காலத்தில், இது திரிபுவன முழுதுடைய வளநாடு என்னும் பெயர் பெற்றது.

மழுவாடி உடையார்: இத்தொடர் மழபாடி உடையார் என்றிருக்க வேண்டும். சேரர் கிளையினராகிய மழவர்கள் பாடி அமைத்துக் கொண்டு இங்கு வதிந்த காரணம் பற்றி இப்பெயர் பெற்றது. மழுவாடி உடையார் என்றிருப்பது கல் தச்சரால் ஏற்பட்ட பிழையாகும். இவ்வூரிலுள்ள பல கல்வெட்டுக்களில் திருமழபாடி உடையார் என்ற தொடர்தான் காணப் பெறுகின்றது. மழுநிர்த்தனம் ஆடிய காரணம் பற்றி மழுவாடி ஆயிற்று என்பாரும் உளர். அது பொருந்துவது அன்று. சமயகுரவர்கள் மழபாடி என்றே பாடியுள்ளனர்.

தானத்தார் - கோயிலார்.

# 22. மூன்றும் இராசராச சோழன் கல்வெட்டு*

1. ஸ்வஸ்திஸ்ரீ திருவாய்க்கெழ்(வி மு)ன்னுக (தி)ரிபுவனச் சக்கரவர்த்(தி)க(ள்) ஸ்ரீராஜராஜதெவற்—
2. குயாண்டு ௰அவது தநுநாய(ற்று) பூர்வபக்ஷத்து பஞ்சமி யும்புதன் கிழமையும் பெ—
3. ற்ற அவிட்டத்தினு(ள்) ஜயங்கொண்டசோழமண்டலத் துப்புலியூர்க்கொட்டமா(ன) குலொத்து—
4. ங்கசொழவளனாட்டுக்கு(ன்)றத்(தூர்)நாட்டு மணிமங்கல (ம)ா(ன) கிராமஸிஹாம(ணி)ச்சதுர் வெதிமங்—
5. க(ல)த்து வண்டுவரா(ப)தி (எ)ம்(பெ)ருமா(ன்) கொயி லில் அபிஷெக(ம)ண்ட(ப)த்துக்கு கீழைப்—
6. புலிமு(கமா)ன சொபானத்துக்கு ெ(வ)ண்டும் பொன் னிட்டுக் கல்(க)ாரஞ்செய்வித்தான் மணி(ம)ங்
7. கலமுடையான் பஞ்சநெதி இ(லக்ஷ்மணன் மலைகினிய நின்றான் பிர்மபிரிய(ன்) ெ(பரி)ய(பி)ள்—
8. ளையும் இவன் தம்பி ஆகவமல்(ல)தெவனும் இவர்கள் தன்மம்

## விளக்கவுரை

இருக்குமிடம்: செங்கற்பட்டு ஜில்லா காஞ்சிபுரம் தாலூகா மணிமங்கலம் இராசகோபாலசாமி கோயில் மண்டபத்தின் கிழக்குப் புறச் சுவர்.

கல்வெட்டின் எழுத்துக்கள்: தமிழும் கிரந்தமும்.

கல்வெட்டில் குறிக்கப் பெற்ற அரசன்: மூன்றும் இராசராச சோழன்.

## அரசனைப்பற்றிய பொதுக் குறிப்பு

இவன் மூன்றுங் குலோத்துங்க சோழனுக்குப் பின் சோழ மண்டலத்தின் ஆட்சி உரிமையை எய்தினன். இவன் இராசகேசரி பட்டம் புனைந்தவன். இவனுடைய மெய்க்கீர்த்திகள் "சீர்மன்னி இரு நான்கு திசை விளங்கும்", "சீர்மன்னு மலர் மகளும் சிறந்த தனிநிலைச் செல்வியும்" எனத் தொடங்குகின்றன. இவன் மனைவி யார் புவன முழுதுடையாள் ஆவர். இவ்வம்மையார் "ராஜராஜன் திருத்தாலி பெற்றுடையார்" எனவும், "வாணர்குல நிலைவிளக்கு" எனவும் பாராட்டப் பெற்றுள்ளனர். இம்மன்னன் கி. பி. 1216 முதல்

* S. I. I., vol. III, Part I, No. 39.

கி. பி. 1256 முடிய ஆட்சி புரிந்துள்ளான். இவன் ஆட்சியில் நாட்டில் குழப்பங்கள் இருந்துள்ளன. மாறவர்மன் சுந்தரபாண்டியன் இவனோடு இருமுறை போர் செய்தான். முதற் போரில் பாண்டியனிடத்தில் இவன் தோற்றுப்போனான். எனினும் பாண்டியன் இவனுக்கு ஆட்சியைக் கொடுத்தான். மீளவும் பாண்டியனுக்கு விரோதமாகக் கலகஞ் செய்தான். பாண்டியன் மீளவும் படையெடுத்து வந்து போர் செய்தான். இதில் இராஜராஜன் தோற்று வடதிசையை நோக்கி ஓடிப்போய் விட்டான். இவன் மகன் மூன்றும் இராசேந்திர சோழன். இவனே மூன்றும் இராசராச சோழனுக்குப் பின் சோழ மண்டலத்தின் ஆட்சி உரிமையை எய்தினான்.

கல்வெட்டுத் தோன்றிய காலம்: 1216+18=கி. பி. 1234.

கல்வெட்டில் குறிக்கப்பெற்ற செய்தி: சயங்கொண்ட சோழ மண்டலத்துப் புலியூர்க்கோட்டமான குலோத்துங்க சோழ வள நாட்டுக் குன்றத்தூர் நாட்டு மணிமங்கலமான கிராம சிகாமணிச் சதுர்வேதி மங்கலத்து, வண்டுவராபதிப் பெருமான் கோயிலில் அபிஷேக மண்டபத்துக்கு, கீழைப் புலிமுகமான சோபானத்துக்கு வேண்டும் பொன்னிட்டுக் கருங்கல்லால் செய்வித்தவர் மணிமங்கல முடையார் பஞ்சநதி இலட்சுமணன், மலைகினிய நின்றான் பிர்ம பிரியனும் அவனது தம்பி ஆகவமல்ல தேவனும் ஆவர்.

## குறிப்புரை

திருவாய்க்கேழ்வி – அரசனது ஆணையை உணர்த்துவோர்.

தநு ஞாயிறு - மார்கழி மாதம்.

அவிட்டத்து நாள் - அவிட்ட நட்சத்திரத்தில்.

புலியூர்க்கோட்டம் - இங்குக் குறித்த புலியூர் என்பது சைதாப்பேட்டை தாலூகாவில் உள்ள புலியூரைத் தலைநகராகக் கொண்ட நாடு ஆகும். இக்காலம் செங்கற்பட்டு ஜில்லாவிலுள்ள சைதாப்பேட்டை, பொன்னேரி தாலூகாக்கள் அடங்கிய பிரதேசம் இக்கோட்டம் என்று ஒருவாறு கூறலாம்.

குலோத்துங்க சோழ வளநாடு - புலியூர்க் கோட்டத்துக்கு, முதற் குலோத்துங்க சோழன் காலத்தில் வைக்கப்பெற்ற பெயர்.

வண்டுவராபதி எம்பெருமான் – மணிமங்கலத்து இராசகோபால சாமியின் பழம் பெயர்.

அபிஷேக மண்டலம் – இறைவரைத் திருமஞ்சனம் செய்விக்கும் மண்டபம்.

சோபானம் - படிக்கட்டு. "பேணு தத்துவங்கள் என்னும் பெருகு சோபான மேறி" என்பது பெரிய புராணம்.

கல்காரம் செய்வித்தல் – கருங்கல் கட்டிடம் செய்வித்தல். "நாலு அம்பலமும் திருமடைப்பள்ளியும் ரிஷப மண்டபமும் கல்காரமாய்ப் பணிசெய்வித்து" என்பது திருவாங்கூர் இராச்சியக் கல்வெட்டுப் பகுதி.

# 23. மாறஞ்சடையன் கல்வெட்டு *

1. ஸ்ஸ்வதிஸ்ரீ கொமாற—
2. ஞ் சடையார்க்கு யா—
3. ண்டு ம்ள ஆவது
4. வல்ல நாட்டு கவி—
5. ப்பால் கல்குறிச்—
6. சி வரகுணவதி
7. அரையன் ஆன
8. தக்கஞ் செட்டி உ—
9. ஞ்ஞட்டு திருவெ—
10. ள்ப்பூர்க் கொகர்—
11. ணத்து மாதெ—
12. வர்க்கு நொந்தா—
13. விள(க்)கினுக்கு ராவு—
14. ம் பகலும் நொந்—
15. தா விளக்குனுக்கு
16. வெத்த பொன்
17. மிரு பதின் அஞ்—
18. கழஞ்சு இப்—
19. பொன் நாட்டார் ர—
20. க்ஷையாக வெத்த
21. பொன்

### விளக்கவுரை

இருக்குமிடம்: புதுக்கோட்டை இராச்சியம் ஆலங்குடித் தாலூகா திருக்கோகர்ணம் என்னும் ஊரில் உள்ள கோகர்ணேஸ்வரர் கோயிலின் கருப்பக் கிருகத்துத் தென்புறச் சுவர்.

கல்வெட்டின் எழுத்து: தமிழும் கிரந்தமும்.

அரசனைப் பற்றிய பொதுக் குறிப்பு: மூன்றாங் கல்வெட்டில் "மாறஞ்சடையனைப் பற்றிய குறிப்பு" என்ற தலைப்பில் காண்க.

கல்வெட்டுத் தோன்றிய காலம்: 765+17=கி. பி. 782.

* Pudukkottai State Inscriptions No. 239. Page 133.

கல்வெட்டில் குறிக்கப் பெற்ற செய்தி: வல்லநாட்டுக் கவிற்பால் கல்குறிச்சி வரகுணவதி அரையன் ஆன நக்கஞ்செட்டி, திருவெட்பூர் கோகர்ணத்து மகாதேவர்க்கு ஒரு நுந்தாவிளக்கு எரிப்பதற்குப் பலரிடத்தில் யாசித்துப் பதினைந்து கழஞ்சு பொன்னை அந்நாட்டார் பாதுகாவலில் வைத்துள்ளான்.

## குறிப்புரை

வல்லநாடு - இது புதுக்கோட்டை இராச்சியத்தில் இராசராச வளநாட்டின் உட்பகுதி நாடுகளில் ஒன்று. ஆலங்குடி தாலூகா, மணியம்பலம், கல்குறிச்சி முதலான ஊர்கள் இந் நாட்டில் அடங்கியுள்ள சிலவெனக் கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன.

உஞ்ஞுட்டு – யாசித்து.

வெட்பூர் கோகர்ணத்து மகாதேவர் - வெட்பூர் என்பது புதுக்கோட்டை இராச்சியத்தில் ஆலங்குடி தாலூகாவில் உள்ளதொரு ஊர். கோகர்ணம் இவ்வெட்பூர் தேவதானத்தைச் சேர்ந்தது ஆதலின் வெட்பூர் கோகர்ணம் எனக் குறிக்கப் பெற்றுள்ளது. "திருவெட்பூர் தேவதானம் கோகர்ணத்து மகாதேவர்க்கு" என்னும் புதுக்கோட்டை இராச்சியக் கல்வெட்டுப் பகுதி இதை வலியுறுத்தும்.

நாட்டார் ரக்ஷையாக: நாட்டார் பாதுகாவலாக.

# 24. குலசேகர தேவர் கல்வெட்டு *

1. ஸ்வஸ்திஸ்ரீ பூவின் கிழத்தி மெய்விற்றி—
2. ருப்ப மெதிநிலமாது நிநியிவபு நா—
3. வியத பொர் மடண்தை செயற்பு (ய)த்தி—
4. ருப்ப மாக்களைமடந்தை வாக்கிநி—
5. (நி)ல் விளங்க திக்கிருனுங்குங் விசை—
6. நிள வெறிபம மநுநெறி நகழ அறுந—
7. ன்ற சமையங்கள் ஆறுத்தமைப்ப கா—
8. நில் வெங்கை விளலுடங் நுடன்து நிங்—
9. நவர அங்களாகாசளதன்தை விற்றிரு—
10. ப்ப எங்கிகிசு எழுகடல் எழு பொழிவெ—
11. ன்கு நிழற்ற செ(ங்)கொல் நடப்ப கொடு—
12. ங்கலி நங்கி நெடும்பிலங் கொழிப்ப
13. பி...வர் செம்பியர் வில்லவ ஆடலர் பல்லமர்
14. திறை உறடன் முறைமுறைபமிய இருநெ—
15. மிங் ஆளவம ஒருநெதி ஒங்க இங்நமு தளாதி
16. ப இல்விசை நாடம மங்நிவள்ளர மணி அ—
17. ணி விரஸிஹஸநது விதறிருதருழிய கொச்ச—
18. டையபற்மராந திரிபுவந சக்கரவர்த்திகள்
19. (திரிபுவந சக்கரவத்திகள்) ஸிரி குலெசெகரதெ....
20. வற்க்கு யாண்டு ௲ஆவது கார நாட(ா)நவிருத....
21. ராஜ பயங்கரவளநாட்டு கார நாட்டு திரு—
22. வொதி கால்லயில் காநநாட்டு ஸ்ரீ வரமுடைய
23. ா யங்நாதெவதானம் பாணிதம் பற்றில்
24. உள்ள தெவதா(ன)ம் உள்ள நிலத்தில் க—
25. டமையும் வரியும் அன்தராயம் இவா—
26. ண்டு முதல் தவித்தொம் சந்திர(ா)தி—
27. த்தவரை செல்வதாக செய்து குடு—
28. த்தென் கல்வெட்டி குடுத்தெ—
29. ன் கல்வாயில் நாடாழ்(வ)ாங்நென்

---

* Pudukkottai State Inscriptions No. 246. Pages 136—137.

## விளக்கவுரை

இருக்குமிடம்: புதுக்கோட்டை இராச்சியத்தில் திருமய்யம் தாலூகா மலையக் கோயில் என்னும் ஊரிலுள்ள குடபோகக் கோயிலின் வாசற்படிக்கு வலதுபுறச் சுவரில் உள்ளது.

கல்வெட்டுத் தோன்றிய காலம்: கி. பி. 1192—93.

கல்வெட்டில் குறிக்கப்பெற்ற அரசர்: பாண்டியன் கோச்சடையபன்மராகிய திரிபுவனச் சக்கரவர்த்தி ஸ்ரீ குலசேகரதேவர்.

## அரசனைப் பற்றிய பொதுக் குறிப்பு

இவன் விக்கிரம பாண்டியனுடைய மகன். கி. பி. 1190 முதல் கி. பி. 1217 வரை ஆட்சி புரிந்தவன். இவனுடைய மெய்க்கீர்த்திகள் (1) "பூதல மடந்தை", (2) "பூவின் கிழத்தி", (3) "பூதல வனிதை" எனத் தொடங்குகின்றன. இவனுக்கு இராச கம்பீரன் என்னும் சிறப்புப் பெயர் உண்மையை இவனுடைய திருப்பூவணத்துச் செப்பேடு உணர்த்துகின்றது. இவனுடைய கல்வெட்டுக்கள் மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்களில் காணப்படுகின்றன. எனவே இவன் பாண்டிநாடு முழுமையும் ஆட்சி புரிந்தவன் ஆவன். மதுரையில் இவ்வேந்தனது அரண்மனையில் புகழாபரணன் என்னும் கூடத்திலிருந்த சிங்காதனத்தின் பெயர் மழவராயன் என்பதை ஒரு கல்வெட்டு உணர்த்துகிறது.

மெய்க்கீர்த்திப் பகுதியால் அறியப்படும் வீரச்செயல்: செம்பியர், வில்லவர், மாளவர், பல்லவர் இவர்கள் இவனுக்குக் கப்பம் கட்டி வந்தனர்.

## மெய்க்கீர்த்திப் பகுதிக்குக் குறிப்புரை

பூவின் கிழத்தி - திருமகள்.
மேதினிமாது - பூமிதேவி.
வியம் - ஏவல்.
வியப் போர் – பகைவரை ஏவல் கொள்ளும் போர்.

மா - சிறந்த.

கலை மடந்தை - சரசுவதிதேவி.

இசை நிலா - கீர்த்தி நிலவு.

கானில் வேங்கை வில்லுடன் தொடர்ந்துற - சோழர் புலிக்கொடியும், சேரர் விற்கொடியும் தொடர்ந்து காட்டில் ஓடின. வேங்கை காட்டில் வசிப்பதாதலின் அது காட்டிற்கே ஓடிற்று. வில்லும் அதைத் தொடர்ந்து ஓடிற்று.

மீனம் - மீன்கொடி.

கனகாசலம் - மேருமலை. பாண்டியர் இமயத்தில் கயல்பொறித்ததை "பருப்பதத்துக் கயல் பொறித்த பாண்டியர் குலபதி போல்" என்ற பெரியாழ்வார் திருவாக்காலும் அறியலாம்.

கொடுங்கலி – கொடிய வறுமை முதலிய துன்பங்கள்.
பிலத்து ஒளிப்ப - பாதளத்து ஒளிப்ப.
வில்லவர் - சேரர்.
செம்பியர் – சோழர்.
இன்னமுது - சுவைத்து உணரப்படுதலின் இன்னமுதென்றது.

## உரைநடைப் பகுதியால் அறியப்படும் செய்தி

விருதராஜ பயங்கர வளநாட்டு, திருவோதிக்கால் ஸ்ரீவரமுடைய நாயனுர்க்குக் கல்வாயில் நாடாள்வான், பாணிதம்பற்றில் உள்ள தேவ தானமான நிலத்தின் கடமை, வரி, அந்தராயம் இவைகளை நீக்கிக் கொடுத்துள்ளான்.

## உரைநடைப் பகுதிக்குக் குறிப்புரை

கான நாடான விருதராஜ பயங்கர வளநாடு விருதராஜ பயங்கரன் என்பது முதற் குலோத்துங்க சோழனுடைய சிறப்புப் பெயர்களில் ஒன்று. அப் பெயரால் புதுக்கோட்டை இராச்சியத்திலுள்ள ஒரு நாட்டிற்கு வைக்கப்பெற்ற பெயர். இவ்வளநாடு கானநாடு என்னும் பெயர் பெற்றது. புதுக்கோட்டை இராச்சியம் திருமய்யம் தாலூகாவிலுள்ள, பெருந்துறை, கோட்டையூர், மலையக் கோயில் தெர்க்காட்டூர், (தேக்காடு) விராச்சிமலை, நெடுங்குடி, புலிவலம், ஆதனூர், மேலூர், பேரையூர் முதலான ஊர்கள் இக்கான நாட்டிலுள்ள ஊர்களிற் சிலவென, கல்வெட்டுக்கள் உணர்த்துகின்றன. எனவே திருமய்யம் தாலூகா இக்கான நாடென்று ஒருவாறு கூறலாம்.

திருவோதி கால்வாயில் - இது மலையக் கோயிலின் பழம் பெயர். திருவோதிக்கால் என்ற பெயரும் உண்டென்று திரு. இராமச்சந்திர தீட்சதர் கூறுவர்.
பாணிதம் பற்று - ஊரின் பெயர்.
பற்று – பல ஊர்களையுடைய நாட்டுப் பகுதி.
கடமை – நிலத்தில் விளையும் தான்ய வகையில் தான்யமாகச் செலுத்தும் வரி.
வரி – நாணயமாக (Coins)ச் செலுத்தும் வரி.
அந்தரயம் - ஊர்ச் சபையார் வாங்கும் வரி.
சந்திராதித்தவரை - சந்திர சூரியர் உள்ளவரை.
கல்வாயில்நாடு - கேரள சிங்கவளநாடு, கல்வாயில் நாடு, கொழுந்திற்கூற்றம் முதலான பிரிவுகளையுடையது. புதுக்கோட்டை இராச்சியத்தில் திருமய்யம் தாலூகாவிலுள்ள நெல்வாயில் (நெய்வாசல்) என்னும் ஊர் கல்வாயில் நாட்டைச் சேர்ந்தது என்று புதுக்கோட்டை இராச்சியக் கல்வெட்டு உணர்த்துவதால், அத்தாலூகாவின் சில பகுதி இக் கல்வாயில் நாடென்று ஒருவாறு கூறலாம்.

## 25. சுந்தரபாண்டியன் கல்வெட்டு *

1. ஸ்வஸ்திஸ்ரீ பூமருவிய திருமடந்தையுஞ் புவி மடந்தையும் புயத்திருப்ப நாமருவிய
2. கலைமடந்தையுஞ் செயமடந்தையு(ம்) நல(ஞ்சி)றப்பக் கொளாந்த சினப்புலியுங்—
3. கொடுஞ்சிலையுங் குலைந்தொளிப்ப வாளார்ந்த பொற்கிரி மெல்(வரி)க் கயல்கள்
4. விளையாட இருங்க(ட)ல் வலையத் தறம் பெரு(கக் கரு)ங் கலி கடிந்து செங்கொல் நடப்ப ஒரு கு—
5. டை நிழலருநிலங்குளிர முவகைத் தமிழு முறைமை(யில் விள)ங்க நால்வகை வெதமு(ம்) (நவின்றுடன்)
6. வர ஐய்வகை (வெ)ழ்வியுஞ் செய்வினையியற்ற அறு வகைச் சமயமு மழகுடங்திகழ எழு
7. வகைப் பாடலுமியலுடங் பரவ எண்டிசையளவுஞ் சக்கரஞ் செல்லக் கொங்கர் கலிங்கர் ெ—
8. காசலர் மாளுவர் சிங்களர் தெலிங்கர் சினர்குச்சரர் வில்லவர் மகதர் விக்கலர் செம்மியர் பல்—
9. லவர் முதலிய பார்த்திவரெல்லா முறைவிட மருளெங் ஞெருவர் மு(ங்) ஒருவர் முறைமுறை கடவ
10. தநதிறை குணந்திறைஞ்ச இலங்கொளிமணிமுடி இந் திரன் பூட்டிய பொலங் கதிராரமா—
11. ர்பினிற் பொலிய பனிம(ல)ர்த் தாமரைத் திசைமுகங் படைத்த மனுநெறி தழைப்ப
12. மணிமுடி சூடி விளங்கிய மணிபணி வீரசிங்காசநத்து வளங்கெழுகவரி இருமருங் கசைப்ப—
13. க் கடலென முழங்குங்கரி நல்லியானை வடபுலவெந்தர்த மணிபுயம் பிரியா இலங்கி—
14. ழையரிவையர் தொழுதுநின்றெத்த உலகமுழுதுடையா ளோடும் வீற்றிருந்தருளிய ஸ்ரீ கொ—
15. மாறபன்மராம திரிபுவன சக்கரவர்த்திகள் சொணடு கொண்டருளிய ஸ்ரீ சுந்தர பாண்டிய

---

* Pudukkottai State Inscription No. 250. Pages 139—140.

16. தெவற்கு யாண்டு ௯வது பிரஸாதஞ் செய்தருளின திரு முகப்படி கானனுடான விருதராஜ பய—

17. ங்கர வளநாட்டுத் துறுமா நாட்டுத் திருநாவலூரும் அனுமன் தாயான அஞ்சன மங்கலமும் முன்பு

18. இறுத்து வருகிற இறையிலெ உலகுடைய நாயனர் திரு மெனிக்கு நன்ருக இலெசு பெறவெணுமென்—

19. று பிள்ளையார் அழகப் பெருமாள் நாயனர்க்கு விண்ணப் பஞ் செய்து கிணைப்புமிட்டு நி(ரு)ம் வார்த்துத்த—

20. ருவித்தருளின பிரஸாதஞ் செய்தருளின திருமுகப்படி பயிரெழுத முதல் கொண்ட நிலத்துக்கு மாத்தாலி—

21. ருகல நெல் தாழ்த்து மரத்தால் ஐங்கலனெ இருதூணிப் பதக்கு நானுழி நெல்லிறுப்பதாகவும் இவ்

22. வூர்களில் நிரிலிநிலமாய் வரிசைப்படி இறுத்து வருகிற நிலங்களுக்கு மாத்தால் முக்கலனெ இருதூணி மு—

23. க்குறுணி முவுழக்கு நெல் இறுப்பதாகவும் நவிரை இன் னெல்லி லொன்று முக்காலிறுப்பதாகவு(ம்)

24. வரகு இன்னெல்லி(ல் ஒ)ன்று பாதி இறுப்பதாகவும் எள்ளுந் திணையும் இன் நெல்லில் நான் கொன்று இறுப்—

25. பதாகவும் உலகுடைய நாயனர் எழுந்தருளினல் திரு வெழுச்சிக் குடிமை முதலாக நாடென்ற வரிகள் எப்—

26. பெர்பட்டனவும் ஒன்று பாதி இறுப்பதாகவும் வெட்டி முட்டை ஆள் செயாதிதாகவும் பிரஸா—

27. தஞ்செய் தருளின திருமுகப்படி திருநாவலூரர்க்கு(ம்) அனுமன்ருயான அஞ்சன மங்கலத்துக்—

28. கு இறுக்கும்படி கல்வெட்டிக் குடுத்தென் அவனி நாராயண தெவனென் சுவஸ்திஸ்ரீ

## விளக்கவுரை

இருக்குமிடம்: புதுக்கோட்டை இராச்சியத்தில் திருமய்யம் தாலுகாவில் உள்ள கண்ணனூர் பாலசுப்பிரமணிய சுவாமி கோயி லின் கருப்பக் கிருகத்தின் வடபுறச் சுவரில் இருக்கின்றது.

கல்வெட்டின் எழுத்து: தமிழும் கிரந்தமும்.

அரசனைப் பற்றிய பொதுக் குறிப்பு: இவன் குலசேகர பாண்டிய னுக்குப் பின், பாண்டி நாட்டில் ஆட்சி எய்தியவன். பாண்டிய

மன்னர் தரித்து வந்த பட்டங்களில் இவன் மாறவர்மன் என்னும் பட்டம் புனைந்தவன். இவன் மெய்க்கீர்த்தி "பூமருவிய திருமடந் தையும் புவிமடந்தையும் புயத்திருப்ப" என்று தொடங்குகின்றது. இவன் சோழ நாட்டின்மீது படையெடுத்துத் தஞ்சாவூரையும் உறையூரையும் நெருப்பிட்டுக் கொளுத்தினன். மூன்றும் இராசராச சோழனைக் காட்டிற்குத் துரத்தினன். அவனுடைய பைம்பொன்னு லாகிய முடியைப் பறித்துப் பாணனுக்குக் கொடுத்தருளினன். ஆயிரத்தளியில் சோழன் அபிஷேக மண்டபத்தில் வீராபிஷேகஞ் செய்து கொண்டான். அது கருதி இவனுடைய கல்வெட்டுக்களுள் சில இவனைச் சோணாடு கொண்டருளிய சுந்தரபாண்டிய தேவர் எனக் குறிப்பிடுகின்றன. இவன் ஆயிரத்தளியில் முடிசூட்டிக் கொண்ட பின்னர், சிதம்பரத்திற்குச் சென்று அங்குப் பொன்னம் பலம் பொலிய ஆடுவார் பூவையுடன் மன்னும் திருமேனி கண்டு மனங்களித்து, மலர்ச்சேவடி வணங்கிப் பின் பொன்னமராவதி சென்று அங்குள்ள மணி மண்டபத்தில் தங்கியிருந்தான். அது பொழுது முன் தனக்குத் தோற்றுக் காட்டிற்கு ஓடிய மூன்றும் இராசராச சோழனை அழைத்து அவனுக்குச் சோழ நாட்டின் ஆட்சியை அளித்து அரசு புரிந்து வருமாறு செய்தான். அது காரணமாக அவன் கல்வெட்டுக்களுள் சில அவனைச் "சோணாடு வழங்கியருளிய சுந்தர பாண்டிய தேவர்" எனக் கூறுகின்றன. சில ஆண்டுகள் கழித்து மூன்றும் இராசராச சோழன் பாண்டிய னேடு மாறுபட்டான். ஆதலின் சுந்தரபாண்டியன் இரண்டாம் முறையாகப் படையெடுத்துச் சென்றான். மூன்றும் இராசராசன் தோற்றுப் போய் வடநாட்டிற்கு ஓடிவிட்டான். பின் சுந்தர பாண்டியன் பழையாறையாகிய முடி கொண்ட சோழபுரத்திற்குச் சென்று வீராபிஷேகமும் விசயாபிஷேகமும் செய்து கொண்டான். ஆதலால் சில கல்வெட்டுக்கள் இவனைச் "சோணாடு கொண்டு முடிகொண்ட சோழபுரத்து வீராபிஷேகமும் விசயாபிஷேகமும் பண்ணியருளிய வீர சுந்தரபாண்டியர்" எனக் குறிப்பிடுகின்றன. இவ்வேந்தனுடைய பட்டத்தரசி உலகமுடையாள் ஆவள். இவன் கி. பி. 1216 முதல் கி. பி. 1238 முடிய ஆண்டான். இவன் பிறந்தது, புரட்டாசி மாதத்து அவிட்ட நட்சத்திரம் என்பதை இராமநாதபுரம் ஜில்லா திருப்பத்தூர் தாலூகா, திருப்புத்தூர் கோயில் கல்வெட்டு உணர்த்துகின்றது.

கல்வெட்டுத் தோன்றிய காலம்: 1216+3=கி. பி. 1219.

### மெய்க்கீர்த்திப் பகுதியால் அறியப்படும் வீரச்செயல்

கொங்கர், கலிங்கர், கோசலர், மாளவர், சிங்களர், தெலுங்கர், சீனர், குச்சரர், வில்லவர், மகதர், விக்கலர், செம்பியர், பல்லவர்

முதலிய பார்த்திவர் எல்லாம் திறை கொணர்ந்து இறைஞ்ச ஆட்சி புரிந்தான்.

## மெய்க்கீர்த்திப் பகுதிக்குக் குறிப்புரை

கோள் - கொலை.

கோளார்ந்த சினப்புலியும் கொடுஞ்சிலையும் குலைந்தொளிப்ப - அரவக் கொடியோனென்று துரியோதனனைச் சொல்வதுபோலப் புலிக் கொடியும் விற்கொடியுமுடைய கொடியோர் செங்கோல் செலுத்துவது எவ்வாறெனக் குறிப்பின் இகழ்ந்தவாறு.

கருங்கலி - ஈண்டுக் கருமை கொடுமை மேற்று.

கருங்கலி கடிந்து செங்கோல் நடப்ப - இவ்வடி முரண் தொடை.

ஒரு குடை நீழல் இருநிலங் குளிர..........எண்டிசை யளவுஞ் சக்கரஞ் செல்ல - இதனை எண்ணலங்காரம் என்பர் சிவஞான முனிவர். "ஒரு கோட்டன் இரு செவியன்" என்ற சித்தியாரிற் காண்க.

ஐவகை வேள்வி - பிரமயாகம், தேவயாகம், மானுட யாகம், பிதிர் யாகம், பூத யாகமென விவை. அவற்றுள் பிரமயாகம் - வேத மோதுதல்; தேவயாகம் – ஓமம் வளர்த்தல்; மானுட யாகம் – விருந்தோம்பல்; பிதிர்யாகம் – நீர்க் கடனுற்றல், பூதயாகம் - பலியீதல். (இவைகளைக் குறள் 87—உரையின் அடிக்குறிப்பில் காண்க).

அறுவகைச் சமயங்கள் - சமயம் - மதம்; கொள்கை. வகை என்றமையால், உட்சமயம், புறச்சமயம் இவைகளைக் குறிப்பதாகும்.

உட்சமயம் ஆறு :—வைரவம், வாமம், காளாமுகம், மாவிரதம், பாசுபதம், சைவம் என்பன.

புறச்சமயம் ஆறு - உலகாயதம், புத்தம், சமணம், மீமாஞ்சை, பாஞ்சராத்திரம், பாட்டாசாரியம் என்பன.

எழுவகைப் பாடல் : வெண்பா முதலிய நான்கும், இனம் (துறை, தாழிசை, விருத்தம்) மூன்றும் ஆக.

உறைவிடம் - தங்குதற்குரிய இடம்.

கடவ - தாம் செலுத்தக் கடமைப்பட்டதாக.

திறை - கப்பம்.

இலங்கொளி மணிமுடி யிந்திரன் பூட்டிய - முன்னோர்தம் செயல் தன் மேல் ஏற்றியது. "தேவர்கோன் பூணாரம் தென்னர் கோன் மார்பினவே" (சிலப்பதிகாரம்).

கடலென முழங்குங் களிநல் யானை.........இலங்கிழையரிவையர் தொழுது நின்றேத்த - பகையரசர் மனைவியர் எமக்கு மங்கிலியப்

பிச்சை யருள்கவென்று கணவர் மேற் பாயாதிருக்க பட்டத்து யானையை வணங்குகின்றனர்.

கொங்கர் - கொங்கு தேசத்தரசர்.

கலிங்கர் - கலிங்க தேசத்தரசர்.

கோசலர் - கோசல தேசத்தரசர்.

மாளவர் - மாளவ தேசத்தரசர்.

சிங்களர் - இலங்கை தேசத்தரசர்.

தெலுங்கர் - தெலுங்கு தேசத்தரசர்.

சீனர் - சீன தேசத்தரசர். இச்சீன தேசத்து அரசரின் தூது வராய் பாண்டிய அரசர் அவைக்களத்தில் இருந்தவரைக் குறிக்கும் இச்சீனர் என்னும் சொல் என்பர் திரு. இராமச்சந்திர தீட்சதர்.

குச்சரர் - குச்சர தேசத்து அரசர். குச்சரம் என்பது குஜரத் தேசமாக இருக்கலாமா என்பது திரு. இராமச்சந்திர தீட்சதர் கருத்து.

வில்லவர் - சேரர்.

மகதர் - மகத தேசத்து அரசர்.

செம்பியர் - சோழ அரசர்.

பல்லவர் - பல்லவ அரசர்:

## உரைநடைப் பகுதியால் அறியப்படும் செய்தி

கானநாடான விருதராச பயங்கர வளநாட்டுத் துறுமா நாட்டுத் திருநாவலூர், அனுமன் தாயான அஞ்சனமங்கலம். இவ்வூர்களின் வரிப்பணம் மிகுதியாய் இருந்தது. அதைக் குறைக்குமாறும், அப்படிக் குறைப்பது சுந்தர பாண்டிய தேவரின் திருமேனி நன்று யிருக்குமென்றும், அழகப் பெருமாள் நாயனுர் சுந்தர பாண்டிய தேவரிடம் விண்ணப்பஞ் செய்தார். அதை அரசர் ஏற்றருளி, முதல் தரத்து நிலத்துக்கு, மா ஒன்றுக்கு இரு கல நெல்லைத் தள்ளி விட்டு ஐங்கலனே இரு தூணிப்பதக்கு நானுழி நெல்லும், நீர்ப் பஞ்ச முள்ள நிலத்துக்கு மா ஒன்றுக்கு முக்கலனே இருதூணி முக்குறுணி மூவுழக்கும், நவிரை என்னும் நெல்லில் ஒன்றுக்கு முக்காலும் வரகில் ஒன்றுக்குப் பதக்கும், எள், தினை இவைகளில் நான்கில் ஒன்றும் அரசர் எழுந்தருளினுல் திருவெழுச்சிக் குடிமை முதலாக நாடென்ற வரிகள் எப்பேர்ப்பட்டனவும், ஒன்றுக்குப் பாதியும் கொடுக்குமாறு அரசன் கட்டளையிட்டருளினுன்.

## உரைநடைப் பகுதிக்குக் குறிப்புரை

கான நாடு - புதுக்கோட்டை இராச்சியத்தில் உள்ள விருதராச பயங்கர வளநாட்டிற்கு வைக்கப் பெற்ற வேறு பெயர்.

கான நாடு - புதுக்கோட்டை இராச்சியம், திருமய்யம் தாலூகா கண்ணனூர், இந்நாட்டைச் சேர்ந்தது என்பதால் இத்

திருமய்யம் தாலுகாவின் சில பகுதி இந்நாடென்று கூற லாம். திருநாவலூர், அனுமன் தாயான அஞ்சனமங்கலம் இந்நாட்டில் அடங்கிய வேறு சில ஊர்கள். அனுமானின் தாயாரின் பெயரால் வைக்கப் பெற்ற அஞ்சனமங்கலம் என்னும் ஊரின் பெயர் பாராட்டத் தக்கது.

இறுத்து வருகிற - கொடுத்து வருகிற.

இறை - வரிப்பணம்.

உலகுடைய நாயனர் - அரசர். இங்கே சுந்தர பாண்டிய தேவர்.

இலேசு பெற - நன்ருக இருக்குமாறு.

அழகப் பெருமாள் - இவர் சுந்தர பாண்டிய தேவருடைய மைத்துனர். இச் செய்தி இராமநாதபுரம் ஜில்லா, திருப்பத்தூர் தாலுகா, திருப்புத்தூர், திருத்தளீஸ்வரர் கோயில் கல்வெட்டால் அறியக் கிடக்கின்றது.

நாயனர்க்கு - அரசர்க்கு; இங்கே சுந்தர பாண்டிய தேவர்.

பிரசாதஞ் செய்தருளின - கொடுத்தருளின.

பயிர் எழுத முதல் கொண்ட நிலத்துக்கு - முதல் தரமான நிலத் துக்கு.

மாத்தால் - மாவினல் (மா—என்பது கால் காணி அல்லது நூறு குழி).

தாழ்த்து - கழித்து.

நீரிலி நிலம் - நீர்ப் பஞ்சமாயுள்ள நிலம்.

வரிசைப்படி - தரப்படி.

நவிரை - நெல்லில் ஒரு வகை.

திருவெழுச்சிக் குடிமை - அரசன் எழுந்தருளும்பொழுது, வசூலிக் கப் பெறும் வரி.

வெட்டிமுட்டை ஆள் - பொது நலங்களுக்குப் பயன்படுவதற்கு வசூலிக்கப் பெறும் வரி (?)

# 26. சுந்தர பாண்டியன் கல்வெட்டு*

1. ஸ்வஸ்திஸ்ரீ கொமாறபன்மரான திரிபுவனச—
2. க்கரவர்த்திகள் சொழநாடு கொண்டருளிய சிரிவிர சுந்தர—
3. பாண்டிய தெவற்கு யாண்டு ரு ஆவதின் எதிராமாண்—
4. டு இசப நாயிற்று யிருபத்திரண்டாந் தியதியும் தி—
5. ங்கட்கிழமை புணர்பூசத்து நாள் கண்டன்
6. ஆளுடையானுன கல்வாயில் நாடாழ்வானெ—
7. ன் காளையர் கால பெருந்தெருவில வியாபாரி வெண்—
8. ணை நல்லூருடையான் கூத்தன் தில்லை நாயகன்
9. திருத்தியூர் முட்டத்தாரான வண்டாங்குடிக்கள்—
10. ளர் பக்கல காராண் கிழமையாக விலைகொண்டுடை
11. ய வண்டாங்குடி வளையிற் சுற்றுமுற்றுக்கும் யி—
12. றை குடிமை அந்தராயம் நாடென்றவரிவாரமரக்—
13. கலம் கணக்கப்பெறு மற்றும் எப்பெறபட்டசி—
14. ல் ஆய(ம்) கடமை உள்ளவயிற்றுக்கும் நெல்வாயில்
15. திருவகத்திசிர(ம்) உடைய நாயநாற்கு கொல் குடி(த)ா
16. ங்கியால் புள்ளிபுக்க நிலம் ஒரு மாவுக்கு பசானபொ
17. கத்துக்கு கரும்புட்பட மாத்தால் யிருகல நெல்லு—
18. ம் அந்தராயத்துக்கு காற்திரமமும் ஆடி குறு(ை)வ
19. அற்பி(சி)க் குறுவை(க்)கு மாத்தால் கலநெல்லும் அ—
20. ரைக்கால் திரமமும் எள் திணைவரகுக்கு மாத்தால் தூ—
21. ணி பதக்கு நெல்லும் மாகாணி திரமமும் இறுப்பதாக-
22. வும் இவ்விறை கல்வாயில் நாட்டு கடமை காலா லெயிறுப்—
23. பதாகவும் திரமம் அஞ்சுமெனி இறுப்பதாகவும் இதுக்கு
24. இவன் பக்கலெ கற்பூர விலையும் கொண்டு இப்படி சந்தி—
25. ராதித்தவற் செல்வதாக சம்மதித்தொம் கண்டன் ஆளு—
26. டையானுன கல்வாயில் நாடாழ்வனென் வெண்ணை நல்லூ—
27. ருடையான் கூத்தன் தில்லை நாயகனுக்கு இது
28. பன் மாஹேஸ்வரரக்ஷை

---

* Pudukkottai state Inscriptions No. 260. pages 145 -146.

## விளக்கவுரை

இருக்குமிடம்: புதுக்கோட்டை இராச்சியத்தில், திருமய்யம் தாலூகாவிலுள்ள நெய்வாசல் அகத்தீஸ்வரர் கோயில் கருப்ப இல்லின் தென்புறச் சுவர்.

கல்வெட்டின் எழுத்து: தமிழும், கிரந்தமும்.

கல்வெட்டில் குறிக்கப்பெற்ற அரசன்: வீரசுந்தர பாண்டிய தேவர்.

அரசனைப்பற்றிய பொதுக் குறிப்பு: 25-ஆம் கல்வெட்டில் காண்க.

கல்வெட்டுத் தோன்றிய காலம் - 1216+6=கி. பி. 1222.

## கல்வெட்டில் குறிக்கப்பெற்ற செய்தி

வெண்ணெய் நல்லூரைச் சொந்த ஊராக உடையவனும், காளையர்கால பெருந்தெருவில் வியாபாரியாய் இருந்தவனுமாகிய கூத்தன் தில்லை நாயகன் என்பான், திருத்தியூர் முட்டத்தாரான வண்டாங்குடிக் கள்ளரிடமிருந்து வண்டாங்குடியையும் அதன் சுற்றுப்புறமுள்ள நிலங்களையும் காராண் கிழமையாக விலைக்குக் கொண்டு, அதற்குப் பதில், அந் நிலங்களுக்குரிய இறை, குடிமை, அந்தராயம், நாடென்றவரி, வாரமரக்கலம், கணக்கப்பேறு, மற்றும் எப்பேர்ப்பட்ட சில்வரிகளையும், திருவகத்தீஸ்வரமுடைய நாயனார்க்குக் கொடுப்பதாக இசைந்ததோடு, குடிதாங்கிக் கோலால் அளக்கப்பட்ட ஒருமா நிலத்துக்குக் கல்வாயில் நாட்டில் வழங்கி வந்த கடமை மரக்காலால் கரும்பு உட்பட, பசான போகத்துக்கு இரு கல நெல்லும், அந்தராயத்திற்குக் கால்திரமமும், ஆடிகுறுவை ஐப்பசி குறுவைகளுக்கு ஒருமாவுக்குக் கலநெல்லும் அரைக்கால் திரமமும், எள், திணை, வரகுகளுக்கு ஒருமாவுக்கு தூணிப்பதக்கு நெல்லும் மாகாணி திரமமம் இறுப்பதாகவும் சம்மதித்துள்ளான். இதன் பொருட்டு, கூத்தன் தில்லைநாயகனிடமிருந்து, கல்வாயில் நாடாள்வானான, கண்டன் ஆளுடையான், கற்பூரவிலையைப் பெற்று அதற்குச் சம்மதமும் கொடுத்துள்ளான்.

## குறிப்புரை

ஐந்தாவதின் எதிராமாண்டு - ஆறும் ஆண்டு.

ரிஷப நாயிறு - வைகாசி மாதம்.

கல்வாயில் நாடு - இது கேரள சிங்க வளநாட்டின் உட்புரிவுகளில் ஒன்று. புதுக்கோட்டை இராச்சியத்தில் திருமய்யம் தாலூகா, நெல்வாயில் முதலான ஊர்கள் இந்நாட்டைச் சேர்ந்துள்ளன.

காராண் கிழமையாக – நிலத்தைப் பயிர் செய்யும் உரிமையாக.

வண்டாங்குடி வளையில் சுற்றுமுற்றுக்கும் - வண்டாங்குடியைச் சூழ்ந்துள்ள சுற்றுப்புறமுள்ள நிலங்களுக்கும்.

இறை - நிலத்துக்குரிய வரி (Revenue tax).

அந்தராயம் - உள்வரும்படி.

நாடென்றவரி – நாடுகாவலுக்குரிய வரி.

கணக்கப்பேறு - கணக்குப் பிள்ளைக்குக் கொடுக்கவேண்டியவை.

சில் ஆயம் - சிறுவரிகள்.

குடிதாங்கிக் கோல் – வண்டாங்குடிப் பக்கங்களில் வழங்கிவந்த அளவுகோல்.

ஒருமா – என்பது கால்காணி என்று தென்னுர்க்காடு ஜில்லாவில் வழங்கப்பெறும். 100 குழி கொண்டது ஒருமா என்று தஞ்சாவூர் ஜில்லாவில் வழங்கப் பெறும்.

பசான போகம் - பசானம்—சித்திரை மாதத்தில் அறுவடையாகும் ஒருவகை நெல்.

மாத்தால் - ஒருமாவிற்கு அதாவது நூறுகுழிக்கு.

திரமம் – 60 நெல் எடை.

இருப்பதாகவும் – கொடுப்பதாகவும்.

கடமை கால் - கல்வாயில் நாட்டில் வழங்கிவந்த மரக்காலின் பெயர்.

திரமம் அஞ்சுமேனி – திரமம் ஐந்துவீதம்.

கற்பூர விலை – கோயில் நிலங்களை வாங்குதற்குரிய விலை.

சந்திராத்தவல் - சந்திர சூரியர் உள்ளவரை.

# 27. அரிகேசரி பராக்கிரம பாண்டியன் கல்வெட்டு*

1. சுபமஸ்து பூமிசை வனிதை மார்பினிற் பொலிய நாமிசை கலைமகள் நலனுற விளங்கப் புயவரை மீது சயமகள் புணரக் கயலிணை யுலகின் கண்ணெனத் திகழச் சந்திர குலத்து வந்தவ த(ரி)த்து முந்தையோர் தவத்தின் முளையென வளர்ந்து தென்கலை வடகலை தெளிவுறத் தெரிந்து மன்பதை புரக்க மணிமுடி புனைந்து சங்கர சரண பங்கயஞ் சூடிச் செங்கோ லோச்சி வெண்குடை நிழற்றி வான வாரியு மன்னருள் வாரியுந் தான வாரியுந் தப்பா தளித்து மறக்களை பறித்து நல்லறப்பயிர் விளைத்துச் சிங்கையி லனுரையி லிராசையிற் செண்பை யில் விந்தையி லறந்தையில் முதலையில் வீரையிற் வைப் பாற் ெ.........ன்னரை வென்கண் டெப்பாற் றிசையு மிசைவிளக் கேற்றிப் பதினெண்.........கம்போற்றப் பதி னெண் பாஷைப் பார்த்திப ரனைவருந் திறையுஞ் சின்னமு முறைமுறை குணர்ந்து குறைபல விரந்து குரைகழ விறைஞ்ச வவரவர் வேண்டிய தவரவர்க் கருளி அந்தண ரனேகர் செந்தழ லோம்ப விந்தைமுதல் அகரம் ஐந்திடத் தியற்றிச் சிவநெறி யோங்கச் சிவாற்சனை புரிந்து மருதூ ராற்கு மண்டபமமைத்துமுன் ஒரு தூர் மூங்கிலுள்புக்கிருந்த சிற்பரர் தம்மைத் திருவத்த சாமத்துப் பொற்கலத் தமுது பொலிவித்தருளிச் சண்பக வனத்துச் சங்கரர் தமக்கு மண்டப மமைத்து மணிமுடி சூட்டி

2. விழாவணி நடாத்தி விரைப்புன லாடல் வழாவகை நடாத்த நின்மன் னருள்தனுல் வற்று வருவியும் வற்ற வற்கட முற்றவிக் காலத் துறுபுனல்நல்கென வேண்டியப் பொழுதே வேறிடத் தின்றிச் சேண்டரு புனலிற் செழும் புன லாட்டி மின்கால் வேணி விஸ்வநாதர்க்குத் தென்கா சிப்பெருங் கோயில் செய்து நல்லாகமவழி நைமித் திகமுடன் எல்லாப் பூசையும் எக்கோ யிலினும் பொருள் முத லனைத்தும் புரையற நடாத்தித் திருமலி செம்பொற் சிங்காசனமிசை உலக முழுதும் உடையாருடனே இலகு கருணை யிரண்டுரு வென்ன அம்மையும் அப்பனு

* T. A. S., Vol. I, No II, Pages 91—95.

மாயனைத் துயிர்க்கும் இம்மைப் பயனு மறுமைக் குறுதியு மேம்பட நல்கி வீற்றிருந் தருளிய ஸ்ரீஅரி.........தேவரான பராக்கிரம பாண்டியதேவற்கு யாண்டு இருபத்தெட்டாவதின் எதிராவது.........ற்று இருபத்தொன்ருந் தியதியும் பூரணையும் வெள்ளிக்கிழமையும் பெற்ற சோதிநாள் தென்வாரி நாட்டு சித்திரநதி உத்தரதீரத்தில் தட்சிண காஸியிலே உடையார் விஸ்வநாதனுக்கு அபி நவமாக உபாநாதிஸ்தூபி பரியந்தமுந் திருப்பணி செய்து உடையார் விஸ்வநாதனையும் பிரதிஷ்டித்து அர்த்த மண்டபம் இடைநாழிகை மகாமண்டபம் ஸோபாநம் இவையுந் திருப்பணி செய்து திருப்பள்ளி அறை நாச்சியார் முதலாகவுள்ள திருவுடம்புகளும் ஏறி அருளப்பண்ணுவித்து ஆவரண கோபுராதிகளும் ஆரம்பித்து மேல்—

3. உடையார் விஸ்வநாதன் பூஜைக்கு அமுதுபடி சாத்துப்படி திருமாலைத் திருப்பரிவட்டம் திருவிளக்கு உட்பட்ட பல நித்யநியமங்களுக்கும் பல விசேஷ பூஜை திருநாட் செலவுக்கும் முன்னுள் இரண்டாவதின் எதிர் இருபத்துமூன்ருவது முதலுக்கு நாம் தேவதானமாக விட்ட பற்றுகளில் தென்வாரி நாட்டுத் தென்காசிக்குப் பெருநான் கெல்கையாவது கீழ் எல்கை புலியூர்ப் பற்ருன காராண் குளத்தில் நீர் நக்கலுக்கும் பரிம்புக்கும் புலியூர் அகரப்பற்றில் புஞ்சைக்கும் நாராயண ஸ்ரீ பாதங்கள் மடப்புறத்தில்மேல் எல்கைக்கு மேற்கும் தென் எல்கை சித்ர நதிக்கு வடக்கு மேல் எல்கை குன்றக்குடி பரிம்புக்குக் கிழக்கும் வ........ சென்னுய்ப் பொற்றைக்கும் குத்துக்கல்லுக்கும் தெற்கும் ஆக இன்னுன் கெல்.........ட்ட பற்றும் இந்த நதிக்கு தக்ஷிண தீரத்தில் வாயுளான் குடிப்பற்றுக்குப் பெருநான் கெல்கையாவது கீழ் எல்கை புலியூர் அணைக்கும் திருச்சாலைக் குடிப் பற்றுக்கும் ஆழங் காலுக்கு மேற்கும் தென் எல்கை திருச்சாலைக் குடிப் பற்றுக்கும் பராக்கிரம பாண்டிய சதுர்வேதி மங்கலத்து பட்டகள் அகரப் பற்றில் வடவெல்கைக்கும் உடையார் திருக்குற்ருலமுடைய நாயஞர் பழந் தேவதானத்துக்கு வடக்கும் மேல் எல்கை வாயுளான்குடி அணைக்குக் கிழக்கும் வட எல்கை சித்ரநதிக்குத் தெற்கும் ஆக இன்னுன் கெல்கைக் குட்பட்ட பற்றும் குன்றக்குடி பற்றுக்குப் பெருநான்—

4. கெல்கையாவது கீழ் எல்கை இடைமலைப் பரிம்புக்கு மேற்கும் தென் எல்கை சித்ர நதிக்கு வடக்கும் மேல் எல்கை

செங்கோட்டை பிடாரியார் கோயிலுக்கும் இலத்தூற்குப் போகிற பெரு வழிக்கு(க் கிழக்கு) வடஎல்லை கடமர் குளத்துக்குத் தெற்கு ஆக இன்னான் கெல்லைக் குட்பட்ட பற்றில் உடையார் திருக்குற்றாலமுடைய நாயனார் தேவ தானமான நிலம் ஒன்பதுமா முந்திரிகையின் மூன்றுமா முக்காணியும் நீங்கலாக உள்ள பற்றும் பராக்கிரம பாண்டிய நல்லூற் பற்றுக்குப் பெருநான் கெல்கை யாவது கீழ் எல்கை இலுப்பைத் தொண்டிற் பெரு வழிக்கு மேற்கும் தென் எல்கை இக்குளத்தில் நீர் நக்க லுக்கு வடக்கும் மேல் எல்கை உடையார் திருக்குற்றால முடை.........ா பழந்தேவதானமான திருச்சாலைக் குடிப் பற்றுக்குக் கிழக்கும் வடஎல்கை சித்ர.........தெற்கும் ஆக இன்னான் கெல்கைக் குட்பட்ட பற்றில் இருங்கிண்டி ஸ்ரீ பத்மநாபன் தாந இறையிலி நிலமிரண்டுமாவும் நீங்க லாக உள்ள பற்று நல்லூற்பற்றில் வள்ளைமுட்டமும் இக் குளத்தில் நீர் பாயும் நிலமாய் வடவூற் பற்றில் நின்றுங் கூட்டின நிலம் மூன்றுமா அரையும் ஆக இப்பற்றுக்குப் பெருநான் கெல்கையாவது கீழ் எல்கை காடேற்றிப் பற்றுக்கு மேற்கும் தென் எல்கை வடவூற்பற்றிற் செங் குளத்தில் நீர்பாயு நிலத்துக்கும் தஞ்சாவூற் பெருங் காலுக்கும் அனுபோகமழகியான் குளத்தில் நீர்பாயும் பற்றுக்கு வடக்கும் மேல் எல்லை

5. இக்குளத்தில் நீர் நக்கலுக்கும் தவணைப்பற்றுக்குங் கிழக்கு வடஎல்கை தஞ்சாவூரில் நின்றும் தவணைக்குப் போகிற பெருவழிக்குத் தெற்கும் ஆக இன்னான் கெல் கைக் குட்பட்ட பற்றும் வடவாரி நாட்டுப் பைம்பொழிற் பற்றில் நல்லாண் பிள்ளைப் பெற்றாளுக்கும் விஸ்வநாதப் பேரேரிக்கும் பெருநான் கெல்கையாவது கீழ் எல்கை செங்கோட்டைப் பிடாரியார் கோயிலுக்கும் இவ்வூரில் நின்றும் இலத்தூற்குப் போகிற பெருவழிக்கு மேற்கு தென் எல்கை ஆற்றுக்கு வடக்கு மேல் எல்கை பைம் பொழிலில் நின்றும் நல்லூற்குப் போகிற பெருவழிக்கும் முழங்கால் முட்டிப் பாறைக்குங் கிழக்கு வட எல்கை தேனிடு பொற்றைக்குத் தெற்கு ஆ.........ன் கெல்கைக் குட்பட்ட பற்றும் முப்பதாவது மேஷஞாயிற்று இரு பத்தெ.........தியதியும் பூர்வபக்ஷத்து பஞ்சமியும் திங்கட் கிழமையும் பெற்ற புணர்பூசத்து நாள் நாம் முன்பு விட்ட பற்றுக்கள் நீங்கலாக நாளது பூஜெச்சில வுக்கு விட்ட தென்வாரி நாட்டு இராசகுலராம நல்லூ

ரான புலியூர்ப் பற்றுக்கும் வீர பாண்டிய நல்லூர்ப் பற்றுக்கும் பெருநான் கெல்கையாவது புலியூர்ப்பற்றுக் குப் பெருநான்கெல்கைக் கீழ் எல்கை திருவெண்காட்டு முதலியார் மடப்புறமான பாட்டக்குறிச்சிப்பற்றுக்கு மேற்கு தென் எல்கைச் சிற்ருற்றுக்கு வடக்கு மேல் எல்கை பழந் தேவதானமான

6. தென் காசிப் பற்றுக்குக் கிழக்கு வடஎல்கை ஆய குடி பற்றுக்குத் தெற்கு ஆக இன்னுன்கெல்கைக் குட்பட்ட பற்றில் உடையார் திருக்குற்ருலமுடைய நாயனுர் தேவ தானமும் உடையார் விக்கிர பாண்டீஸ்வரமுடைய நாயனுர் தேவதானமும் நயினுர் திருவிருந்த பெருமாள் திருவிடையாட்டமும் ஸ்ரீகிருஷ்ணன் திருவிடையாட்டமும் பராக்கிரம பாண்டிய நல்லூரில் நயினுர் திருவேங்கட நாதன் திருவிடையாட்டமும் முகந்தானத்து நாராயண ஸ்ரீ பாதங்கள் மடப்புறமும் அகரப்பற்றும் நீங்கலாக இன்னுன் கெல்கைக் குட்பட்டபற்றும் வீரபாண்டிய நல்லூருக்குப் பெருநான் கெல்கையாவது கீழெல்கை தட்டான் குளத்துப்பரிம்புக்கு மேற்கு தென் எல்கை திருச்சிற்றம்பலத்துக் காலான இராசகுலரா......... காலுக்கும் நயினுர் திருவிருந்த பெருமாள் திருவிடை யாட்டமான ஆகவரா(ம).........துக்கும் வடக்கு மேல் எல்கை திருவெண்காட்டு முதலியார் மடப்புறமான பாட்டக் குறிச்சிப்பற்றுக்குக் கிழக்கு வட எல்கை விந்தனூர்ப் பெருவழிக்குத்தெற்கு ஆக இன்னுன்கெல் கைக்குட்பட்ட பற்றும் ஆக இப்பற்றுக்களில்ப் பெருநான் கெல்கைக் குட்பட்ட பற்றும் ஆக இப்பற்றுக்களில் பெரு நான்கெல்கைக் குட்பட்ட நஞ்செய் புஞ்சை மாவடை மரவடை பட்டடை கொடித்தோட்டம் செக்கிறை மற்று முள்ள ஸமஸ்த பிராப்திகளும் முப்பதாவது பசான முதலுக்குத் தேவதானமாக விட்ட அளவுக்கு இம்மரி யாதியிலெ இவ் வோலை பிடிபாடாகக்கொண்டு ஆசந்திர தாரவத் இவ்வாலையம் உள்ள அளவும்

7. கையாண்டு கல்லிலுஞ் செம்பிலும் வெட்டிப் பூசையுந் தாழ்வற நடத்திப் போதவும் பாற்க இவை கிடாரத் தாருடையான் எழுத்து வதுல்யம்.

## விளக்கவுரை

இருக்குமிடம் - திருநெல்வேலி ஜில்லா தென்காசி விசுவநாதர் கோயில் கர்ப்பக் கிருகத்தின் மேற்கு தெற்கு அடிப்பாகங்கள்.

கல்வெட்டின் எழுத்து - தமிழும் கிரந்தமும்.

கல்வெட்டில் குறிக்கப்பெற்ற அரசன் - அரிகேசரி பராக்கிரம பாண்டியன்.

## அரசனைப்பற்றிய பொதுக் குறிப்பு

இவனுக்குப் பொன்னின் பெருமாள், மானக்கவசன் என்ற வேறு பெயர்களும் உண்டு. இவன் தென்காசிப் பெருங்கோயிலைக் கட்டியுள்ளான். இவன் சிறந்த சிவபத்திச் செல்வன். இவன் தேவியாரின் பெயர் உலக முழுதுடையாள். இவ்வம்மையாரும் இவரது கணவனும் " இலகு கருணை இரண்டு உருவென்ன அம்மையும் அப்பனுமாய் அனைத்துயிர்க்கும் இம்மைப் பயனும் மறுமைக்கு உறுதியும் மேம்பட நல்கி " எனப் பாராட்டப் படுகின்றனர். இவ்வரசனுடைய மெய்க்கீர்த்தி "பூமிசை வனிதை மார்பினிற் பொலிய" எனத் தொடங்குகின்றது. இவன் கி. பி. 1422-முதல் கி. பி. 1463 முடிய ஆட்சி புரிந்தான்.

கல்வெட்டுத் தோன்றிய காலம் - 1422+29=கி. பி, 1451.

## கல்வெட்டினுல் அறியப்படும் செய்திகள்

அரிகேசரி பாக்கிரம பாண்டியன், சிங்கை, அனுரை முதலான இடங்களில் தன் பகைவரை வென்ருன். அந்தணர்களுக்கு அகரங்களை அமைத்தான். திருப்புடை மருதூர், திருக்குற்ருலம் கோயில்களில் சிலமண்டபங்களைக் கட்டினுன். தென்காசிக் கோயிலைப் புதிதாகத் திருப்பணி புரிந்தான். அக்கோயில் பெருமானுக்கு விசேட பூசைகளுக்கும் திருவிழாக்களுக்கும், வாயுளான், குன்றக்குடி, நல்லூர், வடவாரி நாட்டுப்பைம்பொழில், புலியூர், வீரபாண்டியன் என்னும் ஊர்களைக் கொடுத்துள்ளான்.

## குறிப்புரை

சுபமஸ்து - நன்மை உண்டாகுக.

சென்பை - திருக்குற்ருலம்.

மருதூரார் - பாண்டி நாட்டிலுள்ள திருப்புடை மருதூரில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானின் திருப்பெயர்.

இருபத்தெட்டாவதின் எதிராவது - இருபத் தொன்பதாவது.

சோதி நாள் - சுவாதி நட்சத்திரம்.

ஏறி அருளப் பண்ணுவித்து - எழுந்தருளச் செய்வித்து.

பற்றுகள் - ஊர்கள்.

# 28. அரிகேசரி பராக்கிரம பாண்டியர் கல்வெட்டு*

1. சுபமஸ்து வ அன்பினுடன் சகாத்தமாயிரத்து முன் னூற்றறுபத்—
2. தெட்டதன்மேல் வைய்காசித் திங்கள் மன்தியதியீரைந் திற் பூறு—
3. வபக்க மருவு தெசமியில் வெள்ளி வாரந்தன்னில் மின் திகழுத்திரநாள்
4. மீனத்தில் வாகைவே லரிகேசரி பராக்கிரம மகீபன் தென் திசையிற்கா—
5. சிநகர்க் கோயில்காணச் சென்று நின்று கர்ழ்சணை தான் செய்வித்
6. தானே வ (1) அடைவுதிகழ் சகாத்தமாயிரத்து முன்னூற் றறு பத்—
7. தொன்பதின் மேற்செல் மிதுன ஞாயிற்றிடை மருவுதி யதி பதி(னெ)—
8. ............விற் சனிவார (மதனில் மீனத்தில் மன
9. ...............
10. டையவரைத் தென் காசிச்சிவாலயத்தினுள்ளமைத்துத் தெள்ளமுத மூட்—
11. டினுனே வ (2)
12. பன்னு கலியுக நாலாயிரத் தைஞ்ஞூற்றைம்பத்தெட்டின் மேலெவரும் பணிந்து போற்ற(ச்)
13. சென்னல் வயற் தென்காசி நகரில் நற்காத்திகைத் திங்கள்த்தியதியைந்திற் செம்பொன் வாரம—
14. ன்னிய மார்கழி நாளில் மதுரைவேந்தன்வடிவெழு தொணுத பராக்கிரம மகீபன் சொன்னவரை
15. போற் திருக்கோபுரமுங் காணத் துடியிடையாயுபான முதல் துடக்கினுனே வ (3) ஏராருஞ் சகா—
16. த்த மாயிரத்து முன்னூற்றெழுபத் தொன்பதின் மேற் காத்திகை மாதத்திற் சீராருங்—

---

* T. A. S., vol. I, No III, Pages 95-98.

17. தியதி யைந்திற் குருவாரத்திற்சிங்க முகுற்த்தத்தில் மிறுக சீரிஷத்
18. தன்னில ரனருளால் வழுதி பராக்கிரம மகீபன் கூரா—
19. பானமுதல் கொட்டினனே வ (4)
20. சேலேறிய வயற் தென் காசி யாலையந் தெய்வ செய லாலே சமைந்த திங்கென்—
21. செயலல்ல வதனையின்ன மேலே விரிவுசெய்தே புரப் பாரடி வீழ்ந்தவர்—
22. தம்பாலேவல் செய்து பணிவன் பராக்கிரம பாண்டி யனே வ (5) மனத்த(ா)ல்
23. வகுக்கவு மெட்டாத கோயில் வகுக்கமுன்(னி)ன்றெனைத் தான் பணிகொண்ட—
24. நாதன் தென் காசியை யென்று மண்மேல் நினைத்தா தரஞ் செய்து தங் காவல்
25. பூண்ட நிருபர் பதந்தனைத் தாழ்ந்திறைஞ்சித் தலைமீதி யானுந் தரித்தனனே வ (6)
26. பூந் தண்பொழில் புடைசூழுந்தென் (காசியை) பூதலத் திற் தாந்தங்கிளையுட—
27. னே புரப்பார்கள் செந் தாமரை(யாள் காந்)தன் பராக் கிரமக்கை(ய்)த
28. வன் மான கவசன் கொற்கை வேந்தன் பணிபவராகி யென்நாளும் விளங்கு—
29. வரே வ (7) காண்டகு சீர் புனை தென்காசிக் கோபுரக் கற்பணியாருண்டில் முடி—
30. த்துக் கயிலை சென்றனகிலேசர் பதம் பூண்டுறை சிந்தை யரிகேசரி விந்தை—
31. ப் போர் கடந்த பாண்டியன் பொன்னின் பெருமாள் பராக்கிரம பாண்டியனே வ (8)
32. ஆராயினுமிந்தத் தென்காசி(மேவும்) பொன்னலயத்து வாரா
33. ததோர் குற்றம் வந்தாலப் போதங்கு வந்ததனை நேராகவே—
34. யொழித்துப் புரப்பார்களை நீதியுடன் பாராரறியப் பணிந்தேன்
35. பராக்கிரம பாண்டியனே வ (9) அரிகேசரிமன் பராக் கிரம மாறனரனருளால்

36. வரிசேர் பொழிலணி தென் காசிக்கோயில் வகுத்து வலம்புரிசேர் கடற்புவி
37. போற்ற வைத்தேனன்பு பூண்டிதனைத் திரிசேர் விளக் கெனக் காப்பார் பொற்—
38. பாத மென் சென்னியதே வ (10)சாத்திரம் பார்த் திங்கி யான் கண்ட பூசை—
39. கள் தாம் நடாத்தியேத்தியன்பால் விசுவ நாதன் பொற் கோயிலெ—
40. ன்றும் புரக்கப் பா(ர்)த்திபன் கொற்கைப் பராக்கிரம மாறன் பரிவு—
41. டனங் கோத்திரங் தன்னிலுள்ளார்க்கு படைக்கலங் கூறினனே வ (11)
42. மென் காசை மாமலரன்ன மெய்யோர்க்கும் விரிஞ்ச னுக்கு—
43. ம் வன் காசு தீர்த்திடும் விச்சுவ நாதன் மகிழ்ந்திருக்கப்-
44. பொன் காசை மெய் யெ(ன்று தொட்)ட கைக்கு மிப் பூதல—
45. த்துத் (ெ)தன் காசி (கண்டபெருமாள் பராக்கிர)மத் தென்னவனே வ (12)
46. (ஏ)ரார் சகாத்த முந்நூற்றுடனுயிரத்தெ(தண்பத்)தஞ் சிற் சீராரு மார்கழி—
47. (சி)த்(திரை நா)ளிற் (சிறந்து குற்றம் வாராத பூரணை யி)னிற் பராக்கிரம மாறனெ—
48. ………ரா……ரகயிலாயந்தான்……கண்டனனே வ (13)
49. கோதற்ற பத்தி யறுபத்துமூவர்தங் கூட்டத்திலோ தீதற்(ற) வெள்ளிச்(சி)லம்
50. பகத்தோ செம்பொனம் பலத்தோ வேதத்திலோ சிவ லோகத்திலோ
51. விசுவநாத னிருபாதத்திலோ சென்றுபுக்கான் பராக் (கி)ரம பாண்டியனே வ (14)
52. ஓங்கு நிலை யொன்பதுற்ற திருக்கோபுரமும்
53. பாங்கு பதினொன்று பயில் தூணுந்தேங்குபு—
54. கழ் மன்னர் பெருமான் வழுதிகண்ட தென்—
55. காசி தன்னிலன்றியுண்டோ தவத்து வ (15)
56. அணிகொண்ட விந்த வணங்குமோ—
57. ன்றே யடியேற் குனக்கு மணி

58. கொண்ட வாசல் பணியும்
59. ஒன்றே பகை மன்னரை—
60. யும் பிணி கொண்ட காரை(யு)—
61. முந்நீரையும் பெரும்பூதத்—
62. தையும் பணிகொண்ட செண்ப—
63. க(த்)தென்ன பராக்கிரம பாண்டியனே வ (16)

## விளக்க வுரை

இருக்குமிடம்: திருநெல்வேலிச் சில்லா, தென்காசி விசுவநாதர் கோயிலின் முன்பு, இடிந்த நிலையில் உள்ள கோபுரத்தின் சுவர்களில்.

கல்வெட்டின் எழுத்து: தமிழும் கிரந்தமும்.

கல்வெட்டில் குறிக்கப்பெற்ற அரசன்: அரிகேசரி பராக்கிரம பாண்டியன்.

அரசனைப்பற்றிய பொதுக் குறிப்பு: 27–ஆம் கல்வெட்டில் காண்க.

கல்வெட்டுத் தோன்றிய காலம்: கி. பி. 1447. முதல் பாடலில் சகாத்தம் 1368, அதன்மேல் வைகாசித் திங்கள் என்றதனால் சகாத்தம் 1368 முடிந்து 1369-ஐக் குறிக்கும். 1369+78= கி. பி 1547. சகம் என்றாலும் சாலிவாகன சகாப்தம் என்றாலும் ஒன்றே. யாகும். கி பி. 78-இல் தான் சாலிவாகன சகாப்தம் ஆரம்பமாயிற்று. ஆகையால் சகம் (அ) சாலிவாகன சகாப்தம் என்று வருமிடத்தில் 78-ஐ சேர்த்துக் கூட்டினால் கி. பி. ஆண்டுவரும்.

இப்பாடல்களால் அறியப்படுவன: கி. பி. 1422 முதல் கி. பி. 1463 முடிய அரசாண்ட அரிகேசரி பாரக்கிரம பாண்டியன் என்பான் தென்காசி நகரமைத்து அங்குச் சிவாலயங்களும் கோபுரமுங் கட்டிமுடித்து சிவபெருமானுக்கு விசுவநாதன் என்று காசியில் உள்ள பெருமான் பெயரையே இட்டு கும்பாபிடேகஞ் செய்து பின்பு சிவலோக மடைந்தான் என்பன. இவன் கொற்கை வேந்தன், மதுரைவேந்தன், தென்காசிகண்டபெருமான், மானவேகன், வடிவெழுத வொண்ணாத அழகன், பொன்னின் பெருமாள் விந்தைப் போர் கடந்த பாண்டியன் எனவும் கூறப்படுகின்றான்.

இவன் கி. பி. 1447-இல் சிவாலயங் கட்டத் தொடங்கிப் பதின்மூன்று மாதத்திற் கட்டிமுடித்துக் கும்பாபிடேகஞ் செய்வித்தான். பின் பலதிருப்பணிகளுஞ் செய்து கி. பி. 1457-இல் கோபுர வேலை தொடங்கி ஆறு ஆண்டுகளில் எங்கு மில்லாததாகிய ஒன்பது நிலைக் கோபுரமும் பல சிற்ப வேலைப் பாடுகளையுடைய கற்றூண்களும்

அமைத்து முடித்தான். பின் இக்கோயிற்குப் பழுது வராமல் காக்க வெனத் தன் சந்ததியாரை வேண்டிக் கொள்கிறுன். இக்கோயிற் பாதுகாப்பைத் தாஞகவே பாடலாற் பாடியிருக்கிருன். பெரும் போர்வீரனும் மாசிவபத்தனுமான இவ்வரிகேசரி பராக்கிரம பாண்டியன் கி. பி. 1463-இல் சிவலோக மடைந்தான். இவனுக்குப் பின் அரசுக்கு வந்த இவன் தம்பியாகிய குலசேகரபாண்டியன் தன் தமையன் தந்த பணியை உரிமையோடு சிரமேற் கொள்வதாக ஒரு பாடலால் தெரிவிக்கிருன். அதுவே இக்கல்வெட்டின் இறுதிப் பாடல் ஆகும்.

இனி அப்பாடல்களாவன :

(எண்சீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்)

1. *அன்பினுடன் சகாத்தமா யிரத்து முந்நூற் றறுபத்தெட்*
*டதன்மேல்வை காசித் திங்கள்*
*மன்தியதி யீரைந்திற் பூர்வ பக்கம் மருவுதெச*
*மியில்வெள்ளி வாரந் தன்னில்*
*மின்திகழுத் திரநாள்மீ னத்தில் வாகை வேலரிகே*
*சரிபராக் கிரமம கீபன்*
*தென்திசையிற் காசிநகர்க் கோயில் காணச் சென்றுநின்று*
*காழ்சணைதான் செய்வித் தானே.*

குறிப்பு: காழ் = தூண் (மூங்கில்). இங்கு அஸ்திவாரக் காலைக் குறிக்கிறது. சணைப்பு - இணைப்பு. எனவே காழ்சணை என்பது முகூர்த்தக்கால் நடுவது என்று இப்போது வழங்கும்.

## கும்பாபிடேகம் செய்வித்தமை தெரிவிக்கிறது

2. *அடைவு திகழ் சகாத்த மாயிரத்து முந்நூற் றறுபத் தொன்*
*பதின்மேற்செல் மிதுனஞாயிற்*
*றிடை மருவு தியதிபதினெ......சனிவாரமதனில்*
*.........மீனத்தி மன்*
*றுடைய வரைத் தென்காசிச் சிவாலயத்தின் உள்ள*
*மைத்துத் தெள்ளமுத மூட்டினனே.*

குறிப்பு: பதின்மூன்று மாதத்தில் நிகழ்ந்தமை அறியப்படுகிறது. மிதுனஞாயிறு = ஆனி மாதம். விட்டுப்போன பகுதியில் திதியும் நட்சத்திரமும் பக்கமும் அரசன் பெருமையும் இருந்திருக்க வேண்டும்.

### கோபுரங் கட்டத் தொடங்கியமை கூறப்படுகிறது

3. *பன்னுகலி யுகநாலா யிரத்தைந் நூற்றைம் பத்தெட்டின்*
*மேலெவரும் பணிந்து போற்றச்*
*செங்நெல்வயல் தென்காசி நகரில் நற்காத் திகைத்திங்கள்*
*தியதியைந்திற் செம்பொன் வாரம்*
*மன்னியமார் கழிநாளில் மதுரை வேந்தன் வடிவெழுத*
*வொண்ணுத பராக்கிரம மகீபன்*
*சொன்னவரை போற்றிருக்கோ புரமுங் காணத் துடியிடை*
*உபான முதல் துடங்கினுனே. [யாய்*

குறிப்பு: மார்கழிநாள் = மிருகசீரிடநட்சத்திரம். சொன்ன வரை = மேருமலே.

உபானம் முதல் துடங்கினுனே - இது பெரிய புராணத்தில் பூசலார் நாயனுர் புராணத்திலும் "அடிமுதல் உபானம் ஆதி ஆகிய படைகளெல் லாம் வடிவுறுந் தொழில்கள் முற்ற மனத்தினுல் வகுத்து" என வரு கிறது. உபானம் = அடிப்பாகம்.

## இதுவுமது

### சகாத்த வருடம் கூறுகிறது

4. *ஏராருஞ் சகாத்த மாயிரத்து முந்நூற் றெழுபத்தொன்ப*
*தின்மேற் கார்த்திகை மாதத்திற்*
*சீராருந் தியதி யைந்திற் குருவாரத்திற் சிங்கமுகுர்த்*
*தத்தில் மிருகசீரிடம் தன்னில்*
*ஆரருளால் வழுதி பராக்கிரம மகீபன்......*
*கூராபானம் முதல் கோட்டினுனே.*

குறிப்பு: ஆபானம் என்பது கோபுர அடிப்படை வரிசைகளில் ஒன்ரும்.

இது முதல் ஆறு பாட்டுக்கள் இத்திருப்பணியைப் பிற்காலத் தார் பாதுகாத்து வருவார்களாகவென வேண்டுவன.

### இதனே இன்னும் விரிவு செய்க என்கின்றது

5. *சேலே றியவயற் றென்காசி யாலயந் தெய்வச் செய*
*லாலே சமைந்ததிங் கென்செய லல்ல வதனையின்னம்*
*மேலே விரிவுசெய் தேபுரப் பாரடி வீழ்ந்தவர்தம்*
*பாலேவல் செய்து பணிவேன் பராக்கிரம பாண்டியனே.*

தம் அரசுமாறி வேற்றரசர் வரினும் அவர்க்கு அடைக்கலம் கூறு கின்றது.

6. *மனத்தால் வகுக்கவு மாட்டாத கோயில் வகுக்க முன்னின்*
*றெனைத்தான் பணிகொண்ட நாதன்றென் காசியையென்*
*[றுமண்மேல்*
*நினைத்தா தரஞ்செய்துதங் காவல்பூண்ட நிருதர்பதந்*
*தனைத்தா ழ்ந்திறைஞ்சித் தரைமீதி யானுந் தரித்தனனே*

அரசாங்கமே மாறி செல்வர் கையில் ஆட்சி வரினும் அச் செல்வர்களுக்கு இது அடைக்கலமாகும் என்கிறது.

7. *பூந்தண் பொழில்புடை சூழ்ந்ததென் காசியைப் பூதலத்தில்*
*தாந்தம் கிளையுட னேபுரப் பார்கள்செந் தாமரையாள்*
*காந்தன் பராக்கிரமக் கைதவன் மான கவசன்கொற்கை*
*வேந்தன் பணிபவ ராகியெந் நாளும் விளங்குவரே.*

குறிப்பு : கைதவன்=பாண்டியன்.

செல்வர்களேயன்றிச் சமநிலையாட்சி வரினும் அப்பொழுது யாராயிருந்தாலும் தெய்வ பக்தியுடையோர் இதனைப் புரப்பார்களாக என்கின்றது.

8. *ஆரா யினுமிந்தத் தென்காசி மேவும்பொன் னாலயத்து*
*வாராத தோர்குற்றம் வந்தாலப் போதங்கு வந்ததனை*
*நேராக வேயொழித் துரைப் பார்களை நீதியுடன்*
*பாரா ரறியப் பணிந்தேன் பராக்கிரம பாண்டியனே.*

இதுவுமது

9. *அரிகே சரிமன் பராக்கிரம மாற னருளால்*
*வரிசேர் பொழிலணி தென்காசிக் கோயில் வகுத்துவலம்*
*புரிசேர் கடற்புவி போற்றிவைத் தேனன்பு பூண்டிதனைத்*
*திரிசேர் விளக்கெனக் காப்பார்பொற் பாதமென்*
*[சென்னியதே*

தன்வழிமுறைப் பாண்டியர்களை யோம்படைத்தது

10. *சாத்திரம் பார்த்திங்கி யான்கண்ட பூசைகள் தாம்நடத்தி*
*யேத்தியன் பால்விசுவ நாதன்பொற் கோயிலென் றும்புரக்கப்*
*பார்த்திபன் கொற்கைப் பராக்கிரம மாறன் பரிவுடனங்*
*கோத்திரந் தன்னிலுள் ளார்க்கு மடைக்கலங் கூறினனே.*

தென்காசி நகர் எடுத்தமை கூறப்படுகிறது.

(கட்டளைக் கலித்துறை)

11, மென்காசை மாமல ரன்னமெய் யோற்கும் விரிஞ்சனுக்கும்
வன்காசு தீர்த்திடும் விச்சுவ நாதன் மகிழ்ந்திருக்கப்
பொன்காசை மெய்யென்று தேடிப் புதைக்குமிப் பூதலத்து
தென்காசி கண்ட பெருமாள் பராக்கிரம தென்னவனே.

குறிப்பு: காசை - ஒரு மரம். நீலநிற மலரையுடையது. திருமாலைக் குறிக்கும். ''காசை மலர்போல் மிடற்றர் கடவூர் மயானமமர்ந்தார்'' என்பது சம்பந்தர் தேவாரம்.

## கோபுரத்தைப் பாராட்டுவது

(வெண்பா)

12. ஓங்கு நிலையொன்ப துற்றிருக் கோபுரமும்
பாங்குபதி ஞென்று பயில்தூணும்—தேங்குபுகழ்
மன்னர் பெருமான் வழுதிகண்ட தென்காசி
தன்னிலன்றி யுண்டோ தலத்து.

கோபுரங் கட்டி முடிந்தமை ஆருண்டு எனத் தெரிவிக்கின்றது.

13. காண்டகு சீர்புனை தென்காசிக் கோபுரக் கற்பணியா
ருண்டில் முடித்துக் கயிலைசென் றுனகி லேசர்பதம்
பூண்டுறை சிந்தை யரிகே சரிவிந்தைப் போர்கடந்த
பாண்டியன் பொன்னின் பெருமாள் பராக்கிரம
[பாண்டியனே.

## பராக்கிரம பாண்டியன் மறைவு கூறுகிறது

14. ஏரார் சகாத்தமுந் நூற்றுட ணுயிரத் தெண்பத் தஞ்சிற்
சீராரு மார்கழி சித்திரை நாளிற் சிறந்து குற்றம்
வாராத பூர ணைதன்னிற் பராக்கிரம மாற னெ(ங்கோன்)
... ... ... கயி லாயந்தான் கண்ட னனே.

பாரக்கிரம பாண்டியன்மீது ஒரு புலவர் பாடிய கையறுநிலைச் செய்யுள்.

15. கோதற்ற பத்தி யறுபத்து மூவர்தங் கூட்டத்திலோ
தீதற்ற வெள்ளிச் சிலம்பகத் தோசெம்பொ னம்பலத்தோ
வேதத்தி லோசிவ லோகத்தி லோவிசுவ நாதனிரு
பாதத்தி லோசென்று புக்கான் பராக்கிரம பாண்டியனே.

அடுத்து அரசுக்கு வந்த அவன் தம்பி குலசேகர பாண்டியன் கூறியது.

16. *அணிகொண்ட விந்த வணங்குமொன் றேஅடி யேற்*
*[குனக்கும்*
*மணிகொண்ட வாசற் பணியும்ஒன் றேபகை மன்னரையும்*
*பிணிகொண்ட காரையு முந்நீ ரையும்பெரும் பூதத்தையும்*
*பணிகொண்ட செண்பகத் தென்னு பராக்கிரம பாண்டியனே.*

குறிப்பு :—அணிகொண்ட விந்த அணங்கும் ஒன்றே அடியேற்கு(ம்) உனக்கும் பணிகொண்ட வாசற்பணியும் ஒன்றே= நீ ஆண்ட இராச்சியமே நான் ஆள்வதும். நினக்கு வெற்றி தந்த திருவே எனக்கு வெற்றி தருபவளும் : இந்த முறையில் நீ கட்டிய ஆலயத்தைப் புரந்து வருவதும் எனக்குக் கடமையாகும் என்பது.

விந்த அணங்கு - வெற்றித் தெய்வமாகிய கொற்றவை. (புறப்பொருள் வெண்பாமாலையால் அறிக. விந்தமலையில் இருப்பதால் விந்தை யெனவும் நகர்க்கோட்டை வாயிலில் இருப்பதால் துர்க்கை என்றும் கூறப்படும். (துர்க்கம் = கோட்டை)

பகைமன்னரைப் பணிகொண்டமை - வென்ற பகைவரைத் தன்னடிமை யாக்குதல்.

பிணிகொண்ட கார் : பாண்டியன் ஒருவனுல் சிறையிடப்பட்ட மேகங்கள். இவ்வரலாறு திருவிளையாடற் புராணம்இந்திரன்முடிமேல் வளையெறிந்த படலம் 41-ஆம் பாடலினுல் அறிக.

*பொன்றத்து மருவிக் குன்றிற் புட்கலாவர்த்தமாதி*
*மின்றத்து மேகநான்கும் வீழ்ந்தன மேயக்கண்டு*
*குன்றத்தி னெடிய திண்டோட் கொற்றவ னவ றப்பற்றி*
*கன்றத்திண் களிறுபோலக் கடுந்தளை சிக்க ந்தான்.*

அதனைப் பணிகொண்டது : ஏனை நாடுகளிற் போலத் தன்னுட்டிலும் மழை பெய்து வரச் செய்தல். இவ்வரலாறும் முற்கூறிய புராணத்தது.

முந்நீரைப் பணிகொண்டமை : கடல்தன் ஆணையின் அடங்கி நடக்கச் செய்தல். அது கடல் சுவற வேல்விட்ட திருவிளையாடல் படலத்துக் கண்ட வரலாறு. முந்நீர் வடிம்பலம்ப நின்ற பாண்டியன் என்னும் புறநானூற்றில் வருவது கொண்டும் அறிக.

பெரும் பூதத்தைப் பணிகொண்டமை : நிலம், நீர், கனல், வளி, வெளி என்பன பெரும் பூதங்கள் என்னப்படும் '' ஐம்பெரும் பூதத்து இயற்கை போல '' என்னும் புறநானூற்ருலும் அறியலாம். '' மகோததியும் வணங்கும் தாளான் '' என வில்லி கூற்ருலும் அறியலாகும்.

ஐம்பெரும் பூதத்தைப் பணிகொண்டது: நிலத்தின் விளைவு அதிகரிக்குமாறு வளம்படுத்தல்.

நீரைப் பணிகொண்டது: நீர் வீழ்ச்சியால் இயந்திரங்களை இயக்கி மக்கட்கு உதவி செய்வித்தல் போன்றது.

வளியைப்பணி கொண்டமை - காற்றுடியால் நீர் இறைத்தல்.

வெளியைப் பணிகொண்டமை- வானொலியமைத்தல், வானவூர்தி செலுத்தல் போன்றவை.

இன்னோரன்ன செயல் தமிழ் அரசர் செய்து வந்தமை புறநானூறு முதலியவற்றுல் அறியப்படுவ தொன்றும். முன்னோர் செய்தன பின் சந்ததியார் செய்தனவாகக் கூறுதல் ஓர் மரபு.

# 29. குலசேகர தேவரான பராக்கிரம பாண்டியர் கல்வெட்டு*

1. சுபமஸ்து ஸ்வஸ்திஸ்ரீ புவநேகவீர
2. சந்த்ரகுலப்ர தீப கோஜடிலவர்ம திரி
3. புவநச் சக்கரவர்த்தி கோநேரின்மை கொண்டான்
4. பெருமாள் பராக்கிரம பாண்டிய தேவர் நந்தநரான
5. ஸ்ரீ பெருமாள் குலசேகர தேவரான பராக்கிரமபாண்டிய
6. தேவற்கு யாண்டு சகாப்தம் ௲௪௱௯௰எல் மூன்ருவது விஸ்வாவ
7. சுவருஷம் அற்பசி மாதம் முப்பதாந்தியதியும் அபரப
8. க்ஷத்து ஏகாதசியும் சுக்ரவாரமும் வைத்ருதியோஹ(மு)
9. ம் ஸிம்ஹகரணமும் பெற்ற உத்திரத்துநாள் தென் ணு(ரி)—
10. நாட்டு செங்கோட்டையில் உடையார் குலசே—
11. கரமுடைய நயினுற்கு தேவதானம் பாட்டமாக
12. குடுத்த நிலம் அரைமாவுக்கு நாம் சேர்த்துக் கொடுத்த
13. நிலமாவது மேற்படி நாட்டு மேற்படியூரில்
14. மேற்படியார் அஞ்சாலியில் மேல்வாரம் தவிர்த்து—
15. க் குடுத்த குளப்புரவு பதினென்ருங் கண்ணுறுதடி
16. ஆறுநிலம் அரைக்காணி முந்திரிகை பன்னிரண்—
17. டாங் கண்ணுறுதடி எட்டுநிலம் அரைக்காணிமு—
18. ந்திரிகை பதின்மூன்ருங் கண்ணுறுதடி அஞ்சு
19. நிலம் அரைக்காணி இதுவும் ஆக நிலம் அரைமாவும்
20. நாளது முதலுக்கு நாங்கொள்ளும் முறைபாடு எற் பேர்ப்—
21. பட்டதும் நம்வரியிலார் கணக்கிலும் தவிர்த்து
22. ஆசந்த்ரதராவற் செம்பிலும் சிலையிலும் வெட்டிகை—
23. ய்யாண்டு கொள்ளவும் துல்யம் பாற்க இவை
24. ……………

* T. A. S., Vol. 1. No VI.

## விளக்க வுரை

இருக்குமிடம்: செங்கோட்டைச் சிவன்கோயில் கருப்பக் கிருகத்தின் தென்புறச் சுவர்.

கல்வெட்டின் எழுத்து: தமிழும் கிரந்தமும்.

கல்வெட்டில் குறிக்கப்பெற்ற அரசர் - குலசேகரதேவரான பராக்கிரம பாண்டியர்.

அரசனைப் பற்றிய பொதுக் குறிப்பு: இவன் அபிராம பராக்கிரம பாண்டியனின் மகன். "அபிராம பராக்கிரம பாண்டியதேவர் நந்தனரான ஸ்ரீ பெருமாள் குலசேகர தேவரான பராக்கிரம பாண்டிய தேவர்" என்னும் பாடப் பகுதிக்குரிய கல்வெட்டுத் தொடரே இதற்குச் சான்றாகும். இவன் கி. பி. 1542 முதல் கி. பி. 1552 வரையில் ஆட்சி புரிந்தவன். இவன் காலத்தில் குறிக்கத்தக்க நிகழ்ச்சிகள் இல்லை.

கல்வெட்டுத் தோன்றிய காலம் - சகம் 1467+78=கி. பி. 1545.

கல்வெட்டில் குறிக்கப் பெற்ற செய்தி: தென்னாரி நாட்டுச் செங்கோட்டையில், குலசேகரமுடைய நாயனார்க்கு, குலசேகர தேவரான பராக்கிரம பாண்டியர் முன்னரே அரை மா நிலத்தைத் தேவதானப் பாட்டமாகக் கொடுத்திருந்தனர். இதுபொழுது சகம் 1467 விசுவாவசு ஆண்டில், குளத்தின் நீர் பாய்ந்து சாகுபடியாகத் தகுந்த நிலத்தில் பதினொன்றாவது வாய்க்கால் பாயக்கூடிய ஆறு பாத்திகள் அடங்கிய நிலம் அரைக்காணி முந்திரிகை, பன்னிரண்டாவது வாய்க்கால் பாயக்கூடிய எட்டு பாத்திகள் அடங்கிய நிலம் அரைக்காணி முந்திரிகை, பதின்மூன்றாவது வாய்க்கால் பாயக்கூடிய ஐந்து பாத்திகள் அடங்கிய நிலம் அரைக்காணி ஆக நிலம் அரைமாவையும் மேல் வாரம் தவிர்த்துக் கொடுத்துள்ளார்.

## குறிப்புரை

புவநேகவீர: உலகத்தில் ஒரே வீரனாய்.

சந்திர குலப்ரதீப - சந்திர குலத்துக்கு விளக்காய்.

நந்தனர் - மகன்.

கரணம் – லக்கனம்.

# 30. வீரபாண்டியன் கல்வெட்டு*

1. ஸ்வஸ்திஸ்ரீ கொச்சடையபன்மரான திரிபுவனசக்கிர வத்திகள் ஸ்ரீ விரபாண்டிய தேவற்கு யாண்டு சயஉவது தநு நாயற்று அபரக்ஷத்து துவாதசியும் வெள்ளிக் கிழமையும் பெற்ற அனிஷத்துநாள் கெரளசிங்க வள நாட்டு அதளையூர் நாட்டுத் தெநாற்றுப் பொக்கு சூரைக் குடி பொன்ன(ன்) அழகிய பெருமாளென் நியமப்பற்றுக் கல்வாயில் நாட்டு நாட்டவர் பக்கல் நான் வி(ல்)லை கொண்டு நாட்டவர் பக்கல் இறையிலிபண்ணிகொண்ட நெல்வாசல்பால் காடவதரையர் குடிக்காடு வளையிற் சுற்றுமுற்றும் கல்வாயில் நாட்டு நெல் வாசல் உடையார் திருவகத்திஸ்வரமுடைய நாயனுற்கு அமுதுபடி உள்ளிட்ட விஞ்செனங்களுக்கு தேவதானமாக குடுத்த (காடவ தரை)யர் குடிக்காடு வித்தலி கூழிலி

2. எரிலியாகக் குடிநிங்காக்காணியாக நான் உழுது இந் நாயிஞர்க்குப் பசானம் நாலிலொன்றுங் கொடை ஐஞ் சில் லொன்றுங் கரும்பு மஞ்சள் அடைவாழை ஆறில் (லொன்றுமாக) விழு(க்)காடு இடுவெணகவும் இப்படி உழுமிடத்து தெவகன்மிக(ள்) (ஸ்ரீ) காரியஞ் செய்வார் கள்—களுக்குத் தெவர் அர(சு) கண்காணி மீசு குறுணியு மிட்டு இவர்கள் கண்காணிப்படிப் பரிமாறுவதாகவும் கொட்டர் கூழரி உழமைச் சூடு குடிக்கலி பறையன் கண்டபடி பெறுவெணகவும் புஞ்சை உள்ளது இம்மரி யாதி பெறுவே(ா)(ஞ)கவும் இப்படி சம்மதித்து இன்ஞ யஞர்(க்)கு இக்குடிக்காடு சந்திராதித்தவற் செல்லக் கல்வெட்டிக் குடுத்தென் அழகிய பெருமானென் உடை யார் திருவகத்திஸ்வரமுடைய நாயஞற்(க்)கு இப்படிக்கு அழகிய பெருமாள் எழுத்து

3. இப்படிக்கு நாட்டுக்கு நாட்டுக் கணக்கு மயிலெறும்

4. பெருமாள் சிவஞாந தேவன் ஆன உருப நாராயண மூவேந்த வேளான் எழுத்து.

### விளக்கவுரை

இருக்குமிடம்: புதுக்கோட்டை இராச்சியம், திருமய்யம் தாலூகா நெய்வாசல் அகஸ்தீஸ்வரக் கோயில் கர்ப்பக்கிருகத்தின் வடபுறச் சுவர்.

---

* Pudukkottai State Inscriptions, No. 438, P. 308

கல்வெட்டின் எழுத்து - தமிழும் கிரந்தமும்.

கல்வெட்டில் குறிக்கப்பெற்ற அரசன்: கோச்சடைய பன்மரான திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீ வீரபாண்டிய தேவர்.

கல்வெட்டுத் தோன்றிய காலம் :-கி. பி. 1337.

## கல்வெட்டில் குறிக்கப் பெற்ற செய்தி

கேரளசிங்க வளநாட்டு அதலையூர் நாட்டுத் தேனூற்றுப் போக்கு சூரைக்குடி, பொன்னன் அழகிய பெருமாள், நியமப் பற்றுக் கல்வாயில் நாட்டு நாட்டவரிடமிருந்து, நெல்வாசலுக்கு அருகிலுள்ள காடவதரையர் குடிக்காட்டின் சுற்றுமுற்றுப் புறங்கள் நிலங்களை விலைக்கு வாங்கி, அவைகளை நெல்வாசல் அகத்தீஸ்வரமுடைய நாயனூர்க்குத் திருவமுது, கறியமுது உள்ளிட்டு வேண்டுவனவற்றுக்குக் கொடுத்துள்ளான். மேலும் அந்நிலங்களைத் தானே உழுது பயிர் செய்து, கோடைப் பயிரில் ஐந்தில் ஒன்றும், கரும்பு, மஞ்சள், அடை வாழை இவைகளில் ஆறில் ஒன்று விழுக்காடும், கோயில் நிலங்களை உழுமிடத்து, கண்காணிக்கும் தேவகன்மிகள், ஸ்ரீகாரியஞ் செய்வார்கள், இவர்களுக்குத் தலைக்கு (ஒவ்வொருவர்க்கும்)க் குறுணி நெல்லும் கொடுப்பதாக இசைந்துள்ளான்.

## குறிப்புரை

கேரளசிங்க வளநாடு - புதுக்கோட்டை இராச்சியத்தில் உள்ளதொரு வளநாடு. இது கல்வாயில் நாடு, கொழுந்திற் கூற்றம், அதலையூர்நாடு முதலான பிரிவுகளை உடையதாய் இருந்தது.

நெல்வாசல் - என்பதே ஊரின் பெயர். இக்காலம் நெய்வாசல் என்று வழங்கப் பெறுகின்றது.

அமுதுபடி - அரிசி.

விஞ்செனம் - கறி, வியஞ்சனம் என வழங்கும்.

குடிநீங்காக் காணியாக - பயிர் செய்யும் குடி உரிமை நீங்காதவனாக.

கோடை – கோடைப் பயிர்.

மீசு – மீது.

## பாடப் பகுதிக்குரிய
## சோழ மன்னர்களின் மெய்க்கீர்த்திகள்

### கல்வெட்டு—6

### முதல் இராசராச சோழன்

திருமகள் போலப் பெருநிலச் செல்வியுந்
தனக்கே யுரிமை பூண்டமை மனக்கொளக்
காந்தளூர்ச் சாலைக் கலமறுத் தருளி
வேங்கை நாடுங் கங்க பாடியுந்
தடிகை பாடியும் நுளம்ப பாடியும்
குடமலை நாடுங் கொல்லமுங் கலிங்கமும்
முரட்டெழிற் சிங்கள ரீழ மண்டலமும்
இரட்ட பாடி யேழரை யிலக்கமும்
முந்நீர்ப் பழந்தீவு பன்னீ ராயிரமுந்
திண்டிறல் வென்றித் தண்டாற் கொண்டதன்
னெழில்வள ரூழியு ளெல்லா யாண்டுந்
தொழுதக விளங்கும் யாண்டே செழியரைத்
தேசுகொள் கோராச கேசரி வர்மரான
உடையார் ஸ்ரீராச ராச தேவர்க்குயாண்டு:

குறிப்பு: ஏழாம் அடியில் முரட்டொழில் என்றே பாடத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. எனினும் பல கல்வெட்டுக்களில் முரட்டெழில் என்று இருப்பது கொண்டு அவ்வாறு எழுதப் பெற்றுள்ளது. எனினும் இரண்டிற்கும் குறிப்புரையில் பொருள் காண்க.

### கல்வெட்டு 13, 14

குறிப்பு: 13-ஆம் கல்வெட்டின் மெய்க்கீர்த்தி 46-ஆம் அடியோடு முடிவு.

### முதல் இராசேந்திர சோழன்

திருமன்னி வளர விருநில மடந்தையும்
போர்ச்சயப் பாவையுஞ் சீர்த்தனிச் செல்வியுந்
தன்பெருந் தேவிய ராகி யின்புற
நெடிதிய லூழியு ளிடைதுறை நாடும்
தொடர்வன வேலிப் படர்வன வாசியும்

சுள்ளிச் சூழ்மதிற் கொள்ளிப் பாக்கையும்
நண்ணற் கருமுரண் மண்ணைக் கடக்கமும்
பொருகட லீழத் தரசர்த முடியும்
ஆங்கவர் தேவிய ரோங்கெழின் முடியும்
முன்னவர் பக்கற் றென்னவர் வைத்த
சுந்தர முடியு மிந்திர னாரமும்
தெண்டிரை யீழ மண்டல முழுவதும்
எறிபடைக் கேரளன் முறைமையிற் சூடும்
குலதன மாகிய பலர்புகழ் முடியும்
செங்கதிர் மாலையும் சங்கதிர் வேலைத்
தொல்பெருங் காவற் பல்பழந் தீவும்
செருவிற் சினவி யிருபத் தொருகால்
அரசுகளை கட்ட பரசு ராமன்
மேவருஞ் சாந்திமத் தீவரண் கருதி
இருத்திய செம்பொற் றிருத்தகு முடியும்
பயங்கொடு பழிமிக முயங்கியில் முதுகிட்
டொளித்த சயசிங்க னளப்பரும் புகழொடு
பீடிய லிரட்ட பாடி யேழரை
யிலக்கமு நவநெதிக் குலப்பெரு மலைகளும்
விக்கிரம வீரர் சக்கரக் கோட்டமு
முதிர்பட வல்லை மதுரை மண்டலமும்
காமிடை வள நாமணக் கோணையும்
வெஞ்சின வீரர் பஞ்சப் பள்ளியும்
பாசடைப் பழன மாசுணி தேசமும்
அயர்வில்வண் கீர்த்தி யாதிநக ரவையில்
சந்திரன் றொல்குலத் திந்திர ரதனை
விளையமர்க் களத்துக் கிளையொடும் பிடித்துப்
பலதனத் தொடுநிறை குலதனக் குவையும்
கிட்டருஞ் செறிமிளை யொட்ட விஷயமும்
பூசுரர் சேர்நற் கோசல நாடும்
தன்ம பாலனை வெம்முனை யழித்து
வண்டுறை சோலைத் தண்ட புத்தியும்
இரண சூரனை முரணுகத் தாக்கித்
திக்கணை கீர்த்தித் தக்கண லாடமும்
கோவிந்த சந்தன் மாவிழிந் தோடத்
தங்காத சாரல் வங்காள தேசமும்
தொடுகழற் சங்கு வொட்டல்மகி பாலனை
வெஞ்சமர் வளாகத் தஞ்சுவித் தருளி
ஒண்டிறல் யானையும் பெண்டிர்பண் டாரமும்

நித்தில நெடுங்கட லுத்தர லாடமும்
வெறிமலர்த் தீர்த்தத் தெறிபுனற் கங்கையும்
அலைகடல் நடுவுட் பலகலஞ் செலுத்திச்
சங்கிராம விசையோத் துங்க வர்ம
ணாகிய கடாரத் தரசனை வாகையம்
பொருகடல் கும்பக் கரியொடு மகப்படுத்
துரிமையிற் பிறக்கிய பெருநிதிப் பிறக்கமும்
ஆர்த்தவ னகநகர்ப் போர்த்தொழில் வாசலில்
விச்சா திரத்தோ ரணமு மொய்த்தொளிர்
புனைமணிப் புதவமுங் கனமணிக் கதவமும்
நிறைசீர் விசயமுந் துறைநீர்ப் பண்ணையும்
வன்மலை யூரெயிற் றொன்மலை யூரும்
ஆழ்கட லகழ்சூழ் மாயிரு டிங்கமும்
கலங்கா வல்வினை இலங்கா சோகமும்
காப்புறு நிறைபுனல் மாபப் பாளமும்
காவலம் புரிசை மேவுலிம் பங்கமும்
விளைப்பந் தூருடை வளைப்பந் தூரும்
கலைத்தக் கோர்புகழ் தலைத்தக் கோலமும்
தீதமர் வல்வினை மதமா லிங்கமும்
கலாமுதிர் கடுந்திறல் இலாமுரி தேசமும்
தேனக்க வார்பொழில் மாநக்க வாரமும்
தொடுகடற் காவற் கடுமுரட் கடாரமும்
மாப்பொரு தண்டாற் கொண்ட கோப்பரகேசரி
வன்மரான உடையார் ஸ்ரீ ராசேந்திர சோழதேவர்க்கு யாண்டு:

## கல்வெட்டு—15

## முதல் இராசாதிராச சோழன்

திங்களேர் தருதன் றொங்கல்வெண் குடைக்கீழ்
நிலமக ணிலவ மலர்மகட் புணர்ந்து
செங்கோ லோச்சிக் கருங்கலி கடிந்து
தன்சிறிய தாதை யுந்திருத் தமையனுங்
குறிகொள்தன் னிளங்கோக் களையு நெறியுணர்
தன்றிருப் புதல்வர் தம்மையுந் துன்றெழில்
வானவன் வில்லவன் மீனவன் கங்க
னிலங்கையர்க் கிறைவன் பொலங்கழற் பல்லவன்
கன்னகுச் சியர்கா வலனெனப் பொன்னணி
சுடர்மணி மகுடஞ் சூட்டிப் படர்புக
ழாங்கவர்க் கவர்நா டருளிப் பாங்குறு

தென்னவர் மூவருள் மானா பரணன்
பொன்முடி யானைப் பருமணிப் பசுந்தலை
பொருகளத் தரிந்து வாரள வியகழல்
வீரகே ரளனை முனைவயிற் பிடித்துத்
தனது வாரணக் கதக்களிற்றா னுதைப்பித்தருளி
அந்தமில் பெரும்புகழ்ச் சுந்தர பாண்டியன்
கொற்றவெண் குடையுங் கற்றைவெண் கவரியும்
சிங்கா தனமும் வெங்களத் திழந்துதன்
முடிவிழத் தலைவிரித் தடிதளர்ந் தோடத்
தொல்லை முல்லையூர்த் துரத்தி யொல்கலில்
வேணாட் டரசைச் சேணாட் டொதுக்கி
மேவுபுக ழிராமகுட மூவர்கெட முனிந்து
மிடல்கெழு வில்லவன் குடர்மடிக் கொண்டுதன்
நாடுவிட் டோடிக் காடுபுக் கொளிப்ப
வஞ்சியம் புதுமலர் மலைந்தாங் கெஞ்சலில்
வேலைகெழு காந்தளூர்ச் சாலை கலமறுத்
தாகவ மல்லனு மஞ்ச கேவுந்தன்
தாங்கரும் படையா லாங்கவன் சேனையுட்
கண்டப் பயனும் கங்கா தரனும்
வண்டமர் களிற்றொடு மடியத் திண்டிறல்
விருதர் விக்கியும் விசயா தித்தனும்
கருமுரட் சாங்க மய்யனு முதலினர்
சமர பீருவொத் துடைய விரிசுடர்ப்
பொன்னோ டைக்கரி புரவியொடும் பிடித்துத்
தன்னா டையிற் சயங்கொண் டொன்னார்
கொள்ளிப் பாக்கை யுள்ளெரி மடுப்பித்
தொருதனித் தண்டாற் பொருகட லிலங்கையர்
கோமான் விக்கிரம பாகுவின் மகுடமும்
முன்றனக் குடைந்த தென்றமிழ் மண்டல
முழுவ தும்மிழந் தெழுகட லீழம்
புக்கவிலங் கேச னாகிய விக்கிரம
பாண்டியன் பருமணி மகுடமும் காண்டகு
தன்ன வாக்கித்தன் கன்னகுச் சியினும்
ஆர்கலி யீழஞ் சீரிதென் றெண்ணி
உளங்கொளந் நாடுதன் னுறவொடும் புகுந்து
விளங்குமுடி கவித்த வீரசலா மேகன்
போர்க்களத் தஞ்சித்தன் கார்க்களி றிழிந்து
கவ்வையுற் றோடக் காதலி யொடுந்தன்
றவ்வையைப் பிடித்துத் தாயைமூக் கரிய
ஆங்கவ மானம் நீங்குதற் காக

மீட்டும் வந்து வாட்டொழில் புரிந்து
வெங்களத் துலந்தவச் சிங்களத் தரசன்
பொன்னணி முடியுங் கன்னரன் வழிவந்
துரைகொ ளீழத் தரசனு கியசீர்
வல்லவ மதன ராசன் மெல்லொளித்
தடமணி முடியுங் கொண்டு வடபுலத்
திருகா லாவதும் பொருபடை நடாத்திக்
கண்டர் தினகரன் நாரணன் கணவதி
வண்டலர் தெரியன் மதுசூ தனனென்
றெணைப்பல வரைசரை முனைவயிற் றுரத்தி
வம்பலர் தருபொழிற் கம்பிலி நகருட்
சளுக்கியர் மாளிகை தகர்ப்பித் திளக்கமில்
வில்லவர் மீனவர் வேள்குலச் சளுக்கியர்
வல்லவர் கௌசலர் வங்கணர் கொங்கணர்
சிந்துர ரையணர் சிங்களர் பங்களர்
அந்திரர் முதலிய வரைசரிடு திறைகளும்
ஆறிலொன் றவனியுட் கூறுகொள் பொருள்களும்
உகந்துநான் மறையவர் முகந்துகொளக் கொடுத்து
விசுவலோ கத்தும் விளங்கமனு நெறிநின்
றசுவமே தஞ்செய் தரைசுவீற் றிருந்த
சயங்கொண்ட சோழ னுயர்ந்த பெரும்புகழ்க்
கோவிராச கேசரி வர்மரான
உடையார் ஸ்ரீராசாதிராச தேவர்க்கு யாண்டு.

## கல்வெட்டு—16

# இரண்டாம் இராசேந்திர சோழன்

திருமாது புவியெனும் பெருமாத ரிவர்தன்
மாதே வியர்க ளாக மீதொளிர்
வெண்குடை யுயர்த்துத் திண்கலி பெயர்த்துத்தன்
சிறிய தாதை யாகிய வெறுழ்வலிக்
கங்கை கொண்ட சோழனைப் பொங்கிகல்
இருமுடிச் சோழ னென்றும் பொருமுரட்
டன்றிருத் தம்பியர் தம்முள் வென்றிகொள்
மும்முடிச் சோழனைத் தெம்முனை யடுதிறற்
சோழ பாண்டிய னென்றுங் கோழிமன்
றெடுகழல் வீர சோழனைப் படிபுகழ்
கரிகால சோழ னென்றும் பொருதொழில்
வாள்வலித் தடக்கை மதுராந் தகனைச்
சோழ கங்க னென்றுந் தோள்வலி

மேவிகல் பாரந்தக தேவனைச் சோழ
வயோத்திய ராச னென்றும்
இருதயத் தன்பொடு கருது காதலருள்
இத்த லம்புக ழிராசேந்திர சோழனை
உத்தம சோழ னென்றுந் தொத்தணி
முகையவி ழலங்கன் முடிகொண்ட சோழனை
இகல்விச யாலய னென்றும் புகர்முகத்
தேழுயர் களிற்றுச் சோழகே ரளனை
வார்சிலைச் சோழ கேரள னென்றும்
திண்டிறற் கடாரங் கொண்ட சோழனைத்
தினகரன் குலத்துச் சிறப்பமர் சோழ
சனக ராச னென்றுங் கனைகடற்
படிகாண்ட பல்புகழ் முடிகொண்ட சோழனைச்
சுந்தர சோழ னென்றுஞ் செந்தமிழ்ப்
பிடிகளிற் றிரட்ட பாடி கொண்ட
சோழனைத் தொல்புவி யாளுடைச் சோழ
கன்னகுச் சியராச னென்றும் பின்னுந்தன்
காதலர் காதலர் தம்முள் மேதகு
கதிராங் கனைகழல் மதுராந் தகனை
வெல்படைச் சோழ வல்லப னென்றும்
மானச் சிலைக்கையோ ரானைச்சே வகனை
நிருபேந்திர சோழ னென்றும் பருமணிச்
சுடர்மணி மகுடஞ் சூட்டிப் படிமிசை
நிகழு நாளினு ளிகல்வேட் டெழுந்துசென்
றுரெண்டிற லிரட்ட மண்டல மெய்தி
நதிகளும் நாடும் பதிகளு மநேகம்
அழித்தனன் வளவனெனு மொழிப்பொருள் கேட்டு
வேகவெஞ் சளுக்கி யாகவ மல்லன்
பரிபவ மெனக்கிதென் றெரிவிழித் தெழுந்து
செப்பருந் தீர்த்தக் கொப்பத் தகவையிற்
சென்றெதி றேன்றமர் தொடங்கிய பொழுதவன்
செஞ்சர மாரிதன் குஞ்சர முகத்தினுந்
தன்றிருத் துடையினுங் குன்றுறழ் புயத்தினுந்
தைக்க வுந்தன் னுடன்களி றேறிய
தொடுகழல் வீரர்கள் மடியவும் வகையா
லொருதனி யநேகம் பொருபடை வழங்கியம்
மொய்ம்பமர் சளுக்கி தம்பிசய சிங்கனும்
போர்ப்புல கேசியுந் தார்த்தச பன்மனு
மானமன் னவரின்மண் டலியசோ கையனும்

ஆனவண் புகழா மாரையனுந் தேனிவர்
மட்டவி ழலங்கல்மொட் டையனுந் திண்டிறல்
நன்னி நுளம்பனு மெனுமிவர் முதலினர்
எண்ணிலி யரைசரை விண்ணகத் தேற்றி
வன்னிய ரேவனும் வயப்படைத் துத்தனும்
கொன்னவில் படைக்குண்ட மய்யனு மென்றின
வெஞ்சின வரைசரோ டஞ்சிச் சளுக்கி
குலங்குலை குலைந்து தலைமயிர் விரித்து
வெந்நுற் றுளித்துப் பின்னுற நோக்கிக்
கால்பரிந் தோடி மேல்கடற் பாயத்
துரத்திய பொழுதச் செருக்களத் தவன்விடு
சத்துருபயங் கரன்கர பத்திரன் மூல
பத்திர சாதி பகட்டரை சநேகமும்
எட்டுநிரை பரிகளு மொட்டக நிரைகளும்
வராகவெல் கொடிமுத லிராசபரிச் சின்னமும்
ஒப்பில்சத்தி யவ்வைசாங் கப்பையென் றிவர்முதல்
தேவியர் குழாமும் பாவைய ரீட்டமு
மினையன பிறவு முனைவயிற் கொண்டு
விசையாபி டேகம் செய்துதென் றிசைவயிற்
போர்ப்படை நடாத்திக் கார்க்கட லிலங்கையில்
விறற்படைக் கலிங்கர்மன் வீரசலா மேகனைக்
கடகளிற் றுடுபடக் கதிர்முடி கடிவித்
திலங்கையர்க் கிறைவன் மானு பரணன்
காதல ரிருவரைக் களத்திடைப் பிடித்து
மாப்பெரும் புகழ் மிகவளர்த்த கோப்பரகேசரி வர்மரான
உடையார் ஸ்ரீராசேந்திர தேவர்க்கு யாண்டு :—

### கல்வெட்டு—17

## வீரராசேந்திர சோழ தேவர்

திருவளர் திரள்புயத் திருநில வலயந்
தன்மணிப் பூணெனத் தாங்கிப் பன்மணிக்
கொற்றவெண் குடைநிழற் குவலயத் துயிர்களைப்
பெற்ற தாயினும் பேணி மற்றுள
அறைகழ லரையர்தன் னடிநிழ லொதுங்க
உறைபிலத் துடைகலி யொதுங்க முறைசெய்து
விரைமலர்த் தெரியல் விக்கலன் றன்னொடு
வரிசிலைத் தடக்கை மாசா மந்தரைக்
கங்க பாடிக் களத்திடை நின்றுந்
துங்கபத் திரைபுகத் துரத்தி யங்கவர்

வேங்கைநன் னாட்டிடை மீட்டுமவர் விட்ட
தாங்கரும் பெருவலித் தண்டுகெடத் தாக்கி
மாதண்ட நாயகன் சாமுண்ட ராயனைச்
செற்றவன் சிரத்தினை யறுத்து மற்றவ
னொருமக ளாகிய விருகையன் றேவி
நாகலை யென்னுந் தோகையஞ் சாயலை
முகத்தொடு மூக்குவே றாக்கிப் பகைத்தெதிர்
மூன்றாம் விசையினு மேன்றெதிர் பொருது
பரிபவந் தீர்வனெனக் கருதிப் பொருபுனற்
கூடல் சங்கமத் தாகவ மல்லன்
மக்க ளாகிய விக்கலன் சிங்கண
னென்றிவர் தம்மொடு மெண்ணில்சா மந்தரை
வென்றடு தூசிமுனை விட்டுத் தன்றுணை
மன்னருந் தானும் பின்னடுத் திருந்து
வடகட லென்ன வகுத்தவத் தானையைக்
கடகளி றொன்றாற் கலக்கி யடல்பரிக்
கோசலைச் சிங்கணைக் கொடிபட முன்னர்த்
தூசிவெங் களிற்றொடுந் துணித்துக் கேசவ
தண்ட நாயகன் தார்க்கேத் தரையன்
திண்டிறல் மாரயன் சினப்போத் தரைய
னிரேச்சய னிகல்செய்பொற் கோதைமூ வத்தியென்
றார்த்தடு துப்பி லநேகசா மந்தரைச்
சின்ன பின்னஞ் செய்து பின்னை
முதலி யான மதுவண னோட
விரித்த தலையோடு விக்கல னோடச்
செருத்தொழி லழிந்து சிங்கண னோட
அண்ணல் முதலிய ரனைவரு மமர்போர்ப்
பண்ணிய பகடிழிந் தோட நண்ணிய
ஆகவ மல்லனு மவர்க்குமுன் னோட
வேகவெங் களிற்றினை விலக்கி வாகைகொண்
டங்கவர் தாரமு மவர்குல தனமுஞ்
சங்குந் தொங்கலுந் தாரையும் பேரியும்
வெண்சா மரையு மேக டம்பமும்
சூகரக் கொடியும் மகரதோ ரணமும்
புட்பகப் பிடியும் பொருகளிற் றீட்டமும்
பாய்பரித் தொகையொடும் பறித்துச் சேயொளி
வீரசிங் காதனம் பார்தொழ வேறி
எழில்தர வுலக முழுதுடை யாளொடும்
விசையமணி மகுட மேய்ந்து எழில்கொள்
தத்துமாப் புரவிப் பொத்தப்பி வேந்தனை

வாரணை வன்கழற் கேரளன் றன்னைச்
சனநா தன்றன் றம்பியைப் போர்க்களத்
தலங்கல்சூழ் பசுந்தலை யரிந்து பொலங்கழற்
றென்னனைச் சீவல் லவன்மகன் சிறுவன்
மின்னவில் மணிமுடி வீரகே சரியை
மதவரை யொன்று லுதைப்பித் துதகையிற்
கேரளர்தங் குலசெங் கீரை யோடும்
வேரறப் பரிந்தோடி மேல்கடல் வீழ
வாரண மருகுளி செலுத்தி வாரியி
லெண்ணருங் களிற்றின் இரட்டரைக் கவர்ந்த
கன்னியர் களிற்றொடுங் கட்டிப் பண்ணுப்
பிடியொடு மாங்கவர் விடுதிறை கொண்டுமீண்டு
கொண்டாற் றுறவிற் குறித்தவெம் போரிற்
றண்ட நாயகர் தம்மிற் றிண்டிறல்
மல்லியண் ணனையு மஞ்சிப்ப யனையும்
பில்குமதக் களிற்றுப் பிரமதே வனையுந்
தண்டா ரசோகையன் றன்னையு மொண்டிறற்
சத்தியண் ணனையுஞ் சந்திவிக் கிகரப்
பத்தி யண்ணன் றன்னையு மத்தகு
தேமரு தெரியல் வீமயன் றன்னையு
மாமதி வங்கா ரனையும் நாமவேற்
கங்கனை நுளம்பனைக் காடவர் கோனை
மங்குமத யானை வைதும்ப ராயனை
யிருந்தலை யரிந்து பெரும்புனற் றனாது
கங்கை மாநகர் புகுந்தபின் திங்களின்
வழிவரு சளுக்கி பழியொடு வாழ்வதிற்
சாவது சால நன்றென் றேவமுற்
றுன்னிய சிந்தைய னாகி முன்னம்
புதல்வருந் தானு முதுகிட் டுடைந்த
கூடலே களமெனக் குறித்தக் கூடலில்
வாரா தஞ்சினர் மன்ன ரல்லர்
போர்ப்பெ ரும்பழிப் பிரட்ட ராகவென்
றியாவரு மறிய வெழுதிய சபத
மேவரு மோலை விடையொடுங் கொடுத்து
இரட்ட பாடிப் பிரட்டரில் மேதகு
கங்கா கேத்தனை யேவ வங்கவன்
வந்தடி வணங்கி வாசக முணர்த்தலும்
சிந்தையு முகமுந் திருப்புய மிரண்டு
மேந்தெழி லுவகையொ டிருமடங்கு பொலியப்

போந்தப் போர்க்களம் புகுந்து காந்தையில்
வல்லவர் கோனை வரவு காணாது
சொல்லிய நாளின் மேலுமோர் திங்கள்
பார்த்தி ருந்த பின்னைப் பேர்த்தவன்
கால்கெட வோடி மேல்கட லொளித்தலுந்
தேவ நாதனுஞ் சித்தியுங் கேசியு
மூவருந் தனித்தனி முதுகிடப் பாவரு
மிரட்ட பாடி யேழரை யிலக்கமு
முரட்டொழி லடக்கி முழங்கெரி யூட்டி
வெங்கதப் புலியேறு வியந்துவிளை யாடத்
துங்கபத் திரைகரைச் செயபத் திரத்தூண்
நானிலம் பரச நாட்டி மேனாள்
வந்த பிரட்டனை வல்லவ னாக்கிச்
சுந்தர கண்டிகை கட்டிப்
புரசை யானைப் புழைக்கையிற் பிழைத்திவ்
வுலக மறிய வோடிய பரிசொரு
பலகையிற் பழுதற வெழுதிய பின்னை
சார்த்தின வுரையுஞ் சளுக்கி பதம்பெற்ற
பூத்தின மார்வொடும் பூட்டிப்* பேர்த்துந்
தான்கைக் கொண்ட வேங்கைநன் னாடு
மீட்டுக் கொண்டலான் மீள்கிலங் கேட்டுநீ
வல்ல னாகில் வந்துகாக் கென்று
சொல்லி யெடுத்தவத் தானை விசைய
வாடையொ டடுத்தபே ராற்றிற் றடுத்த
சனநா தனையுந் தண்டநா யகனும்
இனமார் கடக்களிற் றிராசமய் யனையு
முப்பர சனையு முதலாக வுடைய
அப்பெருஞ் சேனையை யடவியிற் பாய்ச்சிக்
கோதா விரியிற் றன்போ தகநீ
ருண்ணக் கலிங்க முங்கடந் தப்பாற்
சக்கரக் கோட்டத் தப்புறத் தளவு
மேவருந் தானைத் தாவடி செலுத்தி
வேங்கைநாடு மீட்டுக் கொண்டுதன் பூங்கழற்
கடைக்கலம் புகுந்த படைக்கலத் தடக்கை
விசையா தித்தற் கருளி விசைகொடு
மீண்டுவிட் டருளி யிகலிடைப் பூண்டசயத்
திருவொடுங் கங்கா புரிபுகுந் தருளி
அங்கே ராசாதி ராச ராச

* புட்டில் - என்றும் பாடமுண்டு.

னெனத் தராபதி யராகத் தியற்றிப்
படியில் மன்னவ ரடிதொழு தேத்த
வின்மணிப் பீடத் திருந்து வேங்கைநன்
ஞட்டினிற் கொண்ட
இருநிதிப் பிறக்கம் வரிசையிற் காட்டி
ஆழியு நிகளமு மகற்றி யாங்கவர்
வாழிய விரத மாற்றிப் பூழிமஞ்
செய்துவரம் பாகச் செங்கோல் செலுத்தி
மேதினி விளக்கி மீதுயர் வீரத்
தனிக்கொடி தியாகக் கொடியொடு
மேற்பவர் வருகென்று நிற்பப் போர்த்தொழில்
உரிமையி லெய்தி யரசுவீற் றிருந்து
மேவரு மனுநெறி விளக்கிய கோவிராச கேசரி
வர்மரான உடையார் ஸ்ரீவீரராசேந்திர தேவர்க்கு யாண்டு:

## கல்வெட்டு—18, 19
## முதற் குலோத்துங்க சோழன்

குறிப்பு: ஒன்று முதல் 75 அடிகள் முடிய 18-ஆம் கல்வெட்டுக்கு.

புகழ்சூழ்ந்த புணரி யகழ்சூழ்ந்த புவியில்
பொன்னேமி யளவுந் தன்னேமி நடப்ப
விளங்குசய மகளை யிளங்கோப் பருவத்துச்
சக்கரக் கோட்டத்து விக்கிரமத் தொழிலாற்
புதுமணம் புணர்ந்து மதவரை யீட்டம்
வயிரா கரத்து வாரி யயிர்முனைக்
கொந்தள வரசர் தந்தள மிரிய
வாளுறை கழித்துத் தோள்வலி காட்டிப்
போர்ப்பரி நடாத்திக் கீர்த்தியை நிறுத்தி
வடதிசை வாகை சூடித் தென்றிசைத்
தேமரு கமலப் பூமகள் பொதுமையும்
பொன்னி யாடை நன்னிலப் பாவையின்
தனிமையுந் தவிரப் புனிதத் திருமணி
மகுட முரிமையிற் சூடித்
தன்னடி யிரண்டுந் தடமுடி யாகத்
தொன்னில வேந்தர் சூட முன்னை
மனுவாறு பெருகக் கலியாறு வறப்பச்
செங்கோல் திசைதொறுஞ் செல்ல வெண்குடை
இருநில வளாக மெங்கணுந் தனது
திருநிழல் வெண்ணிலாத் திகழ வொருதனி
மேருவிற் புலிவிளை யாட வார்கடற்

றீவாந் தரத்துப் பூபாலர் திறைவிடு
கலஞ்சொரி களிறுமுறை நிற்ப விலங்கிய
தென்னவன் கருந்தலை பருந்தலைத் திடத்தன்
பொன்னகர்ப் புறத்திடைக் கிடப்ப விந்நாட்
பிற்குலப் பிறைபோல் நிற்பிழை யென்னுஞ்
சொல்லெதிர் கோடிற் றல்லது தன்கை
வில்லது கோடா வேள்குலத் தரசர்
அளத்தியி லிட்ட களிற்றின தீட்டமும்
பட்டவெம் பரியும் விட்டதன் மானமும்
கூறின வீரமும் கிடப்ப வேறின
மலைகளு முதுகு நெளிப்ப விழிந்த
நதிகளுஞ் சுழன்றுடைந் தோட விழுந்த
கடல்களுந் தலைவிரித் தலமரக் குடதிசைத்
தந்நா ளுகந்து தானும் தானையும்
பன்னா ளிட்ட பலபல முதுகும்
பயந் தெதிர்மாறிய சயப்பெருந் திருவும்
பழியிகந்து கொடுத்த புகழின் செல்வியும்
வாளா ரொண்கண் மடந்தைய ரீட்டமும்
மீளாது கொடுத்த வெங்கரி நிரையும்
கங்கமண் டலமும் சிங்கண மென்னும்
பாணி யிரண்டு மொருவிசைக் கைக்கொண்
டீண்டிய புகழொடு பாண்டிமண் டலங்
கொள்ளத் திருவுளத் தடைத்து வெள்ளம்
வருபரித் தரங்கமும் பொருபரிக் கலங்களும்
தந்திர வாரியு முடைத்தாய் வந்து
வடகடல் தென்கடல் படர்வது போலத்
தன்பெருஞ் சேனையை யேவிப் பஞ்சவர்
ஐவரும் பொருத போர்க்களத் தஞ்சி
வெரிநளித் தோடி யரணெனப் புக்க
காடறத் துடைத்து நாடடிப் படுத்து
மற்றவர் தம்மை வனசரர் திரியும்
பொற்றை வெஞ்சுர மேற்றிக் கொற்ற
விசயத் தம்பந் திசைதொறு நிறுத்தி
முத்தின் சலாபமு முத்தமிழ்ப் பொதியிலு
மத்தவெங் கரிபடு மய்யச் சையமும்
கன்னி யுங்கைக் கொண்டு புனிதத்
தென்னாட் டெல்லை காட்டிக் குடமலை
நாட்டுள்ள சாவேறெல்லாந் *தனிவிசும் பேற

* இருவிசும் என்ற பாடமும் உண்டு.

மாவே றியதன் வரூதினித் தலைவரைக்
குறுகலர் குலையக் கோட்டா றுட்பட
நெறிதொறும் நிலைகளிட் டருளித் திறல்கொள்
வீரசிம் மாசனந் திரியவிட் டருளிப்
பொங்கொளி யாரமுந் திருப்புயத் தலங்கலும்
போல வீரமுந் தியாகமும் விளங்கப்
பார்மிசைச் சிவனிடத் துமை யெனத்
தியாக வல்லி உலகுடையா ளிருப்ப வவளுடன்
கங்கைவீற் றிருந்தென மங்கையர் திலதம்
ஏழிசை வல்லபி ஏழுலக முடையாள்
வாழி மலர்ந்தினி திருப்ப வூழியுந்
திருமா லாகத்துப் பிரியா தென்றும்
திருமக ளிருந்தென வீரசிம் மாசனத்து
உலகமுடை யாளொடு வீற்றிருந் தருளிய
கோவி ராசகேசரி வன்மரான திரிபுவனச் சக்கர
வர்த்திகள் ஸ்ரீகுலோத்துங்க சோழ தேவர்க்கு—

## கலவெட்டு—20

## விக்கிரம சோழன்

பூமாலை மிடைந்து பொன்மாலை திகழ்தரப்
பாமாலை மலிந்த பருமணித் திரள்புயத்
திருநில மடந்தையொடு சயமக ளிருப்பத்
தன்றுணை மார்வந் தனதெனப் பெற்றுத்
திருமக ளொருதனி யிருப்பக் கலைமகள்
சொற்றிறம் புணர்ந்த கற்பின ளாகி
விருப்பொடு நாவகத் திருப்பத் திசைதொறுந்
திகிரியொடு செங்கோல் நடப்ப வகில
புவனமுங் கவிப்பதொரு புதுமதிபோல
வெண்குடை மீமிசை நிற்பக் கருங்கலி
யொளித்துவன் பிலத்திடைக் கிடப்பக் குளத்திடைத்
தெலுங்க வீமன் விலங்கல்மிசை யேறவும்
கலிங்க பூமியைக் கனலெரி பருகவும்
ஐம்படைப் பருவத்து வெம்படை தாங்கியும்
வேங்கை மண்டலத் தாங்கினி திருந்து
வடதிசை வாகை சூடித் தென்றிசைத்
தேமரு கமலப் பூமகள் பொதுமையும்
பொன்னி யாடை நன்னிலப் பாவையின்
தனிமையும் தவிர்த்து புனிதத் திருமணி

20. மகுட முறைமையிற் சூடித்
தண்ணளி பரப்பித் தனித்தனி புரந்து
மண்முழுதுங் களிப்ப மணிநா வொடுங்க
விசையமும் புகழு மேன்மே லோங்கச்
செழியர்வெஞ் சுரம்புகச் சேரலர் கடல்புக
25. அழிதரு சிங்கள ரஞ்சிநெஞ் சலமரக்
கங்கர் திறையிடக் கன்னடர் வெந்நிடக்
கொங்க ரொதுங்கக் கொங்கணர் சாயமற்
றெத்திசை மன்னருந் தத்தமக் கரணெனத்
திருமலர்ச் சேவடி உரிமையில் இறைஞ்சத்
30. தொல்லையே முலகுந் தொழுதெழத் தோன்றிய
முல்லை வாணகை முக்கோக் கிழானடி
உமையொடுஞ் சங்கரன் இமையத் திருந்தெனப்
பொருந்தி இனி திருப்ப
35. தெரிவையர் திலதம் தியாக பதாகை
புரிகுழல் மடப்பிடி புனிதகுண வனிதை
திரிபுவன முழுதுடையா ளிவன்திரு வுள்ளத்
தருள்முழு துடையா ளெனவுட னிருப்பச்
செம்பொன் வீர சிம்மா சனத்து
40. வீற்றிருந் தருளிய கோப்பர கேசரி வன்மரான
திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீவிக்கிரம சோழ தேவர்க்கு-

## கல்வெட்டு—21

## விக்கிரம சோழ தேவர்

1. பூமாலை மிடைந்து பொன்மாலை திகழப்
பாமாலை மலிந்த பருமணித் திரள்புயத்
திருநில மடந்தையொடு சயமக ளிருப்பக்
கனவரை மார்வந் தனதெனப் பெற்றுத்
5. திருமக ளொருதனி யிருப்பக் கலைமகள்
சொற்றிறம் புணர்ந்த கற்பின ளாகி
விருப்பொடு நாவகத் திருப்பத் திசைதொறுந்
திகிரியொடு செங்கோல் நடப்ப வகில
புவனமுங் கவிப்பதோர் புதுமதி போல
10. வெண்குடை மீமிசை நிழற்றக் கருங்கலி
யொளித்துவன் பிலத்திடைக் கிடப்பக் குளத்திடைத்
தெலுங்க வீமன் விலங்கன்மிசை யேறவும்
கலிங்க பூமியைக் கனலெரி பருகவும்
ஐம்படைப் பருவத்து வெம்படை தாங்கியும்
15. வேங்கை மண்டலத் தாங்கினி திருந்து

வடதிசை யடிப்படுத் தருளித் தென்றிசைத்
தருமமுந் தவமுந் தானமுந் தழைப்ப
வேதமும் மெய்ம்மையு மாதியுகம் போலத்
தலைத்தலை சிறப்பவந் தருளி வெலற்கரும்
போர்ப்புலி யாணை பார்த்திவர் சூட
நிறைமணி மகுட முறைமையிற் சூடி
மன்னுயிர்க் கெல்லா மின்னுயிர்த் தாய்போற்
றண்ணளி பரப்பித் தனித்தனி பார்த்து
மண்முழுதுங் களிப்ப மனுநெறி வளர்த்துத்தன்
கோயிற் கொற்ற வாசற் புறத்து
மணிநா வொடுங்க முரசுகண் முழங்க
விசயமும் புகழும் மேன்மே லோங்க
வாழி வாழியிம் மாநிலங் காக்கத்
திருமணிப் பொற்றோட் டெழுதுபத் தாண்டு
வருமுறை முன்னே மன்னவர் சுமந்து
திறைநிறைத்துச் சொரிந்த செம்பொற் குவையாற்
றன்குல நாயகன் தாண்டவம் பயிலுஞ்
செம்பொனம் பலஞ்சூழ் திருமா ளிகையும்
கோபு வாசல் கூடசா லைகளும்
அங்கவன் மகிழுங்கங் கையொப்பாகிய
உலகு வலங்கொண் டொளிவிளங்கு நேமிக்
குலவரை யுதய குன்றமொடு நின்றெனப்
பசும்பொன் வேய்ந்த பலிவளர் பீடமும்
விசும்பொளி தழைப்ப விளங்குபொன் வேய்ந்து
இருநிலந் தழைப்ப விமையவர் களிப்பப்
பெரிய திருநாட் பெரும்பெயர் விழாவெனும்
உயர்பூரட் டாதி யுத்திரட் டாதியில்
அம்பல நிறைந்த வற்புதக் கூத்தர்
இம்பர் வாழ வெழுந்தருளு வதற்குத்
திருத்தேர்க் கோயில் செம்பொன் வேய்ந்து
பருந்திரண் முத்தின் பயில்வடம் பரப்பி
நிறைமணி மாளிகை நெடுந்திரு வீதிதன்
திருவளர் பெயராற் செய்துசமைத் தருளிப்
பைம்பொற் குழித்த பரிகல முதலாச்
செம்பொன் கற்பகத் தொடுபரிச் சிந்நமும்
அளவில் லாதன வொளிபெற வமைத்துப்
பத்தா மாண்டிற் சித்திரைத் திங்கள்
அத்தம் பெற்ற வாதிவா ரத்துத்
திருவளர் மதியின் திரயோதசிப் பக்கத்து

இன்ன பலவு மினிதுசமைத் தருளி
ஒருகுடை நிழற்கீழ்த் தலமுழு துங் களிப்பச்
செழியர்வெஞ் சுரம்புகச் சேரலர் கடல்புக
அழிதரு சிங்கள ரஞ்சிநெஞ் சலமரக்
கங்கர் திறையிடக் கன்னடர் வெந்நிடக்
கொங்க ரொதுங்கக் கொங்கணர் சாயமற்
றெத்திசை மன்னருந் தத்தமக் கரணெனத்
திருமலர்ச் சேவடி யுரிமையி னிறைஞ்ச
அங்கவன் மகிழுங் கங்கையொப் பாகிய
தெரிவையர் திலதந் தியாக பதாகை
புரிகுழன் மடப்பிடி புனிதகுண வனிதை
திரிபுவன முழுதுடையா ளவன்திரு வுள்ளத்(து)
அருள்முழு துடையா ளெனவுட னிருப்ப
ஊழி யந்நெடு மாலா கத்துப்
பிரியா தென்றுந் திருமக ளிருந்தென
மாதர் மடமயில் பூதலத் தருந்ததி
அரணியல் கற்பிற் றரணிமுழு துடையா
ளிவன்திரு மார்வத் தருளொடு மிருப்பச்
செம்பொன் வீர சிம்மா சனத்துத்
திரிபு வனமுழு துடையா ளோடும்
வீற்றிருந்தருளிய கோப்பர கேசரி வர்மரான

திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீவிக்கிரம சோழ தேவர்க்கு யாண்டு :

## பாண்டிய மன்னர்களின் மெய்க்கீர்த்திகள்

### கல்வெட்டு—24

### குலசேகர பாண்டியன்

பூவின் கிழத்தி மேவி வீற்றிருப்ப
மேதினி மாது நீதியிற் புணர
வியப்போர் மடந்தை ஜயப் புயத்திருப்ப
மாக்கலை மடந்தை வாக்கினில் விளங்கத்
திசையிரு நான்கு மிசைநிலா வெறிப்ப
மறைநெறி வளர மனுநெறி திகழ
அறநெறிச் சமயங்க ளாறுந் தழைப்ப
கானில் வேங்கை வில்லுடன் தொடர்ந்துற
மீனங் கனகா சலத்து வீற்றிருப்ப
எண்கிரி சூழ்ந்த எழுகட லெழுபொழில்
வெண்குடை நிழற்ற செங்கோல் நடப்ப

கொடுங்கலி நடுங்கி நெடும்பிலத் தொளிப்ப
வில்லவர் செம்பியர் விராடர் மராடர்
பல்லவர் திறமையுடன் முறைமுறை பணிய
இருநேமி யளவு மொருநேமி யோங்க
இன்னமு தாகிய இயலிசை நாடகம்
மன்னி வளர மணிமுடி சூடி
விளங்கு கதிரொளி வீரஸிம் ஹாஸனத்து

வீற்றிருந் தருளிய கோச்சடைய பன்மரான திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீகுலசேகர தேவர்க்கு :—

## கல்வெட்டு—25

## கோமாறவர்மன் சுந்தர பாண்டியன்

பூமருவிய திருமடந்தையுஞ் புவிமடந்தையும் புயத்திருப்ப
நாமருவிய கலைமடந்தையுஞ் சயமடந்தையும் நலஞ்சிறப்பக்
கோளார்ந்த சினப்புலியுங் கொடுஞ்சிலையுங் குலைந் [தொளிப்ப
வாளார்ந்த பொற்கிரிமேல் வரிக்கயல்கள் விளையாட
இருங்கடல் வலயத் தினிதறம் பெருகக்
கருங்கலி கடிந்து செங்கோல் நடப்ப
ஒருகுடை நீழ லிருநிலங் குளிர
மூவகைத் தமிழு முறைமையின் விளங்க
நால்வகை வேதமு நவின்றுடன் வளர
ஐவகை வேள்வியுஞ் செய்வினை யியற்ற
அறுவகைச் சமயமு மழகுடன் றிகழ
எழுவகைப் பாடலு மியலுடன் பரவ
எண்டிசை யளவுஞ் சக்கரஞ் செல்லக்
கொங்கணர் கலிங்கர் கோசலர் மாளுவர்
சிங்களர் தெலிங்கர் சீனர் குச்சரர்
வில்லவர் மாகதர் விக்கலர் செம்பியர்
பல்லவர் முதலிய பார்த்திவ ரெல்லாம்
உறைவிட மருளென வொருவர்மு னொருவர்
முறைமுறை கடவதந் திறைகொணர்ந் திறைஞ்ச
இலங்கொளி மணிமுடி யிந்திரன் பூட்டிய
பொலங்கதி ரார மார்பினிற் பொலியப்
பனிமலர்த் தாமரைத் திசைமுகன் படைத்த
மனுநெறி தழைப்ப மணிமுடி சூடி
விளங்கிய மணியணி வீரசிம் மாசனத்து
வளங்கெழு கவரி யிருமருங் கசைப்பக்

கடலென முழங்குங் களிநல் யானை
வடபுல வேந்தர்தம் மணிப்புயம் பிரியா
இலங்கிழை யரிவையர் தொழுதுநின் றேத்தும்
உலகமுழு துடையாளொடும் வீற்றிருந் தருளிய
கோமாற பன்மரான திரிபுவன சக்கரவர்த்திகள்
சோணாடு கொண்டருளிய ஸ்ரீ சுந்தரபாண்டிய தேவர்க்கு :

## கல்வெட்டு—27

## அரிகேசரி பராக்கிரம பாண்டியன்

பூமிசை வனிதை மார்பினிற் பொலிய
நாமிசைக் கலைமக ணலனுற விளங்கப்
புயவரை மீது சயமகள் புணரக்
கயலிணை யுலகின் கண்ணெனத் திகழச்
சந்திர குலத்து வந்தவ தரித்து
முந்தையோர் தவத்து முளையென வளர்ந்து
தென்கலை வடகலை தெளிவுறத் தெரிந்து
மன்பதை புரக்க மணிமுடி புனைந்து
சங்கர சரண பங்கயஞ் சூடிச்
செங்கோ லோச்சி வெண்குடை நிழற்றி
வான வாரியு மன்னருள் வாரியும்
தான வாரியுந் தப்பா தளித்து
மறக்களை பறித்துநல் லறப்பயிர் விளைத்துச்
சிங்கையி லனுரையி லிராசையிற் செண்பையில்
விந்தையி லறந்தையின் முதலையில் வீரையில்
வைப்பாற் (றெல்லையில்) மன்னரை வெந்கண்
டெப்பாற் றிசையு மிசைவிளக் கேற்றிப்
பதினெண் பாடைப் பார்த்திவ ரனைவரும்
திறையுஞ் சின்னமு முறைமுறை கொணர்ந்து
குறைபல விரந்து குரைகழ லிறைஞ்ச
அவரவர் வேண்டிய தவரவர்க் கருளி
அந்தண ரனேகர் செந்தழ லோம்ப
விந்தைமுத லகர மைந்திடத் தியற்றிச்
சிவநெறி யோங்கச் சிவார்ச்சனை புரிந்து
மருதூ ரவர்க்கு மண்டப மமைத்து
முன்னொரு நூறு மூங்கில்புக் கிருந்த
சிற்பரர் தம்மைத் திருவத்த சாமத்துப்
பொற்கலத் தமுது பொலிவித் தருளிச்
சண்பக வனத்துச் சங்கரர் தமக்கு
மண்டப மமைத்து மணிமுடி சூட்டி

விழாவணி நடாத்தி விரைப்புன லாடல்
வழாவகை நடாத்திநின் மன்னரு ளதனால்
வற்றா வருவியும் வற்றி வற்கடம்
உற்றவிக் காலத் துறுபுன னல்கென
வேண்டியப் பொழுதே வேறிடத் தின்றிச்
சேண்டரு புனலிற் செழும்புன லாட்டி
மின்கால் வேணி விசுவநா தர்க்குத்
தென்கா சிப்பெருங் ]கோயில் செய்து
நல்லா கமவழி நைமித் திகமுடன்
எல்லாப் பூசையு மெக்கோ யிலினும்
பொருண்முத லனைத்தும் புரையற நடாத்தித்
திருமலி செம்பொற் சிங்கா சனமிசை
உலக முழுது முடையா ளுடனே
இலகு கருணை யிரண்டுரு வென்ன
அம்மையு மப்பனு மாயனைத் துயிர்க்கும்
இம்மைப் பயனு மறுமைக் குறுதியும்
மேம்பட நல்கி வீற்றிருந் தருளிய
ஸ்ரீ அரிகேசரி பராக்க்கிரம தேவர்க்கு யாண்டு :—

கல்வெட்டுக்களைக் கொண்டு மாணவர் பயிற்சி
பெறுதற்குரிய வினு விடைகள்

# பொது

I. கல்வெட்டுக்களின் தோற்றம், தொன்மை, வளர்ச்சி, பயன், பாதுகாப்பு, நூல் வெளியீடு, தமிழ் நூற் பயிற்சிக்குப் பயன்படும் விதம் இவைகளைப் பற்றி இருபக்கங்களுக்கு மிகாமல் ஒரு கட்டுரை எழுதுக.

*விடை :* முன்னுரையில் கூறியவைகளைச் சுருக்கிக் கொள்க.

II. தஞ்சை இராசராசேச்சரத்தைப் பற்றிக் கல்வெட்டுக் களைக் கொண்டு இரண்டுபக்க அளவில் கட்டுரை எழுதுக.

### இராசராசேச்சரம்

**தொடரின் பொருள் :** (முதல்) இராசராச சோழனுல் கட்டப் பெற்ற கோயில் (ஈச்சரம்—கோயில்).

**கோயில் நிலை பெற்றுள்ள இடம் :** பாண்டி குலாசனி வள நாட்டுத் தஞ்சாவூர்க் கூற்றத்துத் தஞ்சாவூர்.

**கோயிலைக் கட்டுதற்குக் காரணம் :** தலைநகரில் தன் பெயரால் பெரியதொரு கோயில் நின்று நிலவவேண்டுமென்று எழுந்த பெருவேட்கையே கட்டுதற்குக் காரணமாகும். இராசராசேச் சரத்திற்கு அருகிலுள்ள ** தஞ்சைத் தளிக்குளத்தாரின்* கோயிலையே முதலாம் இராச ராச சோழன் இராசேச்சரம் என்ற பெயரால் கட்டினுன் என்று கொள்ளக்கூடாதோ எனின்? கூடாது. என்னை ? அக்கோயிலைக் கட்டி அதற்குத் தன்பெயரை வைக்கலாம் எனினும் அங்குள்ள இறைவரின் பெயரைத் தஞ்சைத் தளிக்குள முடையார் (அ) தஞ்சைத் தளிக்குளமுடைய மகாதேவர், என்றே குறிப்பிடப்பட வேண்டும். அதற்கு மாருக இராசராசேச்சரத்தில் எழுந்தருளியுள்ள இறைவர்க்கு "ராஜ ராஜேஸ்வர முடையார்," "ராஜ ராஜேஸ்வரமுடைய பரம சுவாமி" என்ற பெயர்கள்தான் காணக்கிடக்கின்றன.

செம்பியன் மாதேவியார், திருநல்லம் கோயிலைத் தம் கண வரின் பெயரால் **கண்டராதித்தன்** என்று கட்டினுலும், அக் கோயிலிலுள்ள இறைவர் பெயரைத் திருநல்லமுடைய மகாதேவர்

---

* தஞ்சைத் தளிக்குளத்தார் என்பது, தஞ்சாவூரில் சிவகங்கைத் தோட்டத் திலுள்ள திருக்குளத்தில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் இறைவரின் திருப்பெயர். இக்கோயில் வைப்புத் தலமாயுள்ளது. திருவீழிமிழலைத் திருத் திருத்தாண்டகத்தில் அப்பர் சுவாமிகள் இதைப் பாடியுள்ளனர்.

என்றே அவர் கல்வெட்டில் குறித்திருத்தலால் கடவுள் பெயரை மாற்றும் வழக்கம் இல்லை என்பதை அறியலாம். தளிக்குள முடையார் திருமேனி இன்றும் தனியாகச் சிவகங்கைக் குளத்தில் இருப்பதைக் காணலாம்.

*கோயில் கட்டத் தொடங்கி முடிவு பெற்ற காலம் :* கோயில் திருப்பணி முதலாம் இராசராச சோழனது 19-ஆம் இராச்சிய ஆண்டில் தொடங்கப் பெற்று, இருபத்தாரும் இராச்சிய ஆண்டில் அதாவது கி. பி. 1011 - இல் முடிவு பெற்றது.

*கோயிலின் அமைப்பு, எழுந்தருளுவிக்கப் பெற்ற திருமேனிகள், அளிக்கப் பெற்ற நிவந்தங்கள் :* மாடக் கோயில் அமைப்புடையது. முதற் கோபுர வாயிலுக்குக் கேரளாந்தக வாயில் என்றும், இரண்டாம் கோபுரவாயிலுக்கு இராசராசன் வாயில் என்றும், பெயர்கள் வைக்கப்பட்டுள்ளன. இக்கோயில் திருச்சுற்று மாளிகையைக் கட்டியவன், முதலாம் இராசராச சோழனுடைய படைத் தலைவனாகிய கிருஷ்ணன் இராமனான மும்முடி சோழ பிர்மாதிராயன். இக் கோயிலில் முதலாம் இராசராசனே யன்றி இவனது தேவியர்களாகிய திரைலோக்கிய மாதேவி, பஞ்சவன் மாதேவி, உலக மாதேவி, முதலான தேவியர்களும், இவனது திருத் தமக்கையராகிய வல்லவரையர் வந்திய தேவர் மகாதேவி யார் ஆழ்வார் பராந்தகன் குந்தவையாரும், ஸ்ரீ காரியஞ் செய்து வந்த பொய்கை நாடுகிழவனும், பல திருமேனிகளை எழுந்தருளு வித்து அவர்களுக்கு அணிகலன்களையும் நித்திய நைமித்திகங்களுக்கு வேண்டுவனவற்றையும் குறைவறக் கொடுத்துள்ளனர். முதலாம் இராச ராச சோழன் சேரமானையும் பாண்டியர்களையும் தோற்கடித்துக் கொண்டு வந்த பொருட் குவியல்களை எல்லாம் இராசராசேச்சரக் கோயிலுக்கே கொடுத்துள்ளான். இராச ராசேச்சர முடையார்க்குத் திருப்பரிசாரகஞ் செய்ய மாணிகளையும் (பிராமண பிரமச்சாரி), கணக்கெழுத கரணத்தார்களையும், சோழ மண்டலத்திலிருந்தும் பாண்டி மண்டலத்திலிருந்தும் தொண்டை மண்டலத்திலிருந்தும் கொண்டுவந்து அவர்களுக்குத் தக்க சம்பளங்களைக் கொடுத்துள்ளான். திருப்பதியம் விண்ணப்பஞ் செய்ய ஐம்பது பேர்களை நியமனஞ் செய்தான். இராசராசேச்சர முடையார்க்கு வேண்டும் நிவந்தங்களுக்குத் தேவதானமாகச் சோழ மண்டலத்திலும் புறமண்டலங்களிலும் மிகுதியான நிலங்களை அளித்துள்ளான். திங்கள் திருவிழா, ஆண்டு தோறும் பெருந்திரு விழா இவைகளை நடத்த ஏற்பாடு செய்திருந்தான்,

சோழ மன்னர்களின் பெருமைக்கும் புகழுக்கும் நிலைக்களமாய் விளங்குவது இக்கோயில். மேனாட்டாரும் இதைப் பார்த்து வியந்து செல்கின்றனர்.

# சிறப்பு

**1. கல்வெட்டிற்குச் சாசனத்தில் வழங்கும் பெயர் யாது? ஆதாரம் காட்டுக :**

கல்வெட்டிற்குச் சானத்தில் வழங்கும் பெயர் *சிலாலேகை* என்பதாகும்.

ஆதாரம் :—

"ஊர் மஞ்சிக்கமான பூமிநோக்கி, கல்நட்டு *சிலாலேகை* செய்து கொள்க என்று ஸபை திருமுகம் அருளிச் செய்த திருமுகத் தின்படி"

"சந்திராதித்த காலமும் இறையிலி அர்ச்சனுபோகமாக வைச்சு *சிலாலேகை* செய்து கல்நட்டு குடுத்தோம்"

(நான்காம் கல்வெட்டுத் தொடர்)

"ஆகத் தேவர் நிலங் குழி இரண்டாயிரத் திருநூறும் இறைகரத் தூட்டாக சந்திராதித்தவல் நிற்பதாக திருவமுதுக்கும் அர்ச்சனு போகத்துக்கும் இறையிழிச்சி *சிலாலேகை* செய்து கொடுத்தோம்"

(பதினைந்தாம் கல்வெட்டுத் தொடர்)

"இப்பரிசு தேவதான இறையிலியாகச் *சிலாலேகை* செய்து குடுத்தோம் மேற்பாடியான ராஜாசிரயபுரத்து நகரத்தோம்"

(ஏழாம் கல்வெட்டின் தொடர்)

**2. படுவூர்க் கோட்டம் எம்மண்டலத்திலுள்ளது? இக் காலம் எந்தெந்த தாலூகாகள் அடங்கிய பிரதேச மாகும்?**

படுவூர்க்கோட்டம் தொண்டை மண்டலத்திலுள்ளது. இப் படுவூர்க் கோட்டத்தில் அடங்கியதாகக் கல்வெட்டுக்களில் குறிக் கப் பெறும் காவிதிப் பாக்கமாகிய அவனி நாராயணச் சதுர்வேதி மங்கலம், மீயாறு நாட்டுக் காவனூர், படுவூர்க்கோட்டத்து மாங் காடு நாடு, இவைகளெல்லாம், இக்காலம் வடார்க்காடு ஜில்லாவில் இருப்பதால், அந்த ஜில்லாவில் அடங்கிய வாலாஜாபாத், குடியாத்தம், வேலூர், அரக்கோணம் இத்தாலூகாகள் அடங்கிய பிரதேசம் என்னலாம்.

**3. காவிரிப்பாக்கமாகிய அமநி நாராயண சதுர்வேதி மங்கலம்—இதன், திருத்தமான பெயர் யாது ? இம்மங் கலத்தில் இருந்த மாசபையில் எவரெவர் இருந்தனர் ? விளக்கம் தருக.**

*திருத்தமான பெயர் :* காவிதிப்பாக்கமாகிய அவனி நாராயணச் சதுர்வேதி மங்கலம்.

*இம்மகாசபையில் இருந்தவர் :—*

(1) சம்வத்ஸர வாரியப் பெருமக்கள்.
(2) தோட்டவாரியப் பெருமக்கள்.
(3) ஏரிவாரியப் பெருமக்கள்.
(4) கழனிவாரியப் பெருமக்கள்
(5) ஸ்ரீ வடவீர நாரணப் பெருமக்கள்.
(6) பஞ்சவார வாரியப் பெருமக்கள்.
(7) கணக்குவாரியப் பெருமக்கள்.
(8) கலிங்குவாரியப் பெருமக்கள்.
(9) தடிவழிவாரியப் பெருமக்கள்.
(10) பட்டர்கள்.
(11) விசிஷ்டர்கள்.
(12) ஊராள்கின்ற பல்லவன் பிரமஹாதரயன்.
(13) கண்காணி அரும்பாக்கிழான்.

## விளக்கம்

*சம்வத்ஸர வாரியப் பெருமக்கள் :* ஆண்டுதோறும் தெரிந்தெடுக்கப்படும் கிராம நிர்வாக சபையார்.

*தோட்டவாரியப் பெருமக்கள் :* தோட்டக் கண்காணிப்பு செய்யும் சபையார் (தோட்டப்பயிர்=காய்கறிகள்) வயல் வேறு. தோட்டம் வேறு. வயலுந் தோட்டமும் (பெருங் கதை).

*ஏரிவாரியப் பெருமக்கள் :* ஏரியை மேற்பார்வை இடும் சபையார்.

*கழனிவாரியப் பெருமக்கள் :* மருத நிலங்களை மேற்பார்வை இடும் சபையார். (கழனியுழவர் - புறம்.)

*வடவீர நாரணப் பெருமக்கள் :* வடவீர நாரணம் என்னும் ஊரிலிருந்த மிக மேன்மை வாய்ந்தவர். இந்த வடவீரணம், அவனி நாராயண சதுர்வேதி மங்கலத்திற்கு அருகில் இருந்ததாதல் வேண்டும்.

*பஞ்சவார வாரியப் பெருமக்கள் :* கிராம வரிகளை வசூலிக்கும் அதிகாரக் கூட்டத்தார்.

*கணக்குவாரியப் பெருமக்கள் :* கணக்குகளைப் பார்வையிடும் சபையார்.

*கலிங்குவாரியப் பெருமக்கள் :* ஏரியின் மதகு, நீர்வழியும் அணைக்கட்டு இவைகளை மேற் பார்வை செய்யும் சபையார்.

*தடிவழிவாரியப் பெருமக்கள் :* வயல், பாத்தி, இவைகளுக்குச் செல்லும் வழிகளைப் பார்வையிடும் சபையார்.

*பட்டர்கள் :* சாத்திரம் கற்றவர்கள்.

*விஸிஷ்டர்கள் :* மிகமிக மேன்மை வாய்ந்தவர்கள்.

**4. தஞ்சை இராச இராசேச்சரத்தில் இரத்தினமும் பொன்னும் எவ்வெவற்றால் நிறுக்கப்பெற்று வந்தன ?**

இரத்தினம் தக்ஷிணமேரு விடங்கர் என்னும் கல்லாலும் பொன் ஆடவல்லான் என்னும் கல்லாலும் நிறுக்கப் பெற்றுவந்தன.

**5. பொய்கை நாடு கிழவன் ஆதித்தன் சூரியனான தென்னவன் மூவேந்தவேளான், தஞ்சை இராச ராசேச்சரத்தில் முதலாம் இராசராச சோழன் காலத்திலும் முதலாம் இராசேந்திர சோழன் காலத்திலும் எழுந்தருளுவித்த பிரதிமங்களும் திருமேனிகளும் யாவை ?**

முதலாம் இராசராச சோழன் காலத்தில், நம்பி ஆரூரனார், நங்கை பரவையார், திருநாவுக்கரையர், திருஞானசம்பந்த அடிகள், முதலாம் இராசராச சோழன், இவனது தேவியராகிய ஒலோக மாதேவியார், இவர்களின் பிரதிமங்களையும், முதலாம் இராசராச சோழனுக்குத் தேவார தேவராக சந்திரசேகரர் திருமேனியையும்; முதலாம் இராசேந்திர சோழன் காலத்தில், க்ஷேத்திர பாலதேவர், ஸ்ரீ பைரவமூர்த்தி இவர்கள் திருமேனிகளையும், சிறுத்தொண்ட நம்பி, திருவெண்காட்டு நங்கை, சீராளதேவர், " தத்தாநமரேகாண் " என்ற மிலாடுடையார் இவர்களின் பிரதிமங்களையும்; பொய்கை நாடு கிழவன், ஆதித்தன் சூரியனான தென்னவன் மூவேந்த வேளான் தஞ்சை இராசராசேச்சரத்தில் எழுந்தருளுவித்துள்ளான்.

**6. முதலாம் இராசஇராச சோழன் காலத்திலும், முதலாம் இராசேந்திர சோழன் காலத்திலும் ஆடவர், பெண்டிர் இவர்கள் அணிந்திருந்த அணிகல வகைகள் யாவை ?**

*ஆடவர் அணிந்திருந்த அணிகல வகைகள் :* உருத்திராட்சத் தாழ்வடம், உருத்திராட்சக் கண்டிகை, உருத்திராட்சச் சுரி,

பொற்பூ, கைக்காறை, திருப்பட்டிகை, குதம்பை, திருக்கம்பி, காற்காறை, சுருக்கினவீரபட்டம், திருக்குதம்பைத்தகடு, திரள் மணிவடம் என்பவை ஆடவர்களின் அணிகலவகைகள்.

*பெண்டிர் அணிந்திருந்த அணிகல வகைகள் :* திருக்கைக் காறை, மோதிரம், பட்டைக்காறை, தாலி, திருக்கம்பி, திருமகுடம், வாளி, உழுத்து, திருமாலை, வாகுவலயம், திருக்கைப்பொட்டு, சூடகம் என்பன.

*குறிப்பு:*—இவைகளுள், பொற்பூ, கைக்காறை, திருப்பட்டிகை, குதம்பை இவைகள் இருபாலார்க்கும் பொதுவணிகளாகவும் வழங்கியுள்ளன.

## 7. முதலாம் இராசேந்திர சோழன் காலத்துக் கல்வெட்டில் வந்த நவமணி வகை அவைகளின் குற்றங்கள் குணங்கள்—இவைகள் யாவை ?

*நவமணிகள் :* வயிரம், மாணிக்கம், கோமளம், நீலகந்தி என்பன வந்துள்ளன.

1. *வயிரம் :* இதன்வகை:—வயிரம் மட்டதாரை, மட்டதாரைச் சவக்கம், மட்டதாரைச் சப்படி என்பன.

2. *மாணிக்கம் :* இதன் வகை.
ஹலஹலம் குணவியன் (மேலானது), ஹலஹலம்.

*வயிரக்குற்றம் :* பொறிவும், முறிவும், இரத்தபிந்துவும், காகபிந்துவும், உடையன.

*மாணிக்கத்தின் குற்றம் :* குழிவும், பிரஹரமும், வெஜ்ஜமும், திராசமும், கற்பற்றும் உடையன.

*மாணிக்கத்தின் குணம் :* லசுனி (இலசுனி) உடையது.

*மட்டத்தாரை* - மழுங்கிய விளிம்புடையது.

குறிப்பு :

*மட்டத்தாரைச்சவக்கம்* - மழுங்கிய விளிம்புடையதும் சதுர வடிவுள்ளதுமான வைரக்கல்.

*சப்படி* - சப்பட்டை.
*பொறிவு* - புள்ளி. (Spot)
*முறிவு* - வெடிப்பு (Crack).
*இரத்தபிந்து* - செம்புள்ளி.
*காகபிந்து* - கரும்புள்ளி.
*திராசம்* - வெடிப்பு (flaws).

கற்பற்று - கற்பற்றுகையாகிய குற்றமுள்ள மாணிக்கம்.

பிரஹாரம் }
வெஜ்ஜம் } மாணிக்கத்தின் குற்றவகைகள்.

பிரஹாரம் - (Cuts) கீற்றுகள்.

வெஜ்ஜம் - (holes) தொளை.

லஸுனி - white specks (வெண்புள்ளி).

8. முதலாம் இராசேந்திர சோழன் காலத்தில் கல்வெட்டில் வந்த முத்துக்களின் வகை, அவைகளின் குற்றம் குணங்கள் யாவை ?

முத்துக்களின் வகை - வட்டமும், அனுவட்டமும், ஒப்புமுத்தும், குறுமுத்தும், பயிட்டமும் அம்புமுதும், நிம்பொளமும் என்பன.

குறிப்பு :—

வட்டம் - (round pearls) உருண்டை முத்து.

அனுவட்டம் - ஒருவகையான உருண்டை.

ஒப்புமுத்து - மெருகு கொடுக்கப்பட்ட முத்து (Polished pearls)

குறுமுத்து -சிறிய முத்து.

பயிட்டம் }
நிம்பொளம் } முத்து வகைகள்.
அம்புமுது }

முத்துக்களின் குற்றங்கள் : வரையும், கறையும், குருவும், சுப்பிரமும் என இவைகள்.

குறிப்பு :—

வரை - (line) கோடு, கீறு.

கறை - (stains).

குரு - சிவப்புப் புள்ளிகள் (red dots),

சுப்பிரம் – (white specks) வெண்புள்ளிகள் என்பர் கல்வெட்டுத் துறையாளர்.

சுப்பிரம் - மிக்க வொளி. (முத்துக் குற்றத்தில் ஒன்று).

முத்துக்களின் குணம் – குளிர்ந்த நீரும், சிவந்த நீரும் உடையன.

குறிப்பு :—

குளிர்ந்த நீர் - Brilliant waters.

சிவந்த நீர் - red waters.

**9. தேவதானம், திருவிடையாட்டம், பள்ளிச் சந்தம்; பிரதிமம், திருமேனி: இவைகளின் வேறுபாடுகள் யாவை? ஆதாரங்காட்டி நிறுவுக.**

சிவன் கோயிலுக்கு விடப்பட்ட நிவந்தத்துக்குத் **தேவதானம்** என்றும், திருமால் கோயிலுக்கு விடப்பட்ட நிவந்தத்துக்குத் **திருவிடையாட்டம்** என்றும், சைன, பௌத்த கோயில்களுக்கு விடப்பட்ட நிவந்தங்களுக்குப் **பள்ளிச்சந்தம்** என்றும் பெயர்.

**இவைகளுக்கு ஆதாரம் :—**

"ஆக இந் நான் கெல்கைக் குட்பட்ட பற்றில் உடையார் திருக்குற்றால முடைய நாயனுர் தேவதானமும், உடையார் விக்கிரம பாண்டீஸ்வர முடைய நாயனுர் தேவதானமும்; நயினுர் திருவிருந்த பெருமாள் திருவிளையாட்டமும், ஸ்ரீ கிருஷ்ணன் திருவிடையாட்டமும் பராக்கிரம பாண்டிய நல்லூரில் நயினுர் திருவேங்கட நாதன் திருவிடையாட்டமும்" என்னும் 27-ஆம் கல்வெட்டுப் பகுதியும்; "பங்களநாட்டு நடுவில் வகை முகை நாட்டுப் பள்ளிச் சந்தம் வைகலூர்த் திருமலை ஸ்ரீ குந்தவைஜி நாலயத்து தேவற்கு" என்னும் 13-ஆம் கல்வெட்டுப் பகுதியும், மேற்கூறியவைகளை விலியுறுத்துகின்றன.

திருக்கோயிலில் எழுந்தருளுவிக்கப் பெற்ற மக்கள் வடிவங் கட்குப் **பிரதிமம்** என்றும்; தெய்வ வடிவங்கட்குத் **திருமேனி** என்றும் பெயர்கள் வழங்கப் பெற்றுள்ளன.

**இவைகளுக்கு ஆதாரம் :—**

"இரண்டு திருக்கை யுடையாராகக் கனமாக எழுந்தருளுவித்த நம்பி ஆரூரனுர் பிரதிமம் ஒன்று. இரண்டு திருக்கையுடையாராகக் கனமாக எழுந்தருளுவித்த நங்கை பரவையார் *பிரதிமம்* ஒன்று. பெரிய பெருமாளுக்குத் தேவாரதேவராக எழுந்தருளுவித்த பாதாதி கேஸபரியந்தம் ஐவிரலே இரண்டு தோரை உசரத்து நாலு ஸ்ரீ ஹஸ்தமும் உடையாராகக் கனமாகப் பித்தளையால் எழுந்தருளு வித்த சந்திரசேகரர் *திருமேனி* ஒன்று" என்னும் ஐந்தாம் கல்வெட்டுப் பகுதிகள் மேற்கூறியவைகளை வலியுறுத்துகின்றன.

**10. காப்புரைகள் என்பவை யாவை? நுங்கள் பாடப் பகுதி யில் வந்துள்ள காப்புரைகள் யாவை? விளக்கம் தருக.**

கல்வெட்டுக்களின் இறுதியில் இந்த அறத்தை அடியார்கள் பாதுகாக்கக் கடவர், அப்படி பாதுகாத்தவர் போற்றப்படுவர். இதை அழித்தவர் இன்ன பாவத்துக்கு உட்படுவர் என்னும்

பொருளில் எழுதப்பட்ட தொடர்களுக்குக் காப்புரைகள் எனப் பெயர். இக்காப்புரைகளைக் கொண்டு, இது, இன்ன இன்ன சமயத்துக் கோயில் என்று கூறிவிடலாம். சிவன் கோயில் கல்வெட்டாயின் "இது பன்மாஹேஸ்வரரக்ஷை" என்றும் திருமால் கோயில் கல்வெட்டாயின் "இது வைஷ்ணவரக்ஷை" என்றும் குப்க்கப் பெற்றிருக்கும்.

*பாடப்பகுதியில் வந்துள்ள காப்புரைகள்:* "இதனை ரக்ஷித்தார் அடியிரண்டும் என்முடிமேலன"

"இது பன்மாஹேஸ்வர ரக்ஷை"

"இவ்வம்சத்துள்ள சைய ஆசாரியர்களே இத்தன்மம் ரக்ஷிக்க"

"இப்பொன் நாட்டார் ரக்ஷையாக வைத்தபொன்"

## விளக்கம்

*இதுபன்மாகேஸ்வர ரக்ஷை:* பல சிவனடியார்கள் இதைக் காப்பார்களாக.

இப்பொன் நாட்டார் ரக்ஷையாக வைத்தபொன் - இப்பொன் நாட்டார் பாதுகாவலாக வைத்தபொன்.

*இவ்வம்சத்துள்ள சைவ ஆசாரியர்களே இத்தன்மம் ரக்ஷிக்க* - இவ்வம்சத்தில் உள்ள சைவ ஆசாரியர்கள் இத்தர்மத்தைப் பாதுகாப்பார்களாக.

## 11. சாசனங்களைக் கல்லில் வெட்டும் பொழுது அதற்கு மூலமாகச் செம்பிலும் செதுக்குவது உண்டு—இதற்கு ஆதாரங் காட்டுக.

"இவ்வோலை பிடிபாடாகக் கொண்டு ஆசந்திராதித்தவல் இவ்வாலயம் உள்ள அளவும் கையாண்டு கல்லிலுஞ் செம்பிலும் வெட்டிப் பூசையுந் தாழ்வற நடத்திப் போதவும்"

(27-ஆம் கல்வெட்டுப் பகுதி)

"நம் வரியிலார் கணக்கிலும் தவிர்த்து சத்திராதித்தவற் செம்பிலும் சிலையிலும் வெட்டி கையாண்டு கொள்ளவும்"

(29-ஆம் கல்வெட்டுப்பகுதி)

என்னும் தெடர்கள், சாசனங்களைக் கல்லில் செதுக்கும் பொழுது, அவைகளுக்கு மூலங்களாக (Orignal documents)ச் செம்பிலும் பொறித்தல் வழக்க மென்பதை உணர்த்துகின்றன.

**12. முதலாம் இராசேந்திரன், முதலாம் இராசாதிராசன், இரண்டாம் இராசேந்திரன், வீரராசேந்திரன், முதற் குலோத்துங்கன், இவர்களின் மெய்க்கீர்த்திகள்எவ்வாறு தொடங்கப் பெறுகின்றன ?**

முதலாம் இராசேந்திரன் மெய்க்கீர்த்தி, "திருமன்னிவளர இருநிலமடந்தையும்" எனவும், முதலாம் இராசாதிராசன் மெய்க் கீர்த்தி, "திங்களேர்தரு தன்ருெங்கல் வெண்குடைக் கீழ்" எனவும், இரண்டாம் இராசேந்திரன் மெய்க்கீர்த்தி, "திருமாது புவியெனும் பெருமாதர் இவர்தன் மாதேவியர்களாக" எனவும், வீரராசேந்திரன் மெய்க்கீர்த்தி, "திருவளர திரள்புயத் திருநிலவலே யந்தன் மணிப்பூணெனத் தாங்கி" எனவும், முதற்குலோத்துங்கன் மெய்க்கீர்த்தி, "புகழ் சூழ்ந்த புணரி யகழ் சூழ்ந்த புவியில்" எனவும், தொடங்கப் பெறுகின்றன.

**13. 1 "பூமிசை வனிதை மார்பினிற் பொலிய" 2 "பூமருவிய திருமடைந்தையும்" 3 "பூவின் கிழத்தி மேவி வீற்றிருப்ப" 4 "பூமாலே மிடைந்து பொன்மாலே திகழப் பாமாலே மலிந்த பருமணித் திரள்புயத்து" எனத் தொடங்கும் மெய்க்கீர்த்திகள் எவ்வெவ் வரசர்களுக் குரியன ?**

1. 'பூமிசை வனிதைமார்பினிற்பொலிய' – என்பது, அரிகேசரி பராக்கிரம பாண்டியனுக்கும்,

2. பூமருவிய திருமடந்தையும் செயமடந்தையும் - என்பது கோமாறபன்மரான திரிபுவனச் சக்கரவர்த்திகள் சோணுடு கொண் டருளிய ஸ்ரீ சுந்தரபாண்டிய தேவனுக்கும்,

3. "பூவின் கிழத்தி மேவி வீற்றிருப்ப"—என்பது கோச் சடைய பன்மரான திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீ குலசேகர தேவனுக்கும்,

4. "பூமாலே மிடைந்து பொன்மாலே திகழப் பாமாலே மலிந்த பருமணித் திரள்புயத்து"—என்பது விக்கிரம சோழ தேவ னுக்கும், உரிய மெய்க் கீர்த்திப் பகுதிகளாம்.

**14. மெய்க்கீர்த்திக்கு எங்கே இலக்கணம் கூறப்பெற்றுள் ளது ? அது சோழ மன்னர்களில் எவர் கால முதல் விரிவாகத் தொடங்கப் பெற்றுள்ளது ?**

மெய்க்கீர்த்திக்கு இலக்கணம் பன்னிருபாட்டியலிலும், வச்சணந்தி மாலேயிலும் குறிக்கப்பெற்றுள்ளது. இது முதலாம்

இராசராச சோழன் காலம் முதல்தான் விரிவாகத் தொடங்கப் பெற்றுள்ளது.

**15. கல்வெட்டுக்களில் நெல், குறுணி, இருதூணி, கலம் இவைகளைக் குறிக்கும் அடையாளங்கள் யாவை ?**

ஜ – இது நெல்லைக்குறிக்கும் அடையாளம்.

ங – இது குறுணியைக் குறிக்கும் அடையாளம்.

கள - இது கலத்தைக் குறிக்கும் அடையாளம்.

வத - இது இரு தூணியைக் குறிக்கும் அடையாளம்.

**16. சோழ மன்னர்கள், அரசியல் தலைவர்களுக்கு அரசியல் ஊழியங்களைப் பாராட்டியும், புலவர்களுக்குப் புலமையைப் பாராட்டியும் பட்டம் அளிப்பதுண்டு என்பதை ஆதாரங்காட்டி நிறுவுக.**

*அரசியல் தலைவர்களுக்குக் கொடுக்கப்பட்ட பட்டங்கள்.*

1. பொய்கைநாடு கிழவன் ஆதித்தன் சூரியனான தென்னவன் மூவேந்த வேளான். இதில் ஆதித்தன் என்பது இயற் பெயர். சூரியன் என்ற வேறு பெயரும் உண்டு. இவன் பொய்கை நாட்டினன். இவன் தஞ்சை இராசராசேச்சரக் கோயிலுக்கு ஸ்ரீ காரியம் செய்து வந்தவன். இவனுடைய நிர்வாகத் திறத்தைப் பாராட்டி இவனுக்கு முதலாம் இராசராச சோழனால் வழங்கப்பட்ட பட்டம் தென்னவன் மூவேந்த வேளான் என்பதாகும்.

2. திருமந்திர ஓலை செம்பியன் விழுப்பரையன். திருமந்திர ஓலை என்பது அரசனது ஆணையை எழுதுவோர். இவர்க்குக் கொடுக்கப்பட்ட பட்டம் செம்பியன் விழுப்பரையன் என்பதாகும்.

3. சேனாபதிகள் ஜயங்கொண்ட சோழ பிர்மாதிராஜர். இவர் சேனாதிபதியாய் இருந்தவர். இவர் பிராமணர். ஆதலின் இவர்க்கு பிர்மாதி ராஜர் என்னும் பட்டம் இவரது அரசியல் ஊழியத்தைப் பாராட்டிக்கொடுக்கப்பட்டதாகும்.

*புலமையைப் பாராட்டிக் கொடுக்கப்பட்ட பட்டங்கள்.*

1. பாலன் திருவாஞ்சியத்தடிகளான ராஜராஜப் பிச்சனான சதாசிவன்—இவன் தஞ்சைப் பெரிய கோயிலில் தேவாரம் விண்ணப்பஞ் செய்தவர்களில் ஒருவன். இதில் பாலன் திருவாஞ்சியத்தடிகள் என்பது இயற்பெயர். சதாசிவன் என்பது தீட்சை செய்த பிறகு வைக்கப்பெற்ற பெயர். இவனுக்குக் கொடுக்கப்பெற்ற பட்டம் இராசராசப் பிச்சன் என்பதாகும்.

2. துவைத கோம புரத்து தத்திய கிரமவித்தன் மகன், சூரிய தேவக்கிரம வித்தனான ஆலாலவிடங்க உடுக்கை விஜ்ஜாதிரன். இவன் தஞ்சைப் பெரியகோயிலில் தேவாரம் விண்ணப்பம் செய்த காலையில் உடுக்கை வாசித்தவன் ஆவன். இவனது புலமையைப் பாராட்டி இவனுக்கு உடுக்கை விச்சாதரன் என்னும் பட்டம் கொடுக்கப்பட்டதாகும்.

**17. முதலாம் இராசாதிராச சோழனுக்குப் பாடப் பகுதியில் கொடுக்கப்பட்டுள்ள வேறு பெயர் யாது? மேற்கோள் காட்டுக.**

முதலாம் இராசாதி சோழனுக்குக் கொடுக்கப்பட்டுள்ள வேறு பெயர் ஜயங்கொண்ட சோழன் என்பதாகும்.

"மனுநெறி நின்று அஸ்வமேதஞ் செய்து அரைசு வீற்றிருந்த ஜயங்கொண்ட சோழன் உயர்ந்த பெரும்புகழ் கோவிராஜகேசரி வன்மரான உடையார் ஸ்ரீ ராஜாதிராஜ தேவர்." என்பது மேற்கோளாகும்.

**18. எவருடைய சேனையில் ஒட்டகங்கள் காணப்படுகின்றன?**

ஆகவமல்லனுடைய சேனையில் ஒட்டகங்கள் காணப்படுகின்றன.

**19. ஆகவமல்லனுடைய சைன்யத்தில் எந்தெந்த ஜாதி யானைகள் இருந்தன?**

சத்துரு பயங்கரன், கரபத்திரன், மூலபத்திரன் என்னும் ஜாதி பகட்டரசுகள் இருந்தன.

**20. ஜயங்கொண்ட சோழ மண்டலத்துப் பெரும்பாணப் பாடித் தூநாட்டு மேற்பாடிக்கு வேறு பெயர் யாது? அவ்வூர் எதற்கு அருகில் எந்த ஜில்லாவில் உள்ளது?**

மேற்பாடிக்கு வேறு பெயர் ராஜாஸரிய சதுர்வேதி மங்கலம். இது வடார்க்காடு ஜில்லாவில், திருவல்லத்துக்கு வடக்கே ஆறுமைல் தூரத்திலுள்ளது.

**21. விக்கிரம சோழ தேவருடைய தேவியார் யாவர்? அவர் எவ்வாறு பாராட்டப் பெற்றுள்ளனர்?**

(1) தியாகபதாகை, (2) தரணி முழுதுடையாள்—இவர்கள் விக்கிரம சோழரது தேவியர் ஆவர்.

இவர்களில் *தியாகபதாகை*, கங்கை ஒப்பாகிய தெரிவையர் திலகம் எனவும், புரிகுழல் மடப்பிடி புனித குணவனிதை எனவும்;

*தரணி முழுதுடையாள்*, மாதர் மடமயில், பூதலத்தருந்ததி, அரணியல் கற்பு உடையாள் எனவும் பாராட்டப்படுகின்றனர்.

## 22. சிதம்பரம் நடராசப் பெருமான் சோழ மன்னர்களுக்குக் குல தெய்வம் என்பதற்குக் கல்வெட்டு ஆதாரம் யாது ?

" தன்குல நாயகன் தாண்டவம் பயிலும் செம்பொன் அம்பலம் " என்பது கல்வெட்டு ஆதாரம்.

## 23. சோழ மன்னர்களிடம் கடற்படை இருந்ததற்குக் கல்வெட்டு ஆதாரம் யாது ?

" அலைகடல் நடுவுள் பலகலஞ் செலுத்தி " என்னும் முதலாம் இராசேந்திர சோழ தேவரது மெய்க்கீர்த்திப் பகுதியில் காணும் தொடரே சோழ மன்னர்களிடம் கடற்படை இருந்ததற்கு ஆதாமாகும்.

## 24. கங்கை, கொப்பம், இவைகள் தீர்த்தங்கள் என்பனவற்றிற்குக் கல்வெட்டு ஆதாரங்கள் யாவை ?

கங்கை, " வெறிமலர்த் *தீர்த்தத்து* எறிபுனல் கங்கை," என்பதாலும்,

கொப்பம், " செப்பருந் *தீர்த்தக்* கொப்பம் " என்பதாலும் இவைகள் *தீர்த்தங்கள்* ஆதலைப் புலப்படுத்துகின்றன.

## 25. " தத்தா நமரே காண் "—இத் தொடரில் வந்துள்ள வரலாற்றுக் குறிப்பை எழுதுக.

விடை - இதை 12-ஆம் கல்வெட்டு விளக்க உரையில் காண்க.

## 26. பொருள் எழுதுக :

திருப்பரி வட்டம், பற்று, மாவடை, மரவடை, பட்டடை, கொடித் தோட்டம், துல்யம், குளப்புரவு, பசானம், மஞ்சிக்கம், வரிசிலத்துக்கிடந்த, பட்டிகை, நக்கன், அணுக்கன், அந்தராயம், மாத்தால், ஞாயிறு, கற்கடகம், கொக்குவாய், பிரட்டன், கல்காரம், தூறு.

திருப்பரி வட்டம் - இது திருப்பரிச் சட்டம் என்றிருக்க வேண்டும். சுவாமிக்குச் சாத்தும் ஆடை.
பற்று - பல ஊர்களுடைய நாட்டுப் பகுதி.
மாவடை – கிராமத்தில் கால் நடை அடையும் இடம்.
மரவடை - மரத்திற்குரிய வரி.
பட்டடை – இறைப்புப் பாசனமுள்ள நன்செய்தாக்கு.
கொடித் தோட்டம் - வெற்றிலைத் தோட்டம்.
துல்யம் - ஒப்புக் கையெழுத்து (sign manual)
குளப்புரவு – குளத்தின் நீர்பாய்ந்து சாகுபடியாகும் நிலம்.
பசானம் – சித்திரை மாதத்தில் அறுவடையாகும் ஒரு வகையான நெல்.
மஞ்சிக்கம் - புரம்போக்கு (அ) தரிசு (அ) நத்தம்.
வரிசிலத்துக் கிடந்த - வரியில்லாமல் இருந்த.
பட்டிகை - மேகலை.
நக்கன் – சிவன் ; சிவத்தொண்டில் ஈடுபட்ட தேவதாசிகளுக்கு முற்காலத்து வழங்கிய சிறப்புப் பெயர்.
அனுக்கன் - தொண்டன்.
அந்தராயம் - உள்வரும்படி.
மாத்தால் - கால்கணிக்கு (நூறு குழிக்கு).
ஞாயிறு - மாதம்.
கற்கடகம் - ஆடி மாதம்.
கொக்கு வாய் - ஆபரணத்திற்படுகண்ணியிற் செருகும் பூட்டு.
பிரட்டன் - நெறியினின்று வழுவினவன்.
கல்காரம் - கருங்கற் கட்டிடம்.
தூறு - வேர்.

## 27. தன்மி செய்து என்றால் என்ன ?

ஊர்ச் சபையார், கூட்டங்கூடுவதற்கு முன்னர், தாரை, காளம் இவைகளை ஊதி உறுப்பினர்களை உரிய காலத்தே வரவழைத்தல் தன்மி செய்தலாகும்.

" கோவி ராஜ கேஸரி பன்மற்கு யாண்டு ரு-ஆவது வட கரை பிர்மதேயம் ஸ்ரீ காமரவல்லி சதுர்வேதி மங்கலத்து பெருங்குறி பெரு மக்களோம், இவ்வாட்டை மகர நாயற்று வெள்ளிக் கிழமை பெற்ற புனர் பூசத்தி நான்று இரட்டைக்காள மூதி மண்டகத்தின் முன்பேய் எழுந்தருளி பெருங்குறி கூடியிருந்து "

(S. I. I. Volume 13. No 109)

என்னும், திருச்சிராப்பள்ளி ஜில்லா உடையார் பாளையந் தாலூகா காமரச வல்லி என்னும் ஊரிலுள்ள கல்வெட்டுப் பகுதியால் இதை அறியலாம். (காமரவல்லியே இக்காலம் காமரச வல்லி என்று மக்களால் வழங்கப்பெறுகின்றது.)

இஃது இங்ஙனமாக, கல்வெட்டுத் துறையாளர் தன்மி செய்து என்பதற்கு (having given alms ?) எனப் பொருள் கூறியிருப்பது பொருந்துவது அன்று. (Inscription No. 17, page 107. line 5)

**28.** திரிபுவனச் சக்கரவர்த்திகள் என்ற பட்டத்துடன் ஆட்சி புரிந்த அரசர்கள் யாவர் ?

முதற் குலோத்துங்க சோழன்,
விக்கிரம சோழன்,
குலசேகர தேவரான பராக்கிரம பாண்டியர்,
கோச்சடைய பன்மராகிய வீரபாண்டிய தேவர்,
சடையபன்மராகிய குலசேகர தேவர்.

**29.** அரிகேசரி பராக்கிரம பாண்டியன் கல்வெட்டில் குறிக்கப் பெற்ற ஊர்கள் யாவை? அவைகளின் தற்காலப் பெயர்கள், அவைகள் நிலைபெற்றுள்ள தாலுகாக்கள் இவைகளைத் தெரிந்தவரை குறிப்பிடுக.

*குறிக்கப் பெற்ற ஊர்கள் :* சிங்கை, அனுரை, இராசை, செண்பை, விந்தை, அரந்தை, முதலை, வீரை, வயப்பாறு, மருதூர், தென்காசி, புலியூர், குன்றக்குடி, வாயுளான், திருச்சாலைக்குடி, பராக்கிரம பாண்டிய சதுர்வேதி மங்கலம், திருக்குற்ருலம், செங்கோட்டை, இலத்தூர், வடவூர், தஞ்சாவூர், பைம்பொழில் பற்று, நல்லாண்பிள்ளை பெற்ருள், இராசகுல நல்லூர், பாட்டர்க் குறிச்சி, வீரபாண்டிய நல்லூர் என்பன.

| எண் | பழம்பெயர் | இக்காலம் வழங்கும் பெயர் | தாலூகா |
|---|---|---|---|
| 1. | இராசை | சங்கரநயினுர் கோயில் | சங்கர நயினுர் கோயில் |
| 2. | செண்பை (அ)செண்பைவனம் | திருக்குற்ருலம் | தென்காசி |
| 3. | விந்தை | விந்தனூர் | செங்கோட்டை |
| 4. | வீரை | வீரகேரளம் பூதூர் | செங்கோட்டை |
| 5. | மருதூர் | திருப்புடைமருதூர் | அம்பாசமுத்திரம் |
| 6. | தென்காசி | தென்காசி | தென்காசி |
| 7. | குற்ருலம் | குற்ருலம் | தென்காசி |
| 8. | செங்கோட்டை | செங்கோட்டை | செங்கோட்டை |
| 9. | புலியூர் | புலியூர் | தென்காசி |
| 10. | முதலை | முதலைக்குளம் | நாங்குனேரி |
| 11. | பாட்டக்குறிச்சி | பாட்டக்குறிச்சி | தென்காசி |
| 12. | வீரபாண்டியநல்லூர் | வீரபாண்டிய நல்லூர் | நாங்குனேரி |
| 13. | இலத்தூர் | எலத்தூர் | செங்கோட்டை |

## 30. பழங்காலத்தில் ஊர்ச் சபைகள் எங்கெங்கு இருந்தன? அச்சபையிலுள்ளார் எங்கு எவ்வாறு கூட்டங்கூடி நிகழ்ச்சிகளை முடிவு செய்வர்? என்பவைகளைப் பற்றி உங்கள் பாடப் பகுதிக் கல்வெட்டுக்களைக் கொண்டு ஆதாரங் காட்டி நிறுவுக :

கீழ் இரணிய முட்டத்துப்படும் பிர்மதேயம் நரசிங்க மங்கலம், படுவூர்க் கோட்டத்து, காவிரிப்பாக்கமாகிய அமநி நாராயணச்சதுர் வேதிமங்கலம், ஜயங்கொண்ட சோழ மண்டலத்து, செங்காட்டுக் கோட்டத்து மாகணூர் நாட்டு மணிமங்கலமான ராஜசூளாமணிச் சதுர்வேதி மங்கலம் என்னும் ஊர்களில் சபைகள் இருந்தன.

இச் சபையிலுள்ளார், அவ்வூர்க்கோயில் அபிடேக மண்டபத்திலாவது, அல்லது அவ்வூரில் சபை கூடுவதற்கென்று கட்டப்பட்டுள்ள மண்டபத்திலாவது கூடுவர். கூடுவதற்கு முன்னர் கொம்பு முதலியவைகளை ஊதி சபையாரை அழைக்கச் செய்வர். சபையார் வந்த பின்னர், குறைவறக் கூடியிருந்தால்தான் நிகழ்ச்சிகளை முடிவு செய்வர்.

"இவ்வூர் பெரியதளி அபிஷேக மண்டபத்தே கூடியிருக்க" (4-ஆம் கல்வெட்டு), "எம்மூர் பிரஹமஸ்தான மண்டபத்தே கூட்டக் குறைவறக் கூடியிருந்து" (16-ஆம் கல்வெட்டு), "எம்மூர் பிரஹமஸ்தானம் மண்டபத்தே தன்மி செய்து" (17-ஆம் கல்வெட்டு) என்னும் தொடர்களே இவைகளுக்குச் சான்ருகும்.

## 31. முதலாம் இராசேந்திரசோழனின் கடாரப் படையெடுப்பை விளக்கமாக எழுதுக :

முதலாம் இராசேந்திர சோழன் கப்பல் படைகளுடன் சென்று மலேயா தீபகற்பத்தில் இதுபொழுது கெடா என்று வழங்கப்பெறும் கடாரத்தை ஆண்டு வந்த சங்கிராம விசயோத்துங்கனைத் தோற்கடித்து அவனுடைய யானை, செல்வம், விச்சாதிரத்தோரணம், மணிகள் பதித்துச் செய்யப்பட்டிருந்த இரட்டைக் கதவுகள் இவைகளைக் கைப்பற்றிக் கொண்டான்.

பின் சுமத்திரா தீவின் கீழ்க்கரையில் இக்காலம் பாலம் பாங் (palem bang) என்று வழங்கப்பெறும் ஸ்ரீ விஜயம்; பாணி, என்று அழைக்கப்பெறும் பண்ணை; ஜம்பி என்று அழைக்கப்பெறும் மலையூர்; இவைகளை வென்ருன். பிறகு மலேயா தீபகற்பத்திலுள்ள மாயிருடிங்கம், இலங்காசோகம், மாபப்பாளம், இலிம்பிங்கம், வளைப் பந்தூறு, தலைத்தக் கோலம், மதமாலிங்கம் இவைகளை வென்று கொண்டான். இவைகளுள் மாயிருடிங்கம் மலேயா தீபகற்பத்தின்

நடுவிலும், இலங்காசோகம், கெடாவிற்குத் தெற்கிலும், மாபப்பாளம் கிரா என்னும் பூசந்திக்கு அருகிலும், தலைத்தக் கோலம் மேல் கரையில் தகோபா என்னும் பெயருடனும், மதமாலிங்கம் கீழ்க்கரையில் தம்பிரலிங்கம் என்னும் பெயருடனும் விளங்குகின்றன. இலிம்பிங்கம், வளைப்பந்தூறு, இவைகள் மலேயா தீபகற்பத்தில் இருக்கும் இடம் புலனாகவில்லை.

பின்பு சுமத்திரா தீவின் வடபகுதியில் லாம்புரி என்று வழங்கும் இலாமுரி தேசத்தையும், வங்காளக்குடாக் கடலிலுள்ள நிக்கோபார் தீவுகளாகிய நக்க வாரத்தையும் தன்னடிப் படுத்தினான்.

## 32. கொப்பத்துப் போர், கூடல் சங்கமப் போர் இவைகளில் ஒன்றைப் பற்றி ஒன்றரைப் பக்கத்துக்கு மிகாமல் எழுதுக :

(a) ***கொப்பத்துப் போர்:*** கொப்பம் என்பது கிருஷ்ணாநதிக் கரையில் உள்ளதொரு ஊர். 'செப்பருந் தீர்த்தத்துக் கொப்பம்' என்று கல்வெட்டில் குறிக்கப் பெற்றிருப்பதால் இது ஒரு புண்ணியத்தலம் என்று பெறப்படுகின்றது. இங்கே மேலைச்சளுக்கிய அரசனாகிய ஆகவமல்லனுக்கும் இரண்டாம் இராசேந்திர சோழனுக்கும் பெரும் போர் நிகழ்ந்தது.

***போருக்குக் காரணம்:*** இரண்டாம் இராசேந்திர சோழன் போர் செய்ய விருப்பங்கொண்டு, மேலைச்சளுக்கியரது நாடாகிய இரட்டமண்டலத்துக்குச் சென்று அநேக நதிகள், நாடுகள், பதிகள் இவைகளை அழித்தான். இதைக் கேள்விப்பட்ட ஆகவமல்லன் சோழனுடைய இச்செய்கை தனக்கு மிக்க அவமானத்தைத் தருவதாகும் என்று உட்கொண்டு சோழன் மேல் படையெடுத்துச் சென்று சோழனோடு கொப்பத்தில் போர் செய்யத் தொடங்கினான்.

***போர் நிகழ்ந்த விதம்:*** ஆகவமல்லன் விட்ட அம்புகள் சோழனுடைய குன்றை ஒத்த புயத்திலும், தொடையிலும், யானையின் முகத்திலும் தைத்தன. சோழர் படையிலுள்ள வீரர்கள் பலர் இறந்தனர். எனினும் சோழன் வீரத்தோடு போர் செய்தான்.

***போரின் முடிவு :*** ஆகவமல்லன் படையிலிருந்த சயசிங்கன், புலிகேசி, தசபன்மன், அசோகையன், ஆரையன், மொட்டையன், நன்னி நுளம்பன் என்போர் போரில் இறந்தனர். ஆகவமல்லனும், அவன் படைத் தலைவர்களில் ஏவன், துத்தன், குண்டமையன் இவர்களும் தோல்வியுற்று ஓடினர். இரண்டாம் இராசேந்திர சோழன் ஆகவமல்லனுடைய படையிலிருந்த சத்துரு பயங்கரன், கரபத்திரன், மூலபத்திரன், என்ற பட்டத்து யானைகளையும் எட்டு நடை பரிகளையும், ஒட்டக நிரைகளையும் வராகக் கொடிமுதல் இராஜபரிச்

சின்னங்களையும், சத்தியவை, சங்கப்பை முதலான தேவியர்களையும் கைப்பற்றிக் கொண்டான்.

(b) *கூடல் சங்கமப் போர்:* கூடல் சங்கமம் என்பது கிருஷ்ணு துங்கபத்திரை என்னும் இரு பேராறுகளும் கூடும் இடமாகும். இங்கே வீரராசேந்திர சோழனுக்கும் மேலைச்சளுக்கிய அரசனாகிய ஆகவமல்லனுக்கும் போர் நிகழ்ந்தது.

*போருக்குக் காரணம்:* வீரராசேந்திரன் இரட்டபாடி நாட்டின் மீது படையெடுத்துச் சென்று ஆகவமல்லனது மகனாகிய விக்கலனை யும், அவனது படைத் தலைவனையும் கங்கபாடி களத்திலிருந்து துங்க பத்திரை நதிக்கரைக்குத் துரத்திவிட்டான். மீளவும் ஆகவமல்லன் ஒரு பெருஞ்சேனையை அனுப்பினான். வீரராசேந்திரன் அச்சேனை அழியத் தாக்கியதோடு, அச்சேனையின் தலைவனாகிய சாமுண்ட ராயன் தலையை அறுத்தான். அவனுடைய ஒரு மகளாகிய இருகை யன்தேவி நாகலை என்பவளது மூக்கை அறுத்தான்.

*போர் நிகழ்ந்த விதம்:* ஆகவமல்லன் இவ்வாறு நேர்ந்த அவமானத்தைப் போக்குவதன் பொருட்டு வடகடல் என்ன வகுத்த ஒரு பெருஞ்சேனையோடு கூடல் சங்கமத்தில் வீரராசேந்திரனை எதிர்த்தான். வீரராசேந்திரன், அச்சேனையைக் கடகளிறு ஒன்றால் கலக்கினான். ஆகவமல்லனுடைய சேனைத் தலைவர்களாகிய கேசவன், கேத்தரையன், மாராயன், போத்தரையன், இரச்சயன் என்பவர்கள் கொல்லப்பட்டனர். ஆகவமல்லன் தன் மக்களாகிய விக்கிரமாதித்தன், சயசிங்கன் இவர்களோடும், படைத் தலைவனாகிய மதுவணனோடும் புறங்காட்டி ஓடினான்.

*போரின் முடிவு:* வீரராசேந்திரன் ஆகவமல்லனுடைய மனைவி யர், பட்டத்து யானை, புட்பகப்பிடி முதலியவைகளைக் கைப்பற்றிக் கொண்டான்.

குறிப்பு: கேள்விக்குத் தக்கவாறு ஒன்றைப் பற்றித்தான் எழுதுதல் வேண்டும். ஆயினும் சிலர் கொப்பத்துப் போரைப் பற்றி யும், சிலர் கூடல் சங்கமப் போரைப் பற்றியும் எழுதக்கூடும் காரணம் பற்றி இங்கே இரண்டுக்கும் மறுமொழிகள் வரையப் பெற்றுள்ளன.

**33. 'முன்னவர் பக்கல் தென்னவர் வைத்த சுந்தர முடியும் இந்திரன் ஆரமும்,' என்ற தொடரில், இந்திரன் ஆரமும் என்பதில் அடங்கிய வரலாற்றுக் குறிப்பு யாது?**

முன்னொரு காலத்தில் கோள்நிலை திரிந்தமையால், தமிழ் நாட்டு மூவேந்தர்களுடைய நாடுகளில் மழைவளம் குன்றியது. ஆதலால்

அகத்தியருடைய கட்டளையின்படி, அவ்வேந்தர்கள் சோமவார விரதத்தை நோற்று அதன் விளைவாய், வான்வழியாக இந்திரன் கோயிலை அணுகினர். இதனை அறிந்த இந்திரன் மூவரும் இருக்கும் பொருட்டு மூன்று சிங்காதனங்களை இடுவித்தான் ; சேரனும் சோழனும் இந்திரன் காட்டிய இருக்கைகளில் அமர்ந்தனர். பாண்டிய மன்னனாகிய உக்கிரகுமாரன் இந்திரன் இருக்கையின்பால் அவனோடு ஒப்ப அமர்ந்தான். இந்திரன் பாண்டியனிடத்தில் பொருமை கொண்டு, சேர சோழர்களுக்கு அவரவர் நாடுகளில் மழைபெய்ய அருளிச் செய்து அவர்களை அனுப்பிவிட்டு, பாண்டியன் மழை வேண்டாத பெருமிதத்தை எண்ணி சூழ்ச்சியாகப் பலரால் தாங்கி வந்த ஒரு முத்துமாலையை பாண்டியனுக்குக் கொடுத்தான். அவன் அதை வாங்கி மலர் மாலைபோல் தன் கழுத்தில் அணிந்து கொண்டான். அது பொழுது இந்திரன், அவனை ஆரந் தாங்கு பாண்டியன் என்று புகழ்ந்து கூறினான். பாண்டியன் அப் புகழ்ச்சியைச் சிறிதும் எண்ணாது மதுரை மாநகர் வந்தடைந்தான். (திருவிளையாடற் புராணம், மதுரைக் காண்டம், இந்திரன் முடிமேல் வளையெறிந்த படலம்.)

"திங்கட் செல்வன் திருக்குலம் விளங்கச் செங்கணாயிரத்தோன் திறல் விளங்கு ஆரம் பொங்கொளி மார்பிற் பூண்டோன் வாழி" (சிலப்பதிகாரம், காடு காண் காதை)

"வானவர்கோன் ஆரம் வயங்கியதோட் பஞ்சவன்றன் மீனக் கொடி பாடும் பாடலே பாடல்" (சிலப்பதிகாரம்—வாழ்த்துக் காதை.)

"தேவர்கோன் பூணாரம் தென்னர்கோன் மார்பினவே" (சிலப் பதிகாரம்—ஆய்ச்சியர் குரவை ) என்னும் அடிகளும் மேற்குறித்த வரலாற்றை உட்கொண்டனவாகும்.

## 34. கல்வெட்டுத் துறை ஏற்படுவதற்குக் காரணமாய் இருந்த டாக்டர். உல்ஷ் துரைமகனாரின் வாழ்க்கை வரலாற்றைப் பற்றி எழுதுக :

*பிறப்பு :* இவரது முழுப் பெயர் இயூஜன் ஜுலியஸ் தியோடர் உல்ஷ் (Eugen julius theodor Hultzsch) என்பதாகும். இவர் டிரஸ்டன் (Dresdon) மாநாகரத்தில் 1857-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 29-ஆம் நாளில் பிறந்தார்.

***கல்வி பயின்றது :*** இவர் முதலில் டிரஸ்டன் மாநகரத்துக் கல்லூரியில் பயின்று, பின் 1874-ஆம் ஆண்டில் லிப்ஸியா (Lipsia) பல்கலைக் கழகத்தில் சேர்ந்தார். அவர் சேர்ந்த நான்கு ஆண்டுகளில் சிறந்த கீழ்த்திசைமொழி தத்துவங்களை லிப்ஸியா (Lipsia)

பான் (Bonn) என்னும் இடங்களில் பயின்ருர். அக்காலம் இவர் லிப்ஸியா நகரிலிருந்த தலைசிறந்த ஜர்மானிய பண்டிதர்களான பிராக்ஹாஸ் (Brockhaus) கர்டியஸ் (Curtius) ப்ளீஷர் (Fleischer) விண்டிஷ் (windish) முதலியவர்களுடனும்; பான் (Bonn) நகரிலிருந்த ஆவ்ரக்ட் (Aufrecht) கில்டிமிஸ்டர் (Gildemister) முதலியவர்களுடனும் பழகி வந்தார். 1879-இல் இவர் வசந்த ராஜாவின் சாகுனை என்பதைப் பற்றி கட்டுரை எழுதி தத்துவஞானப் பட்டம் (ph.D) பெற்ருர்.

*பதவி பெற்றது*: இவர் 1882-இல் வியன்னு பல்கலைக் கழகத்தில் வடமொழி உதவிப் பேராசியராக (Reader) நியமிக்கப் பெற்ருர். அது பொழுது அப் பல்கலைக் கழகத்தில் பூலர் (Bhuler) என்பவர் வடமொழிப் பேராசிரியராக இருந்தார். இவருடன் பழகி வந்ததால் உல்ஷ் துரைக்கு நற்பெயர் உண்டாயிற்று.

*சென்னை அரசாங்கத்தின் சிலாசாசனப் பரிசோதகராக (Epigraphist) நியமிக்கப்பெற்று ஆற்றிய தொண்டுகள்* : இவர் 1884-ஆம் ஆண்டில் இந்தியாவிற்கு வந்து, சில கையெழுத்துப் பிரதிகளையும், கல்வெட்டுக்களையும் ஆராய்ச்சி செய்தார். அதன் விளைவாய் 1886-ஆம் ஆண்டில் சென்னை அரசாங்கத்தின் சிலாசாசனப் பரிசோதகராக நியமிக்கப்பெற்று அப்பதவியில் 1903-ஆம் ஆண்டு வரை இருந்தார். அக் காலங்களில் இவர் தென் இந்தியக் கல்வெட்டுத் தொகுதிகளில் மூன்றினையும், வரலாற்றுப் பேராசிரியர்களுக்கு வற்ருச் சுரங்கத்திற்கு ஒப்பாகிய பொருள்கள் அடங்கிய ஆண்டு அறிக்கைகளையும் வெளியிட்டுள்ளார். (Epigraphia Indica) இந்தியக் கல்வெட்டு என்ற மூன்ரும் தொகுதிமுதல் ஒன்பதாம் தொகுதியில் ஒரு பகுதிக்கும் இவர் பதிப்பாசிரியராக இருந்து ஆற்றிய தொண்டுகள் பெரிதும் பாராட்டத்தக்கன. பிறகு இவர் ஹால் (Halle) நகரத்தில் வடமொழிப் பேராசிரியராக நியமிக்கப் பெற்று அங்குத் தொண்டு செய்து கொண்டிருந்த காலங்களிலும், கல்வெட்டில் இருந்த பற்று காரணமாக 1906-இல் தார் (Dhar) என்னுமிடத்தில் கரும்பாறைக் கல்லின்மேல் செதுக்கப்பட்டிருக்கும் பாரிஜாத மஞ்சரி என்றதை வெளியிட்டார். 1925-ஆம் ஆண்டில் அசோகருடைய சிலாசாசனங்கள் என்ற உயர்தரப் பதிப்பை வெளியிட்டார்.

*இவர் ஆற்றிய வேறு தொண்டுகள்* : இவர் கல்வெட்டுக்களைத் தவிர, காவியங்கள், நாடகங்கள், நியாயம், பிரகிருதம் (Nyaya and prakrit) இவைகளிலும் கவனத்தைச் செலுத்தி வந்தார்.

1907-இல் அன்னம்பட்டர் என்பவரின் தர்க்க சங்கிரகம் என்பதையும், பின்னர் லாகாட்சி பாஸ்கரருடைய தர்க்க காமுதி, விசுவ

நாத தர்க்க பஞ்சானனருடைய பாஷாபரிச்சேதா இவைகளையும் ஜர்மன் மொழியில் மொழிபெயர்த்தார். காளிதாசருடைய மேக தூது என்ற புத்தகத்தை வல்லபதேவருடைய விரிவுரையுடன் 1911–இல் வெளியிட்டார். பிரகிருதத்தில் அவருக்கு இருந்த அறிவு, 1909-இல் அவர் வெளியிட்ட சிம்மராஜருடைய பிரகிருத ரூபாவதாரம் என்னும் நூலால் புலனாகும். இங்ஙனம் அருந் தொண்டாற்றிய இவர், 1927-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 16-ந் தேதி ஹால் நகரில், பூதவுடலை நீத்துப் புகழுடம்பு எய்தியனர். இவர் தம் வாழ்நாள் முழுவதும் இந்திய சரித்திரம், நாகரிகம் முதலியவற்றை அறிந்து கொள்வதில் கழித்ததோடு, இந்தியாவில் பயன்படக் கூடிய வேலைகளைச் செய்துவந்த சிறந்த ஜர்மானிய அறிஞர்களில் இறுதியானவர் ஆவர். இவருடைய பெரும் பிரிவு கல்வெட்டுத் துறைக்குப் பெருத்த நஷ்டமாகும்.

## 35. "கன்னியுங் கைக்கொண்டருளி"—(1) கைக்கொண்டவன் யாவன்? (2) அக் கன்னியைப் பற்றிச் சிறு குறிப்பு வரைக:

1. கைக் கொண்டவன் முதலாங் குலோத்துங்க சோழன்.

2. கன்னி: இது கன்னியாகுமரிப் பகுதியாகும். இது திருவாங்கூர் இராச்சியத்தில் பத்மநாபபுரம் பிரிவில் அகஸ்தியவரம் தாலூகாவில் அகஸ்தியவரம் ஊர்க்கு $3\frac{1}{2}$ மைல் தூரத்தில் இருக்கிறது. தென்னவர்தம் குலதெய்வம் தென்குமரி கன்னியார் எழுந்தருளியிருக்கும் காரணம் பற்றிக் கன்னி என்னும் பெயர் பெற்றது. இது பாண்டியர் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. ஆதலின் பாண்டியர் குமரிச்சேர்ப்பன், கன்னிகாவலன் என அழைக்கப்பெற்றனர். தாலமி என்பவர் இதைக் குமரியா அக்ரன் (Komaria Akron) என்னும் பெயரால் குறிப்பிட்டுள்ளனர். பெரிபுளூஸ் (Periplus) என்னும் நூலாசிரியர் யாத்திரீகர்கள் இங்கு வந்து நீராடுவதைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளனர். குமரியம் பெருந்துறையில் நீராடுவது பாவத்தைப் போக்கு மென்று மகாபாரதம் வனபர்வம் 23-ஆம் செய்யுளில் குறிக்கப்பெற்றுள்ளது. மணிமேகலையில்,

> "குரங்குசெய் கடற் குமரியம் பெருந்துறைப்
> பரந்து சென்மாக் களோடு தேடினன் பெயர்வோன்"

எனக் குறிக்கப்பெற்றுள்ளது.

> "இது அழித்தார் கங்கையிடை
> குமரியிடை செய்தார் செய்த பாவத்துப் படுவர்"

> "கங்கையிடை குமரியிடை எழுநூற்றுக்காதஞ்
> செய்தார் செய்த பாவங்கொள்வர்"

எனக் கல்வெட்டுக்கள் இக்கன்னியைப் பற்றிக் கூறுகின்றன.

**36.** சாசனம் தோன்றிய காலத்தைக் குறிப்பிடுவதில் இவ்வரசனுக்கு இத்தனையாவது ஆண்டு என்று கூறும் முறைக்கு வேருகவும் கூறப்பட்டுள்ள முறை யாது?

"ஸ்ரீ அரிகேசரி பராக்கிரம பாண்டியற்கு யாண்டு இருபத்தெட்டாவதின் எதிராமாண்டு" என்பது வேறு முறையாகும். இதற்கு இருபத்தொன்பதாம் ஆண்டு என்று பொருள்.

**37.** சிறு குறிப்பு வரைக: (ஏதேனும் மூன்றினுக்கு மறுமொழி எழுதுக:)

1. பொய்கைநாடு கிழவன் ஆதித்தன் சூரியனை தென்னவன் மூவேந்தவேளான்.
2. கண்ணன் ஆரூரன்.
3. பள்ளிப்படை.
4. ஆழ்வார் பராந்தகன் குந்தவையார்.
5. ஒலோக மாதேவியார்.
6. மிலாடுடையார்.
7. காமகோடி
8. விண்ணகர ஆழ்வார்.
9. ஆகவமல்லன்.
10. சோணாடு கொண்டருளிய சுந்தரபாண்டிய தேவர்.
11. அநுமன்தாயான அஞ்சன மங்கலம்.
12. திருவகத்தீஸ்வரமுடைய நாயனர்.

*மறுமொழி:* இவைகளை விளக்கவுரைகளில் கண்டுகொள்க.

**38.** பொருள் எழுதுக:

வரியிலார், நந்தனர், அஞ்சாலி, கண்ணாறு, பரிம்பு, பற்று, எல்கை, ஏறி அருளப் பண்ணுவித்து, சாத்துப்படி, பிடிபாடாக.

*வரியிலார்* - வரியைக் கணக்கில் பதிந்து கொள்வோர்.
*நந்தனர்* - மகனர்.
*அஞ்சாலி* - நெல்.
*கண்ணாறு* - பாசனவாய்க்கால்.
*பரிம்பு* - பாழிடம்.
*பற்று* - ஊர்.
*எல்கை* - எல்லை.
*ஏறி அருளப் பண்ணுவித்து* - எழுந்தருளிவித்து.
*சாத்துப்படி* – அலங்காரம்.
*பிடிபாடாக* - ஆதரவாக.

## பிழை திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 3 | 22 | திருவல்லிக்கேணிக்கு உரிமையுடையவர் | திருவல்லிக்கேணி கோயிலுக்கு உரிமையுடையவர் |
| 45 | 17 | 18-ஆம் ஆட்சியாண்டில் | 14-ஆம் ஆட்சியாண்டில் |

TAMIL NADU ARCHIVES LIBRARY
No. 108348
EGMORE, MADRAS-600 008
V211:72
N58

# அரிய இலக்கிய நூல்கள்!

| | ரூ. ந.பை. |
|---|---|
| **திருப்பூவணநாதர் உலா**<br>மூலம் — தெளிவுரை — விளக்கம்<br>வித்துவான் வை. இரத்தினசபாபதி<br>வித்துவான் திரு. ஐயன்பெருமாள் கோனர் | 2—50 |
| **நாலடியார் தெளிவுரை**<br>வித்துவான் மி. பொன். இராமநாதன் செட்டியார் | 2—25 |
| **திருவிளையாடற் புராணம்**<br>கூடற் காண்டம் — மூலம் — உரை — விளக்கம்<br>வித்துவான் திரு. ஐயன்பெருமாள் கோனர் | 1—75 |
| **பாரதியார் இன்கவித் திரட்டு**<br>தொகுத்து ஆராய்ச்சியுரை எழுதியவர் :<br>டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை | 2—25 |
| **செஞ்சொற் கவிக் கோவை**<br>தொகுத்தவர் : டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை | 1—00 |
| **திருக்குறள் உரை விளக்கம்**<br>ஜி. வரதராசன், பி. ஏ. | 6—00 |
| **திருக்குறள் மூலம்**<br>பதிப்பாசிரியர் : வித்துவான் தி. பட்டுச்சாமி ஓதுவார் | 0—62 |
| **கோனர் தமிழ்க் கையகராதி** | 3—00 |

**பழனியப்பா பிரதர்ஸ்**

சேப்பாக்கம் சென்னை - 5 :: தெப்பக்குளம் திருச்சி - 2



ஏசியன் பிரிண்டர்ஸ், சேப்பாக்கம், சென்னை-5